# மலரே என்னிடம் மயங்காதே

அருணா நந்தினி



# மலரே என்னிடம் மயங்காதே



1

ராஜகம்பீரமாய் மாடியிலிருந்து இறங்கி வந்த மகனைப் பெருமையுடன் பார்த்தாள் சௌந்திரம்.

'அம்மாடி...! என்ன கம்பீரம்... என்ன களை... என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கிறது....' உள்ளுக்குள் பெருமிதத்துடன் நினைத்தாள்.

ஆறடி உயரத்தில்... நெடு நெடு வென்று வளர்த்தியுடன்... ஜமீன்தார் பரம்பரைக்குரிய மிடுக்குடன் இருந்தான் ராஜசேகர். மாநிறத்திற்கும் கொஞ்சம் நிறம் கம்மிதான்...

அடர்ந்த கேசமும்.. அகன்ற நெற்றியும்... ஊடுருவிப் பார்க்கும் தீர்க்கக் கண்களும்... எடுப்பான நாசியும் அவனை ஆணழகனாகக் காட்டின... பட்டுவேட்டி... பட்டு ஜிப்பா வில் அவனது தோற்றம் வசீகரமாகத் தெரிந்தது...

போன ஜென்மத்தில் எந்த நாட்டுக்கோ ராஜகுமாரனாய் இருந்திருக்க வேண்டும்... அதுதான்... விட்டக்குறை

தொட்டக்குறையாய் அந்த ஆண்மை கம்பீரம் இந்த பிறவியிலும் வந்திருக்கிறது. நெஞ்சில் ஏற்பட்ட நிறைவில் கண்கள் பனித்தன... துடைத்துக் கொண்டாள் சௌந்திரம்... ஆனால்.. அதைத் தொடர்ந்து வந்த வேதனை...

கடவுளே...! அதை நினைக்கும் போது வயிற்றில் ஏதோ பிசைகிறதே!

ஒரே பிள்ளை... துடைத்து விட்ட கற்சிலை போல இருக்கிறான்...ஆனால் இந்த ராஜகுமாரனுக்கு ஏற்ற ராஜகுமாரி அமையவில்லையே...

எல்லா விஷயத்திலும் அதிர்ஷ்டத்தைக் கொண்டவன் திருமண விஷயத்தில் கோட்டை விடும்படி ஆகிவிட்டதே.

திருமணமாகியும் பிரம்மச்சாரியாய் தனித்திருக்கும் பிள்ளையைக் கண்டு பெற்றமனம் துடித்தது.

பாவம்... துக்கத்தை வெளிக்காட்டாமல்.. வேதனையை மறைத்துக் கொண்டு பாறையாய், அல்லவா இறுகிக் கிடக்கிறான்.

அருகில் வந்த ராஜசேகர் தாயைக் கேட்டான்.

"என்னம்மா... நீங்கள் புறப்படவில்லையா...?"

"நான் எதுக்குப்பா... வேணாமே.. நீ போய் வாப்பா..."

உள்ளே சென்று தட்டில் பழங்களுடன்... விலை உயர்ந்த பட்டுப்புடவை, ரவிக்கையுடன் வந்தாள். கூடவே இரண்டாயிரம் ரூபாய் கட்டும் இருந்தது.

இது பரம்பரையாய் இருந்து வரும் வழக்கம்.

அவர்களுடைய நிலத்தில்... ஆலையில் பணிசெய்யும் பணியாட்கள் வீட்டில் திருமணம் என்றால் அன்பளிப்பாய் பட்டுப்புடவையும் பணமும் தருவது வழக்கம்....

இப்பவும் ஒரு திருமணத்திற்குத்தான் செல்ல இருக்கிறான் ராஜசேகர்..



எப்போதும் உடன் வரும் சௌந்திரம் ஏனோ இந்தத் தடவை மறுத்துவிட்டாள்.

அதற்குக் காரணமும் இருக்கிறது...

மகனின் திருமண வாழ்க்கை தோல்வியில் முடிந்து... அவன் தனிமரமாய் நிற்பதை எந்தத் தாய் பொறுத்துக் கொள்வாள்... எந்த திருமண மண்டபத்திற்குச் சென்றாலும் 'அய்யோ... இப்படித்தானே என் பிள்ளையின் திருமணம் கோலாகலமாய்... அனைவரும் மூக்கில் விரல் வைத்து வியக்கும்படி நடந்தது... ஆனால் அது கனவு மாதிரி கலைந்து போனதே என்ற ஏக்கமும் தவிப்பும் வந்து... முள் இருக்கை மீது அமர்ந்தது போல இருக்கும்...'

அதுமட்டுமல்ல... நாதசுர ஓசையும்.. அய்யர் ஓதும் மந்திரமும்... கெட்டி மேளமும் பழைய நினைவுகளைக் கிளறி மனதை ரணப்படுத்தும்...

திருமண மண்டபத்திலிருந்து எப்போதுடா கிளம்புவோம் என்று தவித்துக் கொண்டும்... அங்கிருந்தால் யாராவது ஏதாவது கேட்டு... ஆறிக்கொண்டு வரும் மனக்காயத்தை... குத்திக்... கிளறி மீண்டும் புண்ணாக்கி விடுவார்களோ என்று அஞ்சி... நடுங்கி... அதற்காக மற்றவர்களுடன் பேசுவதையும் தவிர்த்து... ஓரமாய் அமர்ந்திருப்பதை விட பேசாமல் வீட்டிலியே இருந்து விடலாம்தான்.

ராஜசேகர் என்றால் ஆண்பிள்ளை, எந்த உணர்ச்சியையும் வெளியே காட்டிக்கொள்ள மாட்டான்... தவிர... அனைவருக்கும் படி அளக்கும் எஜமானன் வேறு... அவனிடம் வந்து பேசவும் தயங்குவார்கள்... ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் அடுத்த வீட்டு விஷயத்தில் அக்கறை அதிகம்...

ஆண்பிள்ளைகள் அப்படியில்லை... கண்டும் காணாமல் இருந்து விடுவார்கள்... துருவித் துருவி விஷயத்தைக் கேட்டுத் தெரிந்து கொள்ளும் ஆண்கள் கம்மியே...

அன்று அவர்களது ஆலையின் நிர்வாகி பரமேசுவரனி மகள் பானுமதிக்கு திருமணம்...

நல்ல மனிதர்.. விசுவாசி... நாணயஸ்தர்... ஒரே மக என்பதால் சக்தி மீறிய இடத்தில் சம்பந்தம் செய்திருந்

பிள்ளை வீட்டார் பெரிய மண்டபத்தில் திருமண செய்து தரவேண்டும் என்று சொல்லி இருந்ததால் விருந்து கொஞ்சம் தள்ளியிருந்த வசதியான மண்டபத் ஏற்பாடு செய்திருந்தார்.

அதிக வாடகைதான்... அரண்மனைபோல சத்திரம் நவீன வசதிகள் கொண்டது...

பிள்ளை வீட்டினர் திருப்தியடைய வேண்டுமே...

அவருடைய இரண்டு மகன்களும் ஆலையில் நல் வேலையில் இருந்தனர்.

அதனால் நம்பிக்கையுடன் ராஜசேகரிடம் கடன்பட் அத்தனை ஏற்பாடுகளையும் செய்திருந்தனர்...

முதலில் பானுமதியின் திருமணம் சிறப்பாக நடத்திவிட்டு அப்புறம் கடனை எப்படித் தீர்க்கலாம் என்று யோசிக் லாம்....

மகளின் வாழ்க்கை தான் முக்கியம்...

இரண்டு ஆறு வலுவான கரங்கள் இருக்கின்றதே. உழைத் கடனை அடைத்து விடலாம்தான்...

தன்னம்பிக்கையும் நல்ல முயற்சியும் இருந்துவிட்டா முடியாதது ஏதும் இல்லை...

மலையைக் கூட புரட்டி விட முடியும்!

அத்தனை விஷயங்களையும் சௌந்திரம் அறிந்திருந் தால் விலையுயர்ந்த பட்டுப்புடவையாய் வாங்கி வைத்தி தாள். கூடிய வரை பெற்றவரின்



"ராஜா... நம் மேனேஜரிடம் சொல்லுப்பா... திருமணம் முடிஞ்சதும் பெண்ணையும் மாப்பிள்ளையையும் ஒரு தடவை நம்ம வீட்டிற்கு அழைத்து வரணும்னு" என்று சொன்னாள் சௌந்திரம்.

"சொல்கிறேன்ம்மா... நான் வருகிறேன்.."

பழத்தட்டை பணியாள் சுமந்துவர முன்னே சென்ற மகனைப் பார்த்தவாறு நின்றிருந்தாள் சௌந்திரம். நெஞ்சு விம்மியது... துயரம் தொண்டையை அடைத்தது. எல்லாம் சரியாக இருந்திருந்தால்...

பட்டுப்புடவை சரசரக்க.. அலங்கார தேவதையாய் மனைவி உடன்வர கர்வத்துடன் போயிருந்திருக்கலாம் பிள்ளை...

யார் செய்த பாவமோ... மனைவி இருந்தும் இப்படி ஒற்றையாய் செல்லவேண்டிய தலையெழுத்து... தாயுள்ளம் தவித்தது.

காரில் ஏறி அமர்ந்து கொண்ட ராஜசேகருக்கு கையசைத்து விடை கொடுத்து அனுப்பிவிட்டு இதயம் கனக்க உள்ளே சென்றாள் சௌந்திரம்.

படகு போன்ற கார் சாலையில் வழுக்கிக் கொண்டு செல்ல... பின் இருக்கையில் அமர்ந்திருந்த ராஜசேகர் தலையை பின்புறம் சாய்த்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டிருந்தான்.

அவனது மனதிலும் பாறையாய் வேதனைச்சுமை... எந்தத் திருமணத்திற்கு செல்லும்போதும் சொல்ல முடியாத துக்கம் இதயத்தைப் பிழியும்.

திருமண ராசியில்லாத தன்னை அழைக்கிறார்களே... அந்த வைபவத்தில் கலந்து கொள்ள எனக்கு அருகதை ஏது.. திருமணம் என்ற வார்த்தையே கசப்பாகிவிட்டது... ஏன் தான் அழைக்கிறார்களோ என்று நினைத்தான். நாதசுர ஓசை

காதுகளுக்கு நாரசமாகிப் போனது... கெட்டி மேள தன்னைப் பார்த்து கைக்கொட்டிச் சிரிப்பது போல இருந்தது

சந்தன வாசமும்... மலர்களின் மணமும் கிறங்கச் செ வதற்குப் பதில் தலையை கிறுகிறுக்க வைத்தது... பழை நினைவுகள் அவனைப் பார்த்து எகத்தாளம் செய்வதுபோ இருந்தது.... இருந்தும்... விடமுடியாதே...

வந்துதான் ஆகவேண்டும்... பரம்பரை வழக்கத் விடாமல் செய்ய வேண்டும்...

எஜமானன் என்ற முறையில் இருந்து சிறப்பித்துவிட்டு செல்ல வேண்டும்...

தவிர்க்கவே முடியாது...

பெருமூச்சு விட்டான் ராஜசேகர்.

எல்லாத் திருமணங்களும் சொர்க்கத்தில் நிச்சயப்படுகின் தாமே... ஏன் தன் திருமணம் மட்டும் நரகத்தில் தள்ள பட்டது.

ஏன் எனக்கு இப்படியொரு வாழ்க்கை... குமைந்தான் ரத்னா... அவனது மனைவி...

பெயருக்கு மனைவியாய் வாழ்ந்து விட்டு ஓடிவிட்டவ திருமணம் ஆகி இரண்டரை ஆண்டுகள் ஆகியும்... கணவ என்று ஒருவன் இருக்கிறான் என்று திரும்பியும் பார் காதவள்.

அவனும்... தாய் சொல்லைத் தட்டாமல் இரண்டு மூன் முறை போய் அழைத்து வர நினைத்தும்... ஊகூம். மறுத்துவிட்டாள்...

அதன் பிறகு வாழ்க்கையே சூன்யம் ஆகிவிட்டது அவனுக்கு மனதால் துறவியாகிப் போனான்.

இனி ரத்னா வரப்போவதில்லை என்று தெரிந்து விட்ட



சின்ன வயதிலிருந்தே அவனுக்கு ரத்னாதான் என்ற பேச்சு இருந்தது.

இளம் வயசு... ரத்னா மீது பற்று உண்டானது. ரத்னாவை மணக்கக் காத்திருந்தான்.

ஆனால்... ரத்னாவும் தன்னை விரும்புவாள் என்று எதிர்பார்த்தது தப்புதான்...

எல்லாம் முடிந்த கதையாகிவிட்டது... இன்னும் அவளை நினைத்து மறுகிக் கொண்டிருப்பதில் பயனில்லை... இனி அவள் வரமாட்டாள் என்பது உறுதியாகிவிட்டது... இந்த ஜென்மத்தில் எனக்கு மனைவி பாக்கியம் இல்லை...

இப்படியே வாழ்க்கையைக் கழித்துவிட்டால்....

“எஜமான்... கல்யாண சத்திரம் வந்தாச்சுங்க...” டிரைவரின் குரல் அவனை விழிக்க வைத்தது. உண்மையில் அது பிரம்மாண்டமான மண்டபம் தான்... தின வாடகையே வாயைப் பிளக்க வைக்கும். பாவம்... பரமேசுவரர்... தன் வசதிக்கு மீறிதான் திருமணத்தை நடத்துகிறார்... எதிலும் குறை வைக்கவில்லை. மின் விளக்குகளின் அலங்காரம்.. மலர் ஜோடனை... பந்தல் அலங்காரம் அனைத்தும் பிரமாதமாக இருந்தது. மண்டபத்தின் முன் வாசலில் பலநிறப் பூக்களால் பானுமதி வெட்ஸ் சந்திரன் என்று புனையப்பட்டிருந்தது.

பெயர் பொருத்தம் நன்றாகத்தான் இருக்கிறது. இருவர் பெயரிலும் சந்திரன்....

அவனையும் அறியாமல் உள்மனம் ராஜசேகர்... ரத்னா என்று முணுமுணுத்து பொருத்தம் தேடியது...

அடுத்தகணமே சே! மனப்பொருத்தம் இல்லாத ஜோடி பெயர் பொருத்தம் இருந்தால் என்ன... இல்லாவிட்டால் என்ன என்று சலித்துக் கொண்டது.

வேண்டாத எண்ணங்களை உதறிவிட வேண்டும் என்று ஆவேசத்துடன் தலையை சிலுப்பிக் கொண்டு காரில் இருந்து இறங்கிய அவனைப் பார்த்து அனைவரும் பணிவுடன் ஓடிவந்தனர்.

மானேஜர் பரசுராம் பரபரப்புடன் முன் வந்து அவனை வரவேற்றார்.

"அய்யா... வரணும். உங்களுக்காகத்தான் காத்திருக்கிறோம்... முகூர்த்த நேரம் வந்தாச்சு..." என்றார். வணங்கி நின்ற அனைவருக்கும் தலையசைத்தவாறு சென்று முன் வரிசையில் அவனுக்காகப் போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்தான். அய்யரும் மந்திரத்தை ஆரம்பித்தார்.

மாப்பிள்ளைப் பையன் ஒடிசலாய் இருந்தான். முகத்தில் கர்வம் தெரிந்தது.

உலகத்தில் அவனுக்கு மட்டுமே கல்யாணப் பேறு வாய்த்திருக்கிறது என்பது போல அகம்பாவத்துடன் அமர்ந்திருந்தான்.

அய்யர் சொன்ன மந்திரத்தை அலட்சியத்துடன் திருப்பிச் சொன்னான் அவன்.

மண்டப மேடையில் சலசலப்பு...

மணமகளை அழைத்து வந்து கொண்டிருந்தனர். அழகு பதுமையாய் இருந்தாள் அவள்...

அனைவரின் கண்களும் ஆர்வத்துடன் மணமகளை கவனித்தன.

பரமேசுவரரின் மகளா...! உண்மையிலேயே பெண் அழகு தான்... ஆனால்... மாப்பிள்ளை தான் சுமார்... பொருத்தம் கொஞ்சமும் இல்லை...

அங்கிருந்தவர்களின் நினைவோட்டம்...



உண்மைதான்... பெயருக்கு ஏற்றாற்போல பானுவின் காந்தியையும்... மதியின் அழகும் சேர்ந்ததுபோல இருந்தாள் பானுமதி...

பொன்னிற மேனிக்கு அவள் உடுத்தியிருந்த கரும்பச்சை நிறப் பட்டுப்புடவை எடுப்பாய்த் தெரிந்தது. அவளின் அழகை இரட்டிப்பாக்கிக் காட்டின அவளது பொன் நகைகள்...

ஆனால்... பூ மாலைக்கு குரங்கு பொருத்தமில்லையே... வேறு அழகான... நல்ல மாப்பிள்ளை கிடைக்கவில்லையா... எதை வைத்து இப்படி பொருத்தமில்லாதவனை தன் மகளுக்கு மாப்பிள்ளையாக்க நினைத்தார்... பரமேசுவரர்... குணத்திலும் நல்லவனாகத் தெரியவில்லையே... ஒரு வேளை... பணம் மட்டுமே தகுதியாக நினைத்தாரோ... தன் மகள் பெரிய இடத்தில் வாழ்க்கைப் பட்டால் போதும் என்ற எண்ணத்திலா...

ராஜசேகர் மனதிலும் அந்த கேள்விதான்.

திடீர் என்று "அய்யரே மந்திரத்தை நிறுத்துங்க" என்று உரத்த குரல் உறும...

அனைவர் முகத்திலும் குழப்பம்...

மாப்பிள்ளையின் தந்தைதான் அப்படிச் சொன்னது. அய்யர் திகைப்புடன் பார்த்தார்...

"மாப்பிள்ளைக்கு 'ஸ்ப்லெண்டர்' வண்டி இன்னும் வரவில்லை... வைர நெக்லஸ்னு சொன்னீங்க... பார்த்தா... வெறும் வெள்ளைக்கல் அட்டிகை மாதிரித் தெரியுது. எங்களை என்ன.. இளிச்சவாய்ங்கன்னு நினைச்சீங்களா... உசந்த மாப்பிள்ளை மட்டும் வேணும். சீதனம் தர மட்டும் கசக்கிறதா. உங்களுக்கெல்லாம் எதுக்கைய்யா பெரிய வீட்டுச் சம்பந்தம்.. பேசாம... ஏழைக்கேத்த எள்ளுருண்டைன்னு

பார்த்துக்க வேண்டியதுதானே...'' மாப்பிள்ளையின் தந்தை கத்த...

கையைப் பிசைந்து கொண்டிருந்த பரமேசுவரர் அவரு காலில் விழப் போனார்.

அருகில் இருந்த பெரிய மகன் அதைத் தடுக்க நினை தான்... ''என்னப்பா... இது.. அவர்கள் காலில் நீங்க விழுவதா..''

''பெண்ணைப் பெத்தவங்க... மானம்... அவமானம் பார்க்கக் கூடாதுப்பா... நம்ம மகளோட வாழ்க்கை பிரச்சனைப்பா... அவ சந்தோஷத்தை நாம பார்க்கணும். கொஞ்சம் பேசாம இருப்பா...'' என்று சொல்லி விட்டு.. மாப்பிள்ளையின் தந்தையிடம் கெஞ்சினார்.

''அய்யா... நீங்க பெரிய மனசு பண்ணி என் மகளை ஏத்துக்குங்க...''

''எனக்கு பெரிய மனசு இருக்கக் கண்டுதான் உங் பொண்ணை மருமகளாக்கிக் கொள்ளச் சம்மதிச்சேன். எ லோரும் கேட்டார்கள்... ஏண்டா.. உன் தகுதிக்கு இறங் வந்து பெண் எடுத்திருக்கேன்னு. ஏதோ உங்கப் பொண் கண்ணுக்கு லட்சணமா இருக்காளேன்னு ஒப்புக் கொ டோம். இப்போதும் குடியேதும் மூழ்கிப் போகல்லே. கேட்டதைத் தரப்பாருங்க... உங்கப் பொண்ணுக் கழுத்தி தாலி விழும்...'' கறாராகப் பேசிவிட்டு.. என் முடிவை மாற்றிக் கொள்ள மாட்டேன் என்பதுபோல இறுகி நின்றா

இந்த இக்கட்டான நேரத்தில்... இனியும் தான் சும்மா இருப்பது அழகல்ல என்று நினைத்தான் ராஜசேகர்.

''பரமேசுவரன்... ஒரு நிமிடம்... இங்கே வாருங்கள்..'' என்று அழைத்தான்.



பரமேசுவரன் வந்ததும் ''என்ன இது.. உங்களால் முடியவில்லை என்று தெரிந்தும் வைர நெக்லஸுக்கும் 'பைக்'கிற்கும் எதுக்கு ஒப்புக் கொண்டீர்கள். ஏற்கனவே உங்கள் கைமீறி எல்லாம் செய்திருக்கிறீர்கள்... இது வேறு ஏன்...'' என்று கேட்டான்.

''இல்லை அய்யா... இவற்றை நான் தருவதாக சொல்லவும் கிடையாது. கல்யாணத்திற்கு ஒரு வாரம் முன்பு சம்பந்தி என் வீட்டிற்கு வந்திருக்கிறார். நான் வீட்டில் இருந்திருந்தால் இந்த சிக்கலே வந்திருக்காது.. இப்போதைக்கு முடியாது என்று நாசூக்காய் மறுத்திருப்பேன்... ரொம்ப வேண்டியவர்களை அழைக்க வேண்டி வெளியூருக்குப் போயிருந்தேன். அந்த நேரத்தில் என் வீட்டுக்கு வந்து என் பெண்ணிடம் சொல்லியிருக்கிறார். அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை... பேசாதிருப்பதை ஒப்புதல் என்று நினைத்துவிட்டார் போல...''

''சரி... மனம் தளரவேண்டாம்... நான் சொல்லிப் பார்க்கிறேன்.. இருங்கள்.''

ராஜசேகர் அழுத்தமாய் நின்றிருந்த மாப்பிள்ளையின் தந்தையிடம் சென்றான்.

இருவரும் என்ன பேசினார்களோ தெரியவில்லை. அடங்கியக்குரலில் அவன் வாதாடுவதும்... அந்த மனிதர் மறுப்பதும் மட்டும் தெரிந்தது.

கடைசியில் சத்தமாய் ''நீர் யார் இதைக் கேட்க... உமக்கும் இந்த விஷயத்துக்கும் என்ன சம்பந்தம். அவருக்கு நீ முதலாளியா இருக்கலாம்... எங்களுக்கு இல்லை.. டேய்... சந்திரா... எழுந்திருடா... போதும்... இந்தக் கல்யாணம் ஒரு கேடு... இது இல்லாவிட்டால் என்ன... நூறு சம்பந்தம் தேடி வரும்...'' கோபத்தினால் முகம் கன்ற நின்றிருந்தான்

ராஜசேகர். இதுவரைக்கும் தான் சென்ற திருமணங்களி இந்தமாதிரி பிள்ளை வீட்டாரைப் பார்த்தது இல்லை...

தான் நின்று வாகனமும்... வைர அட்டிகையும் வாங் தருவதாய்க் கூறியும் இந்த மனிதர் நம்பாமல் குதிக்கிறாரே இவர்கள் இன்னும் வேண்டும் என்று கேட்டுப் பிடு மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்...

அதுமட்டும் அல்ல... மருமகளை நன்றாக வைத்து கொள்வார்கள் என்று சொல்வதற்கும் இல்லையே... பாவ பரமேசுவரன்.. நல்ல சம்பந்தம் என்று எண்ணி மோச போய் விட்டார்.

"ஐயா... ஐயா..." என்று கெஞ்சிக்கொண்டு பின் அவர் ஓடுவதை தடுத்தான் ராஜசேகர்.

"பரமேசுவரன்... நில்லுங்கள்... அவர்கள் போனா போகட்டும்... இவர்களை விட்டால் வேறு யாரும் இ யாதா... என்ன... பணப்பிசாசு பிடித்து ஆட்டாத ஒருவ நிச்சயம் வருவான்... இவர்கள் வீட்டுக்கு உங்க பெண்ணை அனுப்புவதை விட.... பேசாமல் திருமணம் ஆகாம வீட்டில் இருக்கலாம்.. அவர்களைப் போக விடுங் பரமேசுவரன்.."

சட்டென்று நின்றார் சம்பந்தியாக வர இருந்த பெ மனிதர்.

"ஆமா... ஆமா.. வருவாங்க... யாராவது காதில் பூ சிருக்கும் இளிச்சவாயன்கள் இருந்தா வருவாங்கதான் ஏம்பா.. இத்தனை பேசறயே... ஏன் நீயே தாலிகட் டேன்... பைசா வாங்காமல்... ஓ! ஊருக்குத்தான் உ உபதேசமாக்கும்.... வாய்கிழியப் பேசினே... எங்கே அந்தப் பொண்ணுக்குத் தாலி கட்டிவிடு... நானும் இரு பார்த்துவிட்டு போறேன்."



ராஜசேகரின் முகம் அவமானத்தால் சிவப்பது கண்டு முகம் வெளுத்தார் பரமேசுவரன்.

அவனுக்குத் திருமணம் ஆகிவிட்டது என்று அறியாமல் தனது வார்த்தைகள் எந்த அளவு அவனது மனதைக் குத்திக் கிளறும் என்று உணராமல் இந்த மனிதர் இப்படி பேசிவிட்டாரே...

கையெடுத்துக் கும்பிட்டார் பரமேசுவரன்.

"ஐயா... தயவு செய்து இனி ஏதும் பேசவேண்டாம். என் முதலாளி இவர்... இவர் மனதை நோகப் பண்ணுவதை என்னால் சகித்துக் கொள்ள முடியாது... விருப்பம் இல்லைன்னுட்டீங்க... அப்ப போய் வாங்க.. சந்தோஷம்."

"அப்போ... நீங்க..." என்று ஆரம்பித்த அந்த மனிதரை அடக்கினான் பெரியமகன் வாசு.

"வெத்துப் பேச்சு எதுக்கு சார்.. புறப்படுங்க... இல்லாவிட்டால் இன்னும் ஏதேதோ பேசவேண்டி வரும்..."

மேல் வஸ்திரத்தை உதறிப் போட்டுக்கொண்டு கோபமாய் 'விர்' ரென்று சென்ற தந்தையை ஆட்டுக் குட்டி போல தொடர்ந்தான் அவரது மகன். இந்தத் திருமணம் நடக்குமா... நின்றுவிடுமா என்று சந்தேக ஊசலாடிக் கொண்டிருந்த பிள்ளை வீட்டினர் எழுந்து சென்றனர்.

பெண் வீட்டாரோ... பாவம்... மலைத்துப் போய் இருந்தனர்... அடுத்தது என்ன நடக்குமோ என்ற திகைப்பும் அவர்களை ஆட்டிவித்தது...

திருமணம் நின்றுவிட்டதே.. இருப்பதா... வேண்டாமா என்ற குழப்பம் வேறு...

மணப் பெண்ணைப் பற்றிச் சொல்லவும் வேண்டாம். என்ன நடக்குமோ... என் எதிர்காலம் என்னவாய் இருக்கப் போகிறதோ என்ற பரிதவிப்புடன் பார்த்தாள்.

பரமேசுவரன் தன் பக்கத்து உறவினர்களையும் வந்தி.. நண்பர்களையும் பார்த்துக் கையெடுத்துக் கும்பிட்டார்.

"என்னோட துர்பாக்கியம் இப்படி ஆகிவிட்டது. .. வேண்டுகோள்... இங்கே யாராவது ஒரு நல்ல.. இளைஞர்... என் மகளை மணக்க முன் வந்தால் இ.. முகூர்த்தத்திலேயே நடத்தி வைக்கிறேன்."

ஒரு நிமிட நிசப்தம்...

அனைவர் மனதிலும் திக்... திக்...

ஏதோ மர்மப் பட முடிவை எதிர்பார்ப்பது போல...

என்ன ஆகப்போகிறதோ என்ற ஆர்வத்துடன் காத்.. தனர்.

ஒருவன் எழுந்தான்... பரமேசுவரனின் உறவுதான்.

"மாமா... நான் பானுமதியை மணக்கத்தயார்." பரமே.. வரன் மட்டுமா... அங்கிருந்த உறவினர்களும் ஏன் பா.. மதியும் தான்... திடுக்கிட்டனர்.

'அய்யோ... இவனா... இவன் பெண் பித்தனாயிற்.. மொடாகுடியன் வேறு.... பொய் புரட்டன்... ஜகதல.. தாபன் என்றெல்லாம் பேரெடுத்தவன்... இவனுக்கா...'

"பாவம் பானுமதி... இவனை மணந்து கொள்வ.. ஒன்னு... பேசாம பாழும் கிணத்தில் விழுவதும் ஒன்.. தான்..." யாரோ ஒரு வயதானவர் பெரியகுரலில் சொல்.. காதில் விழுந்தது...

பானுமதி தந்தையை அழைத்தாள்.

"அப்பா... இவனுக்கு என்னைக் கட்டிக் கொடுக்காதீ.. கப்பா... காலம் எல்லாம் கன்னியாகவே உங்களோ.. இருந்துவிடுகிறேன்ப்பா..." என்றாள்.



"எனக்கும் புத்தி கெட்டுடலைம்மா... ஏய்... கேசவா உன்னை மாப்பிள்ளையாக அடைய எனக்குத் தகுதி இல்லை... விடுப்பா.." என்றார் பரமேசுவரன்.

"அப்படின்னா..."

"அப்படின்னா... எங்களுக்கு விருப்பம் இல்லேன்னு அர்த்தம்" அழுத்தமாய் சொன்னான் வாசு.

"அதுசரி.. ஏதோ... கல்யாணம் நின்னுபோன பொண்ணை மணந்து வாழ்வு கொடுக்கலாமேன்னு பார்த்தா ரொம்பத் திமிரா பேசறீங்களே... எந்த மகாராஜா இனிவருவான்னு பார்க்கிறேன்." எகத்தாளமாய் பேசினான் அந்த கேசவன்.

பரமேசுவரன் தன் விதியை நொந்து கொண்டு வேதனைப் பட்டார்... ஒரே பெண்ணோட வாழ்க்கையில் இத்தனை சோதனைகளா...

ஏன்...நான் செய்த பாவமா... இல்லை... பானுமதியின் போறாத நேரமா...

உண்மையில்... அங்கு வந்திருந்தவர்களில் வாலிப வயசினர் இருந்தாலும் அவர்கள் திருமணமானவர்களா கவோ இல்லை படித்துக் கொண்டிருப்பவர்களாகவோ இருந்ததுதான் வேதனை... ஒன்றிரண்டு திருமணமாகாதவர் களுக்குச் சொந்தத்தில் முறைப்பெண்கள் காத்திருந்தனர்.

போகலாமா... இருக்கலாமா என்ற தயக்கத்தில் இருந்த ராஜசேகரிடம் ஒரு பெரியவர் வந்தார்.

"அப்பா.. ராஜசேகர்.. நான் ஒண்ணு சொன்னா... தப்பா எடுத்துக்க மாட்டியே... இந்தப் பெண்ணுக்கு நீ ஏன் வாழ்வு தரக்கூடாது...!" என்று கேட்க...

ராஜசேகர் திகைத்து நின்றான்.

'நானா... நான் எப்படி.... இவருக்கு என்னைப் பற்றித் தெரியாதா...' தடுமாறினான் அவன்.

அவனது எண்ணங்களைப் புரிந்து கொண்டவர் போல பேசினார் அந்தப் பெரியவர்.

''எனக்குத் தெரியும்ப்பா... உனக்குக் கல்யாணம் ஆ விட்டது. ஆனா இரண்டரை வருஷம் ஆகியும் இன்னும் பிர மச்சாரியாகவே இருக்கிறே... உன் மனைவி தாய் வீட்டி இருக்கா... வர்ரதா உத்தேசம் இல்லைன்னு தெளி தெரிஞ்சிடுச்சு.. இன்னொரு கல்யாணம் பண்ணிக்க என் தடங்கல்...''

''இல்லை.. பெரியவரே... எனக்கு இது சரியாகப் ப வில்லை.... என் மனசும் இதற்கு ஒப்பவில்லை. முதல் மனை இருக்கையில் இரண்டாவது திருமணமா.. அது சாத்தி மில்லை... மேலும் பரமேசுவரின் மகளுக்கு சின்னவயச அவருக்கு ஒரே மகள் வேறு... இரண்டாமவளாய் வாழ்க்கை படுவதும் நல்லதில்லை... நானே இருந்து நல்ல மாப்பிள்ள யாகப் பார்த்து...''

''சட்''டென்று கால்களில் ஏதோ இறுக்கம்... குனிந் பார்த்தான்.

பானுமதி அவனுடைய கால்களைப் பிடித்திருந்தாள்.

''இரண்டாம் மனைவியாக உங்களுக்கு வருவதி எனக்கு மனக்குறை ஏதுமில்லை... நீங்களும் என்ன கைவிட்டு விட்டால்... ஒரு குடிகாரனுக்கோ... சூதாடு னுக்கோ ந. ன் வாழ்க்கைப்பட வேண்டிவரும். அதிலிரு என்னைக் காப்பாற்றுங்கள்... திருமண ராசி இல்ல வள்ங்கற அவப்பெயர் எனக்குவராமல் இருக்க... நீங்கதா மனைவியா ஏத்துக்கணும்.. உங்கள் வீட்டில் ஒரு வேல காரியாக இருந்து விடுகிறேன்.. நிச்சயம் மனைவி எ பதவிக்கு ஆசைப்படமாட்டேன்... இது சத்தியம்'' க களில் நீர் வழிய அவள் கெஞ்சுவது கண்டு அவன் ம கலங்கினாலும்...



அவனால் ஏற்க முடியவில்லை....

''இல்லைம்மா... என்றாவது ஒருநாள் என் மனைவி வருவாள் என்று தான் காத்திருக்கிறேன்.''

கடவுளே... என் வாழ்க்கையின் அந்தரங்கத்தை இப்படி வெளிச்சம் போட்டுப் பேசும்படி ஆனதே.. அவனுக்குத் தர்ம சங்கடமாக இருந்தது.

''அவர்கள் வந்தாலும் சரி... நான் தடையாக இருக்க மாட்டேன்.... அவர்களுடன் சந்தோஷமா இருங்க... உங்களுக்கு பணிவிடை செய்து கொண்டு இருந்து விடுகிறேன்... என் வாழ்க்கை இப்படி ஆனதிற்கு என் அப்பா மனம் நொந்து போயிடுவார்... அவருக்காகவாவது என்னை ஏற்றுக் கொள்ளுங்களேன்...''

ராஜசேகர்.. நெருப்பு வளையத்துள் சிக்கியது போல தவித்தான்...

பரமேசுவரனுக்கும் இதைவிட நல்ல வழி தெரியவில்லை... மகளுக்குத் திருமணம் நின்று போனதை கன்னா பின்னா வென்று பேசுவார்களே... யார் மணக்க வருவார்கள்.... அப்படியே வந்தாலும் அவர்கள் கேசவன் மாதிரி குணக்கேடாகத்தான் இருப்பார்கள். அதைவிட.... முதலாளி என் மகளை இரண்டாம் தாரமாய் ஏற்றுக் கொண்டால்... நடந்த அவமானத்தை சுத்தமாய் அது துடைத்துவிடுமே...

உடனே ராஜசேகரின் கரங்களைப் பற்றிக் கொண்டு ''அய்யா... என் மானத்தையும்.. குடும்ப கௌரவத்தையும் உங்க காலடியில் வைத்துக் கேட்கிறேன். என் மகளை ஏற்றுக் கொள்வீர்களா... இதைக் கேட்க எனக்கு மனசில்லை தான்...வேறு வழித் தெரியாமல் கேட்கிறேன். உங்க பங்களாவில் எங்கேயாவது ஒரு மூலையில் அவள் இருந்து விட்டுப் போகட்டும்...'' என்ற நா தழுதழுக்க வேண்டினார்.

ஒருபுறம் கண்ணீரும் கம்பலையுமாய் மகள்... இ
னொருபுறம் கலங்கி நிற்கும் தந்தை. என்ன செய்வது என்
தயக்கத்தில் சில நிமிடங்கள் கரைந்தன.

"முகூர்த்த நேரம் முடியப் போறது..." அய்யர் எச்சரிக்
செய்ய...

பத்து நிமிடத்தில் பரமேசுவரின் அருமைப் புதல்
பானுமதி ராஜசேகரின் மனைவியானாள்.

பரமேசுவரன் தன் மாப்பிள்ளையின் கரங்களைப் பற்
கண்ணீர் மல்க... கண்களில் ஒற்றிக் கொண்டார்.



2

ராட்சச பாம்பாய் வளைந்து சென்ற பாதையி
வழுக்கிக் கொண்டு ஓடியது கார்...

பின்சீட்டில்... கணவரின் அருகே அமர்ந்திருந்த பானும
மனம் படபடக்கக் கடைக்கண்ணால் ராஜசேகரைப் பார்
தாள்.

இன்னும் அவளால் நம்பவும் முடியவில்லை... இவ
இப்போது என் கணவர்! தன் கழுத்தில் தொங்கும் மஞ்ச
சரடு நீ ராஜசேகரின் மனைவிதான் என்றது.

"நம்ம முதலாளி அய்யா முன்னால் உன்னோட க
யாணம் நடக்கிறதுக்கு நாம கொடுத்து வச்சிருக்கணும்மா
என்று சொன்னாரே... அப்பா...

அந்த முதலாளியே இப்போ அவருக்கு மாப்பிள்ளை
என்றால் நிச்சயம் அது அப்பாவுக்கு பரமானந்தமாய் தா
இருக்கும்.



இதெல்லாம் நிஜம்தானா... இல்லை பிரமையா என்று கூட சில சமயங்களில் தோன்றியது.

யாரோ ஒருவன் மாப்பிள்ளை என நிச்சயமாகி... அது இல்லை என்று ஆகி... இன்னொருவரை மணம் செய்து கொண்டது... கனவில்லையே...

யாருக்குத் தெரியும்... எந்தப் பூ.. யாருடைய கூந்தலுக்குச் சொந்தம் என்று..

அதுபோல தான்... யாருக்கு மாப்பிள்ளை யாரோ... எனக்கு இவர்தான் என்று இருந்ததாலோ மண்டபத்தில் அத்தனை களேபரம்.. கலாட்டா...

நடந்தது எல்லாம் நன்மைக்கே.. அந்த பணந்தின்னிக் கழுகுகளின் பிடியில் சிக்காமல் தப்ப முடிந்தது.

சிக்கியிருந்தால்.. நினைக்கவே மேனி அதிர்ந்தது. கல்யாணம் என்றதும் அவள் கற்பனைக் கோட்டை கட்டவில்லை.. சந்திரனைத் தன் தந்தை மாப்பிள்ளையாய் தேர்ந்தெடுத்ததில் அவளுக்கு வருத்தம்தான். மாப்பிள்ளை சுமார் என்ற குறை அவளுக்கு இருந்தது. இருந்தும் அப்பா பார்த்த மாப்பிள்ளையாயிற்றே என்று சம்மதித்து வைத்தாள்.

மகள் வசதியாக இருக்க வேண்டும் என்று நினைத்த பரமேசுவரனுக்கு அழகு இரண்டாம் பட்சமாய் தெரிந்தது. அதனால் மகளிடம் பிடித்திருக்கிறதா என்று கேட்கவில்லை...

பானுவும் அதைப் பெரிசுப்படுத்தவில்லை.

பெற்றவருக்கு இல்லாத அக்கறையா என்ன... தன் மகளுக்கு எத்தகைய மணாளனைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பது அவருக்குத் தெரியாதா... அந்த நம்பிக்கையில் தான் அவள் தலையாட்டினாள். பிள்ளைகள் மாப்பிள்ளை

லட்சணமா இல்லையே என்று முணுமுணுத்தாலும் அவ
அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை...

ஆணழகன் என்று இருக்க வேண்டாம்... கண்ணிற்கு
கொஞ்சம் லட்சணமாய் இருந்திருக்கலாம் என்று தோன்றியது

ஆனால் பானுமதி தனக்கு விதிக்கப்பட்டவன் அவ
தான் என்று இருந்தால் என்ன செய்யமுடியும்... என்
சமாதானம் சொல்லிக் கொண்டாள்...

சந்திரனின் தந்தை சீர் விஷயத்திற்காகத் தகரா
செய்தபோது பானுமதிக்கு வெறுப்பு ஏற்பட்டது.

முக்கியமாய் அந்த சந்திரன் மீது... நல்லவனாக இரு
திருந்தால் அப்பாவை அடக்கி இருக்கலாம்...

அவனும்... அவர் சொல்வதற்குச் சம்மதிப்பது போ
மௌனமாக அல்லவா இருந்தான்.

சே! அவனும் ஒரு ஆண்பிள்ளை என்று நினைக்கவ
கேவலமாக இருந்தது... இந்தமாதிரி பணமே பெரிசு என்
நினைக்கும் மனிதர்களுடன் எப்படி வாழ முடியும்...

அதனால்தான் திருமணம் நின்றுவிடும் கட்டம் வ
தாலும்... 'நிற்கட்டுமே' என்று நினைத்தாள்.

ஆனால்... நின்றபின்... யாரோ ஒரு அயோக்கியன் தன்ன
மணக்க முன் வந்தபோதுதான் அவள்... தன் எதிர்காலத்
காரிருளாய்க்கண்டாள்...

கடவுளே.. வரதட்சணை.. சீர் தகராறால் திருமண
நின்று போனால் கூட பெண்ணின் தரம் திருமண
சந்தையில் இறங்கிவிடுமா என்ன...

அந்த நிலையில் தான் உடலும் உயிரும் ஒடுங்கிப் போ
நின்றாள்.





யாரோ ஒரு பெரியவர் ராஜசேகரை அண்டி அவனை மணமேடையில் அமரும்படி சொன்ன போதுதான் அவனை நன்றாய் கவனித்தாள்.. அவனுக்கு ஏற்கனவே மணமாகி விட்டது... ஆனால் மனைவி உடன் இல்லை.. பிரிந்து போய் விட்டாள்.. இது அவளுக்குத் தெரியும் இருக்கட்டுமே...

சிறு நரிக்கு தலையாய் இருப்பது காட்டிலும் சிங்கத்துக்கு வாலாய் இருப்பதில் தான் பெருமை. இவரை மணந்து கொண்டால் மனைவி என்ற பட்டத்துடன் வீட்டில் வேலைக்காரியாய் இருந்து விடலாம்...

ராஜகுமாரன் போல இருக்கும் இவருக்கு மனைவி என்ற விஷயமே பெருமைதான்...

இரண்டாவதாய் இருக்கட்டுமே.. அதில் தலைகுனிவு இல்லவே இல்லை.

வெள்ளத்தோடு போக இருப்பவனுக்கு கையில் சிறு கட்டைக் கிடைத்தாலும் இறுகப் பற்றிக் கொள்வதுபோல... அவனது கால்களைப் பிடித்துக் கொண்டதும் அதனால்தான்

அதற்காக இப்படி இறுகிக் கிடக்கிறார் போலிருக்கிறது. ஏற்கனவே ஒருத்தியால் பட்ட கஷ்டங்களும்..... அவமானங்களும் போதாதா... மறுபடியும் இன்னொருத்தியா என்று நினைத்து கொதித்துக் கொண்டிருக்கிறாரோ.. அதுமட்டுமல்ல...அழுது.. கெஞ்சி... தன் கால்களில் விழுந்து தன்னை வளைத்துப்போட்டு விட்டாளே என்ற எரிச்சலும் இருக்கலாம்...

இப்போது ஏண்டா தாலிக்கட்டினோம் என்று உள்ளுக்குள் மறுகிக் கொண்டிருக்கிறாரோ என்னவோ... இருக்கலாம்...

அவர்தான் சொன்னாரே... மறுபடியும் வருவாள் என்று காத்திருக்கிறேன்னு...

ஒருவேளை... அவள் மீது வைத்திருக்கும் அன்பை ம.. முடியாமல்... இன்னும் அவளையே நினைத்து ஏங்.. கொண்டிருக்கிறாரோ... அப்படித்தான் இருக்கும்...

இப்படி ஒரு நல்ல.. அழகான.. அன்பான கணவ.. அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே...அதை .. மூத்த மனைவி உணர்ந்து கொள்ளவில்லை.. இவரை இ.. தவிக்க விட்டு சென்று விட்டாளே....

தேடிவந்த அதிர்ஷ்டத்தை... அதன் அருமையை உ.. ராமல் தொலைத்து விட்டு.. ஓடி விட்டவளை நினைத்.. பரிதாபம்தான் வந்தது.

அப்படியென்றால்.. தான்... இவரைக் கணவன.. அடைந்ததால் பாக்கியசாலியா.. இல்லை... இவரது அன்.. பெறமுடியாத துர்பாக்கியவதியா.. தெரியவில்லையே...

வண்டி பெரிய மாளிகை போல கட்டப்பட்ட ஒரு .. டின் முன் நின்றது.... 'இந்த வீட்டிற்கா நான் மருமகள்.. என்ற நினைப்பில் 'சிலீர்' என்று உள்ளுக்குள் பயம் கவ்வி..

சௌந்திரத்திற்கு நம்பவே முடியவில்லை.

என்ன... என் பிள்ளைக்குத் திருமணமா... எப்படி... மு.. திருமணத்தில் பட்ட அடியால் இன்னும் நிமிர.. இல்லையே... அவனுக்கா... திருமணம் என்றாலே கசப்ப.. நினைத்து முகத்தைச் சுளித்தவன் மறுபடியும் தாலிக்கட்.. னானா... பிரமிப்பு இன்னும் தீராமல் மலைத்துப் போயி.. தாள்.

சிறிது நேரத்திற்கு முன் கணக்குப் பிள்ளை வ.. சொன்னபோது... உண்மையைத்தான் சொல்கிறார்க.. என்று திகைத்தாள்.

பிறகு... நடந்த விவரத்தையெல்லாம் அவர் விளக்க.. தான்... ஓகோ... அதுதானே பார்த்தேன்.



அவனாக விரும்பித் தாலிக்கட்டவில்லை. வலுக்கட்டாய மாக திருமண பந்தத்தினுள் இழுக்கப்பட்டான் என்று நினைத்தாள்.

எப்படியோ... அவனுக்கு என்று ஒருத்தி வந்தாச்சு. இந்த வீட்டுக்கு விளக்கேத்த ஒரு பெண் வந்து விட்டாள்... அது போதும்..

இப்போது பெற்ற வயிறும் மனமும் பனிச்சாரல் பட்டது போல குளிர்ந்து போயின.

ரத்னா சென்றபின்... சந்தோஷத்தை தொலைத்தவ னாய்... விட்டேத்தியாய் காலம் தள்ளியவனுக்கு இறை வனின் கருணையால் ஒரு துணை வந்து விட்டது... இனி என்ன வேண்டும்... தன்னையும் அறியாமல் பனித்த கண்களைத் துடைத்துக் கொண்ட சௌந்திரம் அடுத்தக் கட்ட நடவடிக்கையை ஆரம்பித்தாள்.

மணமக்கள் காரில் வந்து கொண்டு இருக்கிறார்கலாம்...

அவர்களை வரவேற்க வேண்டுமே...

ஆட்களை ஏவி.. அவசரமாய் வீட்டை அலங்கரித்து.. விருந்து ஏற்பாடு செய்து... நாலு சுமங்கலிப் பெண்களை வைத்து மாக்கோலமிட்டு... விளக்கேற்றி... பழம்.. பூ.. வெற்றிலை... இனிப்பு என்று வாங்கி வைத்து...

மளமள வென்று வேலைகள் நடந்தன... மணமக்களும் வந்துவிட்டனர்.

எப்போதோ... ஏதோ ஒரு வைபவத்தில் மானேஜரின் பெண்ணைப் பார்த்தது.. சிறுமியாய்... இரட்டை சடைப் போட்டுக் கொண்டு...பாவாடை சட்டையில் பொம்மை போல் திரிந்த ஞாபகம்.

அந்தப் பெண்ணா...

அழகாத்தான் இருக்கிறாள்...

குத்துவிளக்கை துலக்கி.. பளிச்சென்று துடைத்து தீபம
ஏற்றினால் என்ன அழகோ... அதுமாதிரி...

அலையாய் ஓடும் கருங்கூந்தலின் நடுவே நெற்
கட்டி... அதன் முகப்பு தவழும் பிறைநெற்றி... மைத்தீட்
பட்ட விசாலமான கண்கள்... அழகான நாசியில் ஒற்
கல் மூக்குத்தி... உதட்டின் கீழ் சின்னமச்சம்.. சங்கு கழுத்தி
பூமாலை... சந்தன நிறத்தை எடுத்துக் காட்டும் பச்சை
பட்டுப் புடவை...

"என் கண்ணே பட்டுவிடும்போல" என்று பெருமி
துடன் நினைத்தாள் சௌந்திரம்.

ரத்னாவும் அழகிதான்.. சொல்லப்போனால் பேரழ
ஆனால் அவளிடம் காணப்படாத பண்புகள் இவளிட
தெரிந்தது... அது... பதவிசு? நளினம்? பெண்மைக்கு
நாணம்? வினயம்? இல்லை. அத்தனையும் தான் இவள்
அழகை இன்னும் கூட்டிக் காட்டியது. இரண்டு சும
கலிகள் ஆரத்தி எடுத்தனர்...

வலதுகாலை எடுத்து உள்ளே வைத்தாள் பானுமதி. இருவ
சேர்ந்து வந்த இனிமையான காட்சியை ஓரமாய் நின்
ரசித்தாள் சௌந்திரம்.

இந்தப் பெண்ணாவது என் மகனின் வாழ்க்கை
மலரச் செய்வாளா... என் பிள்ளைக்கு... இழந்த
மதியையும் சந்தோஷத்தையும் மீட்டுத் தருவாளா... என்
ஒருகணம் தாய்மனம் நினைத்து ஏங்கியது... பானுவ
சாந்தமான முகத்தைப் பார்த்ததும் அந்த ஏக்கம் மாயமான

நிச்சயம் தருவாள்...

அவளே விரும்பி ஏற்றுக் கொண்ட தாலி ஆயிற்
நிச்சயம் கணவனுக்கு அனுசரணையாய்... அவனுக்கு
துணையாய் இருப்பாள்.



ரத்னா மாதிரி இவள் இல்லை...

தன்னை வணங்கிய மருமகளை எழுப்பி அவளது நெற்றியில் முத்தமிட்டு...

"உன் பெயர் என்னம்மா..." புது மருமகளிடம் விசாரித்தாள்.

"பானுமதி..." மெல்லிய குரலில் பதில் வந்தது.

"பார்த்தாயா... என் வீட்டு மருமகளாய் வரணும்னு இருக்கு.. என் மகன் காலையில் புறப்பட்டுச் சென்றபோது இன்னிக்கு எனக்கு ஒரு அழகான மருமகள் கிடைப்பாள் என்று நினைக்கவே இல்லை. எல்லாம் தெய்வச் செயல் தான்..."

"அம்மா.. நான் செய்தது சரியா...தவறா என்று எனக்குத் தெரியல்லே... எனக்கு வேறு வழி தெரியாமல் இப்படி செய்து விட்டேன்.. என்மீது உங்களுக்கு கோபம் ஏதும்..."

"அசடு... என் பிள்ளைக்கும் வாழ்வு மலராதா என்று காத்திருந்தேன்.. கல்யாணம் என்றாலே சுணங்கி போனான் அவன்... என் வேண்டுதல் கேட்டு.. நான் கும்பிட்ட தெய்வம் இப்படி ஒரு வழிக்காட்டிவிட்டது..பாரேன்... எனக்கு ஒரு நல்ல மருமகளாப் பார்த்து அனுப்பி வச்சிருக்கிறாரே.."

பானுவின் உள்ளம் சந்தோஷத்தில் தத்தளித்தது.

மாமியார் எப்படிப்பட்டவளோ... இப்படி கட்டாயப் படுத்தி தாலி கட்டிக் கொண்டு விட்டோமே.. ஏற்றுக் கொள்வாரோ... மாட்டாரோ...

என் மகனை வளைத்துப் போட்டுக் கொண்டாயேடி பாவி என்று கத்துவாரோ...

என் பிள்ளையிடம் கைநீட்டி கூலி வாங்கும் மானேஜரின் பொண்ணு நீ... முதலாளிக்கு மனைவியாகும் பேராசையா என்று ஏசுவாரோ...

இப்படியெல்லாம் எண்ணிப் பயந்து கொண்டிருந்த பானு... சௌந்திரத்தின் அன்பு மொழிகளைக் கேட்டதும்... நெகிழ்ந்து போனாள்...

நான் செய்த புண்ணியம்தான் எனக்கு இப்படி ஒரு நல்ல மாமியார் கிடைத்திருக்கிறார். இவர் மனம் கோணாமல் நடந்து... இவரது அன்பு என்றும் குறையாமல் பார்த்துக் கொள்ளணும்... பானு முடிவு செய்து கொண்டாள்.

அன்று இரவு பானு தயங்கியவாறு மாடி ஏறினாள். அவர் என்னை எப்படி வரவேற்பாரோ.... வலுக்கட்டாயமாய் தன்னைத் தாலிகட்ட வைத்தவள் என்ற கோபத்தில் இருந்தால் என்ன செய்வது...

அந்த அச்சத்தில் கால்கள் பின்னிக் கொண்டன.

அறைக்குள் நுழைந்த பானுவின் கண்கள் தேடின... படுக்கையில் அவன் இல்லை...

வலப்புறம் அமைந்திருந்த 'பால்கனி'யில் நாற்காலியின் மீது அவன் அமர்ந்திருப்பதைப் பார்த்தாள். அவனது பார்வை இலக்கின்றி எங்கோ வெறித்துக் கொண்டிருந்தது.

கட்டிய மனைவியின் வருகையை எதிர்நோக்கி... ஆவலுடன் காத்திருப்பான் என்று நினைப்பது மடத்தனம் என்று தெரியும்.

இது சாதாரணமாய் நடந்த திருமணம் இல்லையே... மண விழாவிற்கு வந்து அன்பளிப்பைத் தந்து விட்டுச் செல்ல இருந்தவனை இழுத்து வைத்து மணமேடையில் அமர்த்தி விட்ட கல்யாணம்... கட்டாயக் கல்யாணம்!

அதுவும் முதல் மனைவி வந்து விடுவாள் என்று அவளின் வருகையை எண்ணிக் காத்திருப்பவனை!

பாவம்... எத்தகைய தர்மசங்கடமாய் இருந்திருக்கும் அவருக்கு...



காக்கைக்குத் தெரியாதாமே எருதின் வேதனை... அது எருதின் புண்ணைக் குத்தித் தின்னுவதுபோல அல்லவா இவரது மனதை ரணப் படுத்தி விட்டேன்...

எப்படிச் சமாதானப்படுத்துவேன்... புரியாமல் விழித்தாள் அவள். கையில் இருந்த பால் செம்பை அருகில் இருந்த மேஜையில் வைத்துவிட்டு அவனை நோக்கி நடந்தாள்.

மெட்டியின் ஒலி காதில் விழுந்தும் அவன் திரும்பாமல் இருந்தான்...

"என் மீது கோபமா... என்னை இன்னும் மன்னிக்க வில்லையா..." என்று கம்மிய குரலில் கேட்டாள்.

அவன் திரும்பி அவளைப் பார்த்தான்.. உணர்ச்சியற்ற பார்வை!

"உன் மீது எனக்கு எந்தவிதக் கோபம் இல்லை... எனக்கு என் மீது கோபம்... என் தலைவிதி மீது கோபம்.. ஓடிப்போன என் மனைவி மீது படுகோபம்... அதை உன் மீது எப்படிக் காட்ட முடியும்..." உணர்ச்சி வசத்தில் அவனது குரல் கரகரத்தது...

அதில் ஆற்றாமை... எரிச்சல்... விரக்தி அனைத்தும் கலந்து வெளிப்பட்டது.

"நான் உங்களிடம் சொன்னதுபோல உங்களிடம் மனைவி என்ற உரிமையை எதிர்பார்க்க மாட்டேன். உங்களது உள்ளத்தில் பங்கு கேட்க மாட்டேன். உறவினர்களின் கேலிப் பார்வையிலிருந்தும்... உதவாக்கரைகளின் கழுகுப் பார்வையிலிருந்தும் தப்பிக்கத்தான் உங்களிடம் சரணடைந்தது. என்னைப் பொறுத்தவரை என்னைக் காப்பாற்றிய தெய்வம் நீங்க..." சட்டென்று அவனது கால்களில் விழுந்தாள்.

அவன் விலகி நின்றான்.

"நான் வெறும் மனுஷன்தான்... என்னைத் தெய்வமாக்கி விடாதே... ரத்தமும் சதையுமா இருக்கிற மனிதன் என் தால் தான் வரும் துன்பங்களையெல்லாம் சகித்து கொண்டு... அவற்றைத் தீர்க்க வழி தெரியாமல் தவிக்கிறேன்..."

"உங்களுடைய துன்பத்தில் எனக்கும்..."

"வேண்டாம்... இன்னும் என் மனம் உன்னை மனை என்று ஏற்றுக் கொள்ள மறுக்கிறது. அதற்குள் என் சுகத்திலு துக்கத்திலும் எப்படி பங்குதர முடியும்... மனைவி என் உரிமையை எதிர்பார்க்க மாட்டேன் என்றாயே... அதற் என்ன அர்த்தம்... என்னுடைய கஷ்ட நஷ்டங்களை பகிர்ந்து கொள்ளும் உரிமை இல்லை என்று தானே... தா கட்டிவிட்டால் மட்டும் மனைவியாகி விட முடியாது..."

அவனது வார்த்தைகளில் தெறித்த சினப் பொறிக அவளைத் தலைகுனிய வைத்தது.

உண்மைதானே... உரிமை கேட்க நான் யார். அவ சொல்வது போல தாலியணிந்தால் மட்டும் மனைவியா விட முடியுமா என்ன... நான் பெயருக்கு மனைவி அ எப்படி மறந்து போனேன்...

கண்களில் பொங்கிய கண்ணீரை அடக்க முடியாம திரும்பி நடந்தாள்.

தரையில் அமர்ந்து... கட்டிலின் மீது தலை சாய்த்து கொண்டாள்.

கண்கள் பொங்கின... கண்ணீர் வழிய வழிய உள்ளத்தின் இறுக்கம் தளர்ந்தது...

எதிர்பார்க்கக் கூடாது என்று நினைத்தாலும்... இத தின் ஒரு மூலையில் கணவனின் அன்புப் பார்வை கிடை காதா என்ற ஏக்கம். பெண்மனம் அல்லவா... அலைச்ச களைப்புமாய் சேர்ந்து அவளை உறக்கத்தில் ஆழ்த்தியது



அரைமணி நேரம் கழித்து எழுந்து வந்த ராஜசேகர் கட்டிலின் மேல் தலை சாய்த்து படுத்திருந்த பானுமதியைப் பார்த்தான்.

அந்த தோற்றம் அவனது கல்மனத்தையும் அசைத்தது. குழந்தை போல தூங்குகிறாள் பாவம்...

குழந்தை போல... ஆமாம்... இவளுக்கு என்ன வயது இருக்கும்... பதினெட்டு... பத்தொன்பது... அவ்வளவு தான் இருக்கும்.

தனக்கு முப்பத்தியொன்று... பன்னிரண்டு வயசு வித்தியாசமா... அட கடவுளே...

இந்த சின்ன வயசில் இரண்டாவது மனைவியாய் வரணுமா...

பானுவின் முகத்தைப் பார்த்தான்... கண்கள் நீரில் விழுந்த சிப்பியால் ஈரம் படிந்து... மூடியிருந்தன.

அழுதிருப்பாளோ... எதற்காக...

அன்பான தந்தையை.. பாசமான சகோதரர்களைப் பிரிந்து வந்ததற்கா...

இல்லை... நின்று போன திருமணத்தை நினைத்தா... அல்லது கல்யாணக் கனவுகள் கருகிப் போனதற்கா...

ஆனால்... அந்தக் கண்ணீரைத் துடைக்கும் உரிமை எனக்கு இல்லையே.

ஊரார் முன் தாலிகட்டினாலும்... உள்ளம் இவளை ஏற்க மறுக்கிறதே.

உள்ளம் காலியாக இருந்தால் அல்லவா ஏற்றுக் கொள்வதற்கு...

உள்ளிருக்கும் ரத்னாவை வெளித்தள்ளிதான் அதை செய்ய முடியும்... அது முடிகிற காரியமா...

குழந்தைப் பருவத்திலிருந்தே ஒன்றுவிட்ட மாமன் ம ரத்னாவை... தான் மணக்க இருப்பவள் என்று கேட் பழகிப் போய்... அவளே தன் மனைவி என்று அவள் மீ கண் மூடித்தனமான காதலை வளர்த்துக் கொண் பின்புதான் தெரிந்தது... அது ஒரு தலைக்காதல் என்று அதுவும் எப்போது... காலம் கடந்து... அவள் கழுத்தில் தா கட்டிய பிறகு...

இதைத்தான் விதியின் விளையாட்டு என்பது.



3

"ம்மா..."

பசுவின் அழைப்பில் விழித்துக் கொண்டாள் பானும

அருகில் இருந்த ரேடியம் அலாரத்தில் மணி பார்த்தா ஐந்தரை!

பரபரப்புடன் எழுந்தாள்... பால் கறக்கும் சாமிக்கண் வரும் நேரம்.. ஒருவேளை வந்து விட்டாரோ என்னவோ

தாலியை எடுத்து கண்களில் ஒற்றிக் கொண்டு... சேலை சீர் செய்து கொண்டு படுக்கையிலிருந்து இறங்கினாள்...

படுக்கையில் மறுஓரத்தில் படுத்திருந்த கணவனை பார்த்தாள்.

கேசம் கலைந்து போய்... முகத்தின் இறுக்கம் தளர் நிம்மதியாய் உறங்கிக் கொண்டிருந்தான் அவன்.

இருவரும் ஒரே படுக்கை என்றாலும்... அவன் ஓ ஓரமாய்... இவள் மறு ஓரம்...



அவளைக் கீழே படுத்துக் கொள்ளத் தேவையில்லை என்று அவன் சொன்னதால்... கட்டிலில் படுக்க ஆரம்பித்தாள்.

மாடிக்கு வரும் வேலையாட்களுக்கு எந்தவித சந்தேகமும் வரக்கூடாது என்ற எச்சரிக்கையில் சொல்லியிருக்கலாம்.

ஆனால்.. தவறியும் தன் சுண்டு விரல்கூட அவள் மீது படாமல் பார்த்துக் கொண்டான்.

இதுவரைக்கும் தன்னை அனுமதித்தாரே... அதே போதும்... என்ற நன்றியோடு மாடியிலிருந்து இறங்கினாள் அவள்.

ஒவ்வொரு நாளும் அவள் இறங்கி வரும்போது கூடத்து ஊஞ்சலில் படுத்துக் கொண்டிருக்கும் சௌந்திரம் மருமகளின் முகத்தைக் கூர்ந்து கவனிப்பாள். அவளது முகத்தில் சந்தோஷத்தின் ரேகை தெரிகிறதா... என்று ஊகூம்... இல்லவே இல்லை...

திருமண இரவு முடிந்து மறுநாள் காலையில் பானுமதி தலை குனிந்து வந்தபோது சௌந்திரம் உள்ளத்தில் தாங்க முடியாத மகிழ்ச்சி...

ஆனால்... மருமகளின் முகத்தில் படிந்திருந்த கண்ணீர் சுவடுகள்... சிவந்து வீங்கியிருந்த கண் இமைகள் வேறு கதையல்லவா சொல்லுகிறது.

ஆக... தன் மகன் இன்னும் கல்லாகவே இருக்கிறான்.

சே! ரத்னா வருவாள் என்று காத்திருக்கிறானா.

இலவு காத்த கிளிபோல காலத்தையல்லவா வீணாக்கு கிறான்.

முதல் பொண்டாட்டியுடன் வாழும்போதே சின்ன வீடு என்று இரண்டாமவளைத் தேடிச் செல்லும் ஆண்கள் மத்தியில் இப்படியும் ஒருவன்...

வராத மனைவியை வருவாளா என்று எதிர்நோக்கிக் காத்திருக்கிறானே... இவனது முட்டாள் தனத்தை என்ன வென்று சொல்வது..

இந்தப் பொண்ணும் முறையாய் வந்திருப்பவள் தானே... எப்போதுதான் அவனுக்கு புத்தி தெளியப் போகிறதோ தெரியவில்லை.

ரத்னா செய்த துரோகத்திற்கு அவளை தூர வைக்க வேண்டும்... அது அவனுக்கு ஏன் தெரிய மாட்டேன்கிறது.

சரி... பானுவிற்கு என்ன குறை...

மகாலட்சுமி மாதிரி அல்லவா இருக்கிறாள்.

இவள் வந்த பிறகு இந்த வீட்டிற்கே ஒரு களை வந்து விட்டதே! மின் தடையினால் இருண்டு கிடந்த வீட்டில் சட்டென்று விளக்குகள் எல்லாம் எரிந்து ஒளி வெள்ளம் பாய்ந்தது மாதிரி...

பார்க்கும் ஒவ்வொரு இடமும் நன்றாகத் துடைக்கப் பட்டு பளபளவென்று கண்ணாடி மாதிரி ஒளி வீசுவதும்... எல்லாப் பொருள்களும் புத்தம் புதுசாய் வாங்கி வைத்தது மாதிரி கண்ணைப் பறிக்கும்படி இருப்பதும்...

எல்லாமே... என் மருமகளின் கைவண்ணம்தான்...

அது எனக்குத் தெரிகிறது... தெரிய வேண்டியவனுக்கு இல்லையே..

"நான் மெச்சி என்ன பிரயோசனம்... அவளது அருமை கட்டியவனுக்கல்லவா தெரியணும்... அவன்தான் கண்களை மூடிக் கொண்டிருக்கிறானே...

மனசுக்குள் புலம்பினாள் சௌந்திரம்.

நல்ல குணமுள்ள மருமகள் கிடைத்திருக்கிறாளே என்ற சந்தோஷத்தைவிட... தனக்குக் கிடைத்த மாணிக்கத்தை



மதிக்காமல்... பாராமுகமாக இருக்கிறானே என்ற வேதனை தான் வாட்டியது.

மகன்தான் ஒதுங்கிப் போகிறான். நான் மாமியாராக இருக்காமல்... பானுமதிக்குத் தாயாராக இருக்கணும். இருப்பேன்... தாயில்லாப் பொண்ணு அவ... அந்தத் தாய் பாசத்தை நான் அள்ளித் தருவேன்...

அவ மனசு நிறைஞ்சு இருந்தாத்தான் நம் குடும்பத்துக்கு நல்லது நினைத்தபடியே பானுமதி மீது அன்பையும் பாசத்தையும் பொழிந்தாள்.

"எதுக்கும்மா. இந்த வேலையெல்லாம் நீ பார்க்கறே... இந்த வீட்டுக்கு மகாராணிம்மா நீ... வேலைக்காரர்களை அதட்டி வேலை வாங்குவதை விட்டுட்டு... இப்படி இழுத்துப் போட்டு ஏன் பண்றே..." மருமகளை அன்புடன் கடிந்து கொண்டாள்.

"சும்மாவே உட்கார்ந்திருப்பது பிடிக்கவில்லை அத்தை. அங்கே... அப்பா வீட்டில் நானே எல்லா வேலைகளை செய்வது வழக்கம்... அப்படி இருந்து விட்டு இங்கே எதுவும் செய்யாமல் பொழுதைப் போக்குவது கஷ்டமாக இருக் கிறது..." பானுமதி சொன்னாள்.

அதே சமயம் உள்ளம் முணுமுணுத்தது.

'உங்கள் பிள்ளையிடம் உங்கள் வீட்டில் வேலைக்காரி யாக இருப்பேன்னு வாக்கு தந்துவிட்டுத் தான் தாலி கட்டிக் கொண்டேன்... அந்த வாக்கைக் காப்பாத்த வேண்டுமே அத்தை...'

வந்த புதிதில் அந்த வீட்டின் வேலைகள்... பழக்க வழக் கங்கள்... எல்லாமே புதிதாய் இருந்தது.

சௌந்திரம் தான் பொறுமையாய்... அவளுக்கு ஒவ் வொன்றையும் கற்றுத் தந்தாள்...

சீக்கிரமே அனைத்தையும் கச்சிதமாய் தெரிந்து கொண் டாள் பானுமதி.

ஒவ்வொரு வேலையையும் சந்தோஷத்துடனும் ஆர்வத் துடனும் செய்தாள்.

அவளுக்கு மிகவும் பிடித்த விஷயம் கொட்டிலில் இருக்கும் பசு மாடுகளை கவனிப்பதுதான்.

காலையில் எழுந்து பசு மாடுகளுக்கு தீனி வைத்து... கறந்த பாலை வாங்கி வந்து வைத்து விட்டு... துள்ளும் கன்று களை அவிழ்த்துவிட்டு... அவை தாய் பசுவின் மடிகளை முட்டி... பாலைக் குடிப்பதை ரசனையோடு பார்ப்பாள்... அலுக்காத காட்சி அது...

பிறகு... குளித்துவிட்டு வந்து பாலைக் காய்ச்சி... காபி கலந்து மாமியாருக்குக் கொடுத்துவிட்டு... சமையலுக்கு உதவியாக சமையல்காரருக்கு காய் நறுக்கித் தந்து விட்டு..

பூஜைக்கு... தோட்டத்தில் பூத்த செம்பருத்தி... மல்லிகை.. நந்தியாவட்டை... பவளமல்லி... கொழுக்கட்டை மந்தாரை என்று கூடை நிறைய கொய்து வந்து வைத்து...

பூக்கிண்ணங்களில் பூங்கொத்தாய் வண்ணப் பூக்களை நிரப்பி...

தெய்வப் படங்களுக்கு பூ வைத்து.. சாம்பிராணி காட்டி.. விளக்கேற்றி வணங்கிவிட்டு...

எழுந்துவிட்ட கணவனுக்குத் தேவையானவற்றை எடுத்து வைத்துவிட்டு... துவைக்க வேண்டியவற்றை பார்த்து வேலைக்காரிக்குப் போட்டு விட்டு...

கணவன் புறப்பட்டுச் சென்ற பின்பு அத்தையுடன் காலை உணவை முடித்துக் கொண்டு தோட்டத்துக்குள் புகுந்து கொள்வாள்...



சிந்தையையும் உடம்பையும் ஒருமிக்க ஆக்கிரமித்துக் கொள்ளும் பொழுதுபோக்கு! செடிகளுக்கு உரம் போட்டு, நீர் ஊற்றி... தேவைப் பட்டால் களை எடுத்து... பாத்திக் கட்டி மணிக்கணக்காய் ஈடுபாட்டுடன் செய்யும்போது எல்லாமே மறந்துவிடும்.. இளம் தளிர்களையும் புதிதாய் பிறந்த மொட்டுகளையும் பார்க்கும்போது நெஞ்சில் நிறைந்து வழியும்... இதெல்லாம் என் குழந்தைகள்! திரும்ப பசு மாடுகளுக்குத் தீனி வைத்துவிட்டு... காய்ந்த துணிகளை அழகாய் மடித்து வைத்துவிட்டு.. மாடியை ஒழுங்கு படுத்தும் வேலை...

இரவு நேரம் அத்தையுடன் சாப்பாட்டை உண்டதும் அத்தைக்கு படுக்கை விரித்து தரும் பணி...

கணவனுக்குத் தன் கையால் பரிமாற வேண்டும் என்று உள்ளூர ஆசையிருந்தாலும்... அதை அவன் விரும்ப மாட்டான் என்று உணர்ந்து ஒதுங்கிக் கொண்டு விடுவாள்...

அத்தனை வேலைகளையும் முகம் சுணங்காமல்.. கடனே என்றும் செய்யாமல்.. மலர்ந்த முகத்துடன் அவள் செய்வதை சௌந்திரம் கவனித்தாள்.

எறும்பு போல சுறுசுறுவென்று பகலில் இருக்கும் பானுமதி இரவானதும் நத்தையாய் சுருண்டு கொள்வது ஏன். கண வனைத் தனிமையில் சந்திக்க வேண்டுமே என்ற தவிப்பா சௌந்திரம் படுத்த பின்பு.. அவர் அருகில் அமர்ந்து ஏதேதோ பேசியவாறு காலம் கழித்துவிட்டுத் தாமதமாய் மாடி ஏற வதைக் கவனிக்கத் தவறவில்லை.

காலில் கொலுசும்... பாதவிரலில் மெட்டியும் ஒலிக்க... திருமகளாய் வீட்டில் வளைய வரும் மருமகளைப் பார்த்துப் பூரித்த உள்ளம்... அவள் தன் கணவனைத் தவிர்ப்பதும் மாடியேறத் தயங்குவதும் கண்டு வேதனைப் பட்டது.

தன் மகன் மீது எரிச்சலும் கோபமும் வந்தது. மடையன்... குடும்ப விளக்கை ரசிக்கத் தெரியாமல் மின் மினிப் பூச்சியைத் தேடி அலைகிறான்!

தெய்வமே... இந்தக் குழந்தையை ஏமாற்றி விடாதே... இவளுக்கு நல்ல வாழ்க்கையைத் தந்த நீ... கணவனின் பரிவும் நேசமும் கிடைக்க வழிகாட்டுப்பா... வேண்டிக் கொள்வது மட்டுமே அவளால் முடியும்.. எல்லாம் இறைவன் கையில் இருக்கிறது. ஆரம்பத்தில் ராஜசேகருக்கு பானுவின் மீது எரிச்சலும் படுகோபமும் வந்தது என்னவோ உண்மை.

ஆனால்... அவள்... தான் கொடுத்த வாக்கைத் தவறாமல் காப்பாற்றுவதைப் பார்த்து கோபம் குளிர்ந்து போனது. மனைவி என்ற உரிமை எதிர்பார்க்க மாட்டேன் என்று உறுதியளித்தவாறே... அவனிடம் இருந்து எட்டியே இருப்பதும் உங்கள் வீட்டில் ஒரு வேலைக்காரியாய் இருந்து விடுகிறேன் என்று சொன்னவாறு... பணிமகளை விட அதிகமாய் ஓடாய் உழைப்பதும்... தன் தாய்க்கு சேவை செய்வதும் பார்த்தவனின் எரிச்சலும் மாயமானது.

கணவன் தன்னை ஏறிட்டும் பார்ப்பதில்லையே என்ற மனக்குறையை வெளிக்காட்டாமல்... வேதனையை மறைத்துக் கொண்டு சுமுகமாய்... புன்னகை முகத்துடன்.. இவளால் எப்படி இருக்க முடிகிறது.

அவள் மேல் பரிதாபம் தான் வருகிறது...

அதற்காக.. அவள் மீது அன்பு வர மறுக்கிறதே...

ஏன்... வர விடாமல் தடுப்பது எது... ரத்னா மீதுள்ள காதலா.. கடவுளே... என்னை உதறித் தள்ளியவளை என்னால் உத முடியவில்லையே.

இதுநாள் வரையில்... ரத்னா சென்று விட்ட வேதனை மட்டுமே... இப்போது இன்னொருத்தியின் வாழ்க்கையில்



முள்ளாகி விட்டேனே என்ற வேதனையும் சேர்ந்து இரட்டிப் பாகி விட்டது... ஆக... வேதனையே வாழ்க்கை என்றாகி விட்டது.

தரையில் விழுந்த மீனாய் நெஞ்சம் தத்தளித்தது.

பானுவைக் காண பரமேசுவரனும் உடன் பிறந்தவர்களும் வந்து போவது உண்டு...

அவளும் அவர்கள் முன் தன் இழப்பை மறைத்து... கணவனுடன் சந்தோஷமா இருக்கேன் என்பது போல காட்டிக் கொள்வாள்.

எனக்கென்ன குறை... அன்பான கணவன்... பாசம் மிக்க அத்தை... ஏவலுக்கு வேலையாட்கள்... என்னை விட பாக்கியசாலி யாரும் இல்லை என்பது போலப் பேசுவாள்.

சௌந்திரமும் பானுவை அரவணைத்து... பானு எனக்கு மகள்தான் என்பதை உணர்த்துவாள்.

"பானு எனக்கு மருமகள் இல்லை.. மகளேதான் இப்படி ஒரு பெண்ணை மருமகளாய் அடைய கொடுத்து வைத்திருக்க வேண்டும். பொறுப்பான குழந்தை... தங்கமான குணம்... சொல்லக் கூடாது சம்பந்தி... மாணிக்கத்தைப் பெற்றுத் தந்திருக்கிறீர்கள்... நாங்க செஞ்ச அதிர்ஷ்டம்தான்... இப்படி ஒரு மகாலட்சுமியே கிடைச்சிருக்கா..." வார்த்தைக்கு வார்த்தை... மருமகளை மெச்சி பேசினாள் சௌந்திரம்.

இப்போது... பரமேசுவரனை மானேஜராய் நினைக்காமல் குடும்பத்தில் ஒருவராய் நினைத்து உரிமையுடன் பேசினாள். ஆனால்... பரமேசுவரன் தம் எல்லை எது என்று தெரிந்து நடந்து கொண்டார்...

என்னதான் சம்பந்தி என்றாலும்... படியளக்கும் முதலாளியின் தாயான சௌந்திரத்தை இன்னும் எஜமானியம் மாளாகத்தான் நினைக்க முடிந்தது...

அதனால் தான்... வரம்பு மீறாமல்... வினயமாகப் பேசினார் தன் மகள். அந்த மாளிகையின் இளைய ராணி என்ற எண்ணம் ஒரு போதும் வரவில்லை.

மகளைக் கொடுத்த இடம் பெரிய இடம்... தன் தகுதிக்கு மீறி நடந்து கொண்டு தன் மரியாதையைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது என்பதை அறிந்திருந்தார். அதனால்தான் சௌந்திரம் தன்னை சம்பந்தியாய் நினைத்தாலும்... தான் இன்னும் கை நீட்டி சம்பளம் வாங்கும் மானேஜர் என்பதை மறந்து விடாமல் மரியாதை காட்டிப் பேசி வந்தார்.

அந்த பண்பு அவர் மீதிருந்த மதிப்பை இன்னும் கூட்டியது.

ராஜசேகருக்கு என்றைக்குமே மானேஜரிடம் மதிப்பு மரியாதையும் உண்டு.

எந்த வம்புக்கும் போகாதவர்... அமைதியாய் இருப்பவர் எந்த ஒரு விஷயத்திலும் நிதானமாய் ஆலோசித்துச் செய படுபவர்... கோபம் என்ற உணர்ச்சியை அவரிடம் பார் ததும் இல்லை...

எந்தச் செயலையும் ஆழமாய் யோசித்து... அதன் லா நஷ்டங்களைக் கணக்கிட்டு... தெளிவாக முடிவு எடுத் பின்பு அதைச் செய்வது வழக்கம்... அதனால் தான் அவர் பணிகள் எல்லாம் அப்பழுக்கு இன்றிச் சுத்தமாக இருக்கு

பரமேசுவரனின் திறமையில் நம்பிக்கை வைத்துதா நிர்வாக விஷயத்தில் எந்தவிதக் கவலையுமின்றி நிம் யாக இருந்தான் ராஜசேகர்.

இப்போது அவர் மாமனார் என்ற இடத்திற்கு வ விட்டதில் அவனுக்கு எந்தவித வருத்தமும் கிடையா உண்மையில் அதை அவன் கௌரவமாகத்தான் நினை தான்.



மனசுக்குள்ளும் நெருடல் இருக்கத்தான் செய்தது.

ரத்னா தன் வாழ்வில் வராமல் இருந்திருந்தால்... மாமனாருக்கு ராஜமரியாதைக் காட்டியிருக்கலாமோ... ஏன் பானுமதியை முழுமனதாய் ஏற்றுக் கொண்டிருப்பேன்... பானகத் துரும்பாய்... தொண்டையில் சிக்கி விட்ட முள்ளாய் ரத்னாவின் நினைவு இப்படி அலைக் கழித்திருக்காதே... பாவம்... அந்த நல்ல மனிதர்...

நிறைகுடம் தளும்பாது என்பார்களே... அவர் நிறை குடம் தான்...

மகனைப் போலவே சௌந்திரத்திற்கும் பரமேசுவரன் மீதிருந்த மதிப்பு இன்னும் உயர்ந்தது.

பானுமதியை மட்டும் அனுப்பி வைத்தால் போதும்... வேறு எதுவும் தேவையில்லை என்று ராஜசேகர் சொல்லியும் கல்யாணத்திற்காக வாங்கி வைத்திருந்த சீர்களையெல்லாம் அனுப்பி வைத்திருக்கிறார்...

கேட்டதற்கு... "உங்களுடைய கௌரவத்திற்கு எந்தவிதக் குந்தகமும் வரக்கூடாதும்மா... தாயில்லாப் பொண்ணு... பானு... அவளுக்கு எந்தக் குறையும் இருக்கக் கூடாது இல்லையா... உங்க தகுதிக்குச் சரியா கொடுக்க முடியாமல் போனாலும்... ஏதோ என்னால் முடிந்தவரை செய்ய வேண்டும்னுதான் எண்ணம்... மறுக்காம வாங்கிக்கிங்கம்மா..." என்று சொன்னது அவரது பெருந்தன்மையைக் காட்டியது.

இப்படிப்பட்ட ஒருவரைச் சம்பந்தியாக அடைய நாம் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

வேறு யாராவது அவர் இடத்தில் இருந்திருந்தால்... கிடைத்த வரை ஆதாயம் என்று மிச்சம் பண்ண நினைத்திருப்பார்கள்...

குணக்குன்றான பரமேசுவரர் தன் மகளை மட்டும் கொடுக்கவில்லை... போன கௌரவத்தையும் சேர்த்து தந்து விட்டார்.

ஆக... முதல் திருமணத்தால் குன்றிப் போயிருந்த சௌந் திரம் இந்தத் திருமணத்தால் நிமிர்ந்து நின்றாள்...

பெயரில் ரத்னமாக இருந்தாலும்... சுபாவத்தில் கூழாங் கல்லாகிப் போனவளின் செயலால் கூனிக் குறுகி... அவ மானத்தால் முகம் சிறுத்துப் போயிருந்த சௌந்திரத்திற்கு... தன் குலத்திற்கு ரத்னமாய் வந்த பானுமதியை மருமகள் என்று சொல்லிக் கொள்ள பெருமிதமாக இருந்தது. இதைவிட வேறு என்ன வேண்டும்.

தாயுமானவராய் இருந்து... மகளை வளர்த்து... நல்ல இடத்தில் திருமணம் செய்து கொடுத்த பரமேசுவரன்... முறைப்படி வந்து மகளை மறுவீடு அழைத்துச் செல்ல அனுமதி கேட்டார்.

''ராஜா...'' மாடியிலிருந்து இறங்கி வந்த மகனை அழைத் தாள் தாய்.

''பானுவை அழைத்துப் போக வந்திருக்கிறார்... மறு வீடு சம்பிரதாயம்ப்பா...'' என்றாள்.

அதே நேரம் பானுவும் தந்தையைக் காண விரைந்து வந்தாள்.

தன்னை அழைத்துப்போக பெற்றவர் வந்திருக்கிறா என்ற மகிழ்ச்சியை ஓரம் கட்டிவிட்டு... கணவனையு அத்தையையும் பிரிய வேண்டுமே என்ற வருத்தம் வந்தது

அது வினோதமாகவும் இருந்தது.

நேற்று வந்த மாமியாரும்... கணவனும்... பெற்று வளர்த் தந்தையைவிட முக்கியமாகி விட்டதுதான் அதிசயம்... வ



சில நாட்களிலேயே அந்த வீடு வெகு காலமாய் பழகினாற் போல ஒரு ஒட்டுதல்...

அன்பைக் காட்டாத கணவன்தான் என்றாலும் அவனைப் பிரியணுமே என்ற தவிப்பு...

கணவனுக்கும் இருக்குமா... அவன் முகத்தில் தேடினாள்... உணர்ச்சிகளைத் துடைத்து விட்டது போல... கல்லாய் இருந்தது...

தாய் கேட்டதற்கு 'டக்'கென்று பதில் வந்தது.

''அவர் மகளை அழைத்துப் போக வந்திருக்கிறார். போகட்டுமே... எனக்கு எந்தவித மறுப்பும் இல்லை.'' அதாவது... என்னைப் பொறுத்தவரை பானுமதி இருந்தாலும் ஒன்றுதான்... சென்றாலும் ஒன்றுதான்.. என்ற அலட்சியம்.

பானுவின் முகம் வாடியது... அதை கவனித்தாள் சௌந்திரம்.

''இல்லைப்பா... முதன் முதலாய் அங்கு செல்லும்போது ஜோடியாய் சேர்ந்து போகணும்.. அதுதான் முறை.

''முறையாய் நடந்தது எல்லாமே நல்லதாய் முடியலை யேம்மா... சடங்கு... சம்பிரதாயங்களில் எனக்கு நம்பிக்கையே போய் விட்டது. நம் மேனேஜருக்கு மகளை அழைத்துச் செல்ல விருப்பம் என்றால் செய்யட்டும்.. என்னை எதுவும் கேட்க வேண்டாம்..''

இப்படி விட்டேற்றியாகப் பேசுகிறானே... பானுவின் மனசு நோகுமே என்றும் நினைக்கவில்லையே... இவன் செய்யும் தவற்றை எப்படி உணர்த்துவது. சின்னக் குழந்தையா... காதைத் திருகி 'நீ செய்வது தப்புடா' என்று அதட்டி திருத்து வதற்கு...

நல்லவேளை.. அடிக்குரலில் சொன்னதால் பெரியவர் காதில் விழவில்லை...

கேட்டிருந்தால் நொந்து விடுவார்... மகள் வாழ்வில்
சுமுகமாய் இல்லை என்று துடித்து விடுவார்.

எப்படியாவது பேசிச் சமாளிக்க வேண்டும் என்று நினைத்த
வளாய் பரமேசுவரனிடம் வந்தாள்.

“உங்களுக்குத்தான் தெரியுமே... என் பிள்ளைக்கு வேலை
அதிகம்னு... பானுவை அழைத்துக் கொண்டு நீங்க போங்
சம்பந்தி... உங்க வீட்டில் இருந்து பானு புறப்பட்ற அ
னிக்கு... அவன் வந்து விருந்து சாப்பிட்டு விட்டு.. பானுவை
யும் அழைத்து வரட்டும். பானு... உன் அப்பாவுக்கு கை கா
கழுவ நீர் எடுத்து வை... களைச்சு வந்திருக்கிறார்... சா
பிட்டு விட்டு கொஞ்சம் ஓய்வெடுக்கட்டும். சாயங்கால
நாலு மணிக்கு மேல் புறப்படலாம்...” என்றாள்.

பரமேசுவரன் சென்றதும்... சௌந்திரம் புருவ மத்தியி
முடிச்சு விழுந்தது...

இந்தப் பிள்ளையை எப்படி மாற்றுவது என்ற யோசனை
யில் தான்.



4

புகுந்த வீட்டில் ஓய்வின்றி உழைத்துக் கொண்டிரு
பானுவிற்கு... பிறந்த வீட்டில் அதிகம் வேலை ஏதும்
லாமல்... பொழுதைக் கழிக்க அவதிப் பட்டாள்.

பானுவைத் திருமணம் செய்து கொடுத்த பின்
சாப்பாட்டிற்குக் கொஞ்சம் கஷ்டப் பட்டனர் அவர்
ருசியாய் சமைத்துப் போட்டு.. அவர்களது நாக்கை வள
விட்டுச் சென்று விட்டாள் பானு... அதன் பின் அவர்க



நளபாகம் எடுபடவில்லை. தவிர... வேலைக்குப் போக
வேண்டிய அவசரம் வேறு... வீட்டைப் பராமரிக்க அவர்
களுக்கு நேரம் ஏது...

அதனால் தனது ஒன்று விட்ட சகோதரி கனகாவை
அழைத்து வந்தார் பரமேசுவரன்... அவளும் போக்கிடம்
இல்லாமல்... தன் மகள் வீட்டில் கதியின்றி இருப்பதை
அறிந்து... அழைத்து வந்து விட்டார்.

ஓகோ என்று சொல்லும்படியாய் சமைக்கா விட்டாலும்
ஏதோ வேளா வேளைக்குப் பசியாற உணவு கிடைத்தது.
அந்தவிஷயத்தில் அத்தை கனகாவை மெச்ச வேண்டும். ஒரு
நாளும் சுணங்காமல் சிரித்த முகத்துடன் சமைத்துப்
போட்டாள்.

பானு வந்த பின்பும் கனகா சமைத்துப் போட்டாள்.

பானுவும் கூடிய மட்டும் உதவினாள்...

“அம்மா... பானு... இங்கே ஹாயாக ஓய்வு எடுத்துக்
கொள்ளேன்... பிறந்த வீட்டிற்கு பொண்கள் வர்றதே
ஓய்வுக்காகத்தான்... நீ எதுவும் செய்ய வேண்டாம்மா...”
என்று பாசத்துடன் அத்தை சொன்னாலும்... அதை மறுப்
பாள் அவள்.

“சும்மா இருப்பதுதான் கஷ்டம் அத்தை... எனக்கு
வேலை செய்து பழக்கம் ஆகி விட்டது.. இங்கே ஹாயாக
இருந்து விட்டு அங்கே போனால் வேலை செய்ய உடம்பு
வளையாது...”

“எதுக்கும்மா செய்யறே... பரமு சொல்றானே. கைப்
பிடிக்க... கால் பிடிக்கன்னு நிறைய வேலைக்காரங்க
இருக்கிறாங்களாம். அப்புறம் என்ன.. எதுக்கு நீ இழுத்து
விட்டுக்கணும்... சொல்லு...”

"என்னதான் வேலைக்காரர்கள் செய்தாலும்... அத்தை நாம் செய்வது போல இருக்காதே... அது போகட்டு இன்றைக்கு என் சமையல்.. என்னத்தை..."

"என்னவோ செய்யம்மா... நான் சொல்வதை எங்கே கேட்கப் போகிறே... அப்புறம் பரமு வருத்தப்படப் போறான் என்னடா... தாயில்லாப் பொண்ணை அழைத்து வந்து விட்டு... சந்தோஷமா வச்சுக்காம... இங்கேயும் வேலை வாங்கறோமேன்னு..."

"கவலைப்படாதீங்க அத்தை... அப்பா கேட்டா நானே சொல்லிக் கொள்கிறேன்..." ரொம்ப நாளாச்சுப்பா... என் கையால் உங்களுக்கெல்லாம் சமைத்துப் போட்டுன்னு. நீங்களும் என் சமையலை ருசி பாருங்கள் அத்தை..." என்று அத்தையின் வாயை அடைத்து விட்டாள்.

அப்பாவிற்குப் பிடிக்குமே என்று புடலங்காய் கூட்டு சகோதரர்களுக்குப் பிடித்த புதினா ரசமும்... சேப்ப கிழங்கும் வறுவலும் செய்தாள்.

அதை சப்புக் கொட்டி தின்று விட்டு... அவளைப் பாரா டினாள் அத்தை.

"என் பொண்ணோட சமையல் எப்படி..." என்று பெரு யாய் கேட்டார் பரமேசுவரன்.

"என்னவோ நினைச்சேன் பரமு... உன் பொண்ணு அசத்திட்டா... ஆகா... என்ன ருசியான சமையல்... பெ குழந்தைகளுக்கு அழகு நல்லா சமைக்க கத்துக்கறதுதா என் பொண்ணும் சமைப்பா... சக்கையும் நீருமாய் இருக்கும் அதெல்லாம் கைகுணம் இருக்கணும். அது எல்லோருக்கு வராதுடா பரமு..." என்று புகழ்ந்து தள்ளினாள் அத்தை.

"பானு... இத்தனை நாளா நாக்கு செத்து கிடந்த இன்னிக்கு உன் சமையலைச் சாப்பிட்டதும் தான் உ



வந்திருக்கு.. ப்ளீஸ்... பானு.. இங்கு இருக்கிற வரை நீயே சமையல் செய்திடேன்..." என்றான் அண்ணன் வாசு.

"ஆமாம் பானு... நாங்கள் ஒரு 'லிஸ்டே' கொடுக்கிறோம். இங்கே இருக்கிறவரை நாளுக்கொன்றாய் செய்து கொடு. நீ செய்வாயே பருப்புருண்டைக் குழம்பு. அப்புறம் காரட் அல்வா... மறக்காமல் செய்து தாயேன்" என்றான் சின்னவன் சம்பத்.

"என்னடா இது மாத்தி மாத்தி அதை செய்து தா... இதை செய்து தான்னு... அவ இங்கே வந்திருப்பது ஓய்வெடுக்கறதுக்கு... இங்கேயும் உழைக்கிறதுக்கில்லை" என்றாள் அத்தை.

"அத்தை... கொஞ்சநாள் நீங்க ஓய்வெடுத்துக்குங்க. உங்க புளிச்சரசம்... நீர்த்த சாம்பாரிலிருந்து எங்களுக்கும் விடுதலைக் கிடைக்கும்... வயிறு சரியானதும் மறுபடியும் உங்க சாப்பாடுதான்... போதுமா..." என்று கேலி செய்தான் சின்னவன்.

"இருடா இரு... நம் பானு மாமியார் வீட்டுக்குப் போனதும்... என்னுடைய புளிச்ச ரசத்திற்கும்... நீர்த்த சாம்பாருக்கும் தான் நீ ஓடிவரணும்... அப்போ கரண்டியால் இரண்டு போடுகிறேன் பார்..." அத்தையின் பதில் கிண்டல்.

அத்தை கனகாவிற்கு இந்த வீடும்... பிள்ளைகளும் பிடித்து விட்டது... தன் மகள் வீட்டில் கிடைக்காத நிம்மதி இங்கே கிடைத்தது.

ஆரம்பத்தில் மகள் தாயை நன்றாகத்தான் கவனித்துக் கொண்டாள்.

கனகாவிற்கு இருந்த, ஒரே மகன் படிப்பு ஏறாமல்... தறுதலையாய் ஊர் திரிந்து... 'ரௌடி... போக்கிரி' என்று பெயர் எடுத்து... கடைசியில் சொல்லிக் கொள்ளாமல் ஓடிப்

போய் விட்டான். போகும் போதும் தாயிடம் இரு ஒன்றிரண்டு நகைகளையும் எடுத்துக் கொண்டு போ விட்டான். அவன் எங்கு போனான்... எப்படி இருக்கிற என்று இது நாள் வரைக்கும் தகவல் இல்லை... இது வரைக்கும் வராதவன் இனிமேலா வரப் போகிறான்... அப்படியே வந்தாலும் தாயை அன்புடன் பார்த்துக் கொ வான் என்பது என்ன நிச்சயம்... தாய்க்கு உதவாத மக தாய் இருக்கிறாளா... இல்லை செத்து விட்டாளா எ எண்ணம் கூட இல்லாமல் இருந்து விட்ட மக கனகாவும் மறந்தே போனாள்.

வேறு வழி இல்லை தான்... மகளுடன் தான் இனி வாழ்க்கை... மாப்பிள்ளை வீட்டில் இருப்பதா என்று படுக்கை போல உறுத்தினாலும்... அவர்களை விட் கதியேது என்று ஆன பின்பு அவர்களை அனுசரித்து தா வாழணும்...

இப்படிக் கணவன் போய்... மகன் இருந்தும் நாதி லாமல் மகளை அண்டி வாழ வேண்டும் என்ற த யெழுத்து... இருந்துதான் ஆக வேண்டும்.

ஆனால்... தன்னை விட்டால் அம்மாவிற்கு யா இல்லை என்ற செருக்கினால்... அம்மாவிற்கு போக் இல்லை என்ற தைரியத்தில்... தாயை வேலைக்காரி நடத்தினாள் மகள்...

மாப்பிள்ளையும் முணுமுணுக்க ஆரம்பித்தான்.

''எனக்கென்னத் தலையெழுத்தா... உன் அம்மா கட்டிக் கொண்டு அழ...'' என்று அடிக்கடி குத்திக் கா ஆரம்பித்தான்...

அதனால் தன் தாயின் மேல் இனம் புரியாத எ வந்தது.





''எல்லா சனியன்களுக்கும் நான்தானா கிடைத்தேன்...'' என்று கணவன் எரிந்து விழ... எல்லாம் இந்த அம்மாவால் வந்தது... இத்தனை நாள் வரை இனிய சங்கீதமாய் ஒலித்து வந்த இல்லறத்தில் அபஸ்வரம் தட்டக்காரணமே அவள் தான்... அந்தக் கோபத்தில் தாயின் காது பட ஏளனமாகப் பேசினாள்.

''எல்லாம் என் தலை விதி... எந்தப் பொண்ணுக்கும் இல் லாத வேண்டாத சுமை. எனக்கு வந்திருக்கு... சே... பெத்த பொண்ணோட அம்மாவும் வாழ்ற அசிங்கம் எந்த வீட்டி லேயும் இருக்காது... இன்னும் எத்தனை நாளைக்கு இந்த இம்சையோ...''

அதைக் கேட்டுக் கூனிக் குறுகிப் போவாள் கனகா.

அந்த நிமிடமே தன் உயிர் போய் விடாதா என்ற தவிப்பு வந்தது.

இன்னும் எத்தனை நாளைக்கு இந்த நரக வேதனை.. என்று ஏங்கிக் கொண்டிருந்தவளுக்கு பரமேசுவரன் வந்து அழைத்தது பரமானந்தமாக இருந்தது.

தன் வேண்டுதலுக்குக் கடவுள் செவி சாய்த்து விட்டார் போலும் என்ற நன்றியில் கண்கள் குளமாகிப் போயின.

''பரமு... உன்னைப் பார்த்ததில் எனக்கு ரொம்ப சந்தோஷம்டா...'' வார்த்தைகள் இதயத்திலிருந்து வந்தவை தான்.

''என்னக்கா... என்னுடன் வருவதற்கு உனக்கு விருப் பமா... வீட்டில் பெண் துணைன்னு யாரும் இல்லை... பானு சென்றதும் நானும் பிள்ளைகளும் ஏதோ தட்டுத் தடுமாறி சமைச்சுச் சாப்பிடுகிறோம்... என்ன செய்யறதுன்னு தெரியல்லே... உன் ஞாபகம் வந்தது... அதான் வந்தேன்... நானே உன் பொண்கிட்டே கேட்கட்டுமா...'' என்று

பரமேசுவரன் கேட்டதும் வாரிச் சுருட்டிக் கொண்டு பு
பட்டு விட்டாள் கனகா.

மகளும் மருமகனும் ஒப்புக்காகவும் எதற்கு என்
சொல்லவில்லை.

சுமை விலகினால் போதும் என்றிருந்தவர்கள் உடனே
சம்மதித்து விட்டனர்.

ஏதாவது சின்ன நிழல் கிடைக்காதா... நிம்மதியா
இருப்பதற்கு என்று நினைத்தவளுக்கு... பரமேசுவரனி
இல்லம் சொர்க்கமாகத் தெரிந்தது.

தனக்குச் சரியாய் வாய்க்காத மகனிடம் காட்ட முடியா
பாசத்தையெல்லாம் தம்பியின் பிள்ளைகளிடம் காட்டினா

பரமேசுவரனும் தமக்கையை மரியாதையாகவே நட
தினார்...

"இது உன் வீடு அக்கா... உன் இஷ்டப்படி இருக்கலா
எந்தவிதத் தயக்கமோ... சங்கோஜமோ இல்லாம இருக்க
என்றார் அவர்.

கனகாவின் மனம் நெகிழ்ந்துபோனது... உடன் பிறந்
வனும் இல்லை... ஒன்று விட்ட தம்பி முறை... தூரத்து
சொந்தம்... இவனுக்கு இருக்கும் பாசமும் பரிவும் வயிற்றி
பிறந்தவனுக்கு இல்லையே.

ம்ம்... அவளையும் குற்றம் சொல்ல முடியாது.. தே
கொடுக்கு போல புருஷன் கொட்டிக் கொண்டிருந்தா
அவள் என்ன செய்வாள் பாவம்...

கணவனை எதிர்த்துப் பேச முடியுமா... தவிர
உண்மையில் என் மீதுதான் தப்பு... பெத்த பிள்ளை
வேண்டாம் என்று உதறிச் சென்ற பின்பு... யார் பெற்
பிள்ளையோ... மருமகப் பிள்ளை வைத்துக் கொள்வா
என்று நினைக்கிறது முட்டாள் தனம்தான்...



இதோ... இங்கே எனக்கென்ன குறை... பரமு என்னை நன்றாக வைத்திருக்கிறான்.. இந்தப் பிள்ளைகளும் பாசத்துடன் இருக்கிறார்கள்.. போதும் இப்படியே என் காலத்தைக் கழித்து விடலாம்... இனி இதுதான் என் வீடு. இவர்கள்தான் என் உறவு... எனக்கு வேறு யாரும் வேண்டாம் என்ற மன உறுதி வந்தது.

அதனால் தான் மருமான்கள் தன்னை உரிமையுடன் கேலி செய்தாலும் அதை சந்தோஷத்துடன் ஏற்றுக் கொண்டாள்.

பானு வந்தவுடன் அத்தையிடம் பெற்ற மகளைப் போல் அன்பு காட்டியது தான் அவளை நெக்குருகச் செய்தது.

இதுதான் குடும்பம்... இப்படித்தான் இருக்க வேண்டும் பரமேசுவரன் கொடுத்து வைத்தவன். இரண்டு கண்களைப் போல இரு பிள்ளைகள். தந்தை சொல்லே மந்திரம் என்று நடக்கும் சமர்த்துப் பிள்ளைகள். குடும்பத்திற்கு திலகம் போல ஒரே பெண்... அதுவும் குணவதியாய்... இதைவிட வேறு என்ன வேண்டும்...

பரமுவும் அப்படித்தானே... சின்ன வயதில் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருப்பான்.

அவனுக்குப் பெற்றவர்கள் தான் முதல் தெய்வம்... கடைசி வரையில் அவர்களைக் கைவிடாமல்... சேவை செய்து புண்ணியம் சேர்த்தவன்... அவனுக்கு வாய்த்த மனைவி சுலோசனாவும் வாயில்லாப் பூச்சி... கணவனே தெய்வம் என்று வாழ்ந்த புண்ணியவதி.. சுமங்கலியாய் போய் சேர்ந்து விட்டாள்.

அப்படிப்பட்ட தந்தை தாய்க்குப் பிறந்த பிள்ளைகள் அப்படியே தானே வளருவார்கள்... விதையொன்று போட சுரையொன்று முளைக்குமா என்ன...

நான் செய்த பாவம்... என் வயிற்றில் பிறந்தது சரியில்லை... அந்த பாவத்தைக் கரைக்க வேணும்னா. இவர்களுக்கு உழைக்கறதுதான் நல்லது.

இனி இவர்களுக்காகத்தான் வாழ வேண்டும்... அந் தீர்மானம் தான் இந்த வீட்டுடன் ஒன்ற வைத்தது.

பானுவுக்கும் கவலை இருந்தது... திருமணமாகிப் புகுந் வீட்டுக்குச் சென்று விட்டால்... அப்பாவும் உடன் பிறந்தவ கள் என்ன செய்வார்களோ என்று நினைத்துக் கலங்கினா

ஆனால் அத்தை தாயின் கனிவோடு அனைவரையு பார்த்துக் கொண்டதில் அந்தக் கவலையும் கலக்கமு மறைந்து போனது.

அந்த நன்றியின் நிழலாய் வந்த அன்பினால்... வயதா அத்தைக்கு ஓய்வு கொடுத்து விட்டு அவளே சமைத்தாள் மற்ற வேலைகளையும் செய்தாள்.

தன் சமையலைப் புகழ்ந்து அனைவரும் ரசித்துச் சா பிடும் போது... தன் கையினால் கணவனுக்குப் பரிமா அதை அவன் புகழ்ந்தால் எப்படி இருக்கும் என்று ஏங்கு மனம். அப்போது சங்க இலக்கியத்தில் தான் படித்த பாட ஒன்று நினைவுக்கு வரும்...

தலைவி ஒருத்தி... புதுமணம் புரிந்து இல்லறத்தை நல்ல மாய் தொடங்கி.. கணவனுடன் இன்பமாய் வாழும் கா தில்... அவனுக்காகச் சமைக்கிறாள். தாய் வீட்டில் சொகு வாழ்ந்தவள் சமையலை எப்போது கற்றாள்!.. தன் காந் விரல்களால் முளித்தயிரை நன்கு பிசைந்து... அ தாளிக்கும்போது ஏற்பட்ட புகையினால் கண்கள் சிவக் நழுவும் மேலாடையை... தயிர் பிசைந்த கரத்தினா திருத்திக் கொண்டு... கணவன் வந்ததும் அதை பரிமாறி அவன் இனிது.. இனிது என்று மெச்சி உண்ணும் போது த களைப்பை எல்லாம் மறந்து... மகிழ்ச்சியில் புன்ன தாளாம்...

அந்தப் பெண் அதிர்ஷ்டசாலி... தன் கையால் சமை அதைப் பரிமாறி... அவன் பாராட்டையும் பெற்றிருக்கிறா



அந்த பாக்கியம் தனக்கு இல்லையே... குடிசையாக இருந்தாலும்... குடிப்பது கூழாக இருந்தாலும் கணவன் மனைவியிடையே பரஸ்பரம் அன்பு இருந்து விட்டால் அந்த இடம் தேவலோகமாய் தெரியும்.. கூழ் கூட அமிர்த மாகிவிடும்...

கண்கள் வழிய கணவனின் இதயத்தில் இடம் பெறும் பாக்கியம் சில பெண்களுக்கு மட்டுமே கிடைக்கும்... அது காதலுக்குப் பின் கல்யாணம்...

கணவனுக்கு வாய்க்கு ருசியாய் சமைத்துப் போட்டு... வயிற்றின் வழியே இதயத்தைத் தொட்டு... அவனை முந்தானை முடிச்சில் கட்டி வைத்துக் கொள்ளும் வித்தை தான் கல்யாணத்திற்குப் பிறகு காதல்...

அதுவும் நடக்காத விஷயம்... சமைக்க சமையல்காரர் கவனிக்க பணியாட்களும் இருக்கும்போது... எப்படி முடியும்...

அது மட்டுமா... ராஜசேகரும்தான் தன் இதயத்தைச் சுற்றி இரும்புக் கோட்டையல்லவா எழுப்பி வைத்திருக்கிறார். நிராசையில் பெருமூச்சு தான் வந்தது...

பானு புறப்படும் நாள் வந்தது.

அன்றைக்கு நிறைந்த நாள் என்று மகளைப் புகுந்த வீட்டிற்கு அனுப்ப நினைத்தார் பரமேசுவரன்.

மகளுக்காக விலை உயர்ந்த பட்டுப் புடவையை வாங்கி வைத்திருந்தார்.

மகளைப் பிரிய மனம் தவித்தாலும்... பெற்றவரின் கடமை என்று ஒன்று இருக்கிறதே... இன்னொருவர் வீட்டின் சொத்தை எத்தனை நாள் வைத்திருக்க முடியும்.

பானுவும் அரை மனதுடன் தான் புறப்பட்டாள்...

பிறந்த வீட்டில் இருந்த கலகலப்பையும் சந்தோஷத்தை யும் இழக்கப் போகிறோமே என்ற வருத்தம்... மறுபடியு கணவரின் இறுகிப்போன முகத்தைப் பார்க்க வேண்டு என்ற பயம்... அதையும் மீறி இதயத்தின் ஒரு மூலையி பெயரளவில் கணவன் என்றாலும் கூட அவரைப் பார்க்கு மகிழ்ச்சி... எல்லாமாய் சேர்ந்து அவளை ஆட்டி வைத்தது

தன்னை அழைத்துப் போக ராஜசேகர் வர இருக்கிறா என்று தந்தை சொன்னபோது உடனே முதுகில் சிறகு முளைத்து ஆகாசத்தில் பறப்பது போல இருந்தது அவளுக்கு

அவன் வருவான் என்று எதிர்பார்க்கவும் இல்லை உடம்பும் மனசும் பரபரத்தன... அவனுக்குப் பிடித் பதார்த்தங்களை செய்து வைக்க வேண்டும்... வேலை முடித்து விட்டு 'பளிச்'சென்று அலங்கரித்துக் கொண் தயாராக இருக்க வேண்டும். அழுது வழியக் கூடாது... சரி என்ன செய்வது... அவனுக்குப் பிடித்தவை நெய் சீர சாதம்... தக்காளிப் பூண்டு சட்னி... உருளைக் கிழங் பட்டாணி குருமா... சேனைக் கிழங்கு சிப்ஸ்... வெள்ளரி பச்சடி... அப்புறம் பூண்டு ரசம்... அத்தனையையும் சிரத்தை யாய் செய்து வைத்தாள். அவனுக்குப் பிடித்த அவல் பாயசத்தை தயாரித்தாள்... பாதாம் பருப்பை விழுதா அரைத்து அதில் சேர்த்து நெய்யில் முந்திரியை பொ னிறமாய் வறுத்துப் போட்டு பச்சைக் கற்பூர வாசனை கூட்டி 'கம்'மென்ற மணத்துடன் இறக்கி வைத்தாள்.

எல்லா வேலைகளையும் முடித்து விட்டு முகம் கழு வந்தாள்.

அவன் வருவதற்குள் தயாராகிவிட வேண்டும் என் துடிப்பு...

கண்கள் பூத்துப் போனது என்பதன் அர்த்தத்தை அவ அன்றுதான் முழுவதுமாய் உணர்ந்தாள்.



மணி ஒன்றரைக்கு கார் வந்து நின்றபோது உள்ளுக்குள் சொல்லத் தெரியாத உணர்வு... பரவசமா... படபடப்பா என்று தெரியாத... ஏதோ வினோதமான உணர்வு.

வாசலுக்கு ஓடிப்போய் வரவேற்க வேண்டும் என்று எழுந்த வேகத்தை அடக்கிக் கொண்டாள்.

ஊகூம்... உள்ளத்து ஆசையை அவனுக்குக் காட்டக் கூடாது... அமைதியாக இருந்து விடுவதே மேல்...

அறையினுள் நின்று விட்டாள்...

இதயம் 'டிரம்' வாசிப்பது உணர முடிந்தது...

பரமேசுவரன் ராஜசேகரை வரவேற்பது காதில் விழுந்தது... அபூர்வமான வரவு ஆயிற்றே... வரவேற்பும் பலமாகவே இருந்தது.

உள்ளே வந்த ராஜசேகரின் கண்கள் அவளையும் அறியாமல் அலை பாய்ந்தன.

வாசுவும்... சம்பத்தும் இன்னும் முதலாளி என்ற மரியாதை விலகாமல் தள்ளியே நின்றிருந்தனர்...

பரமேசுவரன் மரியாதைக்காக மாப்பிள்ளையிடம் குசலம் விசாரித்தபின் சாப்பிட அழைத்தார்.

மாமனார் வீட்டின் முதல் விருந்து... ஒரு வித கூச்சத் துடன் சென்றான் ராஜசேகர்.

செம்பில் நீர் கொண்டு வந்து கொடுத்தார் மாமனார். கைகால் கழுவிக் கொண்டதும் வாசு டவலுடன் காத்திருந்தான்.

கீழே மணைப் போட்டு தலை வாழை இலையை விரித்து... குடிக்க நீரும் வைக்கப்பட்டிருந்தது.

முதலில் அவனுக்கு மட்டுமே இலை போட்டிருந்தாலும் ராஜசேகரின் வற்புறுத்தலுக்குப் பின் பரமேசுவரனும் அவரது பிள்ளைகளும் உடன் அமர்ந்தனர்.

அத்தை கனகா மெல்லத் தலையை நீட்டிப் பார்த்தாள். பானுவின் புருஷனைப் பார்க்கும் ஆர்வம்... மாப்பிள்ளையின் கம்பீரமான உருவத்தையும்... அவனது ஆண்மை அழகையும் பார்த்துத் திகைத்துப் போனாள்.

பரமுவின் மருமகன் பணக்காரன் மட்டுமல்ல... பார்க்கவும் லட்சணம் என்று அவள் அறிந்ததுதான்...

ஆனால் அவனை நேரில் பார்த்தபோதுதான் தெரிந்தது. கேள்விப்பட்டது மிகையில்லைதான்... பானுவுக்கு ஏத்த புருஷன்... சுந்தர புருஷன் என்று...

தாயில்லாத பெண் பானுவிற்கு தெய்வமே தாயாக இருந்து நல்ல புருஷனாப் பார்த்து சேர்த்திருக்கிறது. என் குழந்தைக்கு எந்தக் குறையும் இருக்காது... நிச்சயம் உசத்தியா இருப்பாள்.

கண்களில் கசிந்த நீரை சேலைத் தலைப்பில் துடைத்துக் கொண்டாள் கனகா.

கைவளையல்கள் கதை பேச... கணவனுக்குப் பரிமாறிக் கொண்டிருந்தாள் பானு... அவளது ஆசை அன்றைக்குத் தான் நிறைவேறியது.

அவனுக்காக... அவன் விரும்பிய பதார்த்தங்களையெல்லாம் செய்து வைத்து... தானே தன் கையினால் பரிமாறுகின்ற போது... உண்டாகும் ஆனந்தம் தனிதான்...

அதை அப்போது அனுபவித்துக் கொண்டிருந்தாள்.

ஆனால்... சங்க இலக்கியத் தலைவனைப் போல அவன் முகம் மலர்ந்து... இனிது... இனிது என்று பாராட்டவில்லை ஏன்... அவளை நிமிர்ந்தும் பார்க்காமல் குனிந்த தலையுடன் சாப்பிட்டான்...

அவன் ஒவ்வொரு பதார்த்தத்தையும் சுவைத்து உண்பதை கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.



உண்மைதான்... அவல் கீரை மூன்று முறை வாங்கி உண்டான் ராஜசேகர்... உள்ளத்தில் சந்தோஷம் விரிந்தது பானுவுக்கு.. தன் வீட்டில் சமையல்காரர் பிரமாதமாக சமைத்தாலும் ஏதோ தனி சுவையை உணர்ந்தான்.

அது... தன் மனைவியின் அன்பும் கலந்திருப்பதால் தான் என்பதை அவன் மட்டும் உணர்ந்தால்...

"பரமு.. மாப்பிள்ளையிடம் சொல்லுப்பா... எல்லாத்தையும் பானுதான் ஆசையா செஞ்சிருக்கான்னு... பானு... உன் புருஷனுக்குக் கொஞ்சம் சாதம் வைம்மா" அத்தை சமயம் பார்த்துச் சொல்ல...

பானு சாதத்தைப் பரிமாறினாள்...

இன்னும் ஒரு கரண்டி அதிகமாகத் தள்ள முயன்ற போது... "வேண்டாம்" என்று அவன் கையால் தடுக்க... சாதம் கீழே சிந்தியது.

மன்னிப்பு கோறுவது போல அவன் பார்க்க...

அதனால் என்ன... விடுங்கள் என்பதுபோல் அவள் பார்க்க.. கண்கள் கலந்தன.

இரு விழிகளின் காந்த ஈர்ப்பில் சிக்கி... மீள முடியாமல் தவித்தன கண்கள். இரண்டு...

அந்த மைத்தீட்டிய விழிகள் கடலாய் விரிந்து...

சுழியாய் சுழன்று... அவனை உள்ளுக்குள் இழுப்பது போல... பிரமை!

சட்டென்று புரையேற... அருகில் இருந்த நீரை அவசரமாக எடுத்துக் குடித்தான் அவன்.

முதல் தடுமாற்றம்... குப்புறத் தள்ளப் பார்க்கும் தடுமாற்றம்...

நோ... அது நடக்காது...

ஆத்திரத்துடன் கையை உதறிக் கொண்டு எழுந்தான் அவன்...

அவசரமாய் சென்று சொம்பில் நீரை எடுத்துத் தந்தாள்

மௌனமாய் அதை வாங்கி கைக் கழுவினான்...

அவள் நீட்டிய துண்டை வாங்கித் துடைத்துக் கொண்டான்

அதே போல உள்ளத்தின் சலனங்களையும் துடைக்க வழி இருந்தால்...



## 5

அத்தையிடம் விடைபெற்றுக் கொண்ட பானும தந்தையிடம் வந்தாள்...

அவளது கண்கள் கலங்கின...

மகரிஷியான கண்வர்முனிவர்க்கே வளர்த்த பாச நெஞ்சில் அடைக்க... சகுந்தலையைப் பிரிய வேண்டு என்று துடித்தார் என்றால்... சாதாரண மனிதரா பரமேசுவரன் எம்மாத்திரம்!

அதுவும் பெற்றமகள் ஆயிற்றே!

தாரை வார்த்துக் கொடுத்த பின்பு... இன்னொரு வீட்டின் உடைமை... வேறோர் வீட்டில் ஒளி கொடு வேண்டிய விளக்கு...

இனி பிள்ளைப்பேறு என்று வந்தால் உண்டு... அது எப்போதோ...

விம்மலை அடக்கிக் கொண்டு மகளை அரவணை ஆறுதலாய் தட்டிக் கொடுத்தார்...



"உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கப்பா..." தொண்டை அடைக்க அவள் சொல்ல...

"சரிடா... என்னைப் பத்திக் கவலைப்படாதே... அந்த வீட்டில் நல்ல மருமகள்னு பேர் எடுக்கணும்... என்ன..." என்றார் பெற்றவர்.

பானுவின் சூட்கேஸையும்... இனிப்பு பலகாரக் கூடையையும்... பழக்கூடையையும் காரின் 'டிக்கி'யில் அடுக்கி விட்டு வந்த வாசுவிடம் வந்து நின்றாள்.

"அண்ணா... வரட்டுமா..." என்றபோது உடன்பிறந்தவர்களின் முகத்தில் சொல்லவொண்ணாத் துயரம்... அதுவும் பெரியவன் பாசத்துடன் அணைத்து... வாஞ்சையுடன் நெற்றியில் முத்தமிட்டு தன் தவிப்பை வெளிப்படுத்தியவுடன்... அணை உடைந்தது போல.. அவனது தோளில் சாய்ந்து விம்மினாள்.

"என்னடா... உஷ்... அழக்கூடாதும்மா... பாரு... நாங்க அடிக்கடி வந்து உன்னைப் பார்க்கிறோம்... சரியா..." என்று வாய் ஆறுதலாய் சொன்னாலும்... அவனது கண்களின் சிவப்பும்... குரலின் கரகரப்பும் அவனும் கலங்கிப் போயிருப்பதைக் காட்டின... அந்த கணத்தில் தான் இருந்த பாசமிக்க பசுஞ்சோலையை விட்டுச் செல்ல வேண்டுமே என்று நினைத்தாள்.

கணவனின் அன்பு நிழல் படாத வரண்ட பாலைவனத்திற்குப் போக வேண்டுமே என்ற துக்கம்!

நெஞ்சை இளக வைக்கும் அந்த பாசமலர் காட்சியை ராஜசேகரும் பார்த்துக் கொண்டிருந்தான்.

தந்தை... உடன்பிறந்தவர்கள் பானுவின்மீது காட்டும் பாசத்தைக் கவனித்தான்... அவர்களிடையே இருந்த பாசப் பிணைப்பைப் பார்த்து மலைத்தான்.

ஒரே பிள்ளையாய் வளர்ந்தவனுக்கு இது புதுசாய்த் தெரிந்தது.

இத்தகைய பிரியமான உறவுகளைப் பிரிந்து... கட்டிய கணவனை சதம் என்று ஒரு பெண் வருகிறாள் என்றால்... அது கணவனின் காதலை எதிர்பார்த்துத் தானே... அவனின் அரவணைப்பில் பிறந்த வீட்டில் கிடைத்த ஒட்டுமொத்த பாசத்தையும் சற்று மறந்து... அவன் காட்டும் அன்பில் அவர்களைப் பிரிந்து வந்த வேதனையையும் மறந்து விடுகிறாள் என்பது நிஜம்.

ஆனால் பானு... பாவம்...

என் உதாசீனத்தினால் இன்னும் வேதனை மிகையாகிறது என்பதுதான் உண்மை.

ஒருவேளை... இவளுக்குப் பிறந்தவீட்டில் இருக்க விருப்பமோ என்னவோ... கணவனுடன் இருக்க வேண்டும் என்ற நிர்பந்தத்தில் உடன் வருகிறாளோ... இருக்கலாம். யாருக்குத் தெரியும்... இவள் முகத்தில் தெரியும் வாட்டம் அப்படித்தான் சொல்கிறது...

இல்லை... இல்லை... என்னைப் பார்த்ததும் முகம் மலர்ந்துபோனதே, தவிர... இத்தனை அலங்காரமும் பண்ணிக் கொண்டு காத்திருக்கிறாளே... ஆக என்னுடன் வருவதில் இவளுக்கு எந்த வித வருத்தமோ... தயக்கமோ இல்லை என்று தான் தெரிகிறது...

அந்த நினைப்பில் அவளைச் சரியாக கவனித்தான். அப்போது... அவனையும் அறியாமல்... மனசுக்குள் திகைப்பு இல்லை... பிரமிப்பு!

என் மனைவி... இத்தனை அழகா... அதையும் மீறி சில உறுத்தல்... மனைவி என்று இன்னும் ஏற்றுக் கொள்ள வில்லையே... அப்புறம் என்ன மனைவி என்று நினைப்பு அது சரியில்லையே...



மௌன கௌரியைப் போல் தன் அருகே அமைதியாக அமர்ந்திருக்கும் பானுவைப் பார்க்க ஏனோ பரிதாபமாய் இருந்தது அவனுக்கு...

ஏதோ அவசரத்தில் எனக்கு தன் கழுத்தை நீட்டி விட்டு இப்போது அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கிறாளோ என்னவோ...

இவளுக்கு என்ன கம்மி என்று இரண்டாம்தாரம் என்ற பதவிக்கு ஆசைப்பட்டாள்... தெரியவில்லையே... இதோ... இந்தப் புதுப்புடவையில் அன்று மலர்ந்த மலராய் பூத்துக் குலுங்கி நிற்கும் பூங்கொடியாய் அல்லவா தெரிகிறாள்...

இத்தனை அழகும் வீணாகிப்போகிறதே... விழலுக்கு இரைத்த நீராய்... பாலையில் காயும் நிலவின் ஒளியாய்... பிரயோசனமின்றிப் போனதே... பாவம்... இவளை விரும்பும் ஒருவனை மணம் புரிந்திருந்தால் வாழ்க்கையே சொர்க்க மாய் இருந்திருக்கும்.

என்னை மணந்து என்ன சுகம் கண்டாள்... ம்...ம்... இவளே இழுத்துப் போட்டுக் கொண்ட சுருக்கு. இது... விரும்பி மாட்டிக் கொண்ட விலங்கு... என்ன செய்வது... அனுபவித்தே ஆகவேண்டும்... மூர்க்கத்தனமாய் நினைத் தாலும்... அடுத்த கணமே சே! ஏதோ சூழ்நிலைக் கோளாறில் எனக்கு மனைவியாகிவிட்டவளை இப்படி அரக்கத்தன மாய்... இரக்கமில்லாமல் நினைப்பது தவறு என்று எண்ணினான். தாலிக் கட்டிக் கொண்டாளே தவிர எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கிறாள் பாவம்... என்னிடம் இருந்து விலகி இருக்கிறாள்... இவள் மீது சினம் கொள்வதும் தப்புதான்...

இப்போதும்கூட புதிதாய் கல்யாணம் ஆகிய புது மணப்பெண் போலவா இருக்கிறாள்... முகத்தில் சந்தோஷக் குறியே இல்லவே இல்லை...

ஏதோ... பலிபீடத்திற்கு நடுங்கிக் கொண்டு வருப் ஆடுபோல அல்லவா வருகிறாள்...

புலி முன் இருக்கும் சிறு முயலாய் கதவுடன் ஒண்டி அமர்ந்திருக்கும் மனைவியைப் பார்த்தான்... அவளால் இயல்பாய் இருக்க முடியவில்லை என்று தெரிந்தது.

விரல்கள் பின்னிப்... பின்னிப் பிரிவதைக் கண்டான் ஏதோ ஒரு தவிப்பு அவளிடம் தெரிந்தது... ஒருவேளை... தன் அருகாமை தந்த தவிப்பா...என்ன...

அடப் பாவமே! முள் இருக்கை மீது அமர்ந்திருப்பதுபோ உணரும் அளவிலா இருக்கிறது இந்த பயணம்...

இருக்கும்... இருக்கலாம்... என்றைக்கு இவளிடம் சுமுகமாய் பேசியிருக்கிறேன்...

வேண்டாம்... ஒரு கரிசனப் பார்வை... அதுவும் இல்லையே. அதனால் தான் என்னைப் பார்த்து மரவட்டையாய் சுருண் போகிறாள்... என்னைப் பார்க்கும் பார்வையில் கலக்க தெரிகிறது. சே!

பார்வை என்று நினைத்ததும்... அவள் பரிமாறிய போ நடந்தது நினைவுக்கு வந்தது.

அவளது கண்களில் கலக்கம் தெரியவில்லை... மாறா ஏதோ ஒன்று... என்ன அது... ஏக்கம்? இல்லை... பரவசம்!

அப்பா... என்ன பெரிய விழிகள்! சுழியாய் தன்னை இழுத்துத் தன்னுள் அடக்கிய விழிகள்!

கண்களின் கலப்பில் மின்னல் அடித்ததே! அந்த நினை வில் இப்போதும் சின்னச் சிலிர்ப்பு வந்தது. நோ... ஆத்தி துடன் ஆக்சிலேட்டரை அழுத்தினான்... வண்டி வேக கண்டது.

பானுமதியும் அப்போது அந்தச் சம்பவத்தைத் தா



கட்டாயத்தின் பேரில் வந்து... சாப்பிட வேண்டுமே என்று விருந்துண்டு... தலைவிதியே என்று அழைத்துச் செல்லும் இந்தக் கணவன் அருகில் அமர்ந்து செல்லும் டம்மி மனைவி நான்...

ஒரு வார்த்தை... பானு... வேண்டாம்... பானுமதி... நலமா என்று கேட்டால் என்ன குறைந்துபோய் விடுவாராக்கும்...

கண்ணே... மணியே... என்ற கொஞ்சல் வேண்டாம்... உபசார வார்த்தை போதுமே... ஏதோ... வாய் திறந்தால் உள்ளிருக்கும் முத்துக்கள் உதிர்ந்து... அவற்றை நான் அள்ளிக் கொண்டு போயிடுவேன் என்ற பயம் போலிருக்கிறது...

இவருக்காகத் துடித்துப் போய் காத்திருந்த என்னைச் சொல்ல வேண்டும்.

வகை வகையாய் உணவு வகைகளைப் பண்ணி வைத்து என் கையால் பரிமாற வேண்டும் என்ற ஆசை வேறு எனக்கு... தேவைதான்...

சாப்பிடும் போதாவது வாய் திறந்து... சாதம் வேண் டாம்... போதும்... என்று சொன்னால் என்னவாம்... வெறும் கையசைப்பு மட்டும்தான்... அப்புறம் சாதத்தை தட்டி விட்டு... தப்பு பண்ணிட்டேனேங்கற மாதிரி ஒரு பார்வை வேறு... அதில் தெரிந்த பரிதவிப்பு... நன்றாக வேண்டும்... என்னை பரிதவிக்க செய்கிறவராயிற்றே.

ஆனாலும்... அப்படி என்னைப் பார்த்ததும்... என்னை மறந்து நின்றேனே... அய்யோ... தெய்வமே... அப்பா... உடன்பிறந்தவர்கள் எல்லோரும் பார்த்திருப்பார்களோ... எத்தனை நேரம் அப்படி இருந்தேன்... தெரியவில்லையே... கண்களை மூடிக் கொண்டு அதை மறுபடியும் நினைவுக்குக் கொண்டு வந்தாள்.

அவனது கண்கள் அவளது விழிகளைச் சந்தித்த அந்த நேரத்தில் என்ன நிகழ்ந்தது! ஏதோ ஒன்று அவனைக்

கட்டிப்போட்டு கண்களை விலக்க முடியாமல் செய்த
மட்டுமல்ல... வினோதமான ஒரு பரவச உணர்வு மி
அலைகளின் அதிர்வாய் உடம்பு முழுக்க பரவியதுதான்
அனுபவம்!

கண்கள் கலந்த நேரம் எத்தனை என்று தெரியா
வினாடிகளா... நிமிடங்களா...

அவன் குனிந்ததும் அந்த மாயவலை அறுந்து போன
விந்தை!

மின் ஓட்டம் சட்டென்று தடைப்பட்டது போல
அவளாலும் விலக முடிந்தது.

அந்த நேரம் அவன் மனதில் என்ன நினைப்பு எ
அறிய முடியாத குழப்பம்...

அவன் அழுத்தக்காரன் என்று அத்தை சொன்ன
உண்மைதான்...

அவர் பார்த்த அந்த சில நிமிடத்தில் ஏற்பட்ட
லரிப்பை நினைத்தே நாட்களை ஓட்டிவிடலாம் தா
இப்போதும் அதே சிலிர்ப்பு!

''குளிரா... பானுமதி... கண்ணாடியை ஏற்றிவிடு
யார்... இவரா சொன்னது... அட... பேசவும் வருமா என்

கண்கள் விரிய அவனைப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்... ஏதாவது அதிச
தெரிகிறதா என் முகத்தில்...'' வியப்புடன் கேட்டான் அ

''இல்லை... பேசியது நீங்களா... இல்லை... என் பிரமை
என்று பார்த்தேன்...''

பற்கள் வெண்மையாய் பளிச்சிட சிரித்தான்.

அட... இவருக்கு சிரிக்கவும் தெரிகிறதே!



''இப்ப... யார் பேசியது. பேசாமடந்தை என்ற பெண்ணா...'' அவனது குரலில் பரிகாசம் தெரிந்தது.

''நானா... பேசாமடந்தையா... சரிதான்... நான் பேச ஆரம்பித்தால் அவ்வளவுதான். நீங்கள் காதில் பஞ்சு வைத்துக் கொள்ளணும்...''

''பரவாயில்லைதான். ஒருவாரம் பிறந்த வீட்டில் இருந்ததில் வாயாடக்கூட வந்துவிட்டதே...''

''அங்கே பதிலுக்குப் பதில் வாயாட இருந்ததால் வந்த பழக்கம்...'' என்றவள் நாக்கைக் கடித்துக் கொண்டாள்.

பிறந்த வீட்டில் இருக்கும் கலகலப்பு அவன் வீட்டில் இல்லை என்பதைக் குத்திக் காட்டுவதாய் நினைத்து விட்டால்... அவன் இன்னும் சிரித்தான். ''இப்போதுதான் தெரிகிறது. பேசாமடந்தை பானுமதிக்குள் வாயாடி பானுமதி ஒளிந்து இருக்கிறாள் என்று...''

''உங்களுக்கு எந்த பானுவைப் பிடிக்கும்'' என்று கேட்டுவிட நாக்கு துடித்தது... ஆனால் பேசாமல் தலை குனிந்தாள்.

இத்தனை பேசியதே பெரிய விஷயம் என்பதுபோல அவன் வாய் திறக்காமல் காரை ஓட்டினான்.

வீடு வந்து சேரும் வரை மௌனராகம்!

மருமகள் உள்ளே வந்ததும் சௌந்திரம் ஆரவாரத்துடன் வரவேற்றாள்.

''வாம்மா... பானு... நீ இல்லாமல் எனக்கு பொழுதும் போகவில்லை... ஏதோ ஒரு மாதம் ஆனது மாதிரி இழுத்தடித்தது. வீட்டில் கொலுசு சத்தம் கேட்டு பழக்கமாச்சா... அது இல்லாம வீடே 'கப்சிப்'ன்னு இருந்தது... நீ எப்போது வருவாய்னு தவிக்க ஆரம்பித்துவிட்டேன்... நீ இல்லாத வீடு வீடாகவே இல்லைம்மா.''

கணவன் சொல்ல வேண்டியதை மாமியார் சொல் கேட்க வேண்டியிருக்கிறதே என்ற ஏக்கம் வந்தாலும் அன்பைப் பொழியும் மாமியாரின் வார்த்தைகள் மனதி இதமாய் இருந்தன.

மாமியாரை வணங்கினாள்.

இந்த வீட்டில் ஒரு ஜீவனாவது தன் பிரிவை உணர்ந் என்ற சந்தோஷம்... கூடவே... உணர வேண்டிய ஜீ ஜடமாகிப் போய் நிற்பதை நினைத்து விரக்தி... விசித்தி என்று எண்ணிச் சிரித்தாள் பானு...

உண்மையில் சௌந்திரம் கடைசி நேரத்தில் முரண் பண்ணி மாமனார் வீட்டுக்குச் செல்ல மறுத்து விடுவாரோ என்று அஞ்சினாள்.

ஒருவாரம் கழிந்ததும்... போய் பானுமதியை அழை வரவேண்டும் என்றதும் எந்த மறுப்பும் இல்லாமல் அ புறப்பட்டதும் தான் நிம்மதி வந்தது.

பரவாயில்லை... இந்த மட்டும் மனைவியை அழை வரவேண்டும் என்ற எண்ணம் இருக்கிறதே... அது போத

மருமகளைக் காண பரபரப்புடன் காத்திருந்தா சௌந்திரம்...

ஏதோ ஜென்ம ஜென்மாந்திரமாய் தன்னுடன் இருந்த போல உணர்ந்தாள் அவள்... பானுமதி இல்லாமல் க இழந்து காணப்பட்ட வீடு... அவள் வந்ததும் கதிரவன் ஒளிபட்டது போல 'பளிச்'சிட்டது.

மாமியாரின் அன்பு வார்த்தைகளையும், அரவணைப் யும் கண்டதும் மனம் லேசானது போல இருந்தது அவளு

அடடா... கணவன் அன்பைக் காணாது... வரண் பாலைவனம்... என்று இந்த வீட்டை எண்ணினோமே



பாலைவனச் சோலையாய் அத்தையின் அன்பு இருக்கிறதே வேறென்ன வேண்டும்...

ராஜசேகர் எங்கே போனான் என்று சுற்றிலும் பார்த்தாள்... அவனைக் காணோம்!

அதற்குள் மாயமாகிவிட்டாரே!

அழைத்து வந்ததுடன் என் கடமை தீர்ந்தது என்று கைகளை உதறிவிட்டு சென்று விட்டாரா... அப்படித்தான் இருக்கும்...

ஏதோ அதிசயமாய் கார் பயணத்தில் பேசியதை வைத்து மனக்கோட்டையெல்லாம் கட்டிவிடக்கூடாது. அத்தை சொன்னதற்காக வந்தார்... சம்பிரதாயத்திற்காக விருந்துண்டார்... அப்படியே கடமையாக நினைத்து அழைத்தும் வந்துவிட்டார்... அதற்குமேல் ஒன்றும் இல்லை... ஆம்... இல்லவே இல்லை அப்படி எண்ணும்போது இதயத்தில் 'மளுக்'கென்று வலி வந்தது...

இந்த நாடகம் எதுவரையில்... தெரியவில்லையே... இப்படியே ஊமை நாடகமாய் வாழ்க்கை முடிந்துவிடுமோ...

கண்களில் துரும்பு பட்டாற்போல கரித்தது. யாரும் பார்க்காமல் துடைத்துக் கொண்டாள்... அடிமனதில் ஒருகுரல்... 'இது நீயே போட்டுக் கொண்ட அட்சதை... நீயே தேடிக் கொண்ட வாழ்க்கை... அதன் பலனை அனுபவித்துத் தான் தீரணும்.

கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு... கல்லில் இடறி விழுந்தால்... அது கல்லின் தப்பில்லை... அதுமாதிரி தான் நீ செய்த செயலும்... அவன் திருமணமானவன் என்று தெரிந்தும்... இன்னும் முதல் மனைவியின் நினைவில் உருகிவழிவதை அறிந்திருந்தும்... அவனை மணக்கும்படி கெஞ்சினது மட்டுமில்லாமல்... ''உங்கள் வாழ்க்கையில் ஒரு

ஓரமாய்... வேலைக்காரிபோல இருந்து விடுகிறேன்'' என் வாக்கும் கொடுத்த பின்பு... இப்போது... இப்படி... அவள் அன்புக்காக ஏங்குவது எந்த விதத்தில் நியாயம்... ம்ம்?

இதற்கு பெயர் தான் மனசாட்சியா... இப்படிக் குத்தி காட்டுகிறதே!

ஆனாலும்... பெண் புத்தி பின்புத்தியாயிற்றே... கிடை காத ஒன்றை நினைத்து தவிப்பதுதான் வழக்கம். கணவன் அன்பை விரும்பி ஏங்கி நின்றாள் அந்த பேதை...

அன்றைய பொழுது பானுமதியின் பிறந்த வீட் விஷயங்களைப் பற்றிப் பேசுவதிலும்... பானுமதி இல்லாம தான் பட்ட அனுபவங்களை சொல்வதிலும் பொழு கழித்தாள் சௌந்திரம்...

பானுமதியை நகரவும் விடாமல் தன்னுடன் இருத் கொண்டு பேசிக் கொண்டிருந்தாள்...

அத்தனை நாட்கள் பேசாமலிருந்ததையெல்லாம் வட யும் முதலுமாய் கொட்டினாள்.

''நல்லவேளை பானு... ஊர்த்திருவிழா வேறு வ விட்டது... அதற்குள் நீ போய்விட்டு வந்ததும் நல்லதாக் இந்த வருஷம் கூடுதல் சந்தோஷம் என்ன தெரியுமா... பிள்ளை 'ஜம்'முன்னு மனைவியோடு போகப்போகிறா நீயும்... என் மகனும் ஜோடியா சேர்ந்து போவதைப் பார் இந்த ஊரே ரசிக்கப் போறது... பாரேன்...'' பெருமிதத்து சொன்னாள் சௌந்திரம்.

ராஜசேகரனும்... தானுமா... கற்பனையில் பார்த்த தேனாய் இனித்தது அந்த மாயக்காட்சி... அந்தத் திரு எப்போது வரும் என்று ஆவலாய் காத்திருந்தாள் பானு

அந்த நாளும் வந்தது... ஆனால்...





# 6

**ஊ**ர்த் திருவிழா 'ஓகோ' என்று ஆரம்பமானது. அம்மன் கோவிலில் கொடியேற்றம் பக்தி சிரத்தையுடன் ஏற்றம் ஆனது.

அந்த சின்ன ஊரில் சின்ன கோவில்தான். ஆனால் அம்மனின் சக்தியும் மகிமையும் அத்தனை பிரசித்தம்!

தெருமுழுக்க கடைகள்... மழைக்காலத்தில் முளைத்த காளான்களைப் போல... கூடாரக்கடைகள்!

வளையல்... பாசிமணி... கிளிப்... ஹேர் பேண்ட் என்று பெண்களைக் கவரும் கடைகள்...

பந்து... விளையாட்டு பொம்மைகள்... வீடியோ கேம்ஸ் என்று சிறுவர்களைத் தட்டி அழைக்கும் கடைகள்... இனிப்பு... காரம்... என்று நாவில் எச்சிலை சுரக்க வைக்கும் ஸ்வீட் ஸ்டால்...

இன்னும்... பொரி கடலை வியாபாரம்... ஐஸ் ஃப்ருட் விற்பனை. போண்டா... வடை என்று சுடசுட போட்டுத் தருபவர்...

ஒரு பக்கம் சின்ன குடைராட்டினம் ஒன்று சிறு குழந்தைகளை சுமந்தவாறு சுற்றிக் கொண்டிருந்தது... கொஞ்சம் தள்ளி மேலிருந்து கீழ் சுற்றும் ராட்டினம். விடாமல் பாடிக் கொண்டிருந்த ஒலிபெருக்கி! அவை மட்டும் இருந்தால் திருவிழா ஆகிவிடுமா என்ன...

வேப்பமரத்து நிழலில் பாம்பாட்டி மகுடி ஊதி பாம்பை ஆடவிட்டுக் கொண்டிருக்க... குட்டிச்சுவர் அருகே

குரங்கை ஆட்டுவித்துக் கொண்டிருந்தான் ஒரு குரங்காட்டி திடீர் ஸ்டுடியோ ஒன்று முளைத்து... "ரஜினிகாந்த்துட போட்டோ எடுத்துக் கொள்ளணுமா... பத்து நிமிஷத்தி ரெடி... வாருங்கள்... இளைய தளபதியுடன் போட்டோ வா... வாங்க... வாங்க..." என்று அழைத்துக் கொண் இருக்க... பிளந்த வாயுடன்... ஆசையாய் உள்ளே செல்ல பார்க்கும் இளசுகளின் வரிசை...

அது இருக்கட்டும்... பருப்பு இல்லாமல் கல்யாணமா... யானை இல்லாத கோவில் திருவிழாவா...!

குட்டியானை ஒன்று நெற்றியிலும்... முறம் போன் காதுகளிலும் விபூதிப் பட்டையைப் பூசிக் கொண்டு... கம்பீரமாய் நின்று வருபவர்களிடம் காசு வாங்கிக் கொண் சமர்த்தாய் ஆசி வழங்கிக் கொண்டிருந்தது.

இன்னும்... நாசியை ரம்யமாய் தொட்டு வருடி தரு மல்லிகை... ஜாதி... செண்பகம்... ரோஜா... மருகு... கதம் மலர்களின் வாசம்...

கோவிலில் அர்ச்சனை செய்ய தேங்காய்.. பழம்... கற்பூ போன்றவற்றை வாங்க கூடியிருக்கும் மகளிர் கூட்டம்...

ஆக... திருவிழாவிற்குரிய அத்தனை லட்சணங்களு அங்கு இருந்தன... காலம் மாறியும் மாறாமல் இருக்கு அடையாளங்கள்... திருவிழாவிற்கு களைக் கட்டு சமாச்சாரங்கள்...

அவை இல்லாமல் திருவிழாவிற்கு அழகேது...

ஊர் மக்களுக்கு ஒன்பது நாட்களும் கோவிலில்தா சாப்பாடு... அதற்காக நெல்மூட்டைகளையும்... இத பண்டங்களையும் ராஜசேகர் அனுப்பி வைத்திருந்தா பத்தாவது நாள் தேர் உலா வரும் அழகு... கண்கொள்ளா காட்சி...



வெளியூரிலிருந்து வந்திருந்த விருந்தாளிகள் தங்கள் உறவினர் வீட்டில் தங்கி... விழா முழுக்க இருந்து... கொடி இறக்கம் ஆனதும் செல்ல வேண்டுமே என்று பெருமூச்சு விட்டு கொண்டு போவது வழக்கம்...

அந்த பத்து நாட்களும் இரவும் பகலும் ஊரே கலகலத்து இருக்கும்...

எப்போதும் போல தினம் ஒரு கேளிக்கை என்று... நாட்டியம், தெருக்கூத்து... கதா காலட்சேபம்... பொம்மலாட்டம்... இவற்றோடு ஆர்க்கெஸ்ட்ராவும் உண்டுதான்.

முதல் நாள் கொடியேற்றம் ராஜசேகரின் தலைமையில் நடந்தது... ஊரின் பெரிய மனிதன் என்பது மட்டுமல்ல... கோவிலின் எத்தனையோ தரும காரியங்களில் பங்கு கொண்டும்... கோவிலுக்கு பரம்பரை பரம்பரையாய்... விடாமல் நன்கொடைகளாய் அள்ளித்தரும் குடும்பம் என்ற மரியாதையால்...

அதிகாலை வேளையில் அம்மனுக்கு அபிஷேக ஆராதனை. அப்போது குடும்பத்தில் அனைவரும் அங்கிருப்பது வழக்கம்...

அகிலாண்டத்தை ஆட்டுவிக்கும் அன்னை தேவிக்கு அழகான பட்டுசேலையும்... ரவிக்கை... வளையல்... மஞ்சள்... குங்குமம், மாலை, பழம் இத்யாதிகளை தட்டில் வைத்து சமர்ப்பிப்பது வழக்கம்...

இந்த வருடம் புது மருமகள் கையால்... சௌந்திரத்தின் உள்ளம் பூரித்தது.

அழகியப் பட்டுப்புடவை சரசரக்க... கணவனின் அருகே புதுமணப்பெண்ணின் பொலிவோடு நடந்த பானுவிற்கு உள்ளூர பெருமிதம்தான்.

ஓரக்கண்ணால் தன் கணவனை ரசித்து ஆனந்தம் அடைந்தாள்.

பட்டுவேட்டியும்... பட்டு ஜிப்பாவும் உடுத்தி... கழுத்தில் தங்கச் சங்கிலியும்... கையில் தங்கக்காப்பும்... விரல்களில் வைர மோதிரங்கள் மினுமினுக்க ராஜநடைப்போட்டு வரும் இவர் என் கணவர்!

கூடவே ஆற்றாமை வேறு... பாலுடன் தேன் சேர்ந்தது சுவை கூடுவதுபோல்... இந்த அழகன் மனதில் அன்பு இருந்திருந்தால் இன்னும் சந்தோஷம் இரட்டிப்பாகி யிருக்குமே...

என்னைக் கனிவாய் பார்த்து... சின்ன புன்னகைப் பூ தாலும் நான் சரணாகதிதான்...

இன்னும்... இவருடைய வலிமையான கரங்கள் என்னை இறுக அணைத்தால்... அடடா... நினைக்கும் போதே ரத் நாளங்களில் ஏதோ சூடாய் பரவுகிறதே! அதுதா பரவசமா... அது நனவானால்... ஆகுமா... அது நடக்கு செயலா... சொல்ல முடியாது... இதோ இந்த அம்ம சக்திவாய்ந்த தெய்வம் என்கிறார்கள்... அன்னை மன வைத்தால் உண்டு...

தாயே... செய்வாயா...

நினைவு அலைகளின் தாக்கம்... ஒரு படியை மறந் விட... கால் சரிந்து தடுமாறி பின் சாய்ந்தாள் பானுமதி...

கையில் இருந்த தட்டு விழக்கூடாது என்ற ஆதங்கத்தில் அருகில் இருந்த எதையாவதைப் பிடித்துக் கொள் வேண்டுமே என்ற அவசரத்தில் தடுமாறும் போதுதான்...

சட்டென்று இரண்டு கரங்கள் அவளது தோளை பற்றின... அவளது அதிர்ச்சியினை போக்கும் விதமா அவளை அணைத்தன.

கண் இமைக்கும் நேரத்தில் நடந்துவிட்ட சம்பவம். அ கரங்கள்... கணவனைத்தவிர வேறு யாராய் இருக்க முடியு



மெய்சிலிர்த்தாள் பானு... இப்போதுதான் அம்மனை வேண்டினேன்... இத்தனை சீக்கிரத்தில் பலித்துவிட்டதே... உண்மையில் சக்தி வாய்ந்த தெய்வம்தான்...

தோளை அணைத்த கரங்கள் விலகிப்போனாலும் அவை தந்த சுகம் இன்னும் அகலாமல் அப்படியே இருந்தது...

மெல்ல அவன் முகத்தை ஏறிட்டாள்... முகம் துடைத்து விட்டதுபோல உணர்ச்சியைக் காட்டாமல் இருந்தது.

அவனுக்கு எந்த பாதிப்பும் கிடையாதோ... விழ இருந்த மரக்கட்டையை தடுத்து நிறுத்திவைத்தது மாதிரி நினைப்பு போல...

அதாவது அனிச்சை செயல் மாதிரி என்று சொல்ல வேண்டும்...

உடுக்கை இழந்தவன் கைப்போல காப்பாற்றி இருக்கிறான். அவ்வளவுதான்... அந்த அணைப்பில்... உரிமை இல்லை... காதலோ... மண்ணாங்கட்டியும் கிடையாது.

"என்னம்மா பானு... பார்த்து நடம்மா... புடவை தடுக்கி விட்டதா என்ன?" அருகில் வந்து தடவிக் கொடுத்த மாமியாரின் வார்த்தைகள் மனதிற்கு ஆறுதலாய் இருந்தது.

"இல்லை அத்தை... படிகளைப் பார்க்கத் தவறிவிட்டேன் அதான்..."

"தட்டை வேலையாளிடம் கொடும்மா... அப்புறம் வாங்கிக் கொள்வாயாம்..."

'வேண்டாம் அத்தை... சன்னிதி வந்தாயிற்று. நானே எடுத்து வருகிறேன்...'

எதுவும் பேசாமல் வந்த கணவன் வாய்திறந்தான். "கீழே கண் வைத்து... பார்த்து நடந்து வா... எப்போதும் தாங்கிப் பிடிக்க நான் வரமாட்டேன்."

இது வேடிக்கைப் பேச்சாய் தெரியவில்லையே... எரிச்சலில் அல்லது... ஏதோ ஒரு வேதனையில் பேசுவ போலத் தெரிகிறது.

எப்போதும் உன்னுடன் இருக்கமாட்டேன் என் எச்சரிக்கின்றாரா...

மனக்குழப்பத்துடன் அத்தையுடன் ஒட்டி பெண்க பக்கமாய் ஒதுங்கினாள்... அவனைப் பார்க்கவும் கூசி போனாள்.

வேண்டும் என்றே செய்தது போல அல்லவா நினைத்து பேசுகிறார்...

அவளது கண்கள் வாட்டத்துடன் தாழ்ந்ததை அவனு கவனித்தான்.

அந்த கண்களில் என்ன இருக்கிறது... காந்த சக்தியா மனதைக் கவ்வுகிறதே!

ஒருவேளை... என் இதயம் இரும்பாக இருப்பதால் அ காந்த சக்தியால் இழுக்கப் பார்க்கிறதோ...

அது முடியாது... இந்த இதயம் ரத்னாவிற்குத்தா உரிமை... அவளுக்கு மட்டுமே சொந்தமானது... இதோ இதே அம்மனின் சந்நிதியில் அன்று அவளுடன் ஜோ சேர்ந்து நின்றிருந்தேன்.

இன்று... இவளுடன்...

நினைவு தந்த கசப்பில் முகத்தைத் திருப்பிக் கொண்டா சௌந்திரம் தன் மருமகளைப் பெருமையுடன் பார்த்தா இவள் தான் என் மருமகள் என்று ஊரே பார்க்கணும் என் ஆசையில் தன்னுடன் இருத்திக் கொண்டாள்.

ஆர்ப்பாட்டம் ஏதுமின்றி... அலட்டல் இல்லாமல் எளிமையாய்... பதவிசாய் நின்று தெய்வ தரிசனம் செய் இவள் அல்லவா பெண்...



குத்து விளக்குக்கும்... கொள்ளிக்கட்டைக்கும் வித்தியாசம் இருக்கிறதே...

குடும்பத்துக்கு குத்துவிளக்குத்தான் அவசியம்... அழகும் கூட... பானுவும் அந்த மாதிரிதான்... ரத்னா கொள்ளிக் கட்டையாய் வீட்டை... வீட்டின் நிம்மதியை எரித்துவிட்டாளே...

அவளும்தான் திருவிழாவிற்கு வந்தாள்... எப்படி... அதீத அலங்காரத்துடன் சினிமா நடிகையைத் தோற்கடிக்கும் ஒப்பனையுடன் கண்களைக் கூசவைக்கும் உடையணிந்து... வெகு நாகரீகமாய் கோவிலுக்கு வந்து ஆர்ப்பாட்டம் பண்ணியதை அவ்வளவு சீக்கிரம் மறக்க முடியுமா என்ன...

"நான் அங்கு வந்து என்ன செய்ய வேண்டும்... எனக்கு அலுப்பாக இருக்கிறது... மணிக்கணக்கில் நிற்கணும். சுத்த போர்... இந்தத் திருவிழா கசமுச... கூட்டம்... நெரிசல்... காட்டுக்கத்தல் எல்லாம் எனக்கு அலர்ஜி..." என்று முகம் சுளித்து முணுமுணுத்தவளை கெஞ்சி அழைத்து வர வேண்டி இருந்தது.

வரும் வழியெல்லாம் எரிச்சலுடன் முணுமுணுத்து வந்த ரத்னாவைக் காண மிகப் பொறுமை தேவையாக இருந்தது...

அதைவிட எரிச்சல்... மகன் அவளிடம் கெஞ்சி நின்றது தான்... காணவும் சகிக்க முடியவில்லை. அப்படி என்ன தாடையைப் பிடிக்காத குறையாய் கெஞ்சுவது... இவனுக்கு கொஞ்சமும் புத்தியில்லை... 'வா' என்றதும் வரணும் அவ... அது புரியாமல் இவள் குதிப்பதற்கு ஏத்தமாதிரி தலைமேல் தாங்கிக் கொண்டு... சே!

மனதினுள் அங்கலாய்த்துக் கொண்டாள் சௌந்திரம். வேலையாள் இருக்கிறபோது நான் ஏன் அம்மனுக்கு தரும் காணிக்கைத் தட்டை சுமக்கணும் என்ற விவாதம் வேறு...

பொங்கி வந்த ஆத்திரத்தை சிரமப்பட்டு அடக்க வேண்டியதாயிற்று.

நம்ம குடும்பத்து வழக்கம்மா... வீட்டுப் பொண்ணு அதை எடுத்துக் கொண்டு வந்து கொடுக்கணும்ங்கறது. வீட்டுக்கு வந்த மகாலட்சுமி... உன் கையால் எடுத்து வா... தான் அழகு... என்று நிதானமாய் எடுத்துச் சொன்னாலும் காதில் வாங்கிக் கொள்வதாய் இல்லை. நீ சொல்லி நா... என்ன கேட்பது என்ற முரட்டுப் பிடிவாதம்...அது அவளிட... நிறையவே இருந்தது. ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டி... பூஷணங்களாகிய பொறுமை... அன்பு... நாணம்... நிதானம்... அமைதி... இதில் ஏதாவது ஒன்று... அவளிட... துளியளவு... ஊகூம்... இல்லவே இல்லை.

போகட்டும்... மாமியாருக்கு வேண்டாம்... கணவனு... காவது மரியாதைக் காட்டலாமே... மரியாதை கூ... வேண்டாம்... அன்பைக் காட்டி இருக்கலாம்... அது... இல்லை.

'அன்பு' என்ற பதத்திற்கு என்ன அர்த்தம் என்று கேட்... ரகம்...

அவள் வளர்ந்த விதம் அப்படி என்று எண்ணின... சௌந்திரம்.

கோவிலில் பெண்கள் பக்கம் வந்து தன்னோடு நிற்ப... என்று பார்த்தால்... அவள் நேரே ஆண்கள் வரிசையில் நட... கணவனுடன் ஒட்டி ஈஷிக் கொண்டு நின்றது எரிச்ச... வந்தது. அந்த சின்ன ஊரில் மகளிர் அனைவரும் அட... ஒடுக்கமாய்... ஆண்களிடம் இருந்து தள்ளியே இருப்பார்க...

கணவன், மனைவி என்றாலும்கூட விலகித்தான்... வார்கள்... உரசலும்... ஒட்டி நிற்பதும் வெட்கத்திற்... விஷயமாய் நினைப்பவர்கள்...



அவர்கள் எதிரே இப்படி அமர்த்தலாய்... கணவனின் தோளில் சாயாத குறையாய் ஒருத்தி நின்றால்... அங்கு தரிசிக்க வந்தவர்களின் கண்கள் எல்லாம் அவள் மேல்தான்...

சினிமா நாயகியைப் போல கூந்தலை எடுத்து சீவி... கொண்டையாய் முடித்து... அதில் ரோஜாவை சொருகியிருந்தாள்.

முகத்தில் 'ஓவராய்' ஒப்பனை... லோஷனைத்தடவி பவுடரைப் பூசி... கன்னங்களில் ரூஜ் தடவி... கண்களுக்கு 'ஐ லைனர்' தீட்டி.... இதழ்களுக்கு சாயம் பூசி... இருக்கும் நகைகளையெல்லாம் அள்ளிப் பூட்டிக் கொண்டு... பார்க்கும் கண்கள் தெறித்துவிடும் வண்ணம் இருந்தது அலங்காரம்...

உடம்பை மறைப்பதற்கு தான் உடை என்ற கொள்கைக்கு மாறாய்... பாதி உடம்பைக் காட்டும் வண்ணம் உடுத்தியிருந்தாள்.

முதுகுப்பகுதியில் ரவிக்கை காணோம். வெறும் நூல் முடிச்சுகள் தான்!

கழுத்து கீழே இறங்கி... அங்கங்களை 'பளிச்'சாக்கியது... சேலையைத் தொப்புளுக்குக் கீழேக் கட்டியிருந்தாள் அவள்... அந்த சேலைகூட வெங்காய சருகாய்! மொத்தத்தில் தன் அழகை வெளிச்சம் போட்டுக் காட்டினாள் ரத்னா.

அனைவரும் கண்களை அகலமாக்கிக் கொண்டு தன்னையே பார்ப்பதைப் பெருமையாக எடுத்துக் கொண்டாள் அவள்.

ஆண்களே முகம் சுளித்து நின்றதை அவள் உணரவில்லை... இல்லை... உணர்ந்தும் அலட்சியமாய் இருந்தாளோ என்னவோ... கொண்டையை சிலிர்த்து நிற்கும் சேவலைப் போல கர்வத்தோடுப் பார்த்தாள்.

கூட்டத்தின் கசகசப்பில் தன்னால் இருக்க முடியவில்லை என்பதைக் காட்ட கைக்குட்டையால் விசிறிக் கொண்டு

'உஸ்ஸ்...' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டும் இரு தாள்... நொடிக்கு ஒரு தடவை "போகலாமா..." "இன்னு எத்தனைநேரம்" என்ற புலம்பல் வேறு...

சௌந்திரத்திற்கோ ரொம்பவும் அவமானமாக இருந்தது என்ன இந்தப் பெண்... மட்டுமரியாதை இல்லாமல் நடந்து கொள்கிறாள்...

ஆண்களுக்கு மத்தியில் நின்று கொண்டு... கேவலமா நடந்து கொள்வதும்... அலட்டிக் கொள்வதும்... இப்படி கொஞ்சமும் இங்கிதம் இல்லாமல் நடந்து கொள்வதும் என்ன வளர்ப்போ... ஊரில் பெரிய மனிதர் என்று பெய எடுத்து... இத்தனை காலமாய் சீரும் சிறப்புமாய் வாழ்ந் குடும்பத்திற்கு ஒரு கரும்புள்ளியாய் வந்திருக்கிறாள் சௌந்திரத்திற்கு இப்படி ஒரு மருமகளா என்பது போ அனைவரும் பார்ப்பது மாதிரி பிரமை... மனம் குன்றினா

அவளுக்குத்தான் புத்தி கிடையாது... மகனாவ குடும்பப் பெருமை குலைவதை உணர்ந்தானா... இல்லையே அவன் தான் குழைந்து கிடக்கிறான். கண்றாவி! உள்ளுக்கு மறுகினாள்...

ஏதோ தேவலோகத்திலிருந்து இறங்கி வந்த சுரமங் தன் அருகே நிற்கிறாள் என்று கிறங்கி போனாலே என்னவென்று சொல்வது...

அம்மனையும் தரிசிக்காமல் அவளைப் பெருமையுட பார்த்துக் கொண்டிருந்த மகனை எரிச்சலுடன் பார்த்தா மகனே... விழித்துக் கொள்ளடா... ஊகூம்... மோகத்தி கண்ணில்லை. இருந்தால் தானே விழிக்க...

என்றைக்காவது அவனுக்கு உறைக்கும்... மோ கலையும்... அப்போது விழித்துக் கொள்வான்... ரத்னாவி கொட்டத்தை அடக்குவான் என்ற நூலிழை நப்பாசை அறுந்தே போனது. கடைசி வரைக்கும் அவன் விழித்



கொள்ளவே இல்லை. இன்னும் ரத்னா பஜனை செய்து கொண்டிருக்கிறான். முட்டாள்!

"பிரசாதம்... வாங்கிக் கொள்ளுங்கள்." சௌந்திரம் கடந்த காலத்திலிருந்து இறங்கி வந்தாள். "அடச்சே... என்ன இது... வேண்டாத நினைவுகள்... அம்மனைத் தரிசிக்காமல்... இப்போது அவளைப் பற்றிய நினைப்பு ஏன்... தாயே மன்னித்துக் கொள்..." கன்னத்தில் போட்டுக் கொண்டு பிரசாதத்தை வாங்கிக் கொண்டாள்.

அர்ச்சகர் பானுமதியிடம் பிரசாதத்தை வழங்கும் போது "புதுப் பொண்ணாம்மா... அதிசீக்கிரம் புத்தர பாக்கியம் கிடைக்கட்டும்" என்று ஆசி கூறினார். முகம் சிவந்து போய் அவள் பெற்றுக் கொண்டாள். மனம் ஏங்கியது... புத்திர பாக்கியமா... அது ஏது... கணவனின் கண் பார்வையே கிடைக்கவில்லை... அப்புறம் தான் எல்லா பாக்கியமும்...

அதே நேரம் ராஜசேகரின் பார்வை பானுவின் பக்கம் திரும்பியது... அதுவரையில் அவன் உள்ளத்தில் உளைச்சல்...

கோவில் திருவிழா என்றதும் கடந்துபோன நினைவுகள் வந்து இம்சித்து... ஜுரம் வந்ததுபோல உடம்பெல்லாம் தகித்தது. அம்மன் கோவிலுக்கு புறப்படும்போது ரத்னாவின் நினைவு அவனை ஆட்டுவிக்கும்.

அன்றைக்கும் அப்படித்தான்... பானுமதியை சரியாய் கவனிக்கவும் இல்லை.

இதயம் ரத்னா... ரத்னா என்று புலம்பிக் கொண்டிருக்கையில்தான் பானு கால் இடறி விழ இருந்தது... அவனையும் அறியாமல் அவளைத்தடுத்து நிறுத்தினாலும் இவள் என் வாழ்வில் ஏன் வந்து தொலைத்தாள் என்ற கோபம் தலைக்கேற... அதனால் சற்று கடுமையாகவே பேசிவிட்டான்.

ஆண்கள் வரிசையில் அவனும்... பெண்கள் வரிசையில் அவளுமாய் நேருக்கு நேர் நின்றிருந்த போதிலும் அவன் பக்கம் ஏறிட்டும் பார்க்கவில்லை.

தேவியின் திருவுருவத்தில் மனதைப் பதித்து உள்ளத்தில் புலம்பலை இறைவியிடம் முறையிட்டுக் கொண்டிருந்தான்.

'தாயே... இது எந்த விதத்தில் நியாயம்... என் வாழ்க்கையை பாலைவனமாக்கி... என்னைப் பட்டமரமாகச் செய்துவிட்டாயே... என் ரத்னாவை என்னிடம் இருந்து பிரித்துவிட்டு இப்படி சிரித்துக் கொண்டு நிற்கிறாயே... இது சரியா.... இது தர்மமா... என்னால் அவளை மறக்கவும் இயலவில்லையேம்மா... என் ரத்னா மீண்டும் வருவாளா...' அத்தனையையும் கேட்டுக் கொண்டு அந்தத் தாய் ஒரு மந்தகாசப் புன்னகையுடன் நின்றிருந்தாள். கற்பூரம் ஏற்றி தீபாராதனை காட்டிவிட்டு பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கும் வரை அசையாமல் வெறித்துக் கொண்டிருந்தவன் அர்ச்சகர் உரத்த குரலில் யாருக்கோ ஆசிகூறுவது கேட்டுத் திரும்பினான்.

அது யாரோ இல்லை... தன் மனைவிதான் என்று உணர்ந்ததும் சினமும்... எரிச்சலும் அடைந்தான்... அதே எரிச்சலுடன் பானுமதியைப் பார்த்தான்... வேண்டாத சுமையாய் என் வாழ்வில் நுழைந்தவள் என்ற வெறுப்புடன்.

பானு முகம் சிவந்து போய்... உடம்பெல்லாம் குறுகி கண்களில் ஏக்கம் குடிக்கொள்ள தலைகுனிவதைப் பார்த்ததும் அய்யோ என்று ஆனது...

அதுவும் அந்த பெரிய விழிகளில் தென்பட்ட நிராசை தான் அவனை என்னவோ செய்தது. எந்தப் பெண்தான் குழந்தைப் பேற்றை வேண்டாம் என்று சொல்வாள். பெண்ணின் பிறவி முழுமை அடைவதே தாய்மையால்



தான்... அதை அடைய மாட்டோமா என்று தவம் கிடப்பாள் ஒவ்வொரு பெண்ணும்.

மலர் பூப்பதே கனியாக மாறத்தான். கனியாமல் காயாக நின்று விடுவதில் எந்த பெருமையும் இல்லையே... பானுமதியும் கனிய விரும்பினால்... பிள்ளைக்கனியை பெற விரும்பினால் அதுவும் தவறில்லை. தான்... ஆனால்... அன்பின் சின்னம் தான் குழந்தை என்பார்கள். ஆனால் என் மனதில் அன்பு வரண்டு கிடக்கிறதே... என்னைக் கணவனாய் தேர்ந்தெடுத்தது அவள் செய்த மகாத்தப்பு...

தப்பு செய்தவன் அதன் பலனை அனுபவித்தே ஆக வேண்டும். தாலிக்கட்டியதுடன் சரி... அதற்கு மேலும் எதிர் பார்ப்பது பிரயோசனமில்லை... அதை அவள் உணர்ந்தே ஆக வேண்டும்... வேறு வழியில்லை...

அவனுக்கு சிரிப்புத்தான் வந்தது... விதியின் விளையாட்டை என்னவென்று சொல்வது. தன் வாரிசை ரத்னா சுமந்து பெறவேண்டும் என்று ஆசைப்பட்டான். அது நடக்கவில்லை.

குழந்தை பிறந்தால் அழகு குலைந்து போகும் என்ற அசட்டுத்தனமாய் நினைத்தாள் ரத்னா. மேலும்... கணவன், குழந்தை என்று சங்கிலியால் தன்னைப் பிணைத்துக் கொள்ள விரும்பவில்லை அவள்...

அதனால் அவனது ஆசை நிராசையாகிவிட்டது. அன்பை அள்ளிக் கொடுத்த மனைவிக்கு குழந்தை வேண்டி இருக்கவில்லை... அன்பைக் கிள்ளித் தரவும் மனமின்றி ஒதுக்கிவிட்ட மனைவிக்கு குழந்தை ஆசை... எங்கே போய் முட்டிக் கொள்வது...

"பிடியுங்கோ... இதை உங்க மனைவிக்குக் கொடுங்கோ" அர்ச்சகர் பூச்சரத்தை எடுத்து நீட்ட... அதை வாங்கி பானுமதியிடம் கொடுத்தான்.

அதை வாங்கிக் கூந்தலில் முடித்துக் கொண்ட பானுமதி யின் முகத்தில் பூரிப்பு!

'நீங்கள் மறுக்க நினைத்தாலும் நான் உங்களுக்கு மனைவி தான்... ஊரார் முன்னே அதை உங்களால் மறுக்க முடியுமா...' என்ற பெருமை அவள் கண்களில் சவால் விட்டது.

அப்போதுதான் அவளைச் சரியாகப் பார்த்தான். குங்கும வர்ணத்தில் பட்டுப்புடவையும் அதில் கருநீல நிறத்தில் சரிகைக் கரை அமைந்த பார்டருடன்... அதே வண்ணத்தில் சோளியும் அவளுக்கு எடுப்பாய் இருந்தது.

சீகைக்காய் போட்டு குளித்தால் கரும்பட்டாய் மினு மினுத்த கூந்தல் முகத்தின் பொலிவை இன்னும் கூட்டியது.

விற்களாய் வளைந்திருந்த இரு புருவங்களின் நடுவே ஒட்டப் பெற்றிருந்த வட்டப் பொட்டு வசீகரத்தைத் தந்தது... அந்த திராட்சைக் கண்களும்... சின்னநாசியும்... அடடா... அழகாகத்தான் இருக்கிறாள்.

ஆனால் என்ன பிரயோசனம்... கண்ணில்லாதவன் முன்னே வைத்த பொற்சித்திரம் மாதிரி... பசியை மறந்தவன் முன் படைத்த விருந்து மாதிரி... கல்லாதவன் முன்னே விரித்து வைத்த காவியம் போலவும்...

இவளது வனப்பெல்லாம் வீண் ஆனதுதான் மிச்சம்... அன்று முழுவதும் ஏதோ இனம் தெரியாத வேதனை அவனுள் குடைந்தது... அதனால் உறக்கமும் வரமறுத்தது.

அவன் மட்டுமா...

பானுமதியும் தான்... உறக்கமில்லாமல் தவித்தாள். காரணம் வேறு...

கணவன் அணைத்ததை நினைத்து உடம்பில் வெம்மை பரவ... அடுத்து அவன் சொன்ன வார்த்தைகள் அவளை



பனிக்கட்டியாய் குளிர வைக்க... இருதலைக் கொள்ளியாய் தவித்தாள். எப்படித் தூக்கம் வரும்...



## 7

சௌந்திரம் நொந்து போயிருந்தாள். மகன் மறு படியும் திருமணம் செய்து கொண்டதால் ஆனந்தமடைந்த தாயுள்ளம்... அவன் தன் மனைவியுடன் புது வாழ்க்கைத் தொடங்காமல் இன்னும் விட்டேற்றியாய் இருப்பதைக் கண்டு துயர் அடைந்தாள். பானுமதியைப் பார்க்கும் போது துக்கம் நெஞ்சை அடைத்தது.

இந்தக் குழந்தை அநியாயமாய் தன்னோட வாழ்க்கையைக் கெடுத்துக் கொண்டுவிட்டதே...

வேறு யாரையாவது மணந்திருக்கக் கூடாதா... அவனுடன் சந்தோஷமாக வாழ்ந்திருப்பாள்... ஏன்... இத்தனை நேரம் ஒரு குழந்தையைத் தன் வயிற்றில் சுமந்திருப்பாள்.. தன் மகனுக்கு வாழ்க்கைப்பட்டு என்ன சுகம் கண்டாள் பாவம்...

பானுமதி மீது இருந்த பரிதாப உணர்ச்சி மகன் மீது கோபமாய் திரும்பியது.

படித்த முட்டாள்...

இலவு காத்த கிளியைப்போல இல்லாத ஒன்றை எண்ணி ஏங்கி காத்திருக்கும் இவனை என்ன செய்வது... ரத்னா வரப்போவதில்லை என்று பட்டவர்த்தனமாய் தெரிந்தும் அவளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறான்... கண் முன்னே வண்ண பொம்மையாய் அழகான மனைவி இருந்தும்... கண்

காணாமல் போய்விட்டவளை நினைத்து மறுகும் இவ னுக்கு எப்படி புத்திமதி சொல்வது...

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தாள் சௌந்திரம். கொஞ்ச நாட்கள் இவர்களை தனியே விட்டுச் சென்றால் தனிமை இவர்களிடையே இருக்கும் விரிசலை பூசி... மெழுகி... சரிப் பண்ணிவிடும் இல்லையா...

ஆம்... அதுதான் சரி... கொஞ்சம் விலகி இருந்து பார்க்கலாம்... ஏதாவது அதிசயம் நடக்கிறதா என்று... ஆக... ஒரு தீர்மானத்துடன் புறப்பட்டு விட்டாள்... தன் உறவினர் வீட்டில் ஒரு பத்து நாட்கள் இருந்து விட்டு வர எண்ணம்.

அவர்களும் அவளை இரு கரங்களை நீட்டி வரவேற்க காத்திருந்தனர். வராத சௌந்திரம் இப்போது வர இருந்தது பரம சந்தோஷம்.

சொந்தத்துடன் உறவாடிவிட்டு வருவது தனக்கும் ஒரு மாற்றமாக இருக்குமே என்று நினைத்தாள் சௌந்திரம்.

பானுமதிக்குத்தான் வருத்தமாக இருந்தது. அத்தையை எப்படி பிரிந்திருப்பது... அந்த வீட்டில் அவளுக்கு இருக்கும் ஒரே துணை... ஒரே உறவு அத்தைதான். அவரும் போய் விட்டால்... யாரிடம் பேசுவது...

கணவனோ... சொல்ல வேண்டாம்... தன்னைச் சுற்றியும் கோட்டைச் சுவர் எழுப்பிக் கொண்டு... தன் உலகமே தன் என்று இருக்கிறார்...

காரில் வந்தபோது பேசினதுதான்... அப்புறம் வாய்க்கு பெரிய பூட்டு போட்டுக் கொண்டு 'உம்'மென்றாகிவிட்டார் கோவிலில் ஏதோ சொல்லி அச்சுறுத்தினார்... அது எதற்கா என்றும் தெரியவில்லை.

மனைவி என்று ஒரு உயிர் வீட்டில் இருப்பதாகக் காட்டி கொள்ளாமல் 'கம்'மென்று கிடப்பவரிடம் என்ன எதிர்பார்ப்பது



வேண்டாம்... அவர் என்னை மனைவியாய் நினைக்க வேண்டாம்... ஒரு தோழியாய் நினைக்கலாம் இல்லையா...

ஒருவேளை... ஒரு ஆணுக்கும் பெண்ணிற்கும் இடையே நட்பு கிடையாது என்பது அவரது எண்ணமா... ப்ச்சு... அவரைச் சொல்லியும் குற்றமில்லை... அவர் விரும்பித் தாலிக்கட்டவில்லையே... அவளாகப் போய் காலில் விழுந்து கெஞ்சியல்லவா மனைவியானது. முதல் மனைவிக்காகக் காத்திருக்கிறேன் என்றாரே... அதையும் மீறி தானே கேட்டுக் கொண்டேன். ரத்னா வந்தால்... நான் தடையாய் இருக்கமாட் டேன் என்று வாக்குத் தந்த பின்பு தானே தாலி கழுத்தில் ஏறியது.

பள்ளம் என்று தெரிந்தும் அதனுள் விழுந்து விட்டு... அய்யோ... இந்தப் பள்ளம் மேடாகாதா என்று ஏங்குவது பேதமை.

பள்ளம் மேடாக வழியில்லை... வாய்ப்பும் இல்லை... ஏதேதோ நினைத்து மனம் உழன்றது தான் மிச்சம்.

சௌந்திரம் புறப்பட்டபோது அவளுக்கு கண்ணீருடன் விடைகொடுத்து அனுப்பினாள் பானு. சௌந்திரத்திற்கும் கஷ்டமாகத்தான் இருந்தது. பானுமதி அழுவதைக் காண சகிக்கவில்லைதான்... என்ன செய்ய... சில நேரங்களில் கசப்பு மருந்தும் அவசியம்தான்...

இனிப்பை விடக் கசப்புதான் உடம்புக்கு நல்லது. அவளுக்கு மட்டும் தன் அன்பு மருமகளைப் பிரிந்திருக்க ஆசையா என்ன...

தான் இல்லாவிட்டால்... மனைவியிடம் 'தண்ணீர்...' 'சாப்பாடு...' என்று அழைத்துப் பேசித்தானே ஆகணும். திரும்பி வரும்போது என் மருமகள் முகத்தில் மலர்ச்சியைப் பார்க்க வேண்டும் என்று தெய்வத்திடம் வேண்டிக் கொண்டு புறப்பட்டாள் அவள்.

தாய் புறப்பட்டது மகனுக்கும் பிடிக்கவில்லை. இப்போது எதுக்கு இந்த பயணம்... ஏதோ சொந்தக்காரர் ஒருவருக்கு உடம்பு சரியில்லை... போய் பார்த்து விட்டு வருகிறேன் என்று புறப்பட்டு விட்டாரே... இத்தனை நாள் இல்லாத உறவும் ஒட்டுதலும் தன் தாய்க்கு திடீர் என்று வந்த காரணம் என்ன... அவனுக்குப் புரியவில்லை.

முதல் நாள்... பானுமதியே அவனது தேவையை அறிந்து.. அவன் கேட்கும் முன்னர் எடுத்து வைத்தாள். தினமும் மௌன நாடகம் அப்படியே தொடர்ந்தது. இரவு நேரம் வெளிவேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு.. நிதானமாய் முடித்துவிட்டு... தாமதமாய் திரும்பினான்.

அவன் குளிப்பதற்கு நீர் விளாவி வைத்து... அவனது உடைகளை எடுத்து வைத்து... சாப்பிட வருவதற்குள் உணவு பதார்த்தங்களை தயாராய் வைத்து... எல்லாமே சொல்லு முன் செய்து விடுவதால் பேச்சுக்கு இடமே இல்லை...

அவனும் எதுவும் கேட்பதில்லை. அலுத்துச் சலித்து போய் வந்ததும் மாடிக்குச் சென்று படுத்து விடுவான். இப்படியே காலம் போய் விடுமா... தன் எதிர்காலம் என்ன... அவர் பேசாமடந்தை என்றாரே... அப்படியே ஆகிவிடுவேன் போலிருக்கிறது... பேசுவதற்கு ஆள் இல்லாமல் ஊமையாக இருந்துவிட வேண்டியதுதான்.

அத்தை இருக்கும் வரை பரவாயில்லை... அவர் காலத்திற்கு பின்..எங்கு போவேன்... எதிர்காலம் பூதாகாரமாய் நின்று பயமுறுத்தியது... எதற்கும் பதில் தெரியாமல் அவளால் அழத்தான் முடிந்தது...

சௌந்திரம் புறப்பட்டுப் போய் ஆறு நாட்கள் சென்றிருக்கும்.

பெரும் மழை ஊரையே உலுக்கிப் போட்டது. பெரும் காற்றில் மரங்கள் பேயாட்டம் போட்டன. ஊழி மழையாய் பெய்ததில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.



நல்லவேளையாய் கரும்பு அறுவடை முடிந்ததால் நஷ்டம் வரவில்லை.

ஆனால் வேலை செய்யும் ஆட்களின் வீட்டுக் கூரைகள் விழுந்து... சில வீடுகளின் சுவர்கள் இடிந்து... ஓடுகள் சரிந்து... மக்கள் மழையில் தவித்தனர்.

உயிர் சேதம் இல்லை என்றாலும்... ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் நாற்பது பேருக்கு நல்லகாயம்...

ராஜசேகர் மழை... புயல் என்று பார்க்காமல் தன்னிடம் உழைக்கும் ஊர் மக்களுக்காக ஓடிச் சென்று சேவை செய்தான்.

பள்ளிக் கூடத்தையும், திரை அரங்கத்தையும் திறக்க வைத்து வீடு இழந்து தவிப்பவர்களை அங்கு தங்க வைத்தான்... அவர்களுக்கு வேண்டிய உணவு வசதிகளையும்... உடுப்பு... படுக்கை வசதிகளையும் செய்து தந்தான்.

பானுமதியின் தந்தையும்... மற்றும் உடன்பிறந்தவர்களும் இன்னும் சிலரும் அவனுக்கு உதவியாக பணியாற்றினார்கள்.

தொழிற்சாலையின் வேனில் காயம் பட்டவர்களை ஏற்றிக் கொண்டு அவர்களை மருத்துவமனையில் சேர்த்துவிட்டு... சிறு காயம் பட்டவர்களுக்கு முதல் உதவிக்குப் பின் வீட்டில் சேர்த்துவிட்டு... அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுத்துவிட்டு... வீடு வந்தபோது நடுநிசியைத் தாண்டிவிட்டது.

மறுநாள் விடிந்த பின்பும் ராஜசேகர் கீழே வரவில்லை... பாவம்... அலுப்பில் உறங்குகிறார். நன்றாய் தூங்கினால் களைப்புத் தீர்ந்துபோகும் என்று நினைத்தாள்.

ஆனால் எட்டுமணியாகியும் கணவன் வராததால் அவன் அறைக்குள் எட்டிப் பார்த்தாள்.

அவனிடமிருந்து சின்னதாய் முனகல் சத்தம் கேட் அருகே சென்றாள்.

முகம் 'செவசெவ' என்று கனன்று கொண்டு இருந்த பதறியவளாய் நெற்றியைத் தொட்டுப்பார்த்தாள். நெரு பாய் சுட்டது...

காய்ச்சல்!

மழையில் நனைந்ததாலோ... அதிகமாய் ஓடி அலை தாலோ இருக்க வேண்டும்.

உடனே டாக்டருக்கு போன் செய்து வரவழைத்தா குடும்ப டாக்டரும் வந்து பார்த்துவிட்டு, ''பயப்பட ஏது இல்லை... மழையில் நனைந்ததால் வந்த காய்ச்சல் உடம்பை அடித்துப் போட்ட மாதிரி இருக்கும்... இரண் மூன்றுநாட்களில் காய்ச்சல் இறங்கி விடும்'' என்று கூ மருந்து மாத்திரைகளையும் எழுதித் தந்தார்.

''இந்த மழை அப்படி இருக்கும்மா... மரங்களே இ சாய்கிறப்போ... மனுசன் எம்மாத்திரம்... ஏதோ நம் ராஜசேகர் பலசாலி என்பதால் காய்ச்சலோடு போன இல்லாவிட்டால் ஆஸ்பத்திரியில் 'அட்மிட்' பண்ற மாதி இருந்திருக்கும்...கவலைப்படுகிறமாதிரி எதுவும் இல்லேம்மா... என்று சொல்லிவிட்டுச் சென்றார்.

இந்த இக்கட்டான நிலையில் அத்தை இல்லாமல் போன வருத்தமாக இருந்தது. அவர் இருந்திருந்தால் மனசுக்கு தெம்பாக இருந்திருக்கும்... பார்க்கலாம்... டாக்டர் இரண் நாளில் காய்ச்சல் இறங்கிவிடும் என்று சொல்லியிருக்கிற அப்படி இறங்காவிட்டால் அத்தைக்குத் தந்தி கொடு வரவழைக்க வேண்டியதுதான்... பானுவிற்கு அத் வந்துவிட்டால் போதும் என்றிருந்தது.

டாக்டர் எழுதித் தந்திருந்த மருந்து அவனுக்கு புகட் வதில்தான் முடியாமல் சிரமப்பட்டாள்.



அரைகுறை நினைவில் கிடக்கும் அவனைத் தாங்கிப் பிடித்து எழுப்புவது அவளுக்கு பிரம்மப் பிரயத்தனமாக இருந்தது... அவளது மென்கரங்கள் வலித்தன.

அவனருகே பசி, தாகம் எதுவும் அறியாமல் அமர்ந்திருக்கும் அவளிடம் சமையல்காரர் வந்தார்... ஒரு தட்டில் ரசம் சாதத்தையும் வெண்டைப் பொரியலும் வைத்து அவளிடம் தந்தார்...

''அம்மா... பெரியம்மா உங்களை சரியாகப் பார்த்துக் கொள்ளும்படி என்னிடம் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார். இப்படி எதுவும் சாப்பிடாமல் இருந்தால் உடம்புக்கு என்ன ஆகும்மா... இதையாவது சாப்பிடுங்க...'' என்றார் அவர். அவருடைய பரிவான பேச்சுக்குக் கட்டுப்பட்டு அதை உண்டாள்... ஏதோ மரத்தூளை சாப்பிட்டது போல ருசி அறியாமல் மிழுங்கி வைத்தாள்.

நாக்கு மரத்துப்போனதுபோல... எதுவும் பிடிக்காமல் போனது. மனம் சரியில்லையென்றால் எதுவும் சுவைக்காதுதான். மதியத்தில் குறைந்ததுபோல தோன்றிய ஜுரம்... மறுபடியும் விஷம் போல ஏறியது...

இரவுவேளை... உடம்பு அனலாய் கொதித்தது... ஜுர வேகத்தில் ஏதேதோ பிதற்றினான் ராஜசேகர். ''அம்மா...'' என்றான். தன் தந்தையிடம் பேசுவதுபோல... ஏதேதோ பேசினான்... என்னவென்று புரிந்துகொள்ள முடியாதவாறு தொடர்பு இல்லாத வார்த்தைகள்... ''அப்பா... கவலைப் படாதீர்கள்...'' ''அடிப்பலமா...'' ''பாவம்... ஜனங்கள்... மழை அதிகம்...'' பானுமதி பயந்து போனாள்... இப்போது என்ன செய்வது...

அப்பாவைக் கூப்பிடலாமா... இந்த நேரத்தில் உடனே வாங்கன்னு போன் பண்ணினால் என்னவோ ஏதோ என்று பயந்துபோக மாட்டாரா... வேண்டாம்... இரவு கழி

யட்டும்... நாளைக்கே அத்தைக்குத் தந்தியடித்து உடனே புறப்பட்டு வரும்படி சொல்லனும்...

இரவு பதினொரு மணியாகும்போது காய்ச்சல் அதிகமாகி பிதற்றலும் அதிகரித்தது.

அவனருகில் அமர்ந்து நெற்றியில் ஈரத்துணியைப் போட்டாள்... காய்ச்சல் குறையட்டுமே என்றுதான். தூக்கம் கண்களை சுழற்றிக் கொண்டு வந்தது... வயிற்றுக்குச் சரியா சாப்பிடாமலும்... சரியான தூக்கம் இல்லாததாலும் அலுத்து போயிருந்தாள் அவள். தூக்கத்தை விரட்ட முகத்தில் 'ஜில்'லென்று நீரை அடித்துக் கொண்டு வந்து அமர்ந்தாள்.

மருந்தின் வீரியத்தில் கொஞ்ச நேரம் அமைதியா தூங்கியவன்... மறுபடியும் ஏதோ முனகலுடன் கண்களை திறந்தான்...

கண்கள் இரண்டும் சிவந்து இரத்தக் கோளங்களா இருந்தன... பயந்து போனாள் பானு...

அவளையேப் பார்த்த ராஜசேகர் "யாரு... யார்நீ... ரத்ன தானே... ரத்னா... வந்துவிட்டாயா..." என்று இழுக்க...

அதை எதிர்பார்க்காத பானுமதி நிலைகுலைந்து அவ மீது விழுந்தாள்.

சுதாரித்துக் கொண்டு எழ முயற்சித்தபோது அவன கரங்கள் இரண்டும் நெருப்பு வளையங்களாய் அவள வளைத்துக் கொண்டன.

ஒருகணம் திகைத்தவள்... அவனிடமிருந்து விடுப திமிறினாள்... ஆனால் அது முடியவில்லை.

ஏற்கனவே உரமேறிய வலிமையான கைகள்... சுரத்தி வேகத்தில் இன்னும் இரும்பாய் மாறிப் போயிருந்தன. ஒ சுற்றில் அவள் கீழே விழுந்தாள்... அவள் மேல் படர்ந்தவ "ரத்னா... என்னோடு... இருக்கத்தானே வந்திருக்கிறா



இனி... என்னை விட்டுப் போகமாட்டாயே..." என்று கெஞ்சும் குரலில் வினவ அவனது குரலில் தெரிந்த பரிதவிப்பும்... முகத்தில் இருந்த ஆசையையும்... பிரிவின் தாபத்தையும் கண்டு செயலற்று கிடந்தாள்.

அவளை ரத்னா என்றே எண்ணிவிட்டான்! இப்போது ரத்னாவுடன் இருப்பதாக ஞாபகம் அவனுக்கு... இதுநாள் வரையில் மனதில் இருந்தவள்... ஜுர வேகத்தில் கண்ணெதிரே வந்ததுபோல ஒரு பிரமை... எப்படி... அப்போதுதான் உணர்ந்தாள்... கன்னங்களில் ஈரம்! அது கணவன் முத்தமிட்டதால் என்று தெரிய வந்தபோது அதிர்ச்சி...

ராஜசேகர் அவளது முகத்தை இருகரங்களால் தாங்கி நெற்றி... கண்கள்... இதழ்கள் என்று முத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

'ரத்னா... என் ரத்னா...!' என்று புலம்பல் வேறு... அவளால் அதைத் தாங்க முடியவில்லை... அவன் உதடுகள் பட்ட இடங்களில் அமிலம் பட்டது போல எரிந்தது.

'நான் பானு... உங்க ரத்னா இல்லை' என்று கத்தவேண்டும் போல் தோன்றினாலும்... குரல் எழும்ப மறுத்தது... முகத்தைத் திருப்பிக் கொண்டு "என்னை விடுங்கள்..." என்று கூறியது அவளுக்கே கேட்கவில்லை... ஏதோ பேய் புகுந்து கொண்டதுபோல வெறித்தனத்துடன் இருக்கும் அவனுக்கு எப்படி கேட்கும்... அப்படியே காதில் விழுந்தாலும் அதைப் பொருட்படுத்தும் நிலையில் அவன் இல்லையே...

மதம் பிடித்த ஆனையின் நிலையில் அவன் இருந்தான். நிச்சயம் தன் உணர்வு திரும்பியதும் இதற்காக வெட்கித் தலைகுனிவான்...

இருகைகளால் அவனை விலக்கப் பார்த்தாள்... முடிந்த வரை தன் குரலை உயர்த்தி... "வேண்டாம்... என்னை

விடுங்கள்... இதுக்காக நீங்க வருத்தப்படுவீங்க...'' என்று சொல்லியும் அவனது வேகம் தணியவில்லை.

“இத்தனை நாளாய் காத்திருந்தேனே... ரத்னா... எனக்கு நீ தான் வேண்டும்... நீ மட்டும்தான் ரத்னா...''

அய்யோ... எப்படி தப்புவேன்... நான் ரத்னா இல்லை என்று புரிந்து கொள்ளாமல் என்னென்னவோ பேசுகிறாரே என்று துடித்த அதேநேரம் அவனது பிடி இன்னும் இறுகியது.

அந்த அசுர அணைப்பில் திணறி... நினைவு தடுமாறி போய் மயக்க நிலைக்குச் சென்றாள் பானுமதி... மூச்சு முட்டியது... கண்கள் இருண்டன... அப்புறம், என்ன நடந்தது என்று தெரியாமல்... நினைவு மரத்துப் போனது... உடல் மரக்கட்டையாய் விறைத்துப்போனது.

உயிர் போகாமலே... சவமாகிப் போனாள் அவள்.



## 8

மெல்ல... காலடியோசை எழாமல்... நடந்து அறைக்கு வந்தாள் பானுமதி.

ராஜசேகர் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். சன்னல் திரைச்சீலைகளை விலக்கிவிட்டு... மருந்து மாத்திரைகளை ஒழுங்கிப்படுத்திவிட்டு கணவன் அருகே வந்தாள்.

நெற்றியில் பூத்திருந்த வியர்வை முத்துக்களைத் துடைத்து விட்டு... விலகி இருந்த போர்வையை இழுத்துப் போர்த்தினாள்.

அவனுக்கு காய்ச்சல் விட்டிருந்தது...

நிம்மதியாய்... சமர்த்து பிள்ளையைப் போல் உறங்கும் கணவனை வைத்த விழிகளை திருப்பாமல் பார்த்தாள்



இவரா அப்படி நடந்து கொண்டார்... வெறிப்பிடித்த மிருகமாய் நடந்து கொண்டது இவர்தானா... என்னை ரத்னா என்று நினைத்து... கடவுளே... எதுவுமே தெரியாமல் படுத்திருக்கும் இவர்மீது எப்படி வெறுப்புக் கொள்ள முடியும்... அது வரவில்லையே...

ஆனால்... நடந்ததை நினைக்கும் போது இதயத்தைப் புரட்டிப் போட்டதுபோல வலிக்கின்றதே...

யாரிடம் சொல்லி கதறமுடியும்... உள்ளேயே புதைத்துக் கொண்டு... ஊமையாய்... உள்ளுக்குள்ளே அழவேண்டியது தான்...

வெளியே சொல்லிப் புலம்பக் கூடிய விஷயம் இல்லையே... கணவன் அணைக்கமாட்டானா என்று ஏங்கியது நிஜம்... இப்போது அவன் அணைத்த சம்பவத்தை நினைத்தால்... அய்யோ... அதை நினைக்கவும் பிடிக்கவில்லை... கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கன்னங்களில் வழுக்கி இறங்கியது...

அத்தை இருந்திருந்தால் அவரிடம் இவரை கவனித்துக் கொள்ளச் சொல்லி ஒதுங்கி இருந்திருக்கலாம்... அவர் எப்போது வருகிறாரோ...

இனியும் இவர் முகத்தை எப்படிப் பார்க்க முடியும்... பார்க்கும் போதெல்லாம் ரத்னா என்று இறுக்கி அணைத்தது தானே ஞாபகம் வரும்... உடம்பெல்லாம் கூசிப் போனது...

அந்த இரவுக்குப் பின் மூன்று நாட்கள் ஓடிவிட்டன. காய்ச்சல் இறங்கி இருந்தாலும் மிகவும் சோர்ந்து இருந்தான் ராஜசேகர்.

அவனைப் படுக்கையிலிருந்து எழவும் விடாமல் அவனை ஒரு குழந்தையைப் போல கவனித்துக் கொண்டாள் பானுமதி. ராஜசேகருக்கு நினைவு திரும்பியது... ஆனால் நடந்தது எதுவுமே நினைவில் இல்லை...

கனவில் கண்டதை விழித்தபிறகு ஞாபகம் இல்லாம போவது போல்... அன்று நடந்ததை மறந்தே போனான். 'செலக்டிவ் அம்னீஷியா மாதிரி' அன்று இரவு காய்ச்சலி வேகத்தில் மிருகமாய் மாறிப்போனது சுத்தமாய் நினைவி இல்லை.

ஆனால் அவளால் தான் தன் நினைவில் இருந்து அழி முடியாமல் தவித்தாள்...

கணவன் தன்மீது அன்பைப் பொழிய வேண்டும் என் ஆசைப்பட்டது உண்மைதான். அவனது ஸ்பரிஸம் தன் பட்டாய் வருடி... தென்றலாய் தீண்டி... தன்னைப் செண்டாய் நினைத்து மென்மையாய் காதலை வெ படுத்த வேண்டும் என்ற ஏக்கமும் இருந்தது...

ஆனால் நடந்தது என்னவோ நேர் எதிர்... முரட் தனமாய் இழுத்து அணைத்து... சுனாமியாய் பாய்ந் அவளை ஆட்கொண்டுவிட்டதுதான் வேதனை... அ பூமாலையாய்தான் இருந்தாள்... அவன்தான் குரங்கா போனான்... பூக்கள் உதிர்ந்து... வெறும் நார்மாலையா போனது போல... அவளும் நொந்து நூலாகிப் போனா

அந்த நிமிஷமே செத்துவிட்டால் தேவலை போ துடித்தாள். இதற்காகவா இத்தனை நாள் ஏங்கித் த தேன்... இதைவிட கணவனின் பாராமுக நிலையே பர யில்லை எனத் தோன்றியது.

இன்னொருத்தியின் நிழலில் இருந்து கணவனின் அணைப் ரசிக்க எந்தப் பெண்ணும் விரும்பமாட்டாள்... பானு மட்டும் என்ன விதிவிலக்கா... அவன் உறங்கியபி மடங்கி... முழங்கால்களில் தலையைப் புதைத்து வி யழுதாள்... அவளால் முடிந்தது அதுமட்டும்தான்.

அதற்காக அவன் மீது கோபமோ... இல்லை வெறுப் வரவில்லை. சன்னி கண்டவன் போல சுயநினைவி நடந்து கொண்டதற்கு அவன் பொறுப்பில்லையே..



அப்படியே சுயநினைவில் இருந்திருந்தால் அவளை ஏறிட்டுப் பார்த்திருப்பாரா... இல்லை அருகில்தான் சேர்த் திருப்பாரா... முகத்தைத் திருப்பிக் கொண்டிருப்பாரே... எப்படி அவரைக் குற்றம் சொல்லமுடியும்... பெண் மனம் அல்லவா... பெருந்தன்மையில் நினைத்தது.

காய்ச்சல் நன்றாக இறங்கி... நல்ல நினைவுக்கு வந்ததும் அவளது பணிவிடைகளை ஏற்கவும் தயங்கினான்.

ஆனால் பானுமதி அந்தத் தயக்கத்தைக் கண்டுகொள் ளாமல் இது என் கடமை என்று பார்த்துப்... பார்த்துக் கவனித்தாள். உடம்புக்கு 'ஸ்பான்ச்' குளியல் செய்து... உடைமாற்றிவிட்டு படுக்கைவிரிப்பை மாற்றி... அவனுக்கு கஞ்சியையும் மாத்திரையும் நேரம் தவறாமல் கொடுத்து... இயற்கை அழைப்பிற்காக அவனை அழைத்து சென்று... பின் அழைத்து வந்து... இரவில் விழித்திருந்து ஆர்லிக்ஸ் தந்து... அத்தனையும் கருத்துடன் செய்தாள்... ஒரு நர்ஸைப் போல... அதில் கடமை உணர்வு மட்டுமே இருந்தது. அவளது கவனிப்பில் ராஜசேகர் சீக்கிரமே குணமானான். பழைய பலமும் தெம்பும் திரும்பியது.

குடும்ப டாக்டரும் கடைசியாய் ஒரு தடவை பரிசோதித்து விட்டு சந்தோஷப்பட்டார்.

"வெரிகுட்... ராஜசேகர்... உங்க உடம்பு வலிமையாக இருந்ததால் சீக்கிரமே குணமாகிவிட்டது. அதுமட்டுமல்ல... உங்க மனைவி உங்களுடன் இருந்து கவனித்துக் கொண்ட தாலும்தான். ராத்திரியெல்லாம் அவங்களுக்கு சரியான தூக்கமில்லை. முதல்ல நீங்க உங்க மனைவிக்கு நன்றி சொல்லணும்..." என்று பானுமதியைப் புகழ்ந்து பேசிவிட்டு சென்றார் அவர்.

"ரொம்ப நன்றி... பானுமதி..." என்றான் மனைவியிடம்.

"எதற்கு..." என்று வினவினாள் பானு.

"என்னை நன்றாகக் கவனித்துக் கொண்டாயாம். டாக்
சொன்னார்."

"கணவனைக் கவனித்துக் கொள்வது மனைவியே
கடமையாச்சே... அதைத்தான் செய்தேன்... அதுக்கு எது
நன்றியெல்லாம்... என் நிலையில் எந்தப் பெண் இ
திருந்தாலும் அதைத்தான் செய்வாள்..." என்றவள்.. அ
குடித்து விட்டு வைத்திருந்த டம்ளரைக் கழுவ எடுத்
சென்றாள்.

யோசனையோடு பானுவைப் பார்த்தான் அவன். எ
பெண்ணுமா...

ரத்னா செய்திருப்பாளா... ஊகூம்... மாட்டாள்...
அவளது நினைப்பு இப்போது எதற்கு... தலையை உத
கொண்டான்... பானுமதி தனக்குச் செய்த சேவையில்
மனம் சற்று சலனப்பட்டிருப்பது போல தோன்றியது.

ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டான். வே
டாம் என்று உதற நினைத்தாலும்... கண்களுக்குள் ரத்
சிரித்தாள்... 'என்னை மறக்கமாட்டாய் தானே...' 'ம
டேன்... நிச்சயமாய் மாட்டேன்... ரத்னா...' உதடு
முணுத்தன.

மகனுக்கு உடம்பு சரியில்லை என்று அறிந்ததுமே பத
போய் ஓடிவந்தாள் சௌந்திரம்.

தெம்பாய் நடமாடும் பிள்ளையைப் பார்த்ததும்
ஆறுதல் அடைந்தாள்.

ஊட்டச்சத்தான உணவும்... காய்... கனிகளும்... பானு
டாக்டர் எழுதித்தந்திருந்த புரோட்டின் சத்து பானமு
கூடவே பானுவின் சரியான கவனிப்பும்... ஆக எல்லாம்
சேர்ந்து பழைய ராஜசேகராக்கியது.

"என்னப்பா ஆச்சு... உனக்கு உடம்பு சரியில்லை
தெரிந்ததும் அங்கே இருக்கப் பிடிக்காமல் வந்துவிட்டே



இப்பத் தேவலையாப்பா..." மகனைத் தடவிக் கொடுத்து
வினவினாள் தாய்.

"மழையில் நனைந்ததும்... எதுவும் சரியாக சாப்பிடாமல்
மணிக்கணக்கில் அலைந்ததும்தான் காரணம்... என்னைக்
காய்ச்சலில் தள்ளிவிட்டது... கவலைப்படுகிற மாதிரி
எனக்கு எதுவும் இல்லைம்மா..."

பானுமதி நீட்டிய சாத்துக்குடி ரசத்தை வாங்கியவாறு
சொன்னான் மகன்.

"இந்த சமயம் பார்த்து நானில்லாமல் போனேனேப்பா...
ரொம்பக் கஷ்டப்பட்டுவிட்டாயா... ராஜா..." கண் கலங்கினாள்
பெற்றவள்.

"நீங்க இல்லாத குறையை பானுமதி ஈடுகட்டிவிட்டாள்
அம்மா... உங்களைப் போலவே கருத்தாய் என்னைக்
கவனித்துக் கொண்டாள்... அதனால்தான் நான் சீக்கிரம்
தேற முடிந்தது..."

தாயிடம் பேசினாலும்... கண்கள் பானுமதியைப் பார்த்தன.
ஆனால் பானுமதி அவன் பக்கம் திரும்பவும் இல்லை.
அவன் குடித்துவிட்டு நீட்டிய டம்ளரை வாங்கிக் கொண்டு
சென்றாள்.

முதலில் மருமகளைச் சரியாக கவனிக்கவில்லை சௌந்
திரம்... மகனின் உடல்நிலை பற்றிய கவலையில் வேறு
எதையும் பார்க்கும் மனநிலை இல்லை... அப்போதுதான்
மருமகளைப் பெருமையுடன் பார்த்தாள்...

ஆனால்... பானுவின் முகத்தில் ஏதோ வாட்டம் தெரிவது
கண்டு குழப்பம் அடைந்தாள்.

என்ன நடந்தது... ஏன் எதையோ பறிகொடுத்தவள்
போலத் தோன்றுகிறாள்.

என்னவோ நடந்திருக்கிறது... அதுமட்டும் நிச்சயம்... பானு இப்படி மௌனமாய் இருந்து பார்த்ததில்லை... அத்தை அத்தை என்று ஏதாவது சொல்வாளே... கணவனை பற்றிக் கூடப்பேசாமல் ஒதுங்குகிறாள் என்றால் என்னவோ இருக்கிறது... எப்படி அறிவது... விழித்தாள் பெரியவள்.

பானுமதியைக் கூர்ந்து கவனித்தாள்.

அவளிடம் அதிகமாக மாற்றம் தெரிந்தது. முன்னை போல வேலைகளில் சிரத்தை இல்லை... எங்கோ ஓர் ஓர போய் நிற்பதும்... விட்டத்தை வெறிப்பதும்... எதையோ நினைத்துத் தவிப்பதும் ஆகிய விசித்திர நிலையி இருந்தாள்.

எல்லா வேலைகளையும் முடித்தபின் அருகில் வந் பேசுவாளே... அதுவும் இப்போது இல்லை.

சுட்ட பதார்த்தத்தை மிழுங்கவும் முடியாமல் துப்பவு முடியாமல் அவதிப்படுவதுபோல இருந்தது அவளது நிலை

கணவனை அருகில் இருந்து கவனித்தாளாமே... பி இப்போது... அவன் தேறியதும் ஒதுங்கிச் செல்கிறா அவளுக்கு என்ன ஆயிற்று... எதை உள்ளுக்குள் வைத்து தவிக்கிறாள்... தெரியவில்லையே... சில சமயம் மோ தவம் செய்பவள் போல அசையாமல் சிலை மாதிரி அமர்ந் இருப்பாள்... இரண்டு, மூன்று முறை அழைத்தும் காதி விழாது... பிறகு திடுக்கிட்டு விழிப்பாள்.

மொத்தத்தில் ஏதோ பிச்சியின் நிலை... ஒருவேளை ராஜசேகர் அவளது மனம் புண்படும்படி பேசி வி டானோ... அதனால் இப்படி இறுகிக் கிடக்கிறாளோ இருக்காது... அவனைப் பார்த்தால் அப்படியும் தெரி வில்லை... இப்போது அவனிடமும் மாற்றம் தெரிகிற கல்லாய் இருந்தவன்... இப்போது கனிந்தது போல அல்ல



தென்படுகிறான்... அவளைப் புன்னகையோடு பார்த்தானே... ஒருவேளை அதுவெறும் பிரமையா... தெய்வமே... ஏன் சோதனை செய்கிறே... விலகி இருந்தால் இவர்களிடையே சுமுக உறவு மலரும் என்று நினைத்தேனே...

மாறாய்... நிலைமையில் ஏதோ விபரீதம்!

பாவம்... தாயில்லாப் பெண்... ஒருவேளை பெற்றவள் இருந்திருந்தால் ஓடிப்போய் சொல்லி அழுதிருப்பாளோ என்னவோ... இருக்கட்டும்... நான் அவளுக்குத் தாயாய் இருந்து அவளது வேதனை என்ன என்று அறிந்து... சமாதானப்படுத்த வேண்டும்... சௌந்திரம் ஒருமுடிவுக்கு வந்தாள்.

அன்று இரவு மகன் மாடியேறிச் சென்றதும்... தயங்கி நின்ற பானுவை அருகில் அழைத்தாள்.

"பானு இங்கே வாயேன்..."

அவள் வந்தாள்.

"ஏம்மா ஒருமாதிரியா இருக்கே... என் பிள்ளை ஏதாவது சொன்னானா..."

இல்லையென்று தலையசைத்தாள்.

"பின்... ஏன் என்னவோ போல இருக்கே..."

"இல்லையே அத்தை" தலையைக் கவிழ்த்துக் கொண்டு பேசும் அவளைப் பரிதாபத்துடன் பார்த்தாள்.

"ஊகூம்... இல்லைன்னு உன் வாய்தான் சொல்கிறது. நீ எதையோ மூடிமறைக்கிறாய் என்பதை உன்முகம் காட்டுகிறது... என்னம்மா விஷயம்... என்னிடம் சொல்லமாட்டாயா... நான் உன் அத்தையாய் கேட்கலைம்மா... உன் அம்மாவா நினைத்து என்னிடம் எதுவும் மறைக்காம சொல்லு... கண்ணம்மா..." கனிவான குரலில் சௌந்திரம் கேட்டாள்.

அவ்வளவுதான்... உடைந்து போனாள் பானு... தாயாகிப்போன அத்தையின் மடியில் முகம் புதைத்து விம்மியழுதாள். மனதில் இருக்கும் சுமையெல்லாம் கண்ணீர் வழிய கொட்டினாள்.

அழுது முடிக்கட்டும் என்று மௌனமாக இருந்தாள் சௌந்திரம்.

அழுகை கேவலாய் அடங்கியதும் "இப்போது சொல்லுமா... என்ன நடந்தது... உன் மனம் புண்படும்படி அவன் ஏதாவது செய்திருந்தால் நிச்சயம் அவனை நான் மன்னிக்கவே மாட்டேன்..." என்று உறுதியுடன் சொன்னாள்.

அதைக் கேட்டு 'விலுக்'கென்று நிமிர்ந்தாள் பானு.

"அப்படியெல்லாம் பேசாதீர்கள் அத்தை... இதில் அவரை குற்றம் சொல்ல முடியாது..."

"அதுசரிம்மா... அப்படி என்னதான் நடந்தது..." பொறுமையிழந்து கேட்டாள் தாய். எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள் பானுமதி. தன்னை ரத்னா என்று நினைத்து இழுத்தது... அணைத்தது... பிறகு வெறித்தனமாய் நடந்தது அனைத்தையும் சொல்லி முடித்தாள்.

சௌந்திரத்தின் முகம் கன்றி சிவந்தது...

"என்ன பிள்ளை இவன்... ரத்னாவாம்... ரத்னா... இன்னும் அந்த அடங்காப்பிடாரியை நினைத்து உருகி கொண்டிருக்கிறானே இந்த முட்டாள்... பேருதான் ரத்னா... குணத்தில் வெறும் கூழாங்கல் தான்... பாவம்... உன் மனம் எப்படித் துடித்திருக்கும்னு எனக்கு நல்லாப் புரியுதும்மா..." பானுவை அணைத்துக் கொண்டாள் சௌந்திரம்....

அதனால் தான் இந்தக் குழந்தை அதிர்ச்சியில் உறைந்து அப்பப்போ நிலைக்குத்தி நின்று விடுகிறாள் போல...

இதற்கு ஒரு முடிவு கட்டியே ஆகணும்... சௌந்திரம் தீர்மானித்துக் கொண்டாள். அடுத்த நாளில் அதை செயல்படுத்தினாள்.

ராஜசேகர் புறப்பட்டபோது அவனை நிறுத்தினாள் சௌந்திரம்.

"ராஜா... உன்கிட்டே பேசணும்..."

"என்னம்மா..."

"நம்ம கிராமத்துப் பண்ணையில் ஏதோ தகராறாம் கணக்கர் வந்து சொன்னார். நீபோய் ஒரு ஐந்து ஆறு நாள் தங்கி நிலைமையை சரிப்பண்ணிட்டு வரணும்... இங்கே நம்ம ஆலையைப் பத்தி கவலைப்படாதே. நம் மேனேஜர் சம்பந்திப் பார்த்துப்பார்..."

"என்ன தகராறாம்..."

"எல்லாம் அங்கே போய் விசாரித்துக் கொள். தகராறுன்னு சொன்னார். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். கிராமத்து வீட்டை சுத்தப்படுத்தி வைக்க சொல்லி இருக்கிறேன்... தேவையான சாமான்களையும் வாங்கிவைக்கச் சொல்லியிருக்கிறேன்... ஆ... ராஜா... இன்னொரு விஷயம்... உன்கூட பானுவையும் அழைத்துப்போ..."

"பானுமதி எதற்கும்மா...?"

"சொன்னது செய்யப்பா... ஏற்கனவே காய்ச்சலில் அடிப்பட்ட உடம்பு... கவனமா பார்த்துக்கணும்... வீட்டு சாப்பாடு அவசியம்... நேரம் தவறாமல் பார்த்து பரிமாற ஒருத்தர் வேணாமா... பானுவராமல் யார் உன்னோடு வருவார்களாம்... ஏதும் பேசாமல் சட்டுபுட்டுன்னு நீ புறப்படு..."

அவள் குரலில் தெரிந்த கண்டிப்பைக் கண்டு மறுப்பு சொல்லாமல் புறப்பட்டான் ராஜசேகர்.

பானுவுக்குத் தயக்கம்...

"அத்தை... நானுமா..." மிரட்சியுடன் கேட்டாள்.

"பானும்மா... நான் சொல்வதைச் செய்... முக்கியம ராஜாவோட நலம் ரொம்ப முக்கியம். நீதான் அவனோ இருந்து பார்த்துக்கணும்மா... நான் எது செய்தாலு நல்லதுக்குத்தான்னு நினைத்துக் கொள்..."

வேறு வழியில்லை... புறப்பட்டு விட்டாள்...

உள்மனதில் நடுக்கம்... 'கணவனுடன் தனியாகவா அதுவும் ஐந்து நாட்கள்...'

சௌந்திரம் அவளது தோளைத் தட்டிக் கொடுத்து தைரிய சொல்லி அனுப்பிவைத்தாள்.



# 9

செடிகளுக்கு நீர் ஊற்றிக் கொண்டிருந்தாள் பா அவளது கண்கள் கணவன் வரும் திசைப்பக்கம் தா கொண்டிருந்தன...

மணி ஒன்றாகிவிட்டது. இன்னும் காணோம்! ராஜசே சாப்பிடும் நேரம்... ஏன் தாமதம் என்று தெரியவில்லை.

கணக்குப்பிள்ளை வாங்கித் தந்து சென்ற நல்ல பிஞ் கத்தரிக்காயை எண்ணெய் வதக்கலாய் செய்துவிட்டு இளம் முருங்கைக் குழம்பும்... தக்காளி ரசத்தையும் சமைத் வைத்திருந்தாள்... அத்துடன் காரட்டைத் துருவி எலுமிச்ச சாறு சேர்த்து தாளித்து வைத்தாள்...

கிராமத்து வாழ்க்கை நன்றாகவே இருந்தது... அழகா வீடு...ஊரில் இருக்கும் மாளிகை வீட்டைப் பார்க்கும் போ



இது சின்னதுதான் என்றாலும்... கிராமத்தில் அது பெரிய வீடு...

சுற்றிலும் பசுமையான மரங்கள், பூச்செடிகள்... குரோட்டன்ஸ் செடிகள்...

கிராமத்து வீடு என்பதற்குரிய இலக்கணத்துடன்... நட்ட நடுவே அழகான முற்றம்... பெரிதான தூண்கள்... வெளித்திண்ணை... விசாலமான அறைகள்... காற்றோட்டமான கூடம்... சுத்தமான கிணற்றடி... ஒவ்வொரு இடமும் 'பளிச்'சென்றும், விஸ்தீரமாகவும் இருந்தது.

ஏதோ ஜென்ம ஜென்மமாய் இந்த வீட்டில் வாழ்ந்தது போல பிரமை! யாருடன்... ராஜசேகருடனா! அவளுக்கே வியப்பு...

கிராமத்திற்கு வருமுன் பயந்த நானா இப்படி நினைக்கிறேன்!

கணவருடன் தனியே இருக்க வேண்டுமே என்ற அச்சம் வயிற்றில் பிராண்ட... அத்தையின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு வந்தவளுக்கு அந்த சூழ்நிலை பிடித்துப் போய் விட்டது... அந்த இனிய இல்லம் இன்ப புரியாகத் தெரிந்தது. முக்கியமாய்... தனது அச்சம் நியாயமற்றது என்பதை உணர்ந்து கொண்டாள்...

அந்த ஊருக்கு வந்ததுமே வந்திருக்கும் பணியில் வெகு மும்முரமானான்...

இரவில் களைத்துப் போய் வருவான்... உண்டதும் சீக்கிரம் உறங்கிவிடுவான்... அவளிடம் பேசவும் நேரம் எங்கே...

அய்யோ... அவனுடன் தனிமையில் இருக்க வேண்டுமே என்று எண்ணித் தவித்ததை நினைக்கும் போது இப்போது சிரிப்புத்தான் வந்தது.

தனிமைதான்... இருவர் மட்டுமேதான்... ஆனால் நடந்தது வேறு... மௌனம் மொழியானது...

அவள் அக்கறையுடன் சமைத்து வைப்பதை ஆசையாய் ருசித்து சாப்பிடுவான்... அதை வார்த்தையில் சொல்லாமல் பொரியலையும்... குழம்பையும்... தாராளமாய் போட்டுக் கொள்வதன் மூலம் உணர்த்துவான்.

தானே சமைத்து அவனுக்குப் பரிமாற வேண்டும் என்ற ஏக்கம் இப்போது நிறைவேறியது என்றாலும் அன்று இருந்த மனநிலை இப்போது இல்லையே... பெருமூச்சு விட்டாள்.

கண்கள் வழி பாதை புறம் தாவின... ராஜசேகர் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். உடனே விரைந்து வீட்டுக்குள் சென்று விட்டாள். அவனுக்காக வழி மீது விழி வைத்து காத்துக் கொண்டிருப்பதாய் நினைத்து விடக்கூடாதே!

கைகால் கழுவிக் கொண்டு அவன் வந்தபோது தயாராய் இலை விரித்து... சொம்பில் நீரையும் எடுத்து வைத்திருந்தாள் பானு...

அவன் நன்றாய் பசித்திருக்கிறான் என்பது அவன் உண்ணும் விதத்தில் தெரிந்தது... ரசம் சாதம் சாப்பிடும் போது தான் நினைவுக்கு வந்தது போல ''நீ சாப்பிட்டாயா பானுமதி'' என்று கேட்டான்.

பரவாயில்லையே... கொஞ்சம் கரிசனமும் இருக்கிறது என்று மனசுக்குள் எண்ணினாலும்... ''நீங்கள் சாப்பிடுங்கள். நான் அப்புறம் சாப்பிடுகிறேன்'' என்றாள்...

அதற்கு மேல் அவன் வற்புறுத்தாமல் சாப்பிட்டு முடித்தான்.

அவளும் சாப்பிட்டு விட்டு பாத்திரங்களை ஒழித்து போட்டுவிட்டு... இடத்தை சுத்தம் செய்து விட்டு கூடத்திற்கு வந்தாள்....



தயக்கத்துடன் அவனிடம் வினவினாள்.

''மறுபடியும் நீங்க போக வேண்டுமா...''

''வேண்டியதில்லை... காசு பெறாத விஷயம்... அதுக்கு வந்த தகராறு... இரண்டு பக்கமும் கட்சி சேர்த்துக் கொண்டு பெரிய சண்டையாகிவிட்டது... இரண்டு பக்கமும் விசாரித்துவிட்டு அவர்களுக்குப் புத்தி சொன்னேன். பார்க்கப் போனால் இந்த சின்ன விஷயத்துக்கு நான் வரவேண்டிய அவசியமில்லை. கணக்குப் பிள்ளையே சமாளித்திருப்பார்... அம்மா எதற்கு என்னை அனுப்பினார்கள் என்று தெரியவில்லை... நாளைக்கே புறப்பட்டு விடலாம்... இங்கே உனக்கு பொழுதுபோகவில்லையா பானுமதி...''

''அப்படி ஒன்றும் இல்லை... இங்கே இருப்பது புது அனுபவமாய் தெரிகிறது... ஆனால்... அங்கே அத்தை தனியாய் அதான்...''

அதைக் கேட்டு அவன் சிரித்தான்.

''உன் அத்தையை எந்த பூச்சாண்டியும் எடுத்துக் கொண்டு செல்லமாட்டான்... அம்மாவிற்கு தனியா இருந்து பழக்கம் தான்... துணைக்கு வேலைக்காரர்களும் இருக்கிறார்கள். உனக்குத்தான் என்னோடு இருக்க பயம் என்று நினைக்கிறேன். உன்னைக் கடித்துத் தின்று விடுவேன் என்ற பயமா பானுமதி... என்றைக்காவது என் விரல் உன்மீது பட்டிருக்கிறதா... சொல்லு...''

'பளீர்' என்று அந்த இரவின் நினைவோட்டம்... அவளது மேனி நடுங்கியது. இதயம் மரத்துப்போனது போல கனத்தது.

அவரது விரலும் படவில்லையாம்... அன்றைக்கு நடந்தது நினைவில்லாமல் பேசுகிறார்... பாவம்... அவளது முகமாற்றத்தையும் மேனி நடுக்கத்தையும் கண்டு அவன் வேறுவிதமாய் எடுத்துக் கொண்டான். முதன் முதலாய் ஆண்மகனின்

கரம்பட்டால் அந்த உணர்வு எப்படி இருக்கும் என்று கற்பனையில் கண்டு உடல் சிலிர்த்து நடுங்குகிறாள் போலும்.

அன்றைக்கு அவர்கள் இருவரும் அத்தனைப் பேசியது அதிசயம் தான்...

ஆனால் அதுவே ஒரு நல்ல மாற்றத்தையும் தந்தது. இருவரிடையே இருந்த இறுக்கம் தளர்ந்து... ஒரு சுமுகநிலை வந்தது.

கணவனுக்கும் மனைவிக்கும் நடுவே விழுந்துகிடந்த மௌனத்திரை விலகிவிட்டது... இருவரும் சகஜமாய் பேசும் நிலைக்கு வந்துவிட்டனர்... எந்த தயக்கமோ... பயமோ இப்போது பானுமதிக்கு இல்லை...

கணவனை நல்ல நண்பனாய் பார்க்க ஆரம்பித்தாள்.

மறுநாள் புறப்படப்போகிறோம் என்று அதற்கு தயார் படுத்திக் கொண்டிருந்தபோதுதான் பிரச்சனை வேறு விதமாய் திரும்பியது...

சமாதானமாய் போய்விடுவது என்ற முடிவுக்கு வந்து விட்ட இரு கோஷ்டியினருக்கும் மறுபடியும் சிண்டு முடித்து விட்டு வேடிக்கைப் பார்த்தனர் வேண்டாதவர்கள். அன்று முழுக்க அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவே சரியாய் இருந்தது.

இரு குழுவினரையும் சமாதானமாய் போனால் உண்டு... இல்லையென்றால் பண்ணை வேலையிலிருந்து பணி நீக்கம் செய்ய வேண்டி வரும் என்று மிரட்டி அவர்களை அடக்க வேண்டியிருந்தது.

இரவு நேரத்தில் அலுத்து... சலித்து வந்தான் ராஜசேகர். அற்ப விஷயம்... இத்தனை தூரம் இழுத்துவிட்டதே என்று எரிச்சல் அவனுக்கு.

அதுமட்டுமல்ல... பானுமதியையும் காக்க வைத்துவிட்டோமே என்ற பதைப்பும்தான்... ஒரு ஆள் மூலம் தா...



வருவதற்கு நேரமாகலாம் என்று முன்கூட்டியே சொல்லி இருந்ததால் பானுமதியும் பதட்டமின்றி இருந்தாள்.

இருவரும் உணவு அருந்தியபின்பு முற்றத்திற்கு அருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

"இன்னும் எத்தனை நாள் இங்கு இருக்க வேண்டும்" என்று கேட்டாள் பானுமதி.

"ஏன்... போரடிக்கிறதா...?"

"இல்லை... ஒண்டியாக நேரத்தைக் கழிக்க கஷ்டமாக இருக்கிறது... பேச்சுத்துணைக்கு யாராவது இருந்தால் நன்றாக இருக்குமேன்னுதான்..."

சிறிது மௌனத்துக்குப்பின் சொன்னான்.

"நாளைக்கே புறப்படலாம்... என்ன..." அப்புறம் பேசுவதற்கு எந்த விஷயமும் இல்லை... அன்பால் பிணைந்தவர்கள் என்றால் வேறு விஷயம்... செல்லச் சீண்டல்களும்... பரிகாசமுமாய் காதல் பரிமாற்றம் இருக்கும்...

வரட்டு தம்பதியர் இடையே உல்லாசம் ஏது... உற்சாகமும் ஏது... ஊகூம்...

எழுந்து சென்றாள் பானு...

அவள் செல்வதையே பார்த்துக் கொண்டிருந்தான் அவன்.

அவளை அழைத்து அருகில் அமரச் சொல்லி மறுபடியும் பேசலாமா என்று தோன்றினாலும்... எதைப்பற்றிப் பேசுவது? அதுதான் தெரியவில்லை... தரையில் படுக்கையை விரித்து அவள் படுத்துக் கொள்வதை கவனித்தான்...

பாவம்... உடல் சோர்ந்திருக்கிறாள்... வேலை செய்த சோர்வு... அதைவிட ஒற்றையாய் பொழுதை தள்ளிய மனச்சோர்வு... அதுதான் படுத்துவிட்டாள்... பாவம். மனம் இரங்கியது.

வலக்கரத்தை முகத்தின் மேல் வைத்து கண்மூடிப்படுத்திருந்த மனைவியை கண் அசையாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவள் அருகில் சென்று அவளது கேசத்தை வருடி அவளது களைப்பைப் போக்க வேண்டும் போலத் தோன்றியது... அதற்கு உரிமையும் இருக்கிறது...

இது என்வீடு... அருகே என்மனைவி... நான் மனம் வைத்தால் அவளருகில் அமரலாம்... முகம் மூடி இருக்கும் கரத்தை விலக்கலாம்... அதற்கு உரிமை இருக்கிறது.

அதுமட்டுமா... அவளது முகத்தை கைகளில் ஏந்தி அழகை ரசிக்கவும் எனக்கு உரிமை இருக்கிறது... ஏன்... அவளை முத்தமிடவும்... எனக்குரியவளாக்கிக் கொள்ளவும் உரிமை உண்டுதான்... ஆனால் தடுப்பது எது...? தன்னைக் கட்டியிருப்பது எது.,... ரத்னாவின் நினைவா... குழம்பினான் அவன்.

மெல்ல நடந்து சென்று அவளருகே குனிந்தான். தன் கரத்தை முகத்தினின்று விலக்கி பார்த்தாள். அவள் பார்வை கேள்வி கேட்டது. ஏதாவது தேவையா.

"நன்றாகப் போர்த்துக் கொள் பானுமதி... கொசுக்கடி அதிகம்..." என்றதோடு இல்லாமல் நன்றாகப் போர்த்தி விட்டு வந்து படுத்தான்.

பானுமதி தூங்கி விட்டதை அவளது சீரான மூச்சு உணர்த்தியது.

ஆனால் அவனுக்குத்தான் உறக்கம் வரமறுத்தது. அடிக்கடி மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

மறுநாள் தாயிடம் இருந்து தகவல் வந்தது... கணக்கு பிள்ளையோட மனைவியை பானுவுக்குத் துணையா



இருத்திவிட்டு உடனே புறப்பட்டுவா... முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்...

ராஜசேகர் புறப்பட்டுச் சென்றான்.

போன வேகத்தில் திரும்பி வந்தான்.

அவன் முகத்தில் மறுபடியும் பாறையின் இறுக்கம்... பயந்துபோனாள் பானு.

அவளிடம் எதுவும் பேசாதிருந்ததுதான் வருத்தத்தைத் தந்தது...

என்ன ஆயிற்று... என்மீது கோபமா... இல்லை மறுபடியும் வேதாளம் முருங்கை மரத்திற்கு ஏறிவிட்டதா...

இந்த கிராமத்திற்கு வந்தபின்பு ஏதோ சகஜமாய் பழக ஆரம்பித்தாரே என்று மகிழ்ந்து போனோமே... எதனால்... ஒருவேளை இந்த கிராமத்தின் இனிய சூழ்நிலையாக இருக்குமோ... அல்லது இந்தவீட்டின் ராசியா என்றுகூட அதிசயித்துப் போனேனே...

இப்போது என்ன ஆயிற்று என்று 'உம்'மென்று இருக்கிறார்...

அன்று இரவு உணவு உண்ணும்போதும் அவன் மௌனமாயிருந்தது கண்டு உள்ளுக்குள் வெம்பிப் போனாள்...

வாயைத் திறந்து ஏதாவது பேசமாட்டாரா... நான் செய்த தப்பை சுட்டிக்காட்டி கடுமையாக ஏசினாலும் தாங்கிக் கொள்வேன்... ஆனால் இவருடைய மௌனம் என்னைக் கொல்லாமல் கொல்கிறதே...

ஊரில் அவன் பேசாமல் இருந்தபோது அதைப் பெரிதாய் பொருட்படுத்தவில்லை தான்...

ஆனால் இப்போது கதையே வேறு. கிராமத்தில் அவனுடன் தங்கியிருந்த சில நாட்களில் ஏதோ ஒன்று இருவரிடையே நெருக்கத்தை ஏற்படுத்தியது நிஜம்... அதைவிட இருவரிடையே இருந்த விரிசலைப் பூசி மெழுகியது என்றுகூடச் சொல்லலாம்.

நல்ல நண்பர்களைப் போல மனம் விட்டு பேசும் அள விற்கு வந்தனர்...

ஏன்... அவன் வேடிக்கையாகப் பேச... அதற்கு அவள் விழுந்து சிரிக்கும் அளவிற்கல்லவா இருவரிடையே சிநேகம் மலர்ந்தது...

இப்போது மறுபடியும்... தொட்டவுடன் சுருண்டு கொள்ளும் மரவட்டையாகிப்போனாரே... காரணம் தெரியவில்லையே...

பானுவிற்கு அழுகைதான் வந்தது.

மனம் பொறுக்காமல் அவன் அருகே வந்து நின்றாள். கண்களை மூடிக்கொண்டிருந்த ராஜசேகர் காலடி ஓசை கேட்டு கண்களைத் திறந்தான்... கண்கள் இரண்டும் ரத்தம் கட்டியது போல செவசெவ என்று இருந்தன.

பயந்து போனாள் அவள்.

"ஏன் இந்த மௌனம்" என்று கேட்க நினைத்தவளுக்கு தொண்டையில் அடைத்தது.

"என்ன வேண்டும்?" என்று கேட்டான் அவன்...

"வந்து... ஏதாவது வேண்டுமா உங்களுக்கு என்று கேட்க வந்தேன்..." மழுப்பினாள் அவள்.

வேண்டாம் என்று தலையசைத்தான்.

அவள் தன் பாயை தரையில் விரித்துக் கொண்டிருக்கும் போது "பானுமதி" என்று அழைத்தான்.

அவள் திரும்பிப் பார்த்தாள்.

"இங்கே வாயேன்."

வந்தாள்.

"உன்னை ஒன்று கேட்பேன்... எதையும் மறைக்காமல் சொல்ல வேண்டும்..."



எதைக் கேட்கப் போகிறான்... வியப்புடன் பார்த்தாள்.

"ம்ம்..."

"எனக்கு காய்ச்சல் வந்தபோது என்ன நடந்தது..."

கற்பூரத்தில் தீப்பட்டது போல 'பக்' கென்று பயம் தோற்றியது.

எதைக் கேட்கிறார்...

நினைவிழந்து கிடந்ததையா... ரத்னா... ரத்னா என்று அரற்றியதையா... ஜன்னி வந்ததுபோல நடுங்கியதையா... இல்லை... இல்லை... என்னை...

"சொல் பானுமதி... என்ன நடந்தது... உன்னிடம் வெறித்தனமாய் நடந்து கொண்டேனா..."

அத்தையிடம் மட்டும் சொன்னேன்... அது இவருக்கும் தெரிந்துவிட்டதே... அத்தைதான் சொல்லியிருக்க வேண்டும்... அவளை அவமானம் கொத்திப் பிடுங்கியது.

"அன்றைக்கு உன்னிடம் மிருகத்தனமாகவா நடந்து கொண்டேன்... வாயைத் திறந்து பேசேன் பானு..." முகத்தை மூடிக் கொண்டு அழுதாள் பானு... நடந்த கேவலத்தை அவன் வாயால் சொல்ல கேட்க வேண்டி வந்ததே...

கணவன்தான்... ஆனால் கணவனாகத் தொடவில்லையே... இரை மீது பாய்ந்து... தொண்டையைக் கவ்வி அடக்கும் புலியின் செய்கை மாதிரியல்லவா அவரது செயல் இருந்தது...

எல்லாவற்றையும் விட... அவளைப் பிடுங்கித் தின்றது என்னவென்றால்... தன்னை ரத்னாவாய் நினைத்துத் தொட்டதுதான்...

"ஆமாம்... நான் மிருகத்தனமாய் நடந்து கொண்டிருக்கிறேன். அடச்சே... ஏன் அப்படி அறிவிழந்து போனேன்..." ஆத்திரத்தில் எதிரே இருந்த தூணை ஓங்கிக் குத்தினான்.

''இல்லை... என்னை ரத்னாக்கா என்று நினைத்து அப்படி நடந்து கொண்டீர்கள்... நினைவு அழிந்த நிலையில் உங்களை மறந்து போனீர்கள்... ரத்னா... வந்தாயா... இனி உன்னை விடமாட்டேன் என்றெல்லாம் பிதற்றினீர்கள்... அன்றைக்கு உங்களுடன் இருந்தது பானுமதி இல்லை... ரத்னா... ரத்னாதான்'' குரல் தழுதழுக்க சொல்லிவிட்டு கண்ணீர் வழிய அவள் திரும்ப எத்தனிக்க... அவன் அவளது கரம் தொட்டு நிறுத்தினான்.

தன் அருகில் அவளை அமர்த்தி... அவளது கண்ணீரைத் துடைத்தான்....

அவனது செய்கை அவளுக்கு வியப்பைத்தர... கண்களை விரித்துப் பார்த்தாள்.

''என்னை மன்னித்துவிடும்மா... காட்டுமிராண்டித்தனமாக உன்னிடம் நடந்து கொண்டேனே... சே... நினைக்கவே என்மீது வெறுப்பு வருகிறது... உன் மனம் எப்படி பாடுபட்டிருக்கும்... கடவுளே... மனுஷத்தனமே இல்லாமல் மிருகமாய் செயல்பட்டேனே... அய்யோ... பானு... நீயும் அதை என்னிடம் சொல்லாமல் மறைத்துவிட்டதுதான் கொடுமை... சே! அதனால்தான் அன்றைக்கு என்விரலும் உன்மீது படவில்லை என்றபோது உன்முகம் வெளுத்து உடம்பு நடுங்கியதோ... அம்மா என்னை அழைத்து சொன்னபோது எப்படித் துடித்துப்போனேன் தெரியுமா பானு... மறுபடியும் உன்னைக் கேட்கிறேன்... என்னை மன்னிப்பாயா பானு...''

அந்த அளவு தன்னைத் தாழ்த்திக் கொண்டு அவன் மன்னிப்பு கேட்டதை அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... இன்னும் துக்கம் அதிகமாகி கண்ணீர் பெருக்கெடுத்தது.

''உஷ்... இனி இந்த கண்களில் கண்ணீர் வரவே கூடாது பானு... அன்றைய ராஜசேகரின் மனநிலையே வேறு...



இப்போதைய மனநிலை வேறு... நடந்ததை ஒரு கெட்ட கனவு என்று மறந்துவிடும்மா... நானும் நல்லவன்தான்... என்னாலும் அன்பைக் காட்ட முடியும்... மயிலிறகாய் என் காதலை வெளிப்படுத்த முடியும் என்பதைப் புரிய வைக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் தருவாயா...'' உணர்ச்சி மிகுதியில் குரல் கரகரத்தது அவனுக்கு...

அவளது பார்வையில் கேள்வி தெரிந்தது... உண்மையில் அவன் மனம் திறந்து பேசுகிறானா... இல்லை... செய்த தவறுக்குப் பரிகாரம் தேடுகிறானா... என்ற சந்தேகம்...

அவளுக்கு அத்தகைய பிரியம் தேவைப்படவில்லை.

அன்பினால் இணையும் தாம்பத்தியம் தான் சிறக்கும்.

அந்த அன்புதான் இல்லறத்திற்கு மிக அவசியம்... அது இல்லாவிட்டால் நீரில் கோலம் போட்டது போல நிம்மதியும் சந்தோஷமும் இல்லாமல் போகும்...

''பழயதை மறந்து விட்டுப் புது வாழ்க்கையை ஆரம்பிப்போம்... பானு... இனிமேல் நீ புது ராஜசேகரைப் பார்க்கப் போகிறாய்... பாரேன்... உன்னையேச் சுற்றி வரும் பிரியமுள்ள கணவனாய் இருப்பேன்... இதோ இப்போதே அது ஆரம்பம்...''

அவளை இழுத்து அணைத்தான்... அந்த அணைப்பில் அசுரத்தனம் இல்லை... பூமாலையை எடுத்து நெஞ்சோடு சேர்ப்பது போல... மென்மையாய்...

அவனது விரல்கள் அவளது முதுகை தடவின... அதில் முரட்டுத்தனமில்லை... வீணையை மீட்டுவதுபோல... வருடலாய்...

அவனது உதடுகள் அவளது நெற்றியில் ஒற்றின.... அதில் வெறித்தனமில்லை... ரோஜா இதழை ஸ்பரிசிப்பதுபோல... மிருதுவாய்...

அந்த பரிவில்... இதத்தில் அணைப்பின் கதகதப்பில் அவளது மேனி அதிர்ந்தது...

கண்களை மூடிக் கொண்டாள்.

"பயமா... பானு..."

இல்லை என்று தலையசைத்தாள் பானு.

"அப்போ... என்னை மன்னித்துவிட்டாய்... அப்படித் தானே பானு..."

புன்னகையுடன் அவன் கேட்க...

அதே புன்னகையை விடையாகத் தந்தாள் அவள்.

"இன்றைக்கு இந்த பானுமதியை... என் பானுவாய் நினைத்து அணைக்கப் போகிறேன்... இந்தப் பூங்கொடி என் தோளில் படரப் போகிறது..." என்று தன் தோளில் சாய்த்துக் கொண்டான்.

அவளும் தன் அச்சத்தை உதிர்த்தாள்... அவனுடன் ஒன்றினாள்.

அன்றைக்கு தான் நடந்து கொண்டதற்கு பரிகாரமாய் அவள் மீது அன்பு மழையைப் பொழிந்தான். மெய் மறந்த நிலையில்... பரவசமடைந்தவனாய் பானு... என் பானும்மா என்று முணுமுணுத்து... அவளது தோளில் முகம் புதைத்து சங்கு கழுத்தில் முத்தமிட்டபோது அவள் சிறகு முளைக் காமலே வானத்தில் பறந்தாள்...

அவனது மூச்சுக்காற்றின் வெம்மை தந்த சுகம் அவளுக்குப் பிடித்திருந்தது... தன்னை மறந்து அவனோடு ஒட்டிக் கொண்டாள்...

அத்தனை நாளாய் வாட்டி வதைத்த துக்கமும் வேதனையும் மாயமானது.

அந்த ஒருநாளில்... தான் பிறவி எடுத்ததே இந்த அணைப்பிற்காகத்தான் என்ற திருப்தி ஏற்பட்டது.



தான் ராஜசேகரின் மனைவி என்ற எண்ணம் வந்ததும் அன்றைக்குத்தான்.

அந்த நாள்... அவளது வாழ்வெனும் ஏட்டில் தங்க வரிகளால் எழுதிவைக்கப்பட்ட பொன்னாள் என உணர்ந்தாள்...

அவளது இதயம் ஆயிரம் கவிதைகளைப் பாடியது. அந்த கவிதைகளுக்கு மொழி கிடையாது... வெறும் ராகம் மட்டுமே! அது... மௌன ராகம்!



## 10

மகனும் மருமகளும் வீட்டினுள் நுழையும்போதே சௌந்திரத்திற்கு தெரிந்துவிட்டது.

நிலைமை சரியாகி விட்டது... இருவரிடையே இருந்த பனித்திரை விலகிவிட்டது.

அப்பாடா... என்ற நிம்மதி வந்தது. புதுப் பெண்ணிடம் தெரியும் மினுமினுப்பு அவளிடம் தெரிந்தது... மகிழ்ச்சியின் பிரதிபலிப்பு!

ஆனந்தத்தின் அடையாளம்!

மாமியாரின் கூர்மையான பார்வையில் முகம் சிவந்து போனாள் பானு...

வெட்கத்துடன் தலைகுனிந்த மருமகளைப் பார்த்து பரிகாசமாய் கேட்டாள் சௌந்திரம்...

"என்னம்மா... இப்போ என் பிள்ளையைப் பற்றி எந்த மனக்குறையும் இல்லையே..."

கன்னங்களின் சிவப்பைக் கண்டு "அட வெட்கத்தைப் பாரேன்... சீக்கிரமே எனக்கு ஒரு பேரனையோ... பேத்தியையோ பெற்றுக் கொடுத்துவிடு... எனக்கு அதுபோதும்" என்று குறும்பாய் கூற...

"அய்யோ... அத்தை..." என்று சங்கோஜப்பட்டவளாய் உள்ளே ஓடினாள்...

அவளது வதனத்தில் தெரிந்த பூரிப்பையும்... அவளது மேனியில் வந்த பொலிவையும் கவனிக்கத் தவறவில்லை...

இருக்காதா பின்னே... அத்தனை நாட்களாய் காட்டாத அன்பை.... காதலை... கரிசனத்தை மொத்தமாய் அவளிடம் காட்டியிருக்கிறானே என் பிள்ளை... அந்த ஆனந்தம்தான்

கிராமத்தில் தங்கியிருந்த நாட்களில் சொர்க்கமே அந்த கிராமத்திற்கு இறங்கி வந்தது போல இனிமையாக கழிந்தது...

அன்றைக்கேப் புறப்படலாமா என்ற எண்ணத்தை தள்ளிப் போட்டான்...

அங்கிருந்த மூன்று நாட்களும் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான்...

உண்மையில் அந்த கிராமத்தில் தான் தேனிலவு!

அன்றைக்கு மூர்க்கமாய் தன்னை இறுக்கி முரடனாய் நடந்து கொண்டு அழவைத்த கணவனுக்கும்... இங்கே இப்போது பூவாய் மனைவியை பாவித்து மென்மையாய் நடந்து கொண்டவனுக்கும் எத்தனை வித்தியாசம்!

கணவனின் காதல் இருந்துவிட்டால் வாழ்வில் வசந்தமே என்பது நன்றாய் தெரிந்தது.

அன்றில் பறவைகளாய் இணை பிரியாமல் இருவரும் திரிவது கண்டு செளந்திரம் பூரித்துப் போனாள்... அவள் வேண்டியதும் அதுதானே...



கணவன் மாடியில் இருந்தால் அங்கு செல்லவே தயங்குவாள் பானு... இப்போது என்னவென்றால் புள்ளிமானாய் அல்லவா துள்ளிக் கொண்டு மாடி செல்கிறாள்... உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள் அதுமட்டுமா... ராஜசேகர் மாடியேறும் போதே கண் அசைத்துச் சைகை புரிவான்... "மாடிக்கு வாயேன்" என்று... உடனே அவளும் தொடருவாள். இருவரும் சிட்டுக் குருவிகள் போல சேர்ந்து இருப்பது கண்டு பெற்றவளுக்கு ஆனந்தமிகுதியில் கண்ணீர் வந்தது.

கடவுளே... இந்த இளம் சிட்டுகள் இப்படியே சந்தோஷமாய் இருக்க வேண்டும்... அவர்களுக்கு எந்தக் குறையும் வரக்கூடாது என்று தாய்மனம் வேண்டிக் கொண்டது.

அடுத்த நாற்பது நாட்களில் பானு வாந்தி எடுத்த போது அவள் ஆனந்தத்தின் உச்சிக்கே போய்விட்டாள்...

தாய்மை அடைந்த மருமகளை அங்கையில் வைத்து தாங்கினாள் அந்த அன்பு மாமியார். ராஜசேகருக்கு விஷயம் தெரிந்தபோது அவனுக்கு அது இனிய அதிர்ச்சியாக இருந்தது.

தான் கருவுற்றிருக்கும் செய்தியை கணவனிடம் சொல்ல வேண்டும் என்ற ஆசையில் அவன் பின்னாலே மாடி ஏறிச் சென்றாள் அவள். அவனருகில் வந்ததும் வெட்கத்தில் தயங்கினாள். அந்த விஷயத்தை அவன் எப்படி ஏற்றுக் கொள்கிறான் என்று அறியும் ஆவல்... ஆனால் அதை எப்படி சொல்வது என்ற கூச்சம்.

அவளை இழுத்து தன் அருகே அமர்த்திக் கொண்டவன் குறும்பாய் கேட்டான்...

"என் பானுகுட்டிக்கு என்ன வேண்டும்..." அவளை அணைத்து கன்னத்தில் தன் கன்னத்தைப் பதித்தான் அவன்.

அவனிடம் இருந்து வந்த ஏதோ ஒரு மணம்... வாசனை திரவியமா... 'ஷேவ்' பண்ணிய பிறகு பூசிக் கொள்ளும் 'லோஷன்' மணமா... இல்லை... இயற்கை மணமா... என்று புரியாத ஒன்று... அவளைக் கிறங்க வைத்தது.

"உங்களிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும்..." என்றாள்.

"என்ன... எங்கேயாவது போக வேண்டுமா... இல்லை... ஏதாவது வாங்க வேண்டுமா... என்ன என்று சொல்... செய்யக் காத்திருக்கிறேன்... மகாராணி" அவளது கூந்தலில் முகம் புதைத்தவாறு அவன் சொல்ல... தன் கைகளை மாலையாக்கி அவனது கழுத்தில் போட்டு, "ஊகூம்... அதில்லை... இது வேறே... நீங்களே ஊகித்து சொல்லுங்களேன் பார்க்கலாம்" என்றாள்.

"பானும்மா... வெறும் நாளிலேயே நான் மூளையைப் போட்டுக் கசக்கிக் கொள்வதில்லை... அதுவும் நீ அருகில் இருந்தால் மூளை மயங்கி... மழுங்கி விடுகிறது... தேன் குடித்த நரிமாதிரி ஆகிவிடுகிறேன். நீயே சொல்லிவிடேன்" என்றவன் அவளது காதுமடலை செல்லமாய் கடித்தான்.

"ஸ்ஸ்... காது ஒன்றும் தின்பண்டம் இல்லை... இப்படி கடிக்க..."

"யார் சொன்னது... என் முன்னே இனிப்பின் மொத்த உருவமாய்... மிட்டாய் பொம்மையாய் நீ இருக்கிறாயே... அப்படியே கடித்துத் தின்றுவிடலாம் போல எனக்கு இருக்கிறது பானு..."

"தின்பீர்களாம்... இப்ப நான் சொல்ல வந்த விஷயத்தைக் கேட்டப்புறம் செய்யலாம்... இது நம் எதிர்காலம் பற்றியது..."

"நம் எதிர்காலம்? நம் எதிர்காலம்தான் இனி ஒளிமயமாய் இருக்கப் போகிறதே... எந்தக் கவலையும் வேண்டாம் பானு செல்லம்..."



"என்னங்க... எதிர்காலம் என்றால் நீங்களும் நானும் மட்டுமா... புதிய வரவு ஏதும் இருக்காதா..."

அவனது கண்கள் பளிச்சிட்டன... முகம் மலர்ந்து போனது...

"பானு... நீ சொல்வது... அதா...?"

ஆம் என்று தலையாட்டினாள் அவள்.

ஒரு கணம் அவன் எதுவும் பேசாமல் அவளையே பார்த்தான்.

அவள் சொல்வது உண்மையா... பின்பு அவளது வயிற்றில் தன் கரத்தைப் பதித்தான்.

"இந்த சின்ன மணி வயிற்றுக்குள் என் குழந்தை... சிப்பிக்குள் முத்தாய்... ஒரு ஜீவன்... காட்...! என் குழந்தை! என்னை அப்பா என்று அழைக்கப் போகும் குழந்தை... பானும்மா... என்னால் நம்பமுடியவில்லை..." அவளை மார்புடன் அணைத்துக் கொண்டான் அவன்.

"எனக்கும் ஒரு குழந்தை என்று வரவேண்டும் என்று ஒரு காலத்தில் ஆசைப்பட்டேன்... அது இப்போது நிறைவேறப் போகிறது... என் குழந்தையை பெற்றுத்தரப் போகிறாய்... பானு..."

"நம் குழந்தை" என்று திருத்தினாள் அவள்.

"ஆமாம்... நம் குழந்தைதான். நான் ரொம்ப கொடுத்து வைத்திருக்கிறேன் பானு... அழகான... அன்பான மனைவி... பாசம் காட்டும் தாய்... இப்போ குழந்தையும் வந்து விட்டது. இதைவிட என்ன வேண்டும்..." மனம் திறந்து பேசினான் ராஜசேகர்.

குழந்தை வரப்போகும் செய்தி கேட்டு அவன் மகிழ்வான் என்று தெரிந்தாலும், அவனது உள்ளத்தின் மூலைக்குச் சென்றுவிட்ட 'ரத்னா'வின் நினைவை மறுபடியும் எங்கே கிளறிவிடுமோ என்ற பயமும் அவளுக்கு இருந்தது.

ஆனால்... அப்படி எதுவும் நடக்கவில்லை... ஆக... ரத்னா அவனது நினைவிலிருந்து தொலைந்துபோனாள் என்று உறுதியாய் தெரிந்தது. அது அவளுக்குப் பரமானந்தத்தைத் தந்தது... இனி எந்தக் குறையும் இல்லை... எந்த வித இடையூறும் கிடையாது...

ராஜசேகர் என்னுடையவர்... அவர் எனக்கு மட்டுமே சொந்தம் என்ற நினைப்பு உறுதியாய் எழுந்தது.

ஐந்து மாதம் ஆனதின் அடையாளம் பானுவின் மேடிட்டருந்த வயிற்றில் தெரிந்தது. தாய்மை அவளது வனப்பைக் கூட்டி அவளை பேரழகியாக்கியது... அந்த அழகில் சொக்கி நின்றான் ராஜசேகர்...

இப்போதெல்லாம் அவனுடைய மனதிலும் சிந்தனையிலும் பானுதான் நிறைந்திருந்தாள்... இந்த அழகிய தேவதை என் மனைவி... இந்த அழகு முழுவதும் எனக்குச் சொந்தம் என்ற பெருமிதம் வந்தது...

தன் கண்ணில் நிறைந்தவளை... கண்மணியானவளை கண்ணில் வைத்து காத்தான்... பானுவை தன் அன்பால் திணறச் செய்தான். கணவனின் பிரியத்தில் திளைத்த பானுவின் மேனியில் இப்போது மினுமினுப்பு... கன்னங்களில் பளிங்காய் பளபளப்பு...

தாய்க் கோழி குஞ்சை தன் சிறகில் வைத்து காக்குமே அதுபோல மருமகளை கவனித்துக் கொண்டாள் சௌந்திரம்.

அவள் விரும்பியதையெல்லாம் பார்த்துப் பார்த்துச் செய்து தந்தாள் சௌந்திரம்... தன் குடும்ப வாரிசை... குலத்தளிரை சுமக்கும் மருமகளை அங்கையில் வைத்து தாங்கினாள்.

மருமகளுக்கு எங்கே திருஷ்டிப் பட்டு விடுமோ என்று தினமும் திருஷ்டி கழிப்பதும்... தினம் தினம் அவளுக்கு சீசிங்காரித்து... தலைநிறைய பூச்சூடி அழகுப் பார்ப்பதும்...



வாய்க்கு ருசியாய் தினுசு தினுசாய் சமைத்துப்போட்டு ஊட்டாத குறையாய் உண்ண வைத்தும்... மொத்தத்தில் தாயாக இருந்து அக்கறையுடன் கவனித்தாள் சௌந்திரம்...

இழந்த தாயை மாமியாரின் வடிவில் கண்ட பானுவின் நெஞ்சம் விம்மியது. உள்ளம் நெகிழ்ந்து போனது...

பாலில் கலந்த தேனாய்... கணவனின் அன்பும் மாமியாரின் பரிசனமும் அவளைத் திக்குமுக்காடச் செய்தது...

கடவுளே... இந்த சந்தோஷம் என்றைக்கும் நிலைத்திருக்க வேண்டும் என்று இறைவனை வேண்டிக் கொண்டாள்...

தன்னைப் போல அதிர்ஷ்டசாலி வேறு யாரும் கிடையாது... இனி என் வாழ்க்கையில் எப்போதும் வசந்தம்தான் என்று நினைத்து மகிழ்ந்தாள் அந்த பேதை...

மகளுக்கு வளைகாப்பு நடத்த வேண்டும் என்று ஆசைப்பட்டார் பானுவின் தந்தை...

முறைப்படி வந்து அதற்கு அனுமதி கேட்டார் அவர்.

ஆனால் சௌந்திரம் மறுத்துவிட்டாள். சம்பிரதாயம் எதுவும் வேண்டாம்... பிரசவம் எல்லாம் தன் பொறுப்பு என்று சொன்னாள் அவள்.

பரமேசுவரன் குளிர்ந்து போனார்... வல்லூறாய் பிடுங்கித் தின்னும் மாப்பிள்ளை வீட்டார் எத்தனை பேர்...

வழிப்பறிக் கொள்ளை போல... பெண்ணைப் பெற்றவர்களிடம் ஏதேதோ சொல்லிப் பணம் பறிக்கும் பிள்ளை வீட்டார் ஆயிரம்...

ஆனால்... இங்கே... சம்பந்தியின் பெருந்தன்மையைப் பாராட்ட வேண்டும்.

தான் செய்ய வேண்டிய கடமைகளை பரந்த மனத்துடன் ஏற்றுக் கொள்கிறாரே... இந்த நல்ல மனம் யாருக்கு வரும்...

நிறைகுடம் நிச்சயமாய் தளும்பாதுதான்... புளாங்கிதமானார் பரமேசுவரன்...

அதே சமயம் எங்கே தன்னைக் கையாலாகாதவன் எனக் காட்டிவிடுமோ என்ற தர்மசங்கடமும் அவருக்கு உண்டானது.

அதைப் போக்க... வளைகாப்பு சுபநிகழ்ச்சி தன் பொறுப்பு என்று வேண்ட... போகட்டும்... அவரது மனதிற்கு ஆறுதலாய் இருக்கட்டுமே என்று ஒப்புக் கொண்டாள் சௌந்திரம்.

அதையும் ஏழாம் மாதம் நடத்தினால் போதும் என்று சொன்னாள்.

ஏழாம் மாதம்... பானுவின் வளைகாப்பு வைபவம் வெகுசிறப்பாக நடந்தது. கைநிறைய அடுக்கியிருந்த வளையல்கள் கலகலக்க... தலை நிறைய பூச்சூடி.... மஞ்சள் பூசிய வதனத்தில் பெருமிதம் சுடர்விட வளைய வந்தாள் பானு... நானும் தாயாகி விட்டேன் எனும் பெருமை!

அத்தை காவேரியும் சௌந்திரம் போலவே அவளைத் தாங்கினாள்.

கூடப் பிறந்தவர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டாம். மாமாவாகப் போகும் சந்தோஷம்... தலைகால் தெரியாமல் குதித்தனர்.

குழந்தைக்கு என்னென்ன வாங்கணும்... என்னென்ன செய்யணும்... எப்படி வளர்க்கணும் என்பதைப் பற்றித்தான் பேச்சு.

பெண் குழந்தை பிறந்தால் இந்த பெயர் வைக்கலாம்... ஆண் குழந்தையானால் நான் சொல்லும் பேர்தான் என்ற விவாதம் வேறு...

பானுவின் தாய்மை கோலத்தைப் பார்த்து கண்கலங்கினார் பரமேசுவரன்.



மனைவி இருந்திருந்தால்... மகளின் வாழ்வைப்பார்த்து பரவசப்பட்டிருப்பாள்... பிரசவத்தை இங்கேயே கூட வைத்திருக்கலாம்... ஏக்கம் மனதை வாட்டியது.

ராஜசேகரின் கண்கள் மனைவி பக்கமே சுற்றிச் சுற்றி வந்தன... இப்போதெல்லாம் அவளை விட்டு ஒருகணமும் பிரிந்திருக்க அவனால்முடியவில்லை. அதுவரையில் வேறொருவர் வீட்டில் தங்கி இருக்காதவன் அதிசயமாய் மாமனார் வீட்டில் தங்கியது ஆச்சர்யமே! அதுவும் ஒருவாரம்!

அது பரமேசுவரனுக்கு மட்டுமல்ல... சௌந்திரத்திற்கும் வியப்பே!

ஒருநாள் கூட தன் வீட்டை விட்டு எங்கும் தங்கியிராத பிள்ளை மாமனார் வீட்டில் தங்கிவிட்டானே! வாழ்க்கை யில் வசதியாக வாழ்ந்து பழகினவன் செப்பு போல இருக்கு சின்ன வீட்டில் தங்குகிறான் என்றால்... உலக அதிசய தான்...

பானுவிற்காக... அவளுடன் இருப்பதற்காக... அவளை விட்டுப் பிரிந்து இருக்க முடியாமல் தான் மாமனார் வீட்டி இருக்கிறான் என்று தெரியும்... மகன் பானுவே தன் உலக என்று மாறிப்போனதில் பரம திருப்தி... அதுதானே அவளு வேண்டியது. தன் மகனுக்கும் ஒரு இன்ப வாழ்க்கை அ யாதா... ரத்னாவை மறந்து மனைவி... குடும்பம் என் வாழமாட்டானா என்ற ஆசை நிறைவேறியதில் பரம தோஷம்...

இனி மகனைப் பற்றிய கவலை ஒழிந்தது... அவ பானுவின் கையில் ஒப்படைத்தாகிவிட்டது... நிம்மதியா அக்காடா என்று ராமாயணம்... கந்தபுராணம் படி பொழுதைக் கழிக்கலாம்... அப்புறம் பேரன்... பேத்தி எ வந்துவிட்டால் அவர்களைக் கொஞ்சி மகிழ்வதில் கா

கனவுகளும் கற்பனைகளும் இனிக்கத்தான் செய்தன...

வசதிக்குறைவான தன் வீட்டில் கணவன் தங்கியதில் பானுவிற்கும் கூட வியப்பு...

பெரிதான கட்டிலோ... பஞ்சு மெத்தையோ இல்லை. கொசு வலையும் கிடையாது... ஏ.ஸியும் இல்லை... சின்ன படுக்கை அறைதான்... ஆனால் தயக்கம் காட்டாமல் இருந்துவிட்டானே!

கணவனிடம் தெரிந்த மாற்றத்தில் உள்ளம் குளிர்ந்து போனது... அதற்குக் காரணம் மனைவி மட்டுமே தனக்கு முக்கியம் என்ற எண்ணம்தான்... மனைவியை விட்டுப் பிரிய மனமில்லாமல்தான் உடன் இருந்துவிட்டான் என்பது சர்வ நிச்சயமாகத் தெரிந்தது.

அதேசமயம் வசதிகள் இல்லாததால் கணவன் கஷ்டப்படுவானே என்ற வருத்தமும் வரத்தான் செய்தது.

ஆனால் ஒருவாரம் தானே... ஓடிவிடும் என்று சமாதானம் செய்து கொண்டாள்...

உண்மைதான்... கண் மூடித்திறந்தாற்போல ஒருவாரமும் ஓடிப் போனது தெரியவில்லை.

மனைவியை அழைத்துக் கொண்டு புறப்பட்டான் அவன்.

காரில் செல்லும்போது மெல்ல சீண்டினாள் பானு. ''அது என்ன... வெகு அதிசயமாய் இந்த மாப்பிள்ளை மாமனார் வீட்டில் தங்கிவிட்டாரே...''

''என்ன செய்வது... என்னோட மனைவிக்கு என்மேல் கரிசனமே இல்லாமல்... பிறந்த வீட்டில் ஒரு வா...ர...ம்... தங்க நினைத்துவிட்ட பிறகு... வேறு வழியில்லாமல் இந்த அப்பாவி கணவனும் தங்க வேண்டியதுதானே...'' பரிதாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு அவன் சொல்ல... பானு சிரித்தாள்.



"ஐயாவால் ஒருவாரம் கூடப் பிரிந்திருக்க முடியாதாக்கும்... வேளை... பிரசவத்திற்காக பிறந்தவீட்டில் மாதக் கணக் இருக்க வேண்டியிருந்தால் என்ன செய்வீர்களாம்...'' ம் சிண்டினாள் அவள்.

"நல்லவேளை... அப்படி ஏதும் இல்லையே... அம்மாவிற்குப் பிள்ளையின் தவிப்பு தெரியும்... தன் பிள்ளை ஒருநாள்கூட மனைவியை விட்டு இருக்கமாட்டான் என்பதைப் புரிந்து கொண்டுதான் இந்த ஏற்பாடு செய்திருக்கிறாள். எங்கே... என்னைப் பார்த்துச் சொல்... உன்னாலும் என்னைப் பிரிந்து இருக்க முடியுமா பானு... அது உனக்கு விருப்பமா... ம்ம்...''

''இல்லை... இல்லை... இல்லை... போதுமா... இப்போ ரோட்டைப் பார்த்து ஓட்டுகிறீர்களா... மாண்புமிகு கணவர் அவர்களே... நிதானம்... நிதானம்... நீங்க போற வேகத்தில் உங்க பிள்ளை இங்கேயே பிறந்துடுவான் போலிருக்கிறது...''

அவனும் வேகத்தைக் குறைத்துக் கொண்டான்.

வீட்டின் முன் காரை நிறுத்திவிட்டுச் சுற்றிவந்து வினயத் துடன் கதவைத் திறந்து விட்டான்.

''இறங்குங்கள்... மகாராணி...''

அவள் நிதானமாய் இறங்கும் வரை பொறுமையாய் நின்று... இறங்கியதும் அவளை அணைத்தவாறே வீட்டினுள் சென்றான்.

வீட்டினுள் அசாதாரண அமைதி நிலவியிருந்தது. குழப் பத்துடன் சுற்றிலும் பார்த்தான்.

அம்மாவையும் காணோமே...

கார் சத்தம் கேட்டவுடன் வந்து பார்ப்பார்களே... என்ன ஆயிற்று...

அம்மாவுக்கு உடம்பு சரியில்லையா... அப்படி இருந்தால் சொல்லி இருப்பார்களே...

ஏதோ சரியில்லை என்று உள்மனது குறுகுறுத்தது. அந்த நேரம் சௌந்திரம் வெளிப்பட்டாள்.

அவளது முகத்தில் கலக்கம் தெரிய... பதைத்துப்போய் "என்னம்மா... என்ன விஷயம்?" என்று கேட்டான்.

"ராஜா... வந்து... உன்..." வார்த்தைகளை மிழுங்கியவாறு பானுமதியைப் பார்த்தாள்.

"சொல்லுங்கம்மா..."

அதேநேரம் மாடியிலிருந்து யாரோ எட்டிப்பார்ப்பதை உணர்ந்து நிமிர்ந்து பார்த்தான்.

"என்ன ராஜா... என்னை மறந்துட்டீங்களா... உங்க ரத்னா... நீங்க காதலிச்ச ரத்னாவேதான். திரும்ப வந்துவிட்டேன்... சந்தோஷம் தானே..." என்று இறங்கி வந்தவாறு சொன்னாள் வந்தவள். ராஜசேகரின் முகம் வெளுத்தது.

வந்திருப்பது ரத்னா என்று அறிந்து கொண்ட பானுவோ... 'திடும்' என்று இடி ஒன்று பலமாய் தன் தலைமேல் விழுந்ததோ என்று செயலற்று போய் சிலையானாள்...



## 11

கண்ணிழந்த குருடனுக்கு தெய்வாதீனத்தால் கண் பார்வை கிடைத்து உலகத்தில் இருக்கும் அத்தனை அழகையும் அள்ளிப் பருகி ஆனந்தம் அடையும் நேரத்தில் திடீர் என்று மின்னல் தாக்குண்டு மீண்டும் குருடானது போன்ற நிலையில் இருந்தாள் பானு.



ராஜசேகர் மனம் மாறி... ரத்னாவை முழுவதும் மறந்து... ...ளுடன் மனமொத்து வாழ ஆரம்பித்த போதுதான் ...னா மறுபடியும் தலை நீட்டவேண்டுமா... இவள் ...ற்காக வந்தாள்...

இத்தனை நாளும் திரும்பியும் பார்க்காதவள்... கணவன் ...ருக்கிறான் என்பதையும் நினைக்காதவள்... இப்போது ...ன் வரவேண்டும்...

இனி வரவே மாட்டாள் என்று நினைத்த நேரத்திலா ...ந்து சேரவேண்டும்...

வந்தவள் தன் உரிமையைக்காட்டி அதிகாரமும் செலுத்த ...ரம்பித்து விட்டாளே!

அதுபோகட்டும்... பானுவை ஒரு வேலைக்காரியாக ...டத்தியதுதான் வேதனை.

"இந்த வீட்டின் மூத்த மருமகள் நான்... நான் இன்னும் ...செத்துவிடவில்லை... அதெப்படி இன்னொருத்தி வர ...முடியும்... இவளுக்கே இங்கே உரிமையில்லாத போது இவள் வயிற்றில் வளரும் குழந்தைக்கு வாரிசு பட்டம் வந்திடுமா என்ன... இங்கே இவ ஒரு வேலைக்காரி மாதிரி ...தான்... இவளை அந்த இடத்தில் தான் வைக்க வேண்டும்" நெருப்புப் பொறிகளாய் அவள் வாயிலிருந்து வந்தன வார்த்தைகள்.

"இல்லெஜிட்டிமேட் சைல்ட்" என்று கூசாமல் அவள் சொல்ல... தன் காதுகளைப் பொத்துக் கொண்டாள் பானு...

இதே வார்த்தையை ராஜசேகர் முன்னால் அவள் சொல்லியிருந்தால் அவன் என்ன செய்திருப்பான்... அவளுக்கே தெரியவில்லை.

ஆனால் ரத்னா பேசுவதெல்லாம் சௌந்திரம்... பானுவின் முன்னிலையில் மட்டுமே!

வேண்டும் என்றே பானுவின் இதயம் அறுந்து துடிக்கும் படி வார்த்தைகளால் சாடுவாள் ரத்னா. சௌந்திரத்தால் பொறுக்க முடியவில்லை. பொரிந்து தள்ளினாள்.

''அத்தனை அக்கறையாய் பேசுகிறவள் இங்கு இருந்து வாழாமல் ஏன் ஓடிப்போனேயாம்... குடும்பப் பெண்ணா... லட்சணமா இருந்து குடித்தனம் செய்யறதுக்குத் துப்பில்லாமல்... புருஷனை உதறிவிட்டு போனவ... அம்மா வீட்டே கதின்னு கிடந்தே... இப்ப என்னவோ உருகி நிற்கறே... பாவம்... என் பிள்ளை... கல்பட்ட கண்ணாடி மாதிரி நொறுங்கிப் போயிட்டான். ஏதோ இப்ப அவன் சந்தோஷமா இருக்கிறான்னா பானுதான் அதுக்குக்காரணம்... ஒண்ணு தெரிஞ்சுக்கோ... அவன் மனசில் இருப்பது நீ இல்லை... பானுதான்...''

''என்ன அக்கிரமம்! ஒரு பொண்ணுக்கு மோசம்... இன்னொருத்திக்கு வக்காலத்தா... ராஜாவைப் பத்தி என்கிட்டே சொல்லாதீங்க... அவரைப் பத்தி எனக்கு நல்லாவே தெரியும்... அவராவது... என்னை மறப்பதாவது... ரொம்ப நாளா பெண் துணை இல்லாததால் இந்த மாயக்காரியிடம் மயங்கியிருக்கணும். இப்ப என்ன நான் வந்தாச்சு இல்லே... பாருங்க... என்னை விட்டு அகலவும் மாட்டார்... என்னைச் சுத்திச் சுத்தி வருவார்... அதையும் பார்க்கத்தான் போறீங்க. இப்படி... நான் விரல் சொடுக்கினால் போதும்... என்கிட்டே ஓடி வந்துவிடுவார்... அவர் எப்படி என்காலடியில் கிடந்தார் என்பது இவளுக்குத் தெரியாது பாவம்... ஆனா.... உங்களுக்கு அது தெரியுமே... அதை இவக்கிட்டேயும் சொல்லி வையுங்க'' அகம்பாவத்துடன் சொல்லிவிட்டு நிமிர்ந்த நடையுடன் அவள் செல்வதை சுட்டெரிப்பது போலப் பார்த்தாள் சௌந்திரம்.

இன்னும் அவளது ஆணவமும் அகம்பாவமும் அப்படியேத்தான் இருக்கும், குந்துமணியளவும் குறையல்லே. பஞ்சவடி



ஆசிரமத்தில் இராமனும் சீதையும் அன்னியோன்னியமாக் குடும்பம் நடத்தும் போது... எங்கிருந்தோ வந்தாளாமே சூர்ப்பணகை... அவமாதிரி வந்து சேர்ந்திருக்கா இந்த ராட்சசி... பாவி... இவ வராமலே இருந்திருக்கலாம்...'' ஆத்திரத்தில் பற்களை நறநறவென்று கடித்தாள் சௌந்திரம்.

பானுவோ... பாவம்... அரண்டு போயிருந்தாள். அழுது அழுது கண்கள் சிவந்து போயிருந்தன. இமைகளில் வீக்கம்...

தன் வாழ்க்கை எங்கே பறிபோய்விடுமோ என்ற பயம் அவளைப் பிடுங்கித் தின்றது... இனி என் எதிர்காலம் என்ன என்ற அச்சம் அவளை நடுங்கச் செய்தது.

''அத்தை... எனக்கு பயமாக இருக்கிறது... நான் என்ன செய்வேன்...'' அத்தையின் மடியில் தஞ்சம் புகுந்தாள் பானு.

அவளுக்கு தைரியம் சொன்னாள் சௌந்திரம். ''பானும்மா... என் பிள்ளை ரத்னாமேல் பைத்தியமாக இருந்தது என்னவோ நிஜம்... அதனால் உன்னைத் திரும்பியும் பார்க்காமல் இருந்ததும் நிஜம்... ஆனால் அந்தக் கதை முடிந்தாகிவிட்டது. இப்ப எல்லாம் மாறிவிட்டது. அவளிடம் இல்லாத ஒன்று... அவளால் அடையமுடியாத ஒன்று உன்னிடம் உள்ளது. என்ன சொல்லு... அதான்... உன் குழந்தைம்மா... அதுதான் உன் துருப்புச் சீட்டு மாதிரி... ராஜசேகரோட அன்பை உன்கிட்டே நிறுத்தி வைக்கும். தைரியமா இரும்மா... எத்தனை நாள் இவள் ஆடுறொள்னு பார்ப்போம்... கொட்டம் அடங்கி இவள் ஓடப்போவதைப் பார்க்கத்தானே போகிறேன்...''

அத்தையின் வார்த்தைகள் கொஞ்சம் தைரியம் ஊட்ட... சமாதானம் அடைந்தாள் பானு.

ரத்னாவை முதல் நாள் பார்த்ததும் அதிர்ச்சியில் உறைந்து போனான் ராஜசேகர்.

பானுவின் அருகாமை தந்த மகிழ்ச்சியில் முற்றிலும் அவளை மறந்து போனவன் முன்னே... கிணற்றிலிருந்து திடீர் என்று வெளிப்பட்ட பூதம் மாதிரி அவள் வந்து நின்றது திகைப்புத்தான்.

வருவாள் என்று காத்திருந்தபோது வராதவள்... வரவே மாட்டாள் என்ற முடிவுக்கு வந்தபோது வந்து சேர்ந்தால் எப்படி இருக்கும்... அதுதான் அப்படியே விக்கித்து நின்று விட்டான் ராஜசேகர்.

விவரம் தெரிந்த நாளிலிருந்து ரத்னாவின் மேல் அவனுக்கு பிரேமை... அவனுக்கு அவள் என்று பெரியவர்களால் எடுத்த முடிவு... அது குழந்தைப் பருவத்திலேயே வந்த பேச்சு ஆகையால்... அவன் மனதில் அது ஆலம் வித்தாய் பதிந்து போனது... வளர வளர ரத்னாவின் மேல் இருந்த அன்பும் வளர்ந்தது.

வாலிப வயதில் விருட்சமாய் வேர்விட்டு உறுதியாய் நின்றது.

மணமானபின்பு அவனுடன் சேர்ந்து வாழாமல் தாய் வீட்டுக்குச் சென்றபின்பும் அவள் மீது பித்தாக இருந்தான்.

அவளது பெயரையே ஜெபித்துக் கொண்டிருந்தான். ரத்னாவின் நினைவில் உருகித் தவித்தான். அவள் ஒருநாள் வருவாள்... வந்தே தீருவாள் என்ற நம்பிக்கை மாறாமல் தன் இதயவாசலை அவளுக்காகத் திறந்துக் காத்திருந்தான்.

ஆனால் விதியின் விளையாட்டால் பானுமதியின் கழுத்தில் வேண்டா வெறுப்புடன் தாலிக்கட்டி வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயம் வர... அவனிடம் விரக்தி குடி கொண்டது...

பானுமதியை ஏறிட்டுப் பார்க்கவும் விருப்பம் இல்லை ஜுர வேகத்தில் ரத்னா என்று நினைத்து பானுமதியை



அடைந்தது அவனைக் குறுகச் செய்தது... அதுமட்டுமல்ல... இரவும் பகலுமாய் தன்னைக் கருத்துடன் கவனித்துக் கொண்டவளிடம் பாராமுகமாய் இருக்கவும் மனம் வரவில்லைதான்.

அவளுடன் மகிழ்ச்சியாய் குடும்பம் நடத்தத் தொடங்கியது அவனது உள்ளத்திலிருந்து ரத்னா மெல்ல மெல்ல விலகினாள்.

இனி பானுதான் சகலமும்... என்ற எண்ணம் வந்து பானுவின் மீது பாசமும் நேசமும் பெருகியது. தன் குழந்தை அவளது மணிவயிற்றில் உதித்ததும் அத்தனை நாள் அவன் பட்ட வேதனையும் அடைந்த விரக்தியும்... சஞ்சலமும் சுத்தமாய் துடைக்கப்பட்டு... நிம்மதியும் சந்தோஷமும் திரும்பிய வேளைப் பார்த்தா ரத்னா வந்து சேர வேண்டும்.

அவளைப் பார்த்ததும்... அவளது குரலைக் கேட்டதும் அவன் விறைத்துப் போனது உண்மை... அவளைப் பார்த்த அதிர்ச்சியில் முகம் மாறியதும் உண்மை... அப்புறம் தான் என்ன செய்கிறோம் என்பதையே அறியாத நிலைக்கு வந்தான்...

அருகில் தாய் நின்றிருப்பதை மறந்தான்.

வாயும் வயிறுமாய் தன்னை நம்பியிருக்கும் பானுவையும் மறந்தான்.

வில்லின் நாணிலிருந்து இழுத்துவிட்ட அம்பாய் அவளிடம் விரைந்தான்.

தன்னை மறந்த நிலையில் "ரத்னா... வந்துவிட்டாயா... நீ வருவாய் என்று எனக்குத் தெரியும்... உன்னால் என்னை மறக்க முடியவில்லை. அதுதான்... திரும்ப வந்து விட்டாய்... அப்படித்தானே ரத்னா..." என்று கேட்டான்.

வெற்றிப் புன்னகையுடன் அருகே வந்தாள் ரத்னா... "என்ன ராஜா... நீங்களும் என்னை எதிர்பார்த்துக் காத்திருந்

நீர்களா... ஆனா... அத்தை என்னென்னவோ சொல்கிறார்கள்... உங்களுக்கு மறுமணம் நடந்ததாமே... அப்ப... என்மீது உங்களுக்கு இருக்கும் காதல் அவ்வளவுதானா... அதெப்படி என்னை மறந்து இந்தக் கல்யாணத்திற்கு ஒப்புக் கொண்டீர்கள். ம்ம்... சொல்லுங்க ராஜா...''

அவனது கரத்தைப் பற்றிக் கேட்டாள் அவள்... அப்போதுதான் சுயநினைவு அடைந்தவனாய்... தன் அருகே பானு நின்று கொண்டிருப்பதை உணர்ந்தான். பானுவை ஒரு பார்வை பார்த்துவிட்டு ''ஓ... மறுமணம்... ஆமாம்... பானு இவள்... மறுமணம்தான்'' என்று தடுமாறினான்.

''அதைத்தான் நான் கேட்பது... உன்னை விட்டு இருக்க முடியாது... நீ என் உயிர்... நீ இல்லாமல் நான் இல்லை... நீ ஒருத்தி மட்டும் என் வாழ்க்கையில் இருந்தால் அது எனக்கு போதும் என்றெல்லாம் 'டயலாக்' பேசினீர்களே... அது வெறும் பிதற்றலா என்ன... அப்படித்தான் தெரிகிறது எனக்கு...''

''சொன்னேன்... உண்மைதான்... உனக்காக இரண்டு வருஷம் காத்திருந்தேன். வேறு யாருக்கும் என் மனைவியாகும் அருகதை இல்லை என்று திடமாக இருந்தேன். என்ன செய்வது... ஒரு இக்கட்டில் சிக்கி... சூழ்நிலை காரணமாக இந்த பந்தத்தில் அகப்பட்டுக் கொண்டேன். நானாக விரும்பி செய்து கொண்ட மணம் என்று நீ நினைத்தால் அது தப்பு ரத்னா... அப்பவும் உன்னையே நினைத்துக் கொண்டு இவளைத் திரும்பியும் பார்க்காமல் இருந்தேன்... தெரியுமா...''

''அடடா... பார்த்தால் அப்படித் தெரியலையே... அவளுடன் சந்தோஷமாய் குடும்பம் நடத்துவது மாதிரியல்லவா தெரிகிறது. என்ன... கதை அளக்கிறீர்களா'' ரத்னாவின் பார்வை பானுவின் மேடிட்டிருந்த வயிற்றுப் பகுதியில் பதிந்து திரும்பியது...



அதை அவனும் கவனித்தான்... அவன் முகத்தில் ரத்தச் சிவப்பு... எதனால்... அவமானத்தாலா... இல்லை ஆத்திரத்தாலா... தெரியவில்லை.

''நீ முன்னமே வந்திருந்தால் இப்படியெல்லாம் நடந்திருக்காது... இத்தனை நாளும் வராமல் இருந்ததுதான் இந்த அசம்பாவிதத்திற்குக் காரணம்... நீயே யோசித்துப் பார் ரத்னா என்னுடன் நீ இருந்திருந்தால் எனக்கு இன்னொரு கல்யாணம் நடந்திருக்குமா... ஊகூம்'' இரண்டு பேரையும் மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்த பானுவிற்கு துக்கம் வெடித்தது. விம்மலை அடக்க முடியாமல் உள்ளே விரைந்தாள்.

சௌந்திரம் பொறுக்க முடியாமல் அதட்டினாள்... ''நன்றாக இருக்கிறது ராஜா... பிள்ளை வயிற்றுக்காரி... அவளை வைத்துக் கொண்டு எதைப் பேசவேண்டும் என்ற விவஸ்தை இல்லாமல் பேசுகிறாயே... பார்... எப்படி அழுது கொண்டு செல்கிறாள். அவளுக்கு ஏதாவது ஆச்சுன்னா... யார் பதில் சொல்றது...'' என்றவள் பானுவைத் தொடர்ந்தாள்...

''பானு'' என்று அடியெடுத்து வைத்தவனைக் கைப்பிடித்து நிறுத்தினாள் ரத்னா...

''எங்கே போறீங்க... பானுவைத் தேடியா... இதோ பாருங்க ராஜா... நான்தான் உங்களோட மனைவி... முறையா மணந்த மனைவி... நீங்க எனக்குத்தான் கணவர்... எனக்கு மட்டுமே... வேறு யாருக்கும் உரிமை இல்லை... நீங்க பானுவை மறந்து விட வேண்டும் ஆமாம்....'' நிபந்தனை போட்டதுபோல் சொன்னாள் ரத்னா சொல்ல...

தலையைப் பிடித்துக் கொண்டான் அவன்... இது என்ன விசித்திரம். மூத்தவள் என்று இவள் சொல்வதைக் கேட்பதா... இல்லை... தாய்மை அடைந்திருக்கும் பானுவைக் கவனிப்பதா...

குழப்பத்தில் மூச்சு முட்டியது.

எதுவும் பேசாமல் 'விடுவிடு' என்று மாடியேறி தன் அறைக்குள் நுழைந்து கொண்டு கதவைத் தாளிட்டுக் கொண்டான்.

அன்று இரவு பானு மாடிக்குச் செல்லவில்லை... இல்லை... இல்லை... செல்லும் மனநிலையில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்...

விளக்கில் சுட்டுக் கொண்ட விட்டில் பூச்சியின் நிலையில் இருந்தாள் அவள்.

பிறந்த வீட்டிலிருந்து அவனுடன் சேர்ந்து வந்தபோது அவள் எத்தனை மகிழ்ச்சியுடன் இருந்தாள்... இனிவரும் காலம் பொற்காலம்தான்... இருகரம் நீட்டி.... ரத்னகம்பளம் விரித்து காத்துக் கொண்டிருக்கிறது... கணவன்... குழந்தை என்று இருக்கப்போகும் வாழ்க்கையில் வெறும் இன்பம் மட்டுமே... என்ற ஆகாசக்கனவில் மிதந்தவள் 'சட்'டென்று கீழே விழுந்ததுபோல வேதனை...

ரத்னாவைப் பார்த்ததும் கணவன் 'பல்டி' அடித்ததுதான் கொடுமை!

ரத்னாவை மறந்தே போனான் என்று நினைத்தது எத்தகை மடமை! அவனால் எளிதில் மறக்க முடியாது என்பதை உணராமல் போனது தப்புதான். எத்தனை வருடமாய் அவளை நேசிக்கிறான்... அத்தனை சீக்கிரத்தில் அழிந்துவிடுமா என்ன... பார்க்கப்போனால்... அவளுக்கும் ராஜசேகருக்கும் இடையே இருக்கும் பிணைப்புதான் குறுகியது... இடையில்... அதுவும் வெகு தாமதமாய் துளிர்விட்ட அன்பு... அதுதான் மலராமல் கருகிவிட்டது...

ரத்னா மீதிருந்தது உறுதியான அன்பு என்பதால்தான் அது முந்திவிட்டது...

மனம் நொந்து போனாள் பானு...



என்ன வார்த்தைகளைச் சொல்லிவிட்டான்... அசம்பாவித மாம்... ரத்னா முன்னையே வந்திருந்தால் இப்படி நடந் திருக்காதாம்... இன்னும் என்னவெல்லாம் பேசிவிட்டான்...

நெஞ்சைக் கத்தியால் துளைத்ததுபோல வலித்தது. அந்த அளவிலா மட்டமாகிப் போனேன்... கடவுளே... கண்ணீர் பொங்கி வழிந்தது...

இதயம் பாறையாய் கனத்துப்போனது... ச்சீ... என்ன பிழைப்பு இது... இதைவிடச் சாவதே மேல்...

ஆனால் அதுவும் இப்போது முடியாதே... என்னோடு குழந்தையும் அல்லவா இறக்க நேரிடும்...

அந்த சின்ன ஜீவனை அழிக்கும் உரிமை எனக்கேது... இந்தக் குடும்பத்தின் வாரிசு... குலக்கொழுந்து... வம்ச விளக்கு... அதைப் பெற்றுத் தரவேண்டிய கடமை எனக்கு இருக்கிறது... அந்த சிசுவை அத்தை கையில் வைத்ததுடன் என் கடமைத் தீர்ந்தது...

ஆம்... அத்தையிடம் தான் ஒப்படைக்க வேண்டும்... அவள் முறையின்றி ஜனித்த குழந்தை என்றாளே ரத்னா... அவள் கண்களில் குழந்தை படவும் கூடாது... ராஜசேகர் மட்டும் என்ன... திருமணமே அசம்பாவிதம் என்றாரே... அப்படியென்றால் அவரது வாரிசு உதித்ததும் அசம்பாவிதம்... உயிரைக் கொல்வது போல அல்லவா பேசிவிட்டார்...

துடித்துப் போனாள் பானு.

மறுநாள் காலையில் ரத்னா இரவு உடையணிந்து ராஜ சேகரின் அறையிலிருந்து வெளிப்பட்ட போது... உடல் முழுக்கத் தீப்பற்றினாற்போல தகிப்பு... இதயத்தை இரும்புக்கரம் ஒன்று பிழிவது போல வலி...

அவளுக்கு வெறுப்பூட்டவே ரத்னா நடந்து கொள்கிறாள் என்று தெரிந்தாலும் அவளால் வேதனைப் படாமல் இருக்க முடியவில்லை...

கஷ்டப்பட்டுத் தன் உணர்ச்சிகளை மறைக்க முயன்றாள். மனதையும் முகத்தையும் சிரமப்பட்டுக் கல்லாக்கிக் கொண்டு வளைய வந்தாள்.

அவள் எதிரே வரும்போதெல்லாம் முகத்தை வலித்துக் கொண்டும்... இல்லையென்றால் சுளித்தவாறு திருப்பிக் கொண்டாள் ரத்னா...

சமயம் வரும்போதெல்லாம் பானுவைக் குத்திக்காட்டினாள். சந்தர்ப்பம் கிடைத்தபோது எஜமானியைப் போல இருந்து ஆட்டி வைத்தாள்.

"ஏய்... உன் நிலை இங்கே வேலைக்காரி மாதிரிதான்... தெரிஞ்சுக்கோ... எங்கேயாவது மூலையில் கிடந்து வாய் மூடிக் கொண்டிருந்தா இருக்கலாம்... இல்லை என்றால் மூட்டையைக் கட்டிக் கொண்டு புறப்படு..."

உண்மைதான்... தான் சொன்னதுபோல ரத்னா வந்ததும் வேலைக்காரியாய் ஒதுங்க வேண்டும்தான்... ஆனால் அது முடியுமா... அந்த வார்த்தைகளை சொன்ன பானுமதி... எந்த வித உணர்ச்சியில்லாத ஜடமாக இருந்தாள். ஆனால் இப்போது அப்படி இல்லையே...

உள்ளத்தை அள்ளி கணவனிடம் தந்துவிட்டு... அவனது நிழலில் சொர்க்கம்காண நினைக்கும் முட்டாளாகிப்போன பானுவாயிற்றே...

கணவனுடன் வாழ்ந்த சில நாட்களிலேயே அவனது காலடியில் விழுந்துவிட்ட மனதைத் திருப்பி மறுபடியும் விட்டேற்றி நிலைக்குக் கொண்டு வருவது சாத்தியமா... எல்லாவற்றிற்கும் மேலாய் தன் குழந்தை என்ன பாவம் செய்தது... அதற்குத் தந்தையின் அரவணைப்பு வேண்டாமா...

சில கேள்விகளுக்கு விடைகள் கிடைப்பதில்லை... ஒன்று ராஜசேகர் மனம் மாறாமலே இருந்திருக்கலாம்... இல்லை... ரத்னா வராமலே இருந்திக்க வேண்டும். எல்லாம்



இறைவனின் லீலை என்கிறார்கள். இதுவுமா... சரி... எந்தக் காரணத்திற்காக ரத்னா கணவனை விட்டு விலகியிருந்தாள்...

மறுபடியும் எதை எதிர்பார்த்து வந்திருக்கிறாள்... முதல் கேள்விக்குப் பதில் என்னவோ தெரிந்து கொள்ள முடிந்தது. சௌந்திரம்தான் சொன்னாள்...

ஆனால் இரண்டாவது கேள்விக்குப் பதில்தான் புதிராக இருந்தது... ரத்னாதான் அதுக்கு பதில் சொல்லவேண்டும்.

அத்தையிடம் இருந்து அவள் அறிந்து கொண்டது இதுதான்.

நாகரீகமான வாழ்க்கையில் செல்லமாக வளர்ந்த ரத்னாவிற்கு நாகரீகத்தின் நிழலும் படாத அந்த சின்ன ஊர் சீக்கிரமே சலித்துப் போனதில் வியப்பு ஏதும் இல்லை. அப்படிச் செய்யாதே... இப்படி நடந்து கொள் என்ற கட்டுப்பாடுகளை வெறுத்தாள். தாமரை இதழில் ஒட்டியும் ஒட்டாமலும் இருக்கும் நீர் முத்துக்கள் போல மனம் ஒன்றாமல் வாழ்க்கை நடத்தினாள். தற்செயலாய் தாயும் மகனும் பேசிக் கொண்டதைக் கேட்டவளுக்கு ஏமாற்றம்... அதிர்ச்சி!

பெரிய பணக்காரன் தன் கணவன் என்று நினைத்ததுக்கு மாறாய் இருக்கிறதே பேச்சு!

வியாபாரம்... முடங்கல்... பெரு நஷ்டம்... ஆலை நிறுத்தம்... தவிர... வசிக்கும் வீட்டையும் விற்க வேண்டி வரும்... இதுபோன்ற வார்த்தைகளைக் கேட்டவள்... ராஜசேகர் எல்லாம் இழந்துவிட்டான் என்ற முடிவுக்கே வந்துவிட்டாள்...

வறுமையில் தான் வாடமுடியாது என்று நினைத்தவள் தாய் வீட்டிற்குச் சென்றுவிட்டாள்...

உண்மையில் தாயும் மகனும் பேசிக் கொண்டது... ராஜசேகரின் தந்தையுடன் சேர்ந்து வியாபாரத்தை ஆரம்பித்து... பின் தனியாகப் பிரிந்து சென்ற ஒரு நண்பரின் விஷயம் தான்...

அவள் தப்பாகப் புரிந்து கொண்டிருப்பதை எத்தனையோ தடவை அதற்கு விளக்கம் தந்து போக்க நினைத்தும் முடிய வில்லை....

அவன் பொய் சொல்கிறான்... தன்னை ஏமாற்றப் பார்க்கிறான் என்ற நினைப்பிலே இருந்தாள் ரத்னா.

பணம் இருந்தால் பர்த்தா... காசு இருந்தால்தான் கணவன் என்ற நினைப்பு...

அதை ராஜசேகர் உணராததுதான் வருத்தம்.

சென்றதற்கு காரணம் என்னவோ தெரிந்துவிட்டது மீண்டும் வந்ததற்கு...?

அதற்கும் நிச்சயமாய் ஒரு முக்கிய நோக்கம் இருக்க வேண்டும்... உள்மனம் கூறியது.

எப்படியோ போகட்டும்... இனி... ராஜசேகர் - ரத்னா இடையே குறுக்கிடப் போவதில்லை என்ற முடிவுக்கு வந்தாள் பானு...

சௌந்திரம் அதை மறுத்தாள். ''உனக்குத்தான் உரிமை இருக்கிறது பானு... அவளுக்கு நீ விட்டுத்தரக்கூடாதும்மா...''

''இல்லை அத்தை... அவருக்கு நிம்மதி தேவையென்றால் யாராவது ஒருத்தர் விலகியிருக்க வேண்டும். நானா... இல்லை ரத்னாக்காவா. இந்தக் கேள்விக்கு நான்தான் என்பது நியாயம்... இடையில் வந்தவள் நான்தானே. ரத்னா அக்காவிற்காக காத்திருந்தவர் அவர்... அவர்கள் இருவரும் சேர்ந்திருப்பதுதான் முறை. அதற்காக வீட்டை விட்டுப் போகமாட்டேன் அத்தை... இந்த இடம் விட்டால் எனக்கு வேறு போக்கிடம் ஏது... அவர்கள் வாழ்வில் குறுக்கிட மாட்டேன்... அவ்வளவுதான்... குழந்தையை வளர்த்துப் பெரியவனாக்கி உங்கப் பிள்ளையிடம் ஒப்படைக்கணும்...'' வெளியே திடமாகக்காட்டிக் கொண்டாளும் துக்கத்தில்



குரல் குழைந்தது சௌந்திரம் பொறுக்க இயலாமல் அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள்.

''என் தங்கம்... உனக்கு என்ன நல்ல மனசு... என் பிள்ளை உன் அருமையைப் புரிந்து கொள்ளாமல் இருக்கிறானே... ஊகூம்... என் மனசு சொல்றதும்மா... உனக்கு நிச்சயம் நல்லகாலம் வரத்தான் போகிறது...'' என்று மருமகளை உச்சி முகர்ந்தாள்.

அத்தையின் அருகே இருக்கும் போது உள்ளமன உறுதி தனியாக இருக்கும் போது நழுவிச் சென்றது. பிறந்த குழந்தைக்கு பூவைக்காட்டி சிரிக்க வைத்து பின் அதை மறைத்து அழவைப்பாராமே கடவுள்... அந்த மாதிரி தன் விஷயத்திலும் செய்கிறாரோ... வாழ்க்கையில் சுகத்தைக் காட்டிவிட்டு பின் பறித்து விட்டாரே... இனி யாருக்காக வாழ்வு... சே... வயிற்றில் குழந்தை உதைத்தது... 'இல்லேடா... இனி உனக்காகவாவது நான் வாழணும், இனிமே நீதான் எனக்கு உலகம்... நீ மட்டுமே...' தனக்குள் பேசிக் கொண்டாள் பானு.



## 12

ரத்னாவின் கண்களில் தீ ஜ்வாலை தெரிந்தது. அவள் விட்ட மூச்சில் நெருப்புப் பொறிகள் தெறித்தன...

பின்னே... ஒரு காலத்தில் நாயைப் போல தன்னைச் சுற்றிக் குழைந்து வந்த ராஜசேகர்... இப்போது அவனே வெட்கத்தை விட்டு மேல் விழுந்து அழைத்தாலும் தயங்கி ஒதுங்குகிறானே...

ஏன்... ஒருவேளை இரண்டு வருட இடைவெளியின் தாக்கமா...

அவள் நினைத்து வந்தது என்ன...

கண்ணசைத்தால் போதும்... கனிந்து ஓடிவந்துவிடுவான் என்று எண்ணியது நடக்காது போலிருக்கிறதே. தன்னைப் பார்த்தவுடன் வெண்ணையாய் கரைந்து போய் பேசியதைக் கண்டு இன்னும் அவன் பழைய ராஜசேகர்தான் என்று அகமகிழ்ந்து போனாள் ரத்னா. மறுபடியும் என் கொடிதான் பறக்கப் போகிறது... இனி என் ராஜ்ஜியம்தான் என்று கோட்டையும் கட்டினாள்.

ஆனால் முதலில் பார்த்ததும் நெகிழ்ந்தவன் அப்புறம் சுதாரித்துக் கொண்டானோ... அல்லது... புதுமனைவியின் கண்ணீரில் மனம் மாறிவிட்டதா... நினைக்கும்போதே எரிச்சல் வந்தது.

விடமாட்டேன்... இந்த விஷயத்தில் நான் தோற்கக்கூடாது. அந்த ஆத்திரத்தில் அன்று இரவு துணிவாக அவனது படுக்கை அறைக்குள் நுழைந்தாள்...

இரண்டு வருடங்களுக்கு முன் அது அவர்களின் அறையாக இருந்தது... அவள் உள்ளே வந்ததும் அவன் ஓடி வந்து அல்லாக்காக எடுத்துக் கொண்டுபோய் கட்டிலில் போடுவான்... என் கண்ணு... என் செல்லம் என்று கொஞ்சிக் குழைவான்...

அவள் எதிர்பார்த்து வந்ததும் அந்த ராஜசேகரைத்தான். ஆனால் அவன் ஓடிவந்து அணைக்கவில்லை... நிதானமாக அல்லவா திரும்பிப் பார்க்கிறான்...

இருக்கட்டும்... ஆனானப்பட்ட விஸ்வாமித்திர ரிஷியையையே அசைத்துவிட்டாள் மேனகா... இந்த ராஜசேகர் எம்மாத்திரம்...

ஒரு பெண் நினைத்தால் எப்பேர்ப்பட்டவனையும் அடிமைப்படுத்தி விடலாம்... இதோ... நான் குழைந்து பேசினால் வெண்ணையாய் கரைந்து விடமாட்டானா...



புன்னகையுடன் அவனருகே சென்று அவனை அணைத்தாள்...

"ராஜா டார்லிங்... எத்தனை நாளாச்சு... நாம் இப்படி சேர்ந்திருந்து... இல்லே..'' கொஞ்சும் குரலில் சொன்ன மனைவியை ஒரு வினாடி உற்றுப்பார்த்தான் ராஜசேகர்.

"வேண்டாம் என்று உதறிவிட்டுப் போன நீயா சொல்றாய்... இத்தனைக்கும் காரணம் நீதான் ரத்னா...'' என்றான் அவன்.

"ஷ்ஷ்... பழசைப் பற்றிப் பேசவேண்டாமே ராஜ். நடந்தது எல்லாமே கெட்ட கனவாய் நினைத்து மறந்துவிடலாம்... ப்ளீஸ்... இப்ப நான் புது ரத்னாவா வந்திருக்கேன்... எப்போதும் உங்க கூடவே இருக்கணுங்கற முடிவோட வந்திருக்கேன்... என்னை நம்புங்க ராஜா...''

அவள் பேச்சிலிருந்து அவள் திருந்திவிட்டாளா... இல்லை சந்தர்ப்பத்திற்குத் தகுந்த மாதிரி தன்னை மாற்றிக் கொள்ளப் பார்க்கிறாளா என்று அறியமுடியாமல் திகைத்தான் அவன். என்ன செய்வது என்று அவனுக்குத் தெரியவில்லை... இதே ரத்னா... பானுவை மணப்பதற்கு முன் வந்திருக்கக் கூடாதா... இவளையே நினைத்து உருகிக் கொண்டிருந்தேனே... அப்போது வந்திருந்தால் இருகரங்களை நீட்டி வரவேற்றிருப்பேனே...

இல்லை.. பானுவை மனைவியாய் ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பு வந்திருந்தாலும் பரவாயில்லை... அப்போதும் என் மனதில் இருந்தது இவள்தானே...

ஆனால் பானுவின் கணவனாய்... அவள் வயிற்றில் வளரும் குழந்தைக்குத் தகப்பனாய் ஆனபின்பு இப்படி வந்து நின்றால்... என்ன செய்யமுடியும்... நல்ல துணைவியாய்... நல்ல தாதியாய் இருந்து பார்த்துக் கொண்ட பானுவுக்குத் துரோகம் செய்ய மனம் மறுக்கிறதே...

சே... என் எதிரிக்கும் இந்த நிலை வரக்கூடாது... யாருக்காக இத்தனை வருடங்களாக ஏங்கிக் காத்திருந்தேனோ... அவள்... இதோ கை தொடும் அருகில்தான்.

ஆனால் இவளைத் தொடவும் பிடிக்கவில்லை... ஏன்... எதை என்னைக் கட்டிப் போட்டிருக்கிறது...

பானுவின் மீது உள்ள அன்பா... தன் வாரிசைப் பெற்றுத் தரப் போகிறாள் என்ற அக்கறையா...

"என்ன... ராஜா... மௌனம் சம்மதம் என்று அர்த்தமா அப்ப என்னை மன்னிச்சாச்சு... அப்படித்தானே... எனக்குத் தெரியும். என் ராஜா என்னைக் கோவிக்கவே மாட்டார்னு... ஸோ... ஸ்வீட்..." என்று அவனது கன்னத்தை செல்லமாய் நிமிண்ட....

ராஜசேகர் அவளது கரத்தை ஒதுக்கினான்.

"இதோ பார் ரத்னா.. உன்னைத் திடீர் என்று பார்த்த அதிர்ச்சியில் தடுமாறிப் போய் ஏதேதோ பேசிவிட்டேன். இன்னும் குழம்பிப் போய்தான் இருக்கிறேன்.... என்னைத் தொந்தரவு செய்யாதே... ப்ளீஸ்... என்னைத் தனியாக விடேன்..."

சொல்லிவிட்டு கண்களை மூடிக் கொண்டான்.

ரத்னாவிற்கு அப்படியே விட்டுவிட மனமில்லை... எதையும் சாதித்து வழக்கமாகிவிட்ட அவளுக்கு தன் முகத்தில் அடித்தாற்போல பேசிவிட்டு அலட்சியமாய் அவன் கண்களை மூடிக் கொண்டது சினத்தை உண்டாக்கியது...

என்னையா உதாசீனப் படுத்துகிறாய்... பற்களைக் கடித்தாள்...

பார்த்துக் கொள்கிறேன்... மனசுக்குள் சவாலும் விட்டாள்.

அவளது காதில் தாயின் குரல் கிசுகிசுத்தது... "ஏய்... முட்டாள்... புத்திசாலித்தனமாய் நடந்து கொண்டு உன்



புருஷனைக் கைக்குள் போட்டுக்கப் பார்... இல்லாவிட்டால் உன்னோடு சேர்ந்து நாங்களும் தலைகுனிய வேண்டி வரும்..." உடல் விறைத்துக் கொண்டது...

அய்யோ... கூடவே கூடாது... அவனைத் தன் வசப்படுத்தியே ஆகவேண்டும்...

அதற்காக எந்த நிலைக்கும் இறங்கித்தான் ஆகவேண்டும் வேறு வழியில்லை...

தாழ்ந்து பழக்கம் இல்லாத அவள் கணவனின் அருகே அமர்ந்தாள்... மெல்ல அவன் முகத்தைத் திருப்பினாள்.

"ராஜ் டியர்... என் மீது கோபமா... அதானே இப்படி 'உர்' என்று இருக்கிறீங்க... தப்பு... தப்புன்னு என் கன்னத்தில் போட்டுக்கட்டுமா... இப்படி நீங்க ஒதுங்கி இருப்பது பார்க்க என்னால் முடியலே... நான் இன்னும் உங்க ரத்னாதான் என்பதைப் புரிய வைக்க எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க ராஜ்..." குரலை சர்க்கரைப் பாகாய் மாற்றிச் சொல்ல...

அவன் மசியவில்லை... பழைய ராஜசேகராய் இருந்தால் அவள் காலடியில் விழுந்திருப்பான்...

ஆனால் அவன் "இன்றைக்கு நாம் எதுவும் பேசாமல் இருப்பதே நல்லது... எனக்கும் மனசு சரியில்லை" என்று சொல்லிவிட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டான். அவனுடைய முதுகை வெறித்துக் கொண்டு நின்றிருந்தாள் ரத்னா.

இதற்கு மேலும் என்ன செய்ய முடியும்... அவன் மீது விழுந்து புரள முடியுமா என்ன... சே!

பேசாமல் விலகி இருப்பதே மேல்... பொருமலுடன் போய் தனியாகப் படுத்தாள்...

மறுநாள் அறையைவிட்டு வெளியே வந்தவள் பானுவைப் பார்த்துவிட்டு செல்லமாய் சோம்பலை முறித்தாள்...

பார்த்தாயா... புருஷனோட இருக்கிற உரிமை எனக்கு மட்டும்தான்... உனக்கில்லை என்பதுபோல ஒரு பார்வை...

பானுவின் உள்ளம் நோக வேண்டும் என்ற அவளது நோக்கம் வெற்றியும் கண்டது.

அவளது முகம் வேதனையில் வாடியது கண்டு எகத்தாளமாய் கறுவினாள்... 'நன்றாக வேண்டும்' அத்துடன் நிறுத்திக் கொண்டாளா...

ராஜசேகருக்கு தன்மீது இருக்கும் அன்பு இன்னும் மாறவே இல்லை என்று அனைவரும் நினைக்க வேண்டும் என்ற திட்டத்துடன் பேசினாள்.

காலை உணவு வேளையில் சாப்பாட்டு மேஜையைச் சுற்றி குடும்பத்தினர் அமர்ந்திருக்கும் வேளையில் சாதுர்யமாய் பேசினாள்.

''என்ன ராஜா... இன்னும் கொஞ்ச நேரம் தூங்கியிருக்கலாமே... பாவம்... ராத்திரி உங்களுக்கு சரியான தூக்கமில்லையே...'' கள்ளச்சிரிப்புடன் அவள் சொன்னபோது ராஜசேகர் அவளை வெறித்துப் பார்த்தான். சௌந்திரத்திற்கு வந்த கோபத்தில் அவளது கன்னத்தில் அறைய வேண்டும் போல இருந்தது.

க்ஹ்ம்... இப்படியா ஒரு பெண் லஜ்ஜையில்லாமல் பேசுவாள்.

பானுவின் மனசு துடிக்குமேன்னு பார்க்காமல் இது என்ன விவஸ்தைக் கெட்ட பேச்சு...

பானு தனிமையில் சௌந்திரத்திடம் விம்மியழுதாள். ''அத்தை... என்னால் தாளமுடியவில்லையே... நான் வேண்டாம் என்று ஒதுங்கினாலும் வேண்டும் என்றே வதைக்கிறாள். நான் என்ன செய்யட்டும்...'' என்று புலம்பினாள்.

அவளது கண்ணீரைத் துடைத்துவிட்ட சௌந்திரம் ''பானும்மா... கண்ட கண்ட நாய் குரைக்கறதைக் கேட்டு



குழந்தையை குழப்பிக்காதே... நீ நிறைமாத கர்ப்பிணிம்மா... நீ நிம்மதியா இருந்தா அது குழந்தைக்கும் நல்லது. ஏதோ தீராத காலம் இப்படி ஆட்டுவிக்கிறது... இந்தக் குழந்தை பிறந்தால் எல்லாம் சரியாகிவிடும்... பாரேன்... குழந்தை முகத்தைப் பார்த்ததும் ராஜசேகர் மனசுமாறி உன்னிடம் காரியமா இருப்பான்... அதுவரைக்கும் நீ பொறுமையா இருக்கணும்மா... நீ புத்திசாலியாச்சே...'' என்று ஆறுதலாய் சொன்னாள்.

பானு பொறுமைசாலிதான்... எல்லாத் துன்பங்களையும் சகித்துக் கொள்ளும் மனப்பக்குவம் உடையவள்தான்...

ஆனால் அந்தப் பொறுமையையும் சோதிக்கும் படியாக அல்லவா ரத்னாவின் பேச்சும் செய்கையும் இருக்கிறது.

அவளை எப்படிக் கண்டிக்க முடியும்... கண்டித்தாலும் அடங்கும் பிறவியா... ராட்சசியாயிற்றே... அவளை அடக்க வேண்டிய மகனே அடங்கிக் கிடக்கிறபோது தான் என்ன பேசமுடியும்...

சௌந்திரத்தினால் தன் மகனைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லை...

ரத்னாவைப் பார்த்ததும் மெழுகாய் கரைந்தவனிடம் மறுநாள் அந்த நெகிழ்வுத் தெரியவில்லை.

அவள்தான் கொஞ்சிக் குலவினாளேத்தவிர... அவன் ஒரு நடவையாவது 'ரத்னா' என்று அழைக்கவுமில்லை... பிரியமாய் பேசவும் இல்லை.

அது ஏன்... காதலுக்கும் கடமைக்கும் இடையே போராட்டமா... மனசாட்சியின் உறுத்தலா... அதுதான் புரியவில்லை.

ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயமாய் தெரிந்தது... குதிரைக்கு கண் திரைப் போட்டதுபோல... ரத்னாவின் அழகை மட்டுமே பார்த்துக் கிறங்கிப்போன ராஜசேகர் இப்போது இல்லை என்பதுதான்.

அதுமட்டுமில்லாமல்... அவனது உள்ளத்தின் ஒரு ஓரம் பானு இடம் பிடித்திருக்கிறாள் என்பதும் நன்றாய் தெரிந்தது.

இனி கடவுள்தான் வழிக்காட்ட வேண்டும்... பானுவிற்கு நல்வாழ்வு தரனும்.

அதற்காக ரத்னா மீது வெறுப்பும் இல்லை.. அவளும் இந்த வீட்டுக்கு மருமகளாய் வந்தவள்தான்... ஆனால் குடும்ப மானத்தைக் காற்றில் பறக்க விட்டுவிட்டுச் சென்றாளே என்ற மனத்தாங்கல்தான் சௌந்திரத்தின் கோபத்திற்கு காரணம்.

மறுபடியும் வந்தவள் திருந்தியிருக்கிறாள் என்று சொல்லவும் முடியவில்லை...

அதே கோபம்... அதே அலட்டல்... அதே அகம்பாவம்... அதே ஆர்ப்பாட்டம்... இன்னும் சுயநலம் மாறவில்லை.

அதுவும் குத்துவிளக்காய் சுடர்விடும் பானுவைக் கண்ட பின்பு... ரத்னாவின் துர்குணங்கள் இன்னும் பூதாகாரமாய் தெரிந்தன.

பானுவின் குணமே வேறு... அன்பு தேவதை அவள்... எந்த இருட்டு தேசத்திலும் தன் அன்புப் பார்வையால் ஒளியூட்டுவாள்.

ரத்னாவோ... கொள்ளி மாதிரி... எந்த அழகிய வீட்டையும் சுட்டுப் பொசுக்கும் கொள்ளி... இப்போது வந்திருக்கும் ரத்னாவின் பேச்சும் நடத்தையும் ஏனோ செயற்கையாகப் பட்டது சௌந்திரத்திற்கு. ஏதோ மேடையில் நடிப்பது போல போலியாக இயல்பாக இல்லாமல்... நாடகம் போல தெரிந்தது. திடீர் என்று வந்ததும்... ராஜசேகர் மீது வழிந்து விழுவதும்... இந்த வீட்டிற்கு நானே உரியவள் என்பது போல நடந்து கொள்வதும்...

எல்லாவற்றிற்கும் பின்னே ஏதோ ஒரு வலுவான காரணம் இருக்க வேண்டும் என்று பட்டது.



இதை தன் பிள்ளை உணர்ந்தானா... இல்லைக் கண் மூத்தனமாய் நம்பினானா என்று தெரியவில்லை. இவன் எப்போது விழிப்பானோ என்று தவித்தது அந்தத் தாயுள்ளம்.

எங்கேயோ புறப்பட்டுக் கொண்டிருந்தான் ராஜசேகர். ந்தயக் குதிரையைப்போல நடைப்போட்டு வந்த ரத்னா வனிடம் கொஞ்சிப் பேசினாள்.

"ராஜா... இன்றைக்காவது என்னை வெளியே அழைத்துச் செல்லுங்களேன்... வந்து ஒரு வாரம் ஆச்சு. வீட்டிலேயே அடைந்து கிடக்க போராக இருக்கிறது. ஞாபகம் இருக்கா... திருமணமான புதிதில் தினமும் ஜாலியா வெளியே சுற்றி வருவோமே..."

"எல்லாம் இருக்கிறது" சட்டைக்கு பித்தானைப்போட்ட வாறு சொன்னான் அவன்.

மேல் பித்தான் கழண்டு தொங்கியிருப்பதைப் பார்த்து முகம் சுளித்தான்.

அதை கவனித்த சௌந்திரம் "பானு... இங்கே வாம்மா... ஊசி நூல் கொண்டு வா..." என்றாள்.

ஊசி நூலுடன் வந்த பானு அதை அத்தையிடம் நீட்ட...

"எனக்கு கண் சரியாத் தெரியாது. அவனும் அவசரத்தில் இருக்கிறான்... நீயே தைத்து விடும்மா பானு..." என்றாள் சாமர்த்தியமாய்.

முதலில் தயங்கி விட்டு... பின் அத்தையின் கண் அசைவில் துணிவு பெற்றவளாய் கணவனை நெருங்கினாள்.

"ஏன் நான் தைக்கமாட்டேனாக்கும்... இங்கே கொடு..." என்று ரத்னா அதட்டலாய் கேட்க...

"உனக்கெதுக்கும்மா சிரமம்... பானு தைப்பதில் திறமை சாலி... தையல் வேலை நன்றாய் வரும். ஐந்து நிமிஷத்தில் தைத்து விடுவாள்... பாரேன்..." என்று சொன்னாள் சௌந்திரம்.

கணவனின் முகத்தைப் பார்க்காமல் பித்தானை இழுத்துப் பிடித்து தைத்தவள்... நூலை பற்களால் அழுத்தித் துண்டித்தாள்.

குனிந்திருக்கும் அவளையேப் பார்த்துக் கொண்டிருந்த ராஜசேகரின் கண்களில் கனிவு தெரிந்ததைப் பார்த்து சௌந்திரம் உள்ளம் குளிர்ந்து போனாள்.

தைத்துவிட்டு திரும்பியவளை ''பானு'' என்று அழைத்தான் அவன்... அந்த அழைப்பில் குழைவுகண்டு கண்கள் மின்ன அவனைப் பார்த்தாள் பானு.

''ஏன் பானு... மருந்து மாத்திரைகளைத் தவறாமல் சாப்பிடுகிறாய் தானே... ஏம்மா... பானு இளைத்த மாதிரி இல்லை... டாக்டரிடம் அழைத்துப்போய் காட்டட்டுமா...'' என்று அக்கறையாய் அவன் கேட்க...

'சார்ஜ்' செய்த 'செல்' போல சௌந்திரம் சுறுசுறுப்பு பெற்றாள்.

இதுதான் சரியான தருணம்.

இரும்பை இளகியிருக்கும் போது அடித்தால்தான் வளையும்... இந்த சந்தர்ப்பத்தை நழுவ விட்டால் போச்சு...

''ராஜா... ஒருவாரமாய் பானு சரியாக சாப்பிடுவதில்லை. ஏன் தெரியுமா... நீ விசாரிப்பதே இல்லையாம். அவள் கருவுற்றதும் கண்ணுக்குள் வைத்து தாங்கினாய். இந்த ஒருவாரமாய் எந்த முனி உன்னைப் பிடித்துக் கொண்டதோ தெரியல்லே... பேயறைந்தவன் மாதிரி ஆயிட்டே... பார்... ஒரு வாரத்தில் பானுவின் கழுத்து எலும்பு தெரிய ஆரம்பித்து விட்டது. என்னதான் இருந்தாலும் கட்டின புருஷன் கவனித்துக் கொண்டதுபோல் இருக்குமா ஒரு வயிற்றுப் பிள்ளைக்காரிக்கு...''

உறைக்கிறார் போல சொன்னாள் சௌந்திரம்.



''இப்ப ஒரு முக்கியமான விஷயமாய் வெளியூர் போக வேண்டும்மா... கார் இங்கேதான் இருக்கும்... அவசரத் துக்குத் தேவைப்படும்... நீங்கள் முதல் வேலையாய் பானுவை அழைத்துச் சென்று டாக்டரிடம் காட்டுங்கள்... பானு... வரட்டுமா... அம்மா பார்த்துக் கொள்வார்கள்... இரண்டே நாள்தான்... வந்துவிடுவேன்...''

பானுவிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்டவன் நாலு எட்டு வைத்தவுடன் நினைவுக்கு வந்தவனாய் ''ஆங்... மறந்துவிட்டேனே... ரத்னா... வரட்டுமா'' என்று அவளிடமும் சொல்லிக் கொண்டு சென்றான்.

ரத்னாவின் உள்ளம் கொல்லன் பட்டறையில் இருக்கும் ஊதுலையாய் கொதித்தது.

ஏற்கனவே கள் குடித்த குரங்கிற்கு தேளும் கொட்டினாற் போல ஆனது கதை.

வெளியே என்னை அழைத்துப் போங்கள் என்று கெஞ்சியதை இந்த காதில் வாங்கி மறுகாதில் வழியே விட்டுச் சென்றதோடு மட்டும் அல்லாமல் பானுவை குசலம் விசாரித்துவிட்டுப் போகிறானே...

அதாவது என்னைக் குப்பையாக ஓரம் கட்டிவிட்டுப் போகிறான்... பற்களை நறநறத்தாள்.

எல்லாவற்றிற்கும் இந்த கிழட்டுப் பிசாசுதான் காரணம். பானுவை அவன் விசாரிக்கவில்லையாம்... ரொம்பத் தேவைதான்...

வேண்டும் என்றே எனக்கு எதிராக போர்க் கொடிக்காட்டு கிறாள் இந்தக் கிழவி... அதற்குத்தான் இந்த வக்காலத்துப் பேச்சு.

ஒரு வாரமாய் முனி பிடித்திருக்கிறது என்கிறானே... நான்தானா அந்த முனியும் பேயும்... அப்படியே இருக்கட்டும். முனி மாதிரி இவளை ஆட்டுவிக்கப் போகிறேன்.

பேய் மாதிரி ஓடஓட விரட்டுப் போகிறேன்... நான் யார் என்பதை இவர்களுக்குக் காட்டத்தான் போகிறேன்.

ராஜசேகரை என்கைக்குள் போட்டுக் கொண்டு இந்தக் கிழட்டுப் பூனையை அடித்து விரட்டணும்... அவளுடன் இவளையும் தான்...

ஆனால்... கணவன் தன் கைக்குள் சிக்கமாட்டேன் கிறானே... விலாங்கு மீனாய் அல்லவா நழுவுகிறான்.

ஆத்திரமும் கோபமும் தலைக்கேறியது. அதை யார் மீதாவது காட்டியாக வேண்டும் என்ற வெறி...

அது பானு பக்கம் திரும்பியது.

அடடா... என்ன சாகசம்... என்ன நடிப்பு... அத்தை மெச்சும் மருமகளாமே! இந்தப் பூனையும் பால்குடிக்குமா என்ற வேஷம்... அப்பாவி மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு கணவனைக் கைக்குள் போடப் பார்க்கிறாள் அதுக்கு அந்த அத்தைக் கிழவி உடந்தை... இருவருமா சேர்ந்து என்னை ஏய்க்கப் பார்க்கிறார்களாக்கும். முதல்ல சின்னவளுக்கு நான் யார் என்று காட்டறேன். அப்புறம் அந்தக் கிழட்டு நரிக்கு...

உள்ளத்தின் ஆத்திரம் எல்லாம் கையினுள் நுழைந்து கொள்ள.. அந்தக் கை பானுவின் கன்னத்தில் பதிந்தது...

ஐந்து விரல்களும் சிவந்த வரிகளாய் விழுந்து... கன்னம் தீயாய் தகித்தது.

பானு விக்கித்து நின்றாள்.



13

சாவுடன் போராடிக் கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஒரு துளி அமிர்தம் கிடைத்தும் உயிர் பிழைத்துக் கொண்டது போல...



நீரே இல்லாமல் வாடி... வதங்கிக் கொண்டிருந்த யிருக்கு சில மழைத்துளிகள் பட்டதும் துளிர்த்தது போல... நீரில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருந்தவனுக்கு சிறு ட்டைக் கிடைத்துக் கரைசேர்ந்தது போல...

ராஜசேகரின் இதமான சில வார்த்தைகள் சஞ்சீவினியாய் பானுவிற்கு வலுவூட்டியது...

உள்ளம் தெளிந்து... உடம்பும் தேறியது...

இது போதுமே... கணவனின் உள்ளத்தில் இன்னும்தான் இருக்கிறோம்... தன் விஷயத்தில் ஒரேயடியாய் வரண்டு போகவில்லை.

இந்தச் சின்ன விசாரிப்பே போதுமானதாக இருந்தது. அதுவே காயகல்பமாக இருந்து வேலை செய்தது.

பானுவின் முகத்தில் தெரிந்த தெளிவையும்... இதழ்களில் பூத்த புன்னகையும் கண்டு சௌந்திரம் ஆறுதல் அடைந் தாள்...

அதே சமயம்... அடிபட்ட நாகமாய் பொருமிக் கொண் டிருக்கும் ரத்னாவையும் அவள் மறக்கவில்லை.

ராஜசேகர் பானுவின் நலத்தை அக்கறையாய் விசாரித் ததும்... அவளை டாக்டரிடம் அழைத்துப் போகும்படி கரி சனத்துடன் சொன்னதும்... பானுவின் தேவைக்காகக் காரை விட்டுச் சென்றதும் பார்த்து ரத்னாவின் முகத்தில் குரோதம் பொங்கியது. அதை சௌந்திரம் கவனிக்கத் தவறவில்லை.

அகத்தின் அழகை மட்டுமா முகம் காட்டுகிறது... உள்ளத்தின் வக்கிரத்தையும் அல்லவா காட்டுகிறது.

அனுபவம் மிக்க சௌந்திரத்திற்கே ரத்னாவின் முகத்தில் தெரிந்த அசூயையையும்... குரோதத்தையும் பார்த்து அச்சம் ஏற்பட்டது.

அவள் எதுவும் செய்வாள்... எந்த அளவுக்குச் செல்லவும் தயங்க மாட்டாள்... அவள் குணம் அப்படி....

இன்றைய தொலைக்காட்சி மெகாத் தொடர்களில் வரும் வில்லிகளைப் போல எதற்கும் துணிந்தவள். அவளால் பானுவிற்கு எதுவும் ஆகக்கூடாது. பானுவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

முக்கியமாய் மாடிப்பக்கம் போகாதே என்று சொல்ல வேண்டும்...

ரத்னாவின் மூச்சுக் காற்று கூட தீயாய் எரித்து விடும். ரத்னா வந்ததும்... பானு தன் உடைமைகளை எல்லாம் கீழ் அறைக்குக் கொண்டு வந்து விட்டாள். ரத்னா தனது உடைமைகளையெல்லாம் மாடியில் வைத்துக் கொண்டதும் ஒரு காரணம்.

ஒன்பது மாதம் வரை மெல்ல மாடியேறி கணவனின் தேவைகளைக் கவனிப்பதும்... அவனது துணிகளைப் பார்த்து எடுத்து வந்து துவைக்கப் போடுவதும்.. இஸ்திரி போட்ட உடைகளை எடுத்துக் கொண்டு போய் வைப்பதும் போன்ற வேலைகளைப் பார்த்துத்தானே செய்வது வழக்கம்.

ரத்னாவும் அப்போது வேலைகளை ஏவுவாள். குடித்த காபி டம்ளரைக் காட்டி ''எடுத்து போ'' என்று அதிகாரம் செய்வதும்... தன் துணிகளை எடுத்துப் போட்டு ''இதையெல்லாம் துவைக்கப் போடு'' என்று ஆணை இடுவதும்... சேர்த்து வைத்த குப்பைகளை அவளிடம் கொடுத்து ''சுத்தம் பண்ணு'' என்று உத்தரவு போடுவதும்... ஆக... நான் இந்த வீட்டு ராணி... நான் சொல்வதைக் கேட்டு நீ நடந்தால் உண்டு... ''நீ என் வேலைக்காரி'' என்ற தோரணையில் நடந்து கொள்வாள்.



பொறுத்துக் கொண்டாள். தன் கணவனின் கோபத்தையும் வெறுப்பையும் சம்பாதித்துக் கொள்ளக்கூடாது என்ற எண்ணம்தான் காரணம்.

ரத்னா தன்னை இழிவாக நடத்தினாலும் பரவாயில்லை. வேலைக்காரியாய் நினைத்து அதிகாரம் செய்தாலும் சரி... அதை எதிர்க்காமல் வாய் மூடிக் கொண்டிருப்பதுதான் உசிதம் என்று உணர்ந்து கொண்டாள். ரத்னா சண்டிக் குதிரை... அவளை யாராலும் அடக்க முடியாது. அவளை அடக்கி வைக்கும் திறமை ராஜசேகரிடம்தான் இருக்கிறது. அவர் அதைப் புரிந்து கொண்டால் சரி...

ஆனால்... பானு படும் கஷ்டங்களைப் பார்த்து வேலையாட்களும் தவித்துப் போனார்கள்.

ரத்னா இந்த வீட்டிற்கு மருமகளாக வந்தபோது சொர்ணம் வேலைக்காரியாக இருந்தாள்.

டிரைவர் கண்ணன்... சமையல்காரர் சுப்பிரமணி தோட்டக்காரன் நல்லமுத்து இவர்களுக்கெல்லாம் ரத்னாவின் குணம் நன்றாகத் தெரியும்...

ஆனால் சந்திரா சமீபத்தில் வேலைக்குச் சேர்ந்ததால் ரத்னாவைப் பற்றித் தெரிய நியாயமில்லை.

சொர்ணமும் சமையல்காரரும் நீண்ட காலமாய் அந்த வீட்டில் உழைத்துக் கொண்டிருப்பதால் மற்றவர்களை விட உரிமையும் சலுகையும் சற்று அதிகம்...

ரத்னாவின் அடாவடித்தனத்தைப் பார்த்து முகம் சுளித்த வேலைக்காரர்கள் அவள் சென்ற பின்பு... அப்பாடா பீடை தொலைந்தது என்று மூச்சு விட்டார்கள்.

ரத்னாவுடன் சேர்ந்து வாழ்வதைவிட சின்ன ஐயா ஒண்டியாக வாழ்வதே மேல் என்று கூட நினைத்தார்கள்.

பெரியவர்களிடம் காட்டும் மரியாதையும் மாமியாருக்குச் செய்யும் பணிவிடையும்... கணவனை அக்கறையுடன் கவனித்துக் கொள்ளும் பண்பும் ஏன்... வேலைக்காரர் களையும் மதித்துப் பேசும் குணமும் கண்டு அவள் மீது மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டது.

"சின்னம்மா... சின்னம்மா" என்று அன்பைக் காட்டினார்கள்.

சொர்ணம் சௌந்திரத்திடம் பலமுறை சொல்லிப் புலம்பி விட்டாள்.

"அம்மா... நம்ம பானும்மா இந்த வீட்டுக்கு லட்சுமி மாதிரி... மருமகன்னா இப்படித்தான் இருக்கணும். முதல்லேயே கட்டி வச்சிருந்தா. நம்ம சின்ன அய்யா சந்தோசமா இருந்திருப்பாங்க... அந்த ரத்னாம்மாவும் வந்து ஆட்டம் போட்டிருக்க முடியாது... ஏதோ இப்பவாவது சாமி கண்ணு தொறந்து பார்த்துச்சே... தினமும் புள்ளைக்கு திருஷ்டி சுத்திப் போடுங்கம்மா... ஒரு கண்ணு மாதிரி ஒண்ணு இருக்காது..."

பானுவைப் பார்த்து "அம்மா.. என் ராசாத்தி... நீ நல்லா இருக்கணும்... குழந்தை குட்டியோட சந்தோசமா இருக் கணும்..." என்று வாழ்த்தவும் தவறமாட்டாள்.

சந்திராவோ... சின்னம்மாவின் பின்னே நாய்க்குட்டி மாதிரி ஓடுவாள்.

சுப்பிரமணிக்கு.. பானுவைப் பார்க்கும்போதெல்லாம் தன் மகள் நினைவு வரும்... தன்னையும் அறியாமல் அவள் மீது பரிவு வந்தது.

டிரைவரையும்... தோட்டக்காரரையும் பொறுத்தவரை பானு ஒரு தேவதை.

அவளது கண்ணசைவில் ஓடி வந்து குழைந்து.. கைகட்டி நிற்பார்கள்.



ரத்னா மறுபிரவேசம் செய்ததும் சொர்ணம் மற்ற வேலைக்காரர்களை எச்சரித்து வைத்தாள்.

"அந்த அம்மா கிட்டே உஷாரா இருங்க... யாரும் அவக்கிட்டே வாய் கொடுக்க வேணாம். பிடாரி அது. கட்டின புருஷனையே ஆட்டி வைக்கிற பஜாரி... நம்மை ஊதித் தள்ளிடும்..."

அதனால்தான் ரத்னாவைக் கூடிய வரையில் தவிர்த்து வந்தனர்.

அவர்களைப் பொறுத்தவரை... ரத்னா ஒரு அரக்கி. இரண்டு கொம்புகள் வளராத... கோரப்பற்கள் முளைக்காத கொடும் ராட்சசி.

அவ்வப்போது வேலையாட்கள் சேர்ந்து பேசுவார்கள். அப்போதெல்லாம் அவர்கள் பேசுவது ரத்னாவைப் பற்றித் தான்...

ரத்னாவின் துர்குணங்களையும்.. பானுவின் இனிய பண்புகளையும் ஒப்பிட்டுப் பேசுவது வழக்கம்.

பானுவிற்கு விழுந்து விழுந்து பணிவிடை செய்து.. அவளது ஏவலுக்காகக் காத்திருக்கும் பணியாட்கள் தன்னைப் பார்த்து முகம் திருப்பிக் கொள்வதையும்... உதட்டைச் சுளித்து அலட்சியமாய்ப் பார்ப்பதையும் ரத்னா கவனிக்கத் தான் செய்தாள்.

ஆகா... என்ன ராஜோபசாரம்... என்ன உபசரிப்பு... எதுவும் இல்லாமல் எங்கிருந்தோ வந்தவளுக்கு ஏகப்பட்ட மரியாதை!

வாரம் தவறாமல் பானுவிற்கு எண்ணெய் வைத்துக் குளிப்பாட்டி விடுகிறாள் சொர்ணம்.

அவளது கூந்தலை உலர்த்தி சாம்பிராணிப் புகை போட்டு விடுவது சந்திரா.

அப்புறம்... பசியோடு இருக்கிறாளாம். சுடச்சுட திண்டி வகைகளை செய்து தட்டில் வைத்து ''உங்களுக்காகவே செய்தேன்ம்மா'' என்று பணிவுடன் தரும் சமையல்காரர்...

தோட்டக்காரர் மட்டும் சும்மாவா... வாசனையாய் செண்பகப் பூக்களைப் பறித்து வந்து தருகிறார். சாதிப் பூ... குண்டு மல்லிகை என்று கை நிறையக் கொண்டு வந்து சொர்ணத்திடம் தந்து ''சின்னம்மாவுக்குக் கட்டிக் கொடு.. தலை நிறைய வச்சுக்கட்டும்'' என்ற சிபாரிசு வேறு...

என்னவோ... இந்த சாம்ராஜ்யத்து அரசி மாதிரி அல்லவா அனைவரும் கொண்டாடுகிறார்கள். பார்க்கப் போனால் நான் தான் இந்த அரண்மனைக்கு ராணி.. என்னை மதிக்காமல் இந்த பரதேசிக் கழுதையை சிம்மாசனத்தில் வைத்துக் கூத்தடிக்கிறார்களே...

எரிகிற நெருப்பில் எண்ணெய் என்ன.. பெட்ரோலையே ஊற்றியதுபோல அவளைக் கொதிக்கச் செய்தது.

உள்ளம் கொந்தளிக்கும் கடலானது... தனக்குக் கிடைக்காத மதிப்பும் மரியாதையும்... கவனிப்பும் பானுவிற்குக் கிடைப்பது கண்டு அவளுக்குள் ஒரு எரிமலையே வெடித்தது...

அத்தோடு ராஜசேகரின் கரிசனமும் வேறு... ராஜசேகர் ஊருக்குப் போனதும்... அன்று மாலையே தன் முகத்திரையைக் கிழித்தாள்.

வேண்டும் என்றே வேலைக்காரர்கள் முன்னே ''ஏய்.. பானு... என்ன... கூப்பிடுவது காதில் விழாத மாதிரி போற...'' என்று வம்புக்கு இழுத்தாள்.

பானுவுக்குத் திகைப்பு... ரத்னா அழைத்தாளா... இல்லையே... அழைக்காமலே இது என்ன குற்றச்சாட்டு.

ஓ! ஏதோ வம்புச் சண்டைக்கு அடி போடுகிறாள். அதற்கு இடம் தரக்கூடாது. என்று முடிவுக்கு வந்தாள் பானு.



''என்ன வேண்டும் ரத்னாக்கா'' என்று வினயத்துடன் கேட்டாள்.

''ராஜாவோட பீரோ சாவி எங்கேடீ... காணோம்.''

அவளையும் அறியாமல் பானுவின் கை இடுப்புப் பக்கம் போனது.

''ஏன்... எதுக்கு?''

''அது உனக்குத் தேவையில்லாத விஷயம்... கொடு இங்கே..'' அதட்டும் குரலில் சொன்னாள் ரத்னா.

''உங்களுக்கு என்ன வேண்டும் என்று சொன்னால் அதை எடுத்துத் தருகிறேன் ரத்னாக்கா...''

''ஏன்... நான் தொட்டால் பீரோ திறக்காதோ...'' எகத்தாளமாய் கேட்டாள் ரத்னா.

''இல்லேக்கா... ஆபீஸ் சம்பந்தமான பைல்களையெல்லாம் பீரோவின் மேல் தட்டில் வைத்திருப்பதால் அத்தையிடம் சாவி கொடுத்து வைப்பது வழக்கம். அத்தை... தனக்கு மறதி அதிகம்... சாவி தொலைந்து விடும் என்று என்னிடம் கொடுத்து வைத்திருக்கிறார்... அவ்வளவுதான்...''

''ஏய்... முதலில் இதைத் தெரிந்து கொள்.. இந்த வீட்டில் ஒவ்வொன்றுக்கும் எனக்குத்தான் முதல் உரிமை இருக்கிறது... வக்கு இல்லாமல் வாழ்க்கைப்பட்ட அனாதை நாய் நீ... உனக்கு ஏது உரிமை... இதையெல்லாம் தொட... வாயை மூடிக் கொண்டு கொடுத்து விட்டுப் போ...'' அவளது இடுப்பிலிருந்து சாவியைப் பிடுங்க முயன்றாள் ரத்னா.

''இருங்கக்கா.. அத்தைகிட்ட ஒரு வார்த்தை... ஆ!''

பேயறையாய் ரத்னா அறைந்ததும் பானு திடுக்கிட்டுப் போனாள்.

ஒரு பெண்ணின் கைக்கு இத்தனை பலமா... ரத்னாவின் முரட்டுக் குணம் தெரிந்த விஷயம்தான். ஆனால் இப்படிக் கன்னத்தில் அறையும் அளவுக்குச் செல்வாள் என்று பானு எதிர்பார்க்கவும் இல்லை. காதில் 'உய்ய்' என்று ஒலம்.. கன்னத்தில் எரிச்சல்.. அதனால் கண்கள் அழுதன.

அங்கு வந்த அத்தையிடம் ஓடிச் சென்று தோளில் முகம் புதைத்து விம்மினாள்.

வேலைக்காரர்கள் பதைத்துப் போனார்கள்.

சொர்ணம் தாங்க முடியாமல் கேட்டாள்.

"என்னம்மா இந்த முசுடுத்தனம். பாவம்... பிள்ளைத் தாச்சிப் பொண்ணை இந்த அடி அடிச்சிருக்கியே. ஐயா இருந்திருக்கணும் இப்ப..."

"வாயை மூடிக் கொண்டு போடி... வேலைக்கார நாயே... வாங்கற பிச்சைக்காசுக்கு வாய் கிழியப் பேசறது பாரு... எல்லோருமா இவளைத் தலை மேலே தூக்கி வச்சு ஆடுங்க... அதான்.. இவளுக்கு உடம்பு முழுக்கத் திமிர்." ஆங்காரமாய் கத்தினாள் ரத்னா...

கோபத்தில் அவளது முகம் விகாரமாய் ஆனது.

சௌந்திரம் பானுவின் முகத்தை நிமிர்த்தி அடிபட்டக் கன்னத்தைக் கூர்ந்து கவனித்தாள்...

ரத்த சிவப்பில் ஐந்து விரல்கள் பதிந்த அடையாளம்..

கோபத்துடன் ரத்னா பக்கம் திரும்பினாள்.

"ஒரு பெண்ணிற்கு இத்தனை திமிர் கூடாது ரத்னா... என்னதான் உனக்குப் போட்டியாய் வந்தவள் என்ற ஆத்திரம் வந்தாலும்... பிள்ளை வயிற்றுக்காரின்னு எல்லாப் பெண்களுக்கும் வருகிற இரக்கமும் அக்கறையும் உனக்கு ஏன் இல்லை... பேருக்குத்தான் பெண் ஜன்மம்... ஆனா



...ருக்குத் தக்க குணங்களில் ஒன்றையும் காணோம்..." என்று சொன்னாள்.

அவ்வளவுதான்... எண்ணெயில் விழுந்த கடுகாய் பொரிந்தாள் ரத்னா...

"ஏய்... அத்தையம்மா உனக்கு ஆரம்பத்தில் இருந்தே என்னைப் பிடிக்காது. எனக்கும் உன்னைக் கண்டால் ஆகாது... இப்ப மட்டும் எனக்குப் பரிந்தா பேசுவே... இதோ பார்... உன்னோட நோக்கம் என்னன்னு எனக்கு நல்லாவே தெரியும்... இங்கிருந்து என்னை விரட்டிடணும்... அதானே... அதுதான் முடியாது... இங்கிருந்து நான் ஓடுகிறேனா.. இவள் ஓடுகிறாளான்னு பார்க்கிறேன்... அப்படியே நீயும் போய்த் தொலைந்தால் தேவலை... ராஜா வந்ததும் இதற்கு ஒரு முடிவு கட்டறேன்... இரு..."

தன் கோபத்தை 'டப் டப்' உதைத்துக் கொண்டு மாடியேறியதில் காட்டினாள்.

அவள் செல்லும் வரை ஏதும் எதுவும் பேசாமல் இருந்த சௌந்திரம் ரத்னா கண்களில் இருந்து மறைந்ததும் அடிக் குரலில் வேலைக்காரர்களிடம் எச்சரித்து வைத்தாள்.

"யாரும் ராஜசேகரிடம் இதுபத்தி மூச்சு விட வேண்டாம்.. இந்த லங்கிணி வந்ததிலிருந்து அவனும் மனதால் துவண்டு போயிருக்கிறான். நடந்ததைச் சொல்லி மேலும் அவனை நோக வைக்க வேண்டாம். என்ன... புரிஞ்சுதா... நீங்க போங்க..." என்று அனுப்பி வைத்து விட்டு பானுவிடம் சொன்னாள்.

"தங்கம்... அவள் கிடக்கிறாள்... இனிமே அவள் இருக்கும் பக்கமே போகாதே... அந்த சாவியை என்கிட்டே கொடு.. என்கிட்டே கைநீட்டிப் பார்க்கட்டும்... அந்தக் கையை ஒடித்துப் போடுகிறேன்.. ராட்சசி.. என்னமாய் உன்னை

அடித்து விட்டாள். என்ன கர்மம் செய்து இந்த மாதிரி ஒருத்தியை மருமகளாக அடைந்தேனோ...''

சௌந்திரத்தின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டு யாரும் வாயைத் திறக்கவும் இல்லை.

ஆனால் ராஜசேகருக்கு விஷயம் தெரிந்தது...

ரத்னாதான்... வேறு விதமாய் திரித்து... உப்பு... காரம்... மசாலா எல்லாம் சேர்த்து அவனுக்குச் சொன்னாள்.. இதை யாரும் எதிர்பார்க்கவில்லை...



## 14

ராஜசேகர் எந்த விஷயமாய் எந்த ஊருக்குச் சென்றான் என்று சௌந்திரத்திற்குத் தெரியவில்லை.

முன்னே எல்லாம் தாயிடம் விபரம் சொல்லிவிட்டுச் செல்வான்... ஆனால் இந்த முறை அவன் எதுவுமே சொல்லாமல் கிளம்பியதுதான் வியப்பாக இருந்தது.

அதனால் சௌந்திரம் வருத்தப்படவில்லை.

வளர்ந்த பிள்ளை... ஒவ்வொன்றையும் தாயிடம் சொல்லிக் கொண்டிருக்க முடியுமா என்ன...

அப்படி எதிர்பார்ப்பதும் தப்பு.

வியாபார விஷயமாய் போயிருக்கலாம்.

இல்லை... ரத்னாவின் வரவால் ஏற்பட்டிருக்கும் மனக் குழப்பத்திலிருந்து தெளிவு பெற வேண்டி வெளியூர் போனானோ என்னவோ...

ஒரு விஷயத்தில் அந்தத் தாய்க்கு சந்தோஷம்தான். முன்னைப் போல ராஜசேகர் கண்களை மூடிக் கொண்டு



இருக்கவில்லை... ரத்னாவிடம் உள்ள குறைகளைப் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான்.

அது மட்டுமல்ல... முன்பெல்லாம் காலைச் சுத்தி வரும் செல்லப் பிராணியாய் ரத்னாவைச் சுற்றிக் கொண்டிருப்பான்... அவளே கதி என்று கிடப்பான். இப்போது அதுவும் மாறிப் போய்விட்டது.

அந்த ஆத்திரம் தானே அவளுக்கு... நல்லா வேண்டும். என் பிள்ளை முழித்துக் கொண்டு விட்டான்... இனியும் ஏமாற மாட்டான்... கொஞ்சம் கொஞ்சமா அவளை ஓரம் கட்டி... கடைசியில் ஊருக்கு மூட்டைக் கட்டி அனுப்பி விடப் போகிறான்... அதுதான் நடக்கப் போகிறது.

என்னவோ... தான் சொன்னதும் தலை வணங்கி கேட்பான் என்று கனவு காண்கிறாள் ரத்னா... இனிமேதான் அவளுக்கு இருக்கிறது... பழைய அசட்டு ராஜசேகர் இல்லை என்று தெரிந்ததும் அலறி அடித்துக் கொண்டு ஓடுவாள்...

போகிறபோது பானுவிடம் பரிவாகப் பேசிட்டுப் போனான். வந்ததும் நிச்சயமாய் அவளை அன்போடு கவனிப்பான். அதைப் பார்த்து வயிறு எரியப் போகிறாள் அந்த ராட்சசி. பாவம்.. பானு.. இனிமேலாவது நிம்மதியா இருக்கணும். அதுதான் நான் தெய்வத்திடம் வேண்டறது...

ஆனால் நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் மனிதனும் தெய்வமாகி விடுவானே...

அதனால் தான் சில சமயம் நினைப்பதற்கு எதிர்மாறாய் நடந்து விடுகிறது.

சௌந்திரத்தின் நிம்மதியும் சந்தோஷமும் தவிடு பொடியாகும் என்று அவளே நினைக்கவில்லை.

வெளியூருக்குப் புறப்படுமுன் பானுவின் கணவனாகச் சென்றவன் திரும்பி வந்தபோது ரத்னா தாசனாக மாறி இருந்தான்.

'பழையக் குருடி... கதவைத் திறடி' என்ற கதைதான்.

வந்தவுடன் பானு எப்படி இருக்கிறாள் என்ற விசாரிப்பு இல்லை...

"அம்மா... ரத்னா எங்கே காணோம்" என்ற கேள்வி தான்.

"அவ மாடியில்தான் இருக்கா... என்ன விஷயம் ராஜா.. ஏதாவது தேவைன்னா... பானுவை..."

"அதெல்லாம் வேண்டாம்... ரத்னாதான் இருக்கிறாளே.. பானுவை ஏன் தொந்திரவு செய்யணும்.. ரத்னா... ரத்னா.." என்று அழைத்துக் கொண்டே மாடி ஏறினான் ராஜசேகர்.

இதைத்தான் வேதாளம் மரம் ஏறியது என்பதோ.. நீண்ட நேரமாகியும் இருவரும் கீழே இறங்கி வராதது வியப்பாக இருந்தது.

ஒரு வழியாய் அவன் இறங்கி வந்தபோது அவன் முகம் செவசெவ என்று இருந்தது.

பின்னாலே வந்த ரத்னாவின் முகத்தில் எகத்தாளம்..

"என்னம்மா... நானில்லாத நேரத்தில் ரகளையெல்லாம். நீங்க இருந்துமா இப்படி நடந்தது. ரத்னாதான் சாவி கேட்டாள். பானு எதுக்கு மறுத்துப் பேசணும். ரத்னாவிற்கு இல்லாத உரிமையா... முதல்ல எனக்கு மனைவியா வந்தவ ரத்னா. அவளைத் தூக்கி எறிந்து பேசுவதோ... இல்லை அலட்சியமா நடத்துவதோ எனக்குக் கொஞ்சமும் பிடிக்காது... அப்புறம்... வேலைக்காரர்களுக்கும் சொல்லி வையுங்கள்... ஒதுங்கி இருக்கும்படி..." என்றான் காரமாக.

அருகில் இருந்த ரத்னாவின் முகத்தில் சூரியனின் பிரகாசம்... இன்னும் என் ராஜாதான்... மாறவே இல்லை.

விடைக் கோழியாய் தலை நிமிர்ந்து நின்றது. முகத்தில் என் புருஷன்தான்... எனக்கு மட்டும்தான் என்னும் கர்வம்.



ளந்திரத்திற்கு எரிச்சலும் கோபமும் தலைக்கேறியது. ப்படியா ஒருத்தன் பொண்டாட்டி சொல்வதற்கெல்லாம் ம் பூம் மாடாய் தலையாட்டிக் கொண்டிருப்பது... என் ள்ளை முழித்துக் கொண்டு விட்டான் என்று நினைத் தேனே... இன்னும் மயக்கத்திலேயே இருக்கிறானே...

இப்படியே விட்டால் இன்னும் எகிறுவாள் இந்த டகை. அதற்குள் ஒரு குட்டு வைக்கணும்...

"ராஜா... விவரம் புரியாமல் என்னடா பேசறே... நான் சொல்லக் கூடாதுன்னு இருந்தேன். ஆனா நீ சொல்ல ச்சுட்டே... ரத்னா வந்த பிறகு இங்கே நடக்கிற கூத்துக்கு ரம்பே இல்லை... நிறை மாத கர்ப்பிணியை கையை நீட்டி டிச்சா... அதைப் பார்த்துக் கொண்டு இருக்கச் சொல் றயா... ரத்னா இங்கே மருமகள்னு எனக்குத் தெரியும்... னா அவ அப்படியா நடந்துக்கறா... சின்னச் சின்ன ஷயத்துக்கெல்லாம் ஆர்ப்பாட்டம்... ரகளை... முதல்ல வளை அமைதியா பேசச் சொல்லு... அப்புறம் எங்களை டக்குவாயாம்..." என்றாள் காட்டமாக...

"பார்த்தீர்களா... பார்த்தீர்களா... நீங்க இருக்கிறப்பவே ப்படி பேசுகிறார்கள்... நீங்க இல்லாதப்போ சும்மா ருந்திருப்பார்களா... ராஜா... வரவர எனக்கு இங்கே ரியாதையே இல்லை... எல்லோரும் இந்த பானுவிற்குத் தான் சிபாரிசு... என்னைக் கண்டாலே அத்தைக்கும் பிடிக்க வில்லை ராஜா... என்னை இங்கே இருந்து ஓட்டிட கும்பலா தி செய்கிறாங்க தெரியுமா... இவ... நேத்திக்கு வந்தவ... என்னிடம் எப்படித் திமிரா நடந்துக்கறா தெரியுமா. அடேயப்பா... என்ன திமிர்... என்ன கொழுப்பு..." பரி தாபமாய் முகத்தை வைத்துக் கொண்டு கணவனிடம் புகார் கூறுவதைப் பார்த்து சௌந்திரம் கொதித்துப் போனாள். சே! இப்படியும் ஒரு பெண்ணா... குடும்ப நிம்மதியைக் குலைக்க வந்த கொடுசூரி...

சரி... மகனும் இவள் பேச்சை நம்புகிறானே... பானுவின் மீது கொஞ்சமாவது பச்சாதாபம் வேண்டாமா... என்னடா பானு அந்த அளவுக்குப் போவாளா என்று யோசனை பண்ண வேண்டாம்... இப்படியா... கண்டதே காட்சி... கொண்டதே கோலம்னு ஒருத்தன் இருப்பான்...

இவன் என் பிள்ளை என்று பெருமைப்பட்டேனே... இவனைப் பெற்றதற்கு என் வயிற்றில் பிரண்டையை வச்சுத்தான் கட்டணும்.

மண்டை காய்ந்து போயிருக்கும் இவன்கிட்டே என்ன பேசுவது... அதைவிட ஏதாவது பாறையில் போய் முட்டிக் கொள்வது தேவலை...

அப்போதுதான் ரத்னாவின் தோளைத் தட்டிக் கொடுத்து சொன்னான் ராஜசேகர்.

"விடு ரத்னா... இனி எதற்கும் கவலைப்பட வேண்டாம். நான் இருக்கிறேன் உனக்குத் துணையாக... யாரும் உன்னை ஒன்றும் செய்ய முடியாது... முன் மாதிரி. நாம் ஜாலியாக சுற்றலாம்... வெளியூருக்கு நான் புறப்பட்டபோது எங்கேயோ போகலாம் என்று சொன்னேன் இல்லையா... ஏதோ அவசரத்தில் இருந்ததால் காதில் வாங்கிக் கொள்ளாமல் போய் விட்டேன்.. போய் தயாராகு... நாம் போகலாம்..."

மிட்டாய் கிடைத்த சிறுமிபோல துள்ளிக் கொண்டு ஓடிய ரத்னாவை வெறித்துவிட்டு மகன் பக்கம் திரும்பினாள்.

"ராஜா... என்னடா இதெல்லாம்... நீ என்ன செய்கிறேன்னு உனக்குத் தெரியுதா... உன்கிட்டே இதை எதிர்பார்க்கலைடா..." ஆதங்கத்துடன் சொன்னாள் சௌந்திரம்.

"அம்மா... நான் எதைச் செய்தாலும் சரியாகத்தான் இருக்கும்... என் மனதுக்கு சரின்னு படுகிறதைத்தான் நான் செய்கிறேன்... தயவு செய்து இந்த விஷயத்தில் நீங்கள்



லையிடாமல் இருப்பது நல்லது. பானுவைப் பார்த்துக் ளான நீங்கள் இருக்கிறீர்கள். ரத்னாவை நான் தானே ர்த்துக் கொள்ள வேண்டும். அதைத்தான் செய்கிறேன்... த்னா இத்தனை நேரம் ரெடியாகியிருப்பாள்... நானும் யாராகிறேன்... எங்களுக்காகக் காத்திருக்க வேண்டாம்... ங்க வெளியில் சாப்பிட்டுக் கொள்கிறோம்... ரத்னா... ரெடியா..." என்று கேட்டுக் கொண்டே மாடியேறுவதைப் ர்த்துப் பெருமூச்சு விட்டாள் தாய்.

ஷகூம்... பேசிப் பிரயோசனமே இல்லை... மறுபடியும் மோகினிதான் இவனைப் பிடித்துக் கொண்டு ஆட்டி வக்கிறது.

இருந்த கொஞ்சம் நம்பிக்கையும் போய் விட்டது.

விழுந்த மகன் எழுந்து நிமிர்ந்து விட்டான் என்று நினைத்து மகிழ்ந்த வேளையில் இப்படியா... அந்தர் பல்டி அடித்து அவள் கால்களில் விழுந்து விட்டானே... கொஞ்ச ாவது ரோஷம் வேண்டாம்.. என்னைத் தலை குனிய வைத்து விட்டுச் சென்றாளே... அவளைத் தலைமேல் வைத்துக் கொள்வது தப்பு இல்லையா என்று இந்த மடையனுக்குத் தோன்ற வேண்டாம்... இப்படியே அவ சொல்றதுக்கெல் லாம் ஜால்ரா போட்டுப் போட்டுக் கடைசியில் படுகுழியில் விழப் போகிறான்.

இனி பானுவின் கதி... அதோ கதிதானோ என்னவோ... பாவம்... அந்த அபலைப் பெண்ணுக்குக் கடைசி வரைக்கும் கண்ணீர் என்று வைத்து விட்டானே அந்த இறைவன். பெண்ணிற்காக பெண்ணுள்ளம் இரங்கித் தவித்தது.

இனி எல்லாம் கடவுள் விட்ட வழி. என்றைக்காவது கண்களைத் திறக்க மாட்டாரா... அவரது பார்வை பானுவின் மீது படாதா... பார்க்கலாம்...

கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கண்டும் காணாமல் இருக்க ஆரம்பித்தாள்.

கண் முன்னால் ராஜசேகரும் ரத்னாவும் அடிக்கும் கும்மாளத்தைப் பார்த்து மனம் குமுறினாலும்... மௌனமாய் இருந்தாள்...

ரத்னா.. ரத்னா என்று அவளையே சுற்றி வருவதும்.. அவளை அழைத்துக் கொண்டு தினமும் காரில் ஊர்வலம் போவதும்... மாடியில் அவளுடன் சிரித்துக் கொட்டம் அடிப்பதும்... மற்றவர்கள் பார்க்கிறார்களே என்ற விவஸ்தை கொஞ்சமும் இன்றி இருவருமாய் இழைவதும்... சே! காறித்துப்ப வேண்டும் போல வந்தது.

பெற்றவளுக்கே இப்படி என்றால் கட்டினவளுக்கு எப்படி இருக்கும்...

மனதால் செத்துவிட்டாள் அவள்... வெறும் நடைப் பிணம் போல இயங்கினாள்... வயிற்றில் குழந்தையும் மனதில் வலியையும் சுமந்து வளைய வந்த அவளைப் பார்க்க மிகவும் பரிதாபமாக இருந்து...

இரண்டுமே சுமைதான்... வயிற்றின் சுமை இறங்கி விடும்... ஆனால் மனதின் சுமை...?

இப்போதெல்லாம் கண்ணீர்கூட வருவதில்லை. கண்கள் கூட வறண்டு விட்டது.

பிரசவத்திற்கு... டாக்டரின் குறிப்புப்படி இன்னும் இருபது நாட்களே இருந்தன. ஆனால் வயிறு இறங்கி இப்பவோ எப்பவோ என்று பயமுறுத்திக் கொண்டிருந்தது.

தாய்மை அடைந்த வேளையில் பெண்ணிற்கு மன அமைதி தேவை... அது அவளுக்குக் கிடைக்கவில்லையே...

வெண்ணெய் திரளும் நேரத்தில் தாழி உடைந்தது மாதிரி... மழை பெய்யும் வேளை



...ங்களைக் கலைத்தது போல... இருவரும் மனம் ஒத்துப் ...போய் வாழ்க்கையை ஆரம்பிக்கும் போதா இப்படியாக ...வேண்டும்... தன்னைத் திரும்பியும் பார்க்காமல் ரத்னாவே ...தி என்று கணவன் கிடப்பதைக் கண்டு உலகமே வெறுத்துப் ...போனது அவளுக்கு...

இப்போது புரிந்தது... ராஜசேகருக்கு ரத்னாவின் மீது ...இருக்கும் காதல் இன்னும் மடியவில்லை.. அவனது தூர்க் ...குணங்களை உணர்ந்து கொள்ள முடியாத அளவு மூர்க்கத் ...தனமான காதல். தன் மீது வந்தது அனுதாபத்தினால் வந்த ...பரியம்... அவ்வளவுதான்.

ஆனால் அதுகூட இப்போது நிலைக்கவில்லையே... ...பானு என்று ஒருத்தி இருப்பதைச் சுத்தமாக மறந்து விட்டது ...போல் அல்லவா இருக்கிறது அவர் நடந்து கொள்ளும் விதம். ...தன் இதயத்தின் அழுகையை அவன் கேட்கமாட்டானா... ...ஏங்கினாள் பானு.

காலம் எந்த வருத்தமும் இல்லாமல் தன் கடமையைச் ...செவ்வனே செய்தது... நாட்களை நகர்த்தியது.

ஒரு நாள் ராஜசேகர் தாயிடம் வந்தான்.

எப்போதும் போல புன்னகை சிந்தி வரவேற்கவில்லை.

சௌந்திரம்...

'என்ன...' என்பது போலப் பார்த்தான்.

மகனிடம் சரியாகப் பேசி நாட்கணக்கில் ஆகிவிட்டது.

"அம்மா... பானுவை அவளது தாய் வீட்டிற்கு அனுப்பி விட்டால் என்ன... பிரசவம் அங்கேயே நடக்கட்டுமே..."

சௌந்திரம் பொறுமையிழந்தான்.

"ஏம்ப்பா... இந்த வீட்டில் அவளுக்கு இடம் இல்லையா. இந்த வீட்டின் வாரிசு... இந்த வீட்டில் தானே பிறக்கணும். தெரிஞ்சுக்கோ... பெரிசா... இவ அப்பாக்கிட்ட நாங்கப் பார்த்துக்கறோம்னு பந்தாவா பேசிட்டு இப்ப... நிறை மாதத்தில் அவளைக் கொண்டு போய் விட்டால் அவங்க என்ன நினைப்பாங்க என்று கொஞ்சமாவது யோசிச்சுப் பார்த்தாயா... சொல்றது ஒண்ணு... செய்யறது ஒண்ணுன்னு எண்ண மாட்டாங்களா... நீயும்தான் சொன்னே... இங்கேயே பானு இருக்கட்டும்... நான் பார்த்துக்கறேன்னு... இல்லே... இப்ப சொன்னதெல்லாம் மறந்து போச்சா...'' என்று கடிந்தாள்.

"எல்லாம் அவளோட நன்மைக்குத்தான் சொல்றேன்ம்மா. அப்போது அப்படிச் சொன்னேன் என்றால் அன்றைய நிலைமை அப்படி... சரி... வேண்டாம்... விடுங்கள்...'' என்று அவன் திரும்பும் போது ''ராஜா... போகலாமா'' என்று கொஞ்சிக் கூவிக் கொண்டு ரத்னா வந்தாள்.

ஓகோ... இன்றைக்கும் நகர்வலமாக்கும்... செய்யட்டும்.

இவள் என்ன தலையணை மந்திரம் ஓதினாளோ... அதைக் கேட்டுவிட்டு இவன் குதிக்கிறான்...

ரத்னா வந்ததும் பானு வேண்டாமாக்கும்.

பானுவிற்கு நான் இருக்கிறேன்... இனி எனக்கு அவள் மகள்... அவளுக்குத் துணையாக இருந்து விடுவேன்.

எனக்குப் பேரனையோ பேத்தியையோ பெற்றுக் கொடுக்கட்டும்... அதைக் கொஞ்சிக் கொண்டு அவளுடனேயே இருந்து விடுகிறேன்.

இவனும் ரத்னாவும் எத்தனை நாள் ஆட்டம் போடுறான்னு பார்க்கலாம்.



பிரசவம் நல்லபடியாய் முடிந்ததும் பானுவை அழைத்துக் கொண்டு கிராம வீட்டிற்குப் போய் விட வேண்டியது தான்.

கிராமத்து வீடும்... பண்ணைத் தோட்டமும் எனக்காக என் புருஷன் வாங்கியது... எனக்குச் சொந்தமான அவற்றை பானுவிற்கும்... பேரப் பிள்ளைக்கு எழுதி வைத்து விடுறேன். இவர்கள் எக்கேடு கெட்டுப் போகட்டும். ஏதேதோ கணக்குகள் போட்டது மனம்.

தன் பிள்ளை இப்படி ஆகி விட்டானே என்ற கோபத்தை விட... பானுவின் நிலை இப்படி ஆனதே என்ற அனுதாபம் தந்த சினம்தான் அதிகம்.

ரத்னாவிற்கு பானு படும் வேதனை பார்க்க தேனில் விழுந்த பலாச்சுளையைச் சாப்பிட்டது போல இனித்தது.

என்னவோ தான் இந்த வீட்டுக்கு ஆளவந்த ராணி என்பது போல அலட்டிக் கொண்டாளே... இப்போ எல்லாமே தலை கீழாய் மாறி விட்டது... வேலைக்காரியை விட மோசம்! கைக் கொட்டிச் சிரித்தாள்... இனி இங்கு என் சாம்ராஜ்யம் தான் என்று கொக்கரித்தாள்.

தெய்வம் என் பக்கம் இருந்தது... அதனால்தான் தனக்கு இந்த வெற்றி என்று உள்ளம் ஆனந்த நடனம் ஆடியது.

வெளியூர் போய்விட்டு வந்த ராஜசேகர்... பழைய ராஜ சேகராய்... தன் மீது காதலை வளர்த்த ராஜசேகராய் திரும்பினது தான் வியப்பு.

இங்கிருந்து போனதும் யோசித்திருப்பானோ என்னவோ. எப்போதும் முதல் காதல்தான் வெற்றி பெறும் என்பார்கள்.

அது உண்மைதான்...

இங்கு வந்ததே அந்த நம்பிக்கையால்தான்...

அவன் மட்டும் மனம் மாறாமல் இருந்திருந்தால்... தன் கதி என்னவாகியிருக்கும். நினைக்கும் போதே நெஞ்சு பதறியது.. நல்லவேளையாய் அப்படி நடக்கவில்லை. திருமணமான புதிதில் எப்படிக் கொஞ்சிக் குலாவுவானோ அப்படியே இப்போதும் நடந்து கொள்கிறான். ஆனால் இரவு நேரம் தான் அவளைக் குழப்பியது.

தன்னை இழுத்து அணைத்துக் கொண்டு... தங்களுக்காகவே ஸ்பெஷலாக தயாரித்த மசாலாப் பாலை... பாதாம் பருப்பு... குங்குமப் பூ... கல் சர்க்கரை... கசகசா போட்டுக் காய்ச்சிய பாலை அவனே ஊட்டி விடுகிறான். ஏதேதோ சில்மிஷங்கள் செய்து சீண்டுகிறான்... அதெல்லாம் நன்றாக நினைவிருக்கிறது.

அதற்கப்புறம் நடப்பது எதுவும் நினைவுக்கு வரவில்லையே. அந்த அளவிலா மதி மயங்கிப் போய் விடுகிறது.

மறுநாள்... அவளது ஆடை என்னவோ நெகிழ்ந்து கிடக்கிறது...

வெற்று மார்புடன் படுத்திருக்கும் கணவனின் குறும்பு சிரிப்பும் எதையோ சொல்கிறது.

ஆனால் அவளுக்குத்தான் ஒன்றும் புரியவில்லை. அவளது குழப்பத்தைக் கண்டு அவன் சிரித்தான்.

''நீ இன்னும் அதே ரத்னா தான்... மாறவேயில்லை. சரியான சியாமி பூனை... பாரேன்... எப்படி என்னை பிராண்டி இருக்கிறாய் என்று. இதோ பார்... காதைக் கூடக் கடித்து விட்டிருக்கிறாய்... சிவந்து போயிருக்கிறது. தெரிகிறதா...''

தானா... தானா அப்படியெல்லாம் நடந்து கொண்டது. மூளையைக் கசக்கிக் கொண்டாள். ஊகூம்... ஞாபகத்தில்



இதென்ன... எனக்குப் புது வியாதியோ... இரவானால் இப்படி அடித்துப் போட்டாற்போல ஒரு தூக்கம்.

''என்ன அப்படிப் பார்க்கிறாய் ரத்னா... எதுவும் நினைவில் இல்லையா... சரிதான்.. இனிமே மசாலா பால் எல்லாம் வேண்டாம்.. அதில் கசகசா நிறைய அரைத்து சேர்த்திருக்கிறார் சமையல்காரர்... அதுதான் போதை மருந்து சாப்பிட்ட மாதிரி ஒரு கிறக்கம்.. இனிமே நமக்கு வெறும் பால் தான் என்று சொல்லி விடுகிறேன்... வாழ்க்கை வாழ்வதற்குதான் என்பதை நாம் சந்தோஷமா உணர வேண்டும் ரத்னா... இந்த ஒரு மாதமாதான் நான் ரொம்ப சந்தோஷமா இருக்கிறேன் என்றால் அது உன்னால்தான்...''

என்ன... ஒரு மாதம் தாண்டிவிட்டதா... அடடா... அந்தக் கணக்கை எப்படி மறந்து போனேன்..

இப்பவே ராஜசேகரிடம் சொல்ல வேண்டும்... குறிப்பாக கோடிக் காட்ட வேண்டும்...

இனியும் தாமதப்படுத்தக் கூடாது.. இங்கே நங்கூரம் பாய்ச்சி தங்க வேண்டும் என்றால் இதுதான் தக்க சமயம் தவற விடக்கூடாது.

அன்று இரவே 'தள்ளிப்போன' சமாச்சாரத்தை ராஜசேகரிடம் வெளியிட்டாள்.

அதைக் கேட்டுவிட்டு அவன் புன்னகை செய்தான். அந்தப் புன்னகையில் ஆயிரம் அர்த்தங்கள்!



## 15

ரத்னா பொறுமையிழந்தவளாய் அங்கும் இங்கும் நடை

அவளுள் கோபம் கனன்று கொண்டிருந்தது.. போச்சு... எல்லாமே போச்சு... உள்ளம் குமுறியது. என்னவெல்லாம் கனவு கண்டாள்... தன் வயிற்றுக் குழந்தை இந்த சொத்துக்கெல்லாம் வாரிசாகப் போகிறது என்று நினைத்தாள்... இந்த குட்டி ராஜ்ஜியத்தை ஆளப் போகிறது என்ற ஆசை நிராசையானதே என்ற எரிச்சலும் கோபமும்தான் இப்போது அவளை கொதிக்கச் செய்தது.

அம்மாவின் குரல் எச்சரித்து இங்கு அனுப்பியது இப்போதும் காதில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தது.

"புத்திசாலித்தனமாய் பிழைக்கப்பார். ரத்னா.. யாரோ ஒருத்தி அந்த சொத்தை ஆளப் போகிறாளாம்... கடல் மாதிரி இருக்கும் சொத்து... அது உனக்கு சொந்தமாக வேண்டியது. உன் முட்டாள் தனத்தால் பறி கொடுத்து விடாதேடீ... போ... போய் அங்கே இருந்து அதை தக்க வைத்துக் கொள். ஒரு பெண் நினைத்தால் எதையும் சாதிக்கலாம்... தெரியுதா. அது உன் ஆஸ்தி... நீதான் அத்தனைக்கும் தலைவி... அந்த உரிமை உனக்குத்தான்.. ஏமாளியாக இருந்து இழந்துடாதே... நான் சொல்கிற மாதிரி நடந்து கொண்டு சாமர்த்தியமாய் பிழைத்துக் கொள்..."

போதனை... கீதோபதேசம்... அத்தனைக்கும் தலையாட்டி விட்டு வந்தாள்.

தாய் சொன்னபடியே நடந்து கொண்டாள்...

ஆனால்... வெற்றிதான் நழுவிப் போய்விட்டது...

நினைச்சது ஒண்ணு... நடந்தது ஒண்ணு... அதனால முழிக்குதே அம்மாப் பொண்ணு... என்று பழைய பாடலில் வருமே.. அதே மாதிரி என்ன செய்வது என்று புரியாமல் பேந்த விழித்தாள் ரத்னா.



றான் என்று அறிய முடியவில்லை... அவனே ஒரு புதிராய் இருக்கிறான்...

தான் தாய்மை அடைந்திருக்கும் செய்தியை சொன்னவுடன் பூரித்துப் போய் துள்ளிக் குதிப்பான் என்று நினைத்தவளுக்கு படு ஏமாற்றம்...

நிதானமாய்... அமைதியாய் கேட்டான்.

"அதெப்படி அத்தனை உறுதியாய் சொல்கிறாய் ரத்னா... இரண்டு மாதம் ஆன பின்பு தானே... டாக்டர் 'டெஸ்ட்' செய்து 'கன்ஃபர்ம்' பண்ணிய பின்புதானே நிச்சயம்... ஒரு வேளை உன் மன பிரமையாக இருக்கலாம் இல்லையா.."

அவள் தவித்துப் போனாள்... கையைப் பிசைந்து நின்றாள்.

"இல்லை... இல்லை... என் கணக்கு சரிதான்.. ராஜ்... இது. நாற்பது நாளில் தெரிந்துவிடும்... நான் குளித்து நாற்பத்திரண்டு நாளாகிவிட்டது... இதெல்லாம் உங்களுக்குப் புரியாது ராஜ்."

"அது சரி... ரத்னா... இந்த வாந்தி... மயக்கம் எல்லாம் இருக்குமே... அப்படியெல்லாம் உனக்கு இல்லையே..."

மேலும் குடைந்தான் அவன்.

"அய்யே... எல்லோருக்கும் அப்படி இருக்காது... நானும் அந்த ரகம்... ஒரு வேளை இனிமே வருமோ என்னவோ..."

"சரி... எனக்கு ஒன்று தோன்றுகிறது... இப்போதைக்கு நமக்கு குழந்தை வேண்டாம் ரத்னா... இந்தக் கருவைக் கலைத்து விடலாம்... இரு வருடங்கள் போகட்டும்... அப்புறம் குழந்தையைப் பெற்றுக் கொள்ளலாம்... எனக்கு நீதான் வேண்டும்... ரத்னா... ப்ளீஸ் புரிந்து கொள்ளேன்..."

கெஞ்சுவது போலச் சொன்னான் ராஜசேகர்.

ரத்னாவின் முகம் வெளிறியது... கண்களில் மிரட்சி

"நான்... நான்... உங்களுக்குக் குழந்தை வேண்டாமா... நம் குழந்தை ராஜா..."

"அதைத்தான் இப்போதைக்கு வேண்டாம் என்கிறேன். என்ன ரத்னா.. என் மனதைப் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாயே... நீண்ட நாட்களுக்குப் பிறகு நாம் சேர்ந் திருக்கிறோம்... சந்தோஷமா இருப்போமே டியர். நான் என்னவெல்லாம் 'பிளான்' செய்து வைத்திருக்கிறேன் தெரியுமா... நீயும் நானும் 'வோர்ல்ட் டூர்' போக வேண் டும்... இந்தியாவில் பார்க்க வேண்டிய இடங்களையெல் லாம் சுற்றிப் பார்த்து வரவேண்டும். முக்கியமா தாஜ்மகாலைப் பார்க்க வேண்டும். அது முன்னால் நாம் இருவரும் கைகோர்த்துக் கொண்டு நடக்க வேண்டும். இத்தனையும் அனுபவிக்க இந்தக் குழந்தை இடைஞ்சலாக இருக்கும் ரத்னா.. உனக்கும்தான் குழந்தை என்றால் பிடிக்காதே... மாத்திரை வாங்கித் தருகிறேன் ரத்னா... சாப்பிட்டு விடு... அப்புறம் ஜாலிதான் டியர்..." அவளது கன்னத்தைச் செல்ல மாய் தட்டிவிட்டுச் சென்ற ராஜசேகரை திகைப்புடன் பார்த்தாள்.

அவனது வார்த்தைகள் அவளைப் பனிக்கட்டியாய் உறையச் செய்தன.

இந்தக் குழந்தை வேண்டாமா... ஏன்...

பானுவின் குழந்தை மட்டும் வேண்டுமாக்கும்...

அய்யோ... இந்தக் குழந்தையை வைத்துதானே இழந்த என் வாழ்வை... உரிமையை அடைய நினைத்தேனே... அவளது பானு ஜெயித்து விடுவாள் போலிருக்கிறதே... அவளது குழந்தை இந்த வீட்டுக்கு வாரிசானால்... என் நிலைமை... அய்யோ...

மனக் கண்முன் தன் எதிர்காலம் இருட்டாய் தெரிய... [illegible] கொண்டு அழுதாள்.



அவளது தைரியம்... துணிவு... தன்னம்பிக்கை எல்லாம் எங்கோ தொலைந்து போனது.

ஏதோ சூன்யத்தை நோக்கிப் பயணப்படுவது போல ஒரு நடுக்கம்.

ரத்னா... ஏய் ரத்னா... நீ தோற்கக் கூடாது... உனக்கு தோல்வி வரக்கூடாது. நீ ஜெயிக்கப் பிறந்தவள். அழுகை பெண்ணின் பலவீனம்... நீ ஜெயித்துக் காட்டு..." மனக்குரல் அவளைத் தட்டி எழுப்பியது.

கண்களைத் துடைத்துக் கொண்டாள்...

ஆம்.. நான் ஜெயிக்கணும்.. தடைக் கற்களை உடைத் தெறியணும்.

தடையாக இருப்பவள் அந்த பானு... அவளை ஒழித்து விட்டால் என் வாழ்க்கை நிமிரும்...

அவளுடன்... அவள் வயிற்றில் இருக்கும் குழந்தையும் ஒழிந்து போனால் அப்புறம் நானே பட்டத்து ராணி... என் குழந்தைதான் இளவரசு...

அதுதான் சரியான வழி...

என்ன செய்யலாம்... யோசித்தாள்.

யாருக்கும் சந்தேகம் வராதபடி செயல்படுத்த வேண்டுமே என்ற படபடப்பு.

யோசி... ரத்னா.. யோசி... எப்படி பானுவை அழிப்பது என்று நன்றாக யோசி...

கடைசியில் தீர்மானத்திற்கு வந்தாள்.

ஒரு முடிவுக்கு வந்தவளாய் கண்களைத் துடைத்துக் கொண்டு எழுந்தாள்.

வேலைக்காரர்கள் யாரும் கண்ணில் படவில்லை.

தம்தம் வேலைகளில் மும்முரமாக இருந்தனர் போலும்.

சௌந்திரம் கோவிலுக்குப் போயிருப்பது தெரிந்தது. ஆக இதுதான் நல்ல தருணம்...

''பானு...''

இரண்டு தரம் அழைத்த பின்பு பானு வந்தாள்.

''மேலே வா...''

வயிற்றுச் சுமையைத் தாங்க முடியாமல் மூச்சிரைக்க அவள் படி ஏறி வந்தாள்.

ரத்னாவின் இடத்தில் யார் இருந்தாலும் பரிதாபப் பட்டிருப்பார்கள்...

ஆனால் சுயநலமே உருவான ரத்னாவிற்கு அவள் மேல் பரிதாபமோ... இரக்கமோ வரவில்லை.

மேல் படியில் நின்றிருக்கும் ரத்னாவின் அருகில் வந்தாள் பானு..

''என்னக்கா வேண்டும்...''

''எனக்கு சின்ன சந்தேகம்... உன்னிடம் கேட்டுத் தெரிஞ்சுக்கலாம் என்றுதான்...''

பானுவுக்கு வியப்பு... ரத்னாவா தன்னிடம் கேட்பது...

''என்ன சந்தேகம்...'' என்று கேட்டாள்.

''வந்து... உனக்கு எத்தனாவது மாதம் வயிற்றில் குழந்தை சுற்றி வந்தது...'' என்று வினவினாள் ரத்னா.

''ஏன்... ஐந்தாம் மாதத்தில்... எதற்குக் கேட்டீர்கள்...''

''சும்மாதான்... ஸ்கேனிங் எடுத்துப் பார்த்தாச்சா...''

தேவையற்ற கேள்விகள்... இப்போது எதற்கு இந்த விசாரணை... அதுவும் அக்கறையாய்...



பானுவால் நிற்கவும் முடியவில்லை.

''உள்ளே உட்கார்ந்து பேசலாமே ரத்னாக்கா... என்னால் நிற்கவும் முடியவில்லை...'' பெருமூச்சு விட்டவாறு சொன்னாள்.

''பேசுவதற்கு ஒண்ணும் இல்லை... நீ போகலாம்.''

ஒண்ணும் இல்லாததற்கு ஏன் அழைக்கணும்... சலித்தவாறு திரும்பினாள் பானு.

ஒருபடிதான் இறங்கியிருப்பாள்... முதுகில் ஏதோ ஒரு அழுத்தம்... தன்னை உந்தித் தள்ளியதுபோல உணர்ந்தாள்...

அடுத்த கணம் நிலை தடுமாறி படிகட்டுகளில்தான் உருள்வது தெரிந்தது...

தனக்கு என்னவாயிற்று என்று உணரும்முன் கடைசிப் படிக்கு வந்து விட்டாள்... அங்கிருந்த இரும்பு கிராதியில் தலை அடிபட்டு... நெற்றியில் ரத்தம் வழிய... அப்படியே மயக்கத்தில் ஆழ்ந்தாள் அவள்.

தடதடவென்று எதுவோ விழும் சத்தம் கேட்டு ஓடி வந்தாள் சந்திரா. ''அய்யோ... யாராவது வாங்க... சின்னம்மா விழுந்துட்டாங்க...'' என்று கத்தவும்...

வேலைக்காரர்கள் கூடிவிட்டனர்...

சொர்ணம் பானுவின் கன்னத்தைத் தட்டினாள்.

அவள் விழிக்காமலே இருந்தாள்...

சொர்ணத்தின் கண்கள் மாடிமேல் இருந்த ரத்னாவின் மேல் சூடாய் பட்டது...

சௌந்திரம் கோவிலுக்குச் செல்லுமுன் சொர்ணத்திடம் பானுவைப் பார்த்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டுச் சென்றாள். ரத்னாவை நம்ப முடியாது... வம்புக்கு இழுக்க வாய் சண்டை போடுவாள் என்று எச்சரித்திருந்தாள்...

காதுகளை தீட்டி வைத்துக் கொண்டு வேலை பார்த்தாள் சொர்ணம்.

ரத்னா வேலைக்காரியை அழைக்காமல் பானுவை அழைத்தபோது சந்தேகம் வந்தது.

அதுவும் அன்றைக்கெல்லாம் ரத்னாவின் முகத்தில் கடு கடுப்புத் தெரிந்தது... ஆயிரம் மிளகாயை ஒரு வாயில் விழுங்கியது போல எரிச்சல்...

ஏதோ நடக்கப் போகிறது என்பதை உள் மனம் சொல் லியது.

அப்படியே நடந்தும் விட்டதே!

பானுவை அவள் அழைத்தபோது கைவேலையைப் பாதியில் விட்டு வரமுடியவில்லை.

சரசரவென்று வேலையை முடித்து வருவதற்கும்... பானு மாடியிலிருந்து இறங்கத் திரும்புவதற்கும் சரியாக இருந்தது. நல்லவேளை... எந்தத் தகராறும் வரவில்லை என்று நிம்மதி யடைந்த நேரத்தில்தான் அந்தக் கொடுமையைப் பார்த்தாள்.

ரத்னா... இறங்க ஆரம்பித்திருக்கும் பானுவின் முதுகில் கை வைத்துத் தள்ளியதைப் பார்த்தவளுக்கு நெஞ்சம் பதறிப் போனது...

பதட்டமாய் ஓடி வந்தாள்... அதற்குள் சின்னவளான சந்திரா ஓடி வந்து விட்டாள்...

சொர்ணம் சந்திராவைப் பார்த்து தண்ணீர் கொண்டு வரும்படி பணித்தாள்.

அனைவரின் கண்களும் மயங்கிக் கிடந்த பானுவின் மேலேயே பதிந்திருந்ததால் ரத்னாவின் முகம் போன போக்கைக் கவனிக்கவில்லை.



று உயிர் விட்டிருந்தால் ஒழிந்தாள் பாவி என்று சந்தோஷப்பட்டிருப்பாள்.

ஆனால் அப்படி நடக்காதது அவளது துரதிர்ஷ்டம். அந்த நேரம் பார்த்து சௌந்திரம் கோவிலிலிருந்து திரும்பினாள்.

மயங்கிக் கிடக்கும் பானுவையும் கலவரத்துடன் நின்றிருக்கும் வேலைக்காரர்களையும் பார்த்துவிட்டு "அய்யோ என்னாச்சு பானுவிற்கு" என்று அலறிக் கொண்டு வந்தாள்.

கையில் இருந்த பூக்கூடை 'தண்' என்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

பானுவின் அருகே குனிந்தவள் நெற்றியில் வழியும் ரத்தத்தைப் பார்த்துவிட்டு பயந்து போனாள்...

"என்ன நடந்தது... யாராவது சொல்லுங்களேன்" என்று பொறுமையிழந்து கேட்டாள் சௌந்திரம். மெல்லப் படி யிறங்கி வந்த ரத்னா "நான் சொல்றேன். மாடியிலிருந்து இறங்கும் போது தலை சுற்றுகிறது என்று சொன்னாள்.. படி தவறி விழுந்து விட்டாள் போலிருக்கிறது" என்றாள்.

"மாடிக்குப் போக வேண்டாம் என்று சொல்லியிருந் தேனே. ஏன் ஏறினாள். ஏய்... சொர்ணம்... உனக்கு என்ன சொன்னேன். பானுவைப் பார்த்துக்கோன்னு சொல்ல வில்லை... நீ என்ன பண்ணிக் கொண்டு இருந்தாய்..."

"அம்மா... என் வேலையை விட்டுட்டு ஓடி வந்தேன். அதற்குள்ளே... சின்னம்மா..."

முகத்தில் 'சில்'லென்று நீர் பட்டு... கண் விழித்தாள் பானு. டிரைவர் காரில் இருந்த 'பர்ஸ்ட் எய்ட்' பெட்டியில் இருந்து பஞ்சையும் டெட்டாலையும் கொண்டு வர... சௌந்திரம் அதை வாங்கி பானுவின் நெற்றியைத் துடைத்து

இரும்புக் கம்பியில் பிசிறாக நீட்டியிருந்த இரும்பு சிராம்பு பட்டு காயம் ஆகியிருந்தது. தோல் ஆழமாய் கிறப்பட்டதில் அதிக இரத்தம் வழிந்திருந்தது.

'ஆன்ட்டி செப்டிக்' மருந்தை தடவினாள்.

"மெல்ல எழுந்திரும்மா..." என்றாள் சௌந்திரம்...

எழுந்திருக்க முயன்ற பானு அடிவயிற்றைப் பிடித்துக் கொண்டு அலறினாள்...

"அத்தை... ஆ... என்னால் எழுந்திருக்க முடியல்லே... அய்யோ... வயிற்றினுள் வலி சுண்டி இழுக்கிறது... தாங்க முடியவில்லை அத்தை.

நிலைமையைப் புரிந்து கொண்டாள் சௌந்திரம். பானுவிற்குப் பிரசவவலி வந்துவிட்டது... உடனே ஆஸ்பத்திரிக்குப் போக வேண்டும்...

டிரைவரிடம் வண்டி எடுக்கச் சொல்லிவிட்டு சொர்ணத்தை உதவச் சொல்லி பானுவைத் தாங்கி எழுப்பினாள்.

சந்திராவை அனுப்பி பிளாஸ்க்... டவல்... சோப்பு... டூத் பேஸ்ட்... பானுவின் பிரஷ்... ஹார்லிக்ஸ்... இன்னும் என்னவெல்லாம் வேண்டுமோ... எடுத்து வரச் சொன்னாள்.

பானுவை காருக்கு நடத்திச் செல்லும் நேரத்தில் வந்து சேர்ந்தான் ராஜசேகர்.

இருவரின் கைத்தாங்கலில் பானு துவண்டு நடப்பதைக் கண்டு பதைத்துப் போனவனாய் அருகே வந்தான்.

"என்னம்மா பானுவிற்கு..."



ராஜசேகர் தயங்கினான்.

"எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கும்மா..."

"பானுவை ஆஸ்பத்திரிக்குக் கூட்டிக் கொண்டு போறதை விட அப்படி என்ன உனக்கு முக்கிய வேலை..."

"அதெல்லாம் விளக்கிக்கொண்டிருக்க இப்ப நேரமில்லைம்மா... முதல்ல பானுவை அழைத்துப் போய் ஆஸ்பத்திரியில் சேர்க்க வேண்டும்... நீங்கள் புறப்படுங்கள்.. அவசியம் என்றால் நான் வருகிறேன்.. பானு... தைரியமாக இரு...ம்மா... ரத்னா உள்ளே தானே இருக்கிறாள்... அவளைப் பார்க்க வேண்டும்..." என்று வீட்டினுள் விரைந்தான் ராஜசேகர்.

ஊகூம்... இவனிடம் பேசி எந்தவிதப் பிரயோசனம் இல்லை என்று பெருமூச்சு விட்டவளாய் காரில் அமர்ந்து கொண்டு டிரைவரைப் புறப்படச் சொன்னாள்...

பானுவின் நிலையைப் பார்த்ததும் பதைத்துப்போன டாக்டர்கள் உடனே அவளை 'லேபர் வார்டு'க்கு அழைத்துச் சென்றனர்.

சௌந்திரம் அவர்களிடம் நடந்த விஷயத்தைச் சொன்னாள். உள்ளே அவளுக்குப் பரிசோதனை செய்து கொண்டிருந்தனர். என்ன சொல்லப் போகிறார்களோ என்ற பதட்டத்துடன் இருந்தாள்... 'கடவுளே... பானுவிற்கு எதுவும் பாதிப்பு இல்லை என்று சொல்லட்டும்... பிள்ளையாரப்பா... உனக்கு நூறு தேங்காய் உடைக்கிறேன்ப்பா...' மனமுருக வேண்டிக் கொண்டாள்.

எல்லாம் அந்த கிராதகியால்... வந்து சேர்ந்தாளே நம் உயிரை வாங்க... நினைக்கவே நெஞ்சு கொதித்தது.

ஆனால் சொர்ணம் நடந்ததை விளக்கியபோது தான் ரத்னாவின் துர்குணத்தை... பொறாமையால் வெந்து அவள் செய்த அட்டூழியத்தைத் தெரிந்து கொண்டாள்.

அவளுக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

இனிமேலும் பொறுக்க முடியாது... ராஜசேகரிடம் கறாராய் பேச வேண்டும்... இப்போது பானுவைத் தள்ளி விட்டு ஒழிக்கப் பார்த்தவள்... குழந்தையையும் கொல்லத் துணிய மாட்டாள் என்பது என்ன நிச்சயம்...

அவளுக்கு எதிரி பானுமட்டுமல்ல... பிறக்கப் போகும் சிசுவும்தான்... அப்படி ஏதும் அசம்பாவிதம் நடக்கும் முன் அவளை அப்புறப் படுத்தியே ஆக வேண்டும்.

மகன் ஏதாவது முரண்டு பண்ணினால்... பானுவை அழைத்துக் கொண்டு வெளியேறி விடுவதுதான் நல்லது.

"பேஷண்ட் பானுமதியோட வந்தவங்க நீங்கதானேம்மா..."

லேடி டாக்டர் கேட்டதும் நெஞ்சுக்குள் ஒரு படபடப்பு...

"சொல்லுங்க டாக்டர்... என் மருமகள் எப்படி இருக்கா... அவளுக்கு ஏதுமில்லையே..." என்று கேட்டாள்.

"உயிருக்கு எந்த ஆபத்தும் இல்லை... அதிர்ச்சிதான்... மேலும் மேலும் வலிவந்தா பரவாயில்லை... மனதளவில் பயந்து போயிருக்கிறாங்க... அதனால்.. அவசியப் பட்டால் ஆபரேஷன் செய்து குழந்தையை எடுக்க வேண்டி வரலாம்..."

"அய்யோ... என்ன டாக்டர் சொல்றீங்க... ஆப்ரேஷனா..." திகைப்புடன் கேட்டாள் சௌந்திரம்..

லேடி டாக்டர் முகத்தில் சிரிப்பு...

"என்னம்மா... நீங்க.. இந்த காலத்தில் 'சிசேரியன்' என்பது சர்வ சாதாரணம்மா. நோயாளியோட நிலைமையைப்



பானுமதி எந்த டாக்டரிடம் இதுவரை செக் அப் செய்து வந்தார்."

"டாக்டர் ஜெயந்தி... அவர் இப்போ இல்லையா டாக்டர்..."

"அவர் லீவில் இருக்கிறார்.. நாளைக்கு வருவார் என்று நினைக்கிறேன்... இப்ப அவர்கிட்டே போனில் பேசிவிட்டு உங்களுக்குச் சொல்கிறேன்.." என்று சொல்லிவிட்டு தன் 'செல்'லை எடுத்துப் பேசினார்...

ஆங்கில உரையாடலை சௌந்திரத்தால் புரிந்துகொள்ள முடியவில்லை...

'செல்'லை அணைத்துவிட்டு சௌந்திரத்திடம் சொன்னாள் அந்த லேடி டாக்டர்.

"கவலைப் படாதீர்கள். பானுமதி அட்மிட் ஆகியிருக்கிறார்கள் என்று தெரிந்ததும் நாளையே வந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார் டாக்டர் ஜெயந்தி... நாளைக்கே ஆப்ரேஷன் பண்ணுவார்கள் என்று நினைக்கிறேன்.. ஆமாம்.. மிஸஸ். பானுமதியோட கணவர் வரவில்லையா... அவரிடம் கையெழுத்து வாங்கியாக வேண்டுமே."

"வருவான் டாக்டர்... ஆனா.. இந்த ஆபரேஷனைத் தவிர்க்க முடியாதா... என் மருமகள் ரொம்ப பலவீனமா இருக்கா டாக்டர்.. அவதாங்குவாளான்னுதான் பயப்படறேன்..."

"அம்மா... பானுமதி டாக்டர் ஜெயந்தியோட பேஷண்ட் என்கிறதால்.. அவங்களைப் பற்றிய 'டீடெயில்ஸ்' எல்லாம் அந்த டாக்டருக்குத்தான் தெரியும்... எதையும் அவங்க வந்துதான் முடிவெடுக்க வேண்டும்.. இப்ப அவங்களோட பேசினதில்... அவள் முக்கியமான விஷயத்தை சொன்னார்... அந்த விஷயத்தை உங்களுக்குச் சொல்லவில்லை என்றும் சொன்னார்... 'பேஷண்ட்'டோட மனம் பாதிக்கக் கூடாது

என்று மறைத்து விட்டாராம்.. அதனால் ஆப்ரேஷன் செய்வதுதான் உசிதம் என்கிறார் டாக்டர் ஜெயந்தி...''

சௌந்திரம் மலைத்து நின்றாள்...

என்ன சொல்கிறாள் இந்த லேடி டாக்டர்... ஏதோ பூடகமாக அல்லவா பேசுகிறாள். பானுவிற்கு ஏதாவது பிரச்சனையா... இல்லை... குழந்தைக்கு...

எதையோ மறைத்து விட்டாராமே.. எதை... அய்யோ... தலை வெடித்துவிடும் போல இருக்கிறதே...

''டாக்டர்... அது என்ன என்று சொல்லக் கூடாதா... எதையும் மறைக்காமல் சொல்லுங்கள்... நான் தாங்கிப்பேன்...'' நா தழுதழுக்கக் கேட்டாள் அவள்.

''அடடா.. எதுக்கு இந்த டென்ஷன்... இது மறைக்க வேண்டிய சமாச்சாரம் இல்லை... உங்களுக்கு தெரியத்தான் வேண்டும்...''

சீக்கிரம் சொல்லித் தொலைக்கக் கூடாதா... தவிப்புடன் இருந்தாள் சௌந்திரம்.

அவர் அந்த விஷயத்தைச் சொன்னபோது... அதைக் கேட்டுச் சிரிப்பதா... அழுவதா என்று தெரியவில்லை... சௌந்திரத்திற்கு...



## 16

சௌந்திரம் இன்னும் திகைப்பிலிருந்து மீளவில்லை. டாக்டர் வாயிலிருந்து வந்த வார்த்தைகளால் அவளுக்கு அதிர்ச்சி... இனிய அதிர்ச்சி!



பானுவின் வயிற்றில் இரட்டைக் குழந்தைகள்! டாக்டர் ஜெயந்திக்கு ஆரம்பத்திலிருந்து தெரியுமாம். ஆனால் பலவீனமாய் இருந்த பானுவின் மனோநிலை பாதிக்கப் படக் கூடாது என்பதற்காக அதைச் சொல்லாமல் மறைத்து விட்டாராம்...

அதற்கு அவர் சொன்ன காரணம்... கர்ப்பிணிப் பெண்களுக்குப் பொதுவாக பிரசவம் என்றாலே படபடப்பும் பீதியும் இருக்கும்... பிழைத்து வருவோமா என்ற பீதி அடிமனதில் அரித்தெடுக்கும்... சிலபேர்கள் தான் பிரசவத்தைத் தைரியமாய் எதிர் நோக்குவார்கள்.

பானுவின் விஷயத்தில் இன்னும் அதிகம்...ஒரு குழந்தையை பிரசவிப்பதே உன் பாடு என்பாடு என்ற நிலையில் இரட்டை வேறு... இரட்டிப்பு வலி... இரண்டு மடங்கு பயம்... அதனால் வரும் கலக்கமும் அதீதமாய்... இருக்கும்...

அதைத் தவிர்க்கவே தான்... இந்த விஷயத்தை ரகசியமாய் வைக்க நேர்ந்தது என்று டாக்டர் ஜெயந்தி சொன்னதாய் தெரிய...அதுவும் நியாயம் என்பட்டது சௌந்தரத்திற்கு...

அதுமட்டுமல்ல... அதே மருத்துவமனையில் இளம் கர்ப்பிணிப் பெண் ஒருத்தி.... குழந்தைப் பிறப்பு என்பது செத்துப் பிழைப்பது போல் என்ற எண்ணம் மனதில் ஆழமாய் ஊன்றி விட.... தனக்குப் பிறக்க இருப்பது ஒன்றல்ல... இரண்டு என்று டாக்டர் சொன்னதும்... மூர்ச்சையாகி... அவளுடைய இரத்த அழுத்தம் எகிறிப் போய்.... பிரசவ நேரத்தில் வலிப்பு வந்து... அது சிக்கலாகிப் போனதை டாக்டர் விளக்கிய போது... பகீர் என்றது.

அட.... தெய்வமே! இப்படியும் கூட நடக்கிறதா. இந்தக் காலத்துப் பெண்களுக்கு மனவலிமை கம்மிதான். பேச்சிலும்... சாகசத்திலும் என்னவோ ஆண்களுக்கு சமமாகக் காட்டிக்

கொண்டாலும்.... மனதளவில் அவர்கள் பலவீனமான வர்கள்தான்...

ம்ம்... அந்தக் காலத்தில் இந்த வசதிகள் எல்லாம் ஏது... மருத்துவமும் இந்த அளவிலா சாதித்திருந்தது... பதினைந்து வயதிலேயே திருமணம்... பதினாறு... பதினேழு வயதில் பிரசவம்... என்று இருந்த காலம்... அதுவும் வீட்டிலேயே பிரசவம்... இதுக் கென்றே. வயசான மருத்துவச்சிகள் இருப்பார்கள்... அவர்களின் கைராசியில் நம்பிக்கை வைத்துத் தான் பிரசவம் ஆகும்... அந்த வயதில் பயமும் இல்லை... ஒருவேளை இளங்கன்று பயமறியாதோ...

எல்லாமே சுகப் பிரசவம்... அபூர்வமாய் ஏதோ ஒரு கேஸ் இரண்டு கேசு மட்டுமே ஆஸ்பத்திரிக்கு போகும்.... அதுவும் ஏதாவது பிரச்சனையானால்தான்...

ஆனால்... மழைக்கால காளான்களாய் மருத்துவமனை கள் தோன்றியும்... மருத்துவ வசதிகள் பெருகி எந்தப் பிரச் சனையையும் சமாளித்துவிடலாம் என்ற நம்பிக்கை வந்தும்... இன்றையப் பெண்களுக்கு ஏன் மனதளவில் தைரியம் இல்லையே ஏன்...

பானுவும் பயந்திருப்பாளோ... அடடா... அந்த விஷய மாய் நாம் யோசிக்கவில்லையே...

ரத்னா வந்ததில் இருந்து வாடிப் போயிருக்கிறாள் என்று மட்டுமே எண்ணினேன்... தவிர... பிரசவத்தை எந்த அளவில் அவள் எதிர்நோக்கி இருந்தாள் என்பதை அறியாமல் இருந்து விட்டேனே... லேடி டாக்டர் வேறு ஏதேதோ சொல்லி பயமுறுத்துகிறார்...

இந்த லட்சணத்தில் இரண்டு பிள்ளைகளாம்... பானு தாங்குவாளா...

அது சரி... நான் எப்படி அதைக் கவனிக்காமல் இருந்தேன். என் அனுபவக் கண்களுக்கு ஏன் தெரியாமல் போனது.



ஒருவேளை... ரத்னா தந்த பிரச்சனைகளில் எதுவுமே கவனிக்க முடியாமல் போனதோ... ஆம்... அப்படித்தான் இருக்கும்...

கர்ப்ப ரட்சாம்பிகே... நீயே பானுவின் அருகே இருந்து சுகப்பிரசவமா நடத்தித் தரணும்... நீ தாம்மா துணை... மனம் உருகி வேண்டியது அந்த தாயுள்ளம்...

மகன் இன்னும் வரவில்லையே என்ற தவிப்பு வேறு அவளுள் நண்டாய் பிராண்டியது.

இவன் வருவானா... இல்லை வராமலே இருந்து விடு வானா சே! என்ன பிள்ளை இவன்...

இங்கே பானு அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறாள். அங்கே ரத்னாவோடு குலாவல்!

அந்த அளவு பானு அவனுக்கு வேண்டாதவளாகி விட்டாளா...

வரட்டும்... அவனிடம் கண்டிப்பாய்... கறாராய் சொல்லி விடுகிறேன்...

நல்லா யோசித்து முடிவெடு... உனக்கு பானு வேண்டுமா... இல்லே ரத்னா வேண்டுமா... யார் வேண்டும். சொல்லு... அந்த வீட்டில் நிரந்தரமா பானு இருக்கணும்னா... ரத்னா வெளியேறணும்... இல்லே... ரத்னாதான் இருப்பான்னு சொன்னேனா... பானுவையும் குழந்தையும் அழைத்துக் கொண்டு நான் போய் விடுகிறேன்... நீ ரத்னாவோட கும்மாளம் போட்டுக்கோ... எப்படியாவது இருந்துக்கோ... என்று தீர்மானமாச் சொல்லிவிட வேண்டும்.

விடாமல் சிந்தித்துக் கொண்டிருந்த காரணத்தினால் தலை 'விண்விண்' என்றது...

சொர்ணத்திடம் சொல்லி காபி வாங்கி வரச் சொல்லிக் குடித்தாள்... இதமாய் இருந்தது....

"சொர்ணம்... பானுவுக்கு ஹார்லிக்ஸ் ஏதாவது கொடுக்கலாமான்னு அந்த நர்ஸ்கிட்டே கேட்டு வாயேன்" என்று சொல்ல.. திரும்பி வந்த சொர்ணம்...

"இல்லேம்மா. சின்னம்மாவுக்கு சீசா மருந்து கொடுத்துக் கொண்டிருக்காங்களாம்..." என்றாள்.

"சீசா மருந்துன்னா..."

"அதாம்மா... தண்ணி மாதிரி சொட்டு சொட்டா உடம்புக்குள்ள ஏத்துவாங்களே..."

" 'டிரிப்ஸ்'ஸா...."

"ஆங்... அதேதான் சொன்னாங்க... அதனால இப்போ எதுவும் வேணாம்னு சொல்லிட்டாங்கம்மா..."

அந்த நேரத்தில்தான் ராஜசேகர் அங்கு வந்தது. அவன் வருவதை கவனித்து விட்டு "அம்மா... அய்யா..." என்று சைகைக் காட்டினாள் சொர்ணம்.

பரவாயில்லையே... வந்து விட்டானே... ராட்சசி அவனை விட்டது அதிசயம் தான்...

"பானு எப்படி இருக்கிறாள் அம்மா... டெலிவரி ஆகி இருக்கலாம் என்று நினைத்தேன்... டாக்டர் என்ன சொன்னார்... எதுவும் பயமில்லை தானே..."

அவன் கேட்கும் வரையில் வாய் திறக்காமல் இருந்த சௌந்திரம் பானுவின் நிலையைப் பற்றிச் சொன்னாள்.

ஏனோ அவனிடம் இரட்டை என்று சொல்ல மனம் வரவில்லை...

ஒருவேளை... ஏதோ கடமைக்காக இங்கு வந்திருப்பவனிடம்... பானுவின் அருகே தங்கி அவளுக்கு ஆறுதலாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல்... நிதானமாய் வந்து குசலம் விசாரிப்பவனிடம் இந்த சந்தோஷமான



விஷயத்தை வெளிப்படுத்த மனம் வரவில்லையோ என்னவோ...

பானுவின் கணவனாக இவன் கேட்டிருந்தால்.. அந்த ஆனந்தச் செய்தியைச் சொல்லி... "ராஜசேகர்... போய் இனிப்பு வாங்கி வந்து எல்லோருக்கும் கொடுப்பா... ஒண்ணுக்கு இரண்டா பெத்து தரப் போறா உன் மனைவி" என்று ஆர்ப்பாட்டம் செய்திருப்பாள் சௌந்திரம்...

இப்போது ரத்னாவின் புருஷனாக அல்லவா... வெகு தாமதமாக வரலாமா... வேண்டாமா என்று தயங்கி வந்திருக்கிறான்..

இப்போது இவனுக்கு பானுவே சுமை... இந்த அழகில் இரண்டு குழந்தை வேறு கூடுதல் சுமையாகாதா...

அவன் வாயிலிருந்து பானுதான் எனக்கு வேண்டும் என்று வரட்டும்... அதற்குப் பிறகு விஷயத்தை சொல்லலாம்.

சொர்ணம் வாய் சும்மா இருக்கவில்லை. ரத்னா செய்த விஷயத்தை சொல்லிவிட்டாள்.

"என்ன எசமான்... இந்த மாதிரி ஒரு பொம்பளையை இதுவரைக்கும் நான் பார்த்ததில்லை... எதிரியாவே இருக்கட்டும்... பிள்ளத்தாச்சின்னு இல்லாம இப்படியா தள்ளிவிடும்... என் கண்ணாலப் பார்த்ததாலே சொல்றேன்... பானு அம்மாவுக்கு ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகியிருந்தா... எசமான்... சொல்லுறேன்னு தப்பா நினைச்சுக்காதீங்க... ரத்னாம்மா ராட்சசிங்க.... அவங்களை நம்பாதீங்கய்யா..."

ராஜசேகரின் முகம் செவ செவ என்று ஆவதைப் பார்த்து 'நிறுத்து' என்று சைகைக் காட்டினாள் சௌந்திரம்.

வேலைக்காரியும் தன் மனைவியைத் தூற்றும் நிலை வந்ததே என்ற கோபம் போலிருக்கிறது.

ஒரு வேலைக்காரிக்கு அத்தனை சலுகையைத் தன் தாய் கொடுத்திருப்பதை எண்ணி பொருமுகிறானோ... யார் கண்டது.

"போதும்... எதுவும் சொல்லாதே... அம்மா.. ரத்னாவும் நானும் ஊருக்குப் புறப்படுகிறோம். பானுவை நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்ற தைரியம் எனக்கு... வர நாலைந்து நாட்களும் ஆகலாம்... ஒரு வாரமும் ஆகலாம். வரட்டுமா..." என்றவன் டாக்டரிடம் சென்று பேசி... அவர் கொடுத்த பாரத்தில் கையெழுத்தும் போட்டுவிட்டுப் புறப்பட்டான்...

அவனைத் தடுக்க முடியாமல் அவன் போவதை வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது....

இங்கே மனைவி பிரசவ வேதனையில் தவித்துக் கொண்டு இருக்கையில்... ரத்னாவுடன் உல்லாசப் பயணம் செல்ல எப்படி அவனுக்கு மனம் வந்தது.

ஒருவேளை... என் பிள்ளைக்கு இளகிய மனம் என்று நினைத்து மகிழ்ந்தது தப்போ... பானுவுக்கு நேர்ந்ததைப் பார்த்தும் கல்லாய் இருக்கிறான் என்றால்... அவனுடைய இதயம் இரும்பால் ஆகியிருக்க வேண்டும்...

சே! மனிதத் தன்மையை இழந்து விட்ட ஒருவனை மகனாக அடைந்த என்னைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.

வயதான காலத்தில் இந்தக் கர்மங்களை யெல்லாம் பார்க்க வேண்டி வந்ததே... சத்புத்திரன் என்று நினைத்த பிள்ளை இப்படி மாறிப் போனதுதான் இப்போ வேதனை... என் தலைவிதி... அவர் கொடுத்து வைத்தவர்... இந்தக் கண்றாவியை எல்லாம் பார்க்காமல் நிம்மதியாய் போய் சேர்ந்து விட்டார்...

நர்ஸ் வருவதைக் கண்டு கண்களைத் துடைத்துக் கொண்டாள்.



"அம்மா... என் மருமகள் எப்படி இருக்கிறாள்... அவளுக்கு வலி வந்து விட்டதா... ஆபரேஷன் பண்ண வேண்டிய அவசியம் வராதே..." என்று விசாரித்தாள்.

"யார்... பெயர் பானுமதி ராஜசேகர்தானே... இல் லேம்மா... அவங்களுக்கு ஆபரேஷன் பண்றதற்கு ரெடி பண்ணிக் கொண்டிருக்காங்க... இன்னும் கொஞ்சம் நேரத்தில் தியேட்டருக்கு கூட்டிட்டுப் போவாங்க..."

"தெய்வமே."

"ஏம்மா... உங்க மருமகளுக்கு ஒண்ணும் ஆகாது... கவலைப் படாதீங்க... குழந்தையோட நல்லதுக்குத்தான் ஆபரேஷன் பண்றது... உங்க மருமகளுக்கு இரட்டைக் குழந்தை வேறு... அதான்... டாக்டர் ஜெயந்தியும் கைராசிக் காரங்க... அவங்க பார்த்த எந்த கேசும்.. பெயில் ஆனது கிடை யாது... பயப்படாதீங்கம்மா..." நர்ஸ் தைரியம் சொன்னாள்.

"உன் வார்த்தை பலிக்கட்டும்மா... பிரசவம் என்கிறது மறுபிறவின்னு சொல்லுவார்கள்... அதுதான்..."

"அதெல்லாம் அந்தக் காலம்மா... இப்போ மெடிக்கல் சைன்ஸ் முன்னேறியாச்சு... கடைக்குப் போய் காய்கறி வாங்கி வர்ற மாதிரி பிரசவமும் சுலபமாயிடுச்சு. பார்த்து கிட்டே இருங்க... ஆபரேஷன் தியேட்டர் போன கொஞ்ச நேரத்திற்கெல்லாம் டெலிவரி யாகிவிடும்... பேரப்பிள்ளை களைப் பார்க்கப் போகிற சந்தோஷத்தோட நிம்மதியா இருங்கம்மா..."

அந்த நர்ஸ் சொன்னது வயிற்றில் பால் வார்த்தது போல இருந்தது.

ஆவலுடன் காத்திருந்தாள்...

தன் குடும்பத்தின் புது வரவிற்காக...

தன் குலத்தின் வாரிசுகளுக்காக...

தன் வம்சத்தின் கிளைகளுக்காக...

தன் வீட்டின் புதுமலர்களுக்காக... பாசமலர்களுக்காக.

அந்த பிஞ்சுகளும் உலகத்திற்கு வந்தன... ஜனத்தொகையில் இரண்டு கூடின...

பாட்டியாகிப் போனோம் என்ற பெருமிதத்தில் தன்னை மறந்தாள். தன்னைச் சுற்றியிருந்த பிரச்சனைகளை மறந்தாள்... பிள்ளையை... ரத்னாவை... மற்ற கவலைகளை மறந்து போனவளாய்... ஆனந்த வெள்ளத்தில் திக்குமுக்காடிப் போனாள் சௌந்திரம்...

நர்ஸ் இரண்டு பேர். அந்த சின்னஞ்சிறு குருத்துக்களைக் கொண்டு வந்து காட்ட... ''என் செல்வங்களா...'' என்று பரவசம் அடைந்தாள் அந்தப் பாட்டி... அந்த நேரத்தில்... உடம்பெல்லாம் சிலிர்த்து... கண்ணீர் பன்னீராய் கசிய... அடடா... அது புது அனுபவமாக அல்லவா இருந்தது அந்தப் பாட்டிக்கு!



## 17

ரோஜாச் செண்டாய் பானுவின் அருகே ஒரு குழந்தை... பூமாலையாய் தொட்டிலில் ஒரு குழந்தை.

இரு குழந்தைகளும் புது உலகம் கண்ட சாதனையில் அலுப்புடன் உறங்கிக் கொண்டிருந்தன...

பேரக் குழந்தைகளின் அழகு முகங்களைப் பார்த்துப் பார்த்து அகமகிழ்ந்தாள் சௌந்திரம்...



வண்ண ஓவியங்களாய்... கண் மூடிப் படுத்திருக்கும் அழகு... அது தெவிட்டாத அழகு!

இந்த அழகு மழலைகளைப் பெற்றுத் தந்து விட்ட ஆயாசத்தில் உறங்கிக் கொண்டிருந்த மருமகளை வாஞ்சையுடன் பார்த்தாள்...

ஆரத்திக்கு ஒரு மகளையும்... வம்ச கீர்த்திக்கு ஒரு மகனையும் பெற்றுத் தந்திருக்கிறாள் என் தங்கம்... மகன் அப்படியே ராஜசேகரின் அச்சு...

இரண்டாவதாய் பிறந்த மகள் அம்மாவின் ஜாடை... இப்போது ராஜசேகர் இல்லாமல் போனதுதான் வருத்தம். அவனுக்குக் கொடுத்து வைக்கவில்லை... பிறந்தவுடன் குழந்தைகளைப் பார்க்காமல் எங்கோ இருப்பது அவனது துர்அதிர்ஷ்டம் தான்...

எங்கோ என்ன... ரத்னாவின் வீட்டில்... அவளது முந்தானையில் விசிறிக் கொண்டு காற்று வாங்கிக் கொண்டிருப்பான்... சே! நினைக்கவே கேவலமாக இருந்தது....

தனக்கு பாட்டி பதவி கிடைத்ததை நினைத்து சந்தோஷப் படுவதா... இல்லை... இந்த தளிர்களுக்கு தந்தை அன்பு இல்லையே என்று வருத்தப்படுவதா... தெரியவில்லை.

ஒரு வேளை... அவன் ரத்னாதான் கதி என்று இருந்து விட்டால்... பிறகு பானுவின் நிலை... அய்யோ.

கணவன் ஆதரவை இழந்த பானுவிற்கு ஒரு குழந்தையை வளர்த்து ஆளாக்குவது என்பது இரட்டிப்பு சுமைதான்...

இந்த லட்சணத்தில் இரண்டு குழந்தைகள் வேறு... அவைகளை தந்தையாகவும் தாயாகவும் இருந்து வளர்க்க வேண்டிய பொறுப்பு...

அவளால் அது முடியுமா...

குருவி தலையில் பனங்காய் வைத்தமாரி... பாவம் அமுத்தி விடுமே...

அவளுக்குத் துணையாய் நான் இருந்தாலும்.. அது எத்தனை நாளுக்கு... என் காலத்திற்குப் பின் அவளுக்கு துணையாய் யார் இருப்பார்கள்... கடவுள்தான் அவளுக்குத் துணையா இருக்க வேண்டும்...

ராஜசேகருக்கு நல்ல புத்தியைத் தந்து அவன் மனதை மாத்தணும்... இவள் மேலேயும் குழந்தைகள் மீதும் அன்பும் அக்கறையும் வரவேண்டும்...

இதோ... எந்தக் கவலையும் இல்லாமல்... பாரத்தை இறக்கி விட்ட சுகத்தில் உறங்கிக் கொண்டிருக்கும் இவளின் நிம்மதி... விழிக்கும் வரைதான்... உறங்கட்டும்...

கண்விழித்ததும் கணவனைத் தேடுவாள் பாவம்... அருகில் இருந்து அன்பாய் இரண்டு வார்த்தை பேசினால் போதுமே... பானுவின் சோர்வும் ஆயாசமும் பறந்து விடும்... கணவனின் அருகாமையில் வலி.... களைப்பு... மனச்சோர்வு எல்லாமே பறந்து போய்விடும்... என்னதான் மற்ற உறவுகள் சுற்றியிருந்தாலும் அது கணவனுக்கு ஈடாகாதுதான்.

இது அந்தப் படித்த முட்டாளுக்குத் தெரியவில்லையே... போனவன் உடனே வந்துவிடுவேன் என்று சொல்லிவிட்டுப் போனது என்னவோ சரி... ஆனால் கிளம்ப விடுவாளா அந்த சிங்காரி...

என்னவோ நடக்கட்டும்...

ஏற்கனவே முடிவு செய்தபடி இருக்கவே இருக்கிறது கிராமத்து வீடு...

நேரே அங்கேயே போய் விடவேண்டும்... முதல்ல ஆள் அனுப்பி... அந்த வீட்டை ஒழுங்கு படுத்தச் சொல்ல வேண்டும்...



குழந்தைகள் வளர அருமையான இடம்... நல்ல காத்து... ஆரோக்கியமான சூழல்... அருமையான இடம்... ராஜ சேகரும் ரத்னாவும் எக்கேடாவது கெட்டு போகட்டும்...

தொட்டிலில் இருந்த குழந்தை சிணுங்கியது... அருகே சென்று ஆட்டினாள் சௌந்திரம்.

"கண்ணுகளா... உங்களுக்கு எந்தக் குறையும் வராம பார்த்துக்க இந்த பாட்டி இருக்கேன்டா... நிம்மதியா தூங் குடா செல்லம்" குனிந்து மெல்லிய குரலில் சொன்னாள்.... அதில் உறுதியும் நம்பிக்கையும் தெரிந்தது.

வலது காலை எடுத்து வைத்து அந்த வீட்டிற்குள் நுழைந்த பானுவிற்கு பழைய நினைவுகள் 'ஜிவ்' வென்று மனதில் படர்ந்தன... அழுகை வரட்டுமா என்று கெஞ்சியது. மிழுங்கிக் கொண்டாள்.

சென்ற முறை இந்த வீட்டிற்கு வந்தபோது கணவர் உடன் இருந்தார்... இப்போது குழந்தைகளுடன் வந்திருக்கிறேன்... ஆனால் அருகில் அவர் இல்லையே...

இந்த வீட்டில் தானே எங்கள் தேனிலவு... இங்கே தானே ஓருயிரும் ஈருடலுமாய் இருந்தோம்... பூலோக சொர்க்க மாய் இருந்த இடம் இதுவாயிற்றே. இந்த இரண்டு உயிர்களும் வயிற்றில் உருவான புனித தலம்! ராசியான இல்லம் என்று எண்ணி மகிழ்ந்தேனே... இப்போது எல்லாமே கனவாகிப் போனதே...

துக்கத்தில் நெஞ்சம் கனத்தது.

ராஜசேகர் ஊருக்குப் போய் ஏழுநாட்கள் ஆகிவிட்டன. என்ன செய்கிறான்... எப்போது திரும்புகிறான் என்ற தகவலும் இல்லை...

இங்கே தாயும்... மனைவியும் காத்திருப்பார்களே என்ற எண்ணம் கூடவா இல்லை...

அவனுக்குக் குழந்தைகள் பிறந்த செய்தியை அனுப்ப வேண்டும் என்று நினைத்தாலும் அது முடியவில்லை.

கணக்குப் பிள்ளை ராஜசேகரின் செல்லுக்கு முயற்சி செய்து பார்த்தும் பயனில்லை.

''தொடர்பு கொள்ள இயலாததற்கு மன்னிக்கவும்'' என்று கிளிப்பிள்ளை மாதிரி திரும்பத் திரும்ப ஒலித்தது.

அவனே தொடர்பு கொண்டு பேசட்டும்... இல்லை... வந்த பின்பு தெரிந்து கொள்ளட்டும்... அந்த ஆசை அவனுக்கு இருந்தால்... சௌந்திரம் சலிப்புடன் விட்டு விட்டாள்.

குழந்தைகளைப் பார்க்கும் ஆசையில் பானுவின் தந்தையும்... உடன் பிறந்தவர்களும் வந்திருந்தனர். பேரனையும் பேத்தியையும் மாறி மாறிக் கொஞ்சி மகிழ்ந்தனர்...

பேரக் குழந்தைகளுக்கு உடைகளையும்.. விளையாட்டு சாமான்களையும் அள்ளிக் கொண்டு வந்திருந்தனர் தாய் மாமன்கள்.

''எதுக்குங்க இத்தனையும்... இப்பத்தான் பிறந்து... இன்னும் சரியாக் கண்ணு திறக்கல்லே... இன்னும் நாலைந்து மாதம் போகணும்... இதை வைத்து விளையாட...'' என்றாள் சௌந்திரம்...

''சொன்னா கேட்டாதானே... சம்பத் பந்து வாங்கணும்னு போயிட்டான்னா பார்த்துக்கங்க சம்பந்திம்மா... குழந்தைங்க நடக்க ஆரம்பிச்சதும் அதை வாங்கலாம்னு சொன்னேன்... அது அவனுக்கு குறைதான்... ஆமா... மாப்பிள்ளை இன்னும் வரல்லையாம்மா...'' என்று ஆவலுடன் விசாரித்தார் பரமேசுவரன்.

இல்லை என்று தலையசைத்தாள் பானு...

''எப்போ வருகிறார்னு தகவல் வந்ததா...''



''யாருக்குத் தெரியும்'' என்று முணுமுணுத்தாள் சௌந்திரம்...

பரமேசுவரன் பொண்ணைக் கொடுத்ததுடன் சரி... சம்பந்தி வீட்டு விவகாரங்களில் தலையிடத் தனக்கு உரிமை ஏதும் இல்லை என்று நாகரீகமாய் ஒதுங்கி இருந்தார். மாப்பிள்ளையின் முதல் மனைவியின் வரவைப் பற்றி அவருக்குத் தெரியாமலா இருக்கும்... இருந்தும்... அவர்கள் விவகாரத்தில் மூக்கை நுழைக்கக்கூடாது என்ற உயர்ந்த நோக்கத்துடன் எதையும் அவர் கேட்கவில்லை...

தன் மகளுக்கு அந்த வீட்டில் எந்தக் குறையும் இல்லை... அது போதும் என்று வருத்தப்படாமல் இருந்தார்...

இப்போது ராஜசேகரைப் பற்றிக் கேட்ட போது என்ன பதில் சொல்வது என்று புரியாமல் பானு அத்தையின் முகத்தைப் பார்த்தாள்.

''வந்து விடுவான் சம்பந்தி... பிள்ளைகளைப் பார்க்கக் கண்டிப்பா சீக்கிரம் வருவான்'' என்று சொன்னார் அத்தை...

அது நடக்குமா என்று தெரியவில்லை.

ஆனால் பிள்ளைகளுக்காக இல்லை யென்றாலும் அலுவலகப் பணிகள் தேங்கி நிற்கின்றதே... அதற்கு வந்தேயாகணும் தானே...

என்ன பெயர் குழந்தைகளுக்கு வைப்பது என்று பேச்சு எழ...

பெயர் பட்டியல் ஒன்று உருவானது...

நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு பெயர்கள் தேர்வானது. ஆண் குழந்தைக்கு 'அருண்' என்றும்... பெண் குழந்தைக்கு 'உதயா' என்றும் முடிவானது...

இருமாமன்களின் தேர்வு!

"அழகான பெயர்கள்... அருண்... உதயா கேட்க இனிமையா இருக்கு... பானு... உன் வாழ்க்கை இனி ஒளிமயம் என்பதற்கு அடையாளமாய் இந்தப் பெயர் அமைந்திருக்கு... பார்... அருணோதயம்..." சௌந்திரம் மலர்ந்த முகத்துடன் சொல்ல... பானு கனிவுடன் தன் குழந்தைகளைப் பார்த்தாள்.

சிப்பிகளாய் இமைகள் மூடியிருக்க... இரு கைகளையும் அழகாய் விரித்துக் கொண்டு அழகான ஓவியமாய் உறங்கிக் கொண்டிருந்த மகளையும்...

பிஞ்சு விரல்களால் கேசத்தைப் பிடித்துக் கொண்டு வலியில் சிணுங்கி விட்டு முழித்துப் பார்க்கும் பொம்மை போன்ற மகனையும்... பார்த்த அவளது விழிகளில் பளபளப்பு...

இந்த தங்க விக்ரகங்கள் என் குழந்தைகள்... என் ரத்தம்... இல்லை... ராஜசேகரின் ரத்தமும் கூட...

என்னை அம்மா என்று அழைக்கப் போகும் செல்வங்கள்...

தன் குழந்தைகளைப் பார்க்கும் போது ராஜசேகர் முகத்தில் பெருமிதம் வருமா... தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே...

தன் ரத்தமும் சதையும் இரு சிறு உருவங்களாகி... பேசும் பொற்சித்திரங்களாக வந்ததை நினைத்துப் பூரிப்பு அடைவானா... அதைப் பார்த்து ரசிக்க வேண்டும் என்று மனம் துடித்தது.

"அப்போ... நாங்க புறப்பட்றோம்மா... பானும்மா... வரட்டுமா... உன் அத்தையும் வர ஆசைப்பட்டாள்... ஆனா... பாவம்... இரண்டு நாளா மூட்டு வலியில் அவதிப் பட்டுக் கொண்டு இருக்கிறாள்... நடக்க முடியாமல் தவிச்ச தால் இப்ப வேண்டாம்னு சொல்லி விட்டேன். உடம்பு பார்த்துக்கோம்மா... அப்பப்ப வந்து பார்த்துக்கறேன்... என்னம்மா..." என்று புறப்பட்ட தந்தைக்கு புன்னகையுடன் தலையசைத்தாள்.



"அடுத்த தடவை வர்ரப்போ... இரண்டு நாள் தங்கற திரி வாங்க சம்பந்தி... பேரக் குழந்தைகளோட பொழுதைப் போக்கறதில் வர்ற சந்தோஷம்தான் நமக்கு இனிமேல் ல்லாமே... வேலையில் இருந்து ஓய்வு எடுத்துக் கொண்டு... பொழுதை இந்தக் குழந்தைகளுடன் கழிக்கலாம் இல்லையா... ன்ன சொல்றீங்க... சம்பந்தி..."

"உண்மைதான் சம்பந்திம்மா... இந்த தங்கக் கட்டிகளைப் பார்த்துக் கொண்டிருந்தால் போதும்னு தோணுகிறது. இருந் தாலும் கடமையைத் தவறக் கூடாது இல்லையா. மாப்பிள்ளை என்னை நம்பி விட்டுவிட்டு போன வேலைகளை நான் ஒதுக்கி வைக்கறது தப்பாச்சே... வேலையிலிருந்து ஓய்வு பெற்றதும் எஞ்சிய காலத்தை என் பேரப் பிள்ளைகளோடு தானே கழிக்கப் போறேன்... நீங்க சொன்ன மாதிரி... நமக்கு வேறென்ன வேண்டும்... நமக்கு எல்லாம் இவங்கதான்.... அப்ப... நாங்க புறப்பட்றோம்... மாப்பிள்ளை வந்ததும் சொல்லி அனுப்புங்கம்மா... பானும்மா... உடம்பை பார்த்துக்கோடா" என்று புறப்பட்டவர்...

வாசலில் யாரோ வருவது கண்டு நின்றார்.

அனைவரின் பார்வையும் வாசல் புறம் தாவியது.

யாரோ வந்திருக்கிறார்கள்... கிராமத்தாட்களில் யாராவது குழந்தைகளைப் பார்க்க வந்திருப்பார்கள். வரட்டும்...

ஆனால் அந்த யாரோ வேறு யாரும் இல்லை.. ராஜ சேகர்தான் என்று அறிந்ததும் ஆச்சர்யமும் திகைப்பும்...

எதிர்பார்க்காத நேரத்தில் வந்து நின்றதைக் கண்டு திகைப்பு...

அவன் மட்டுமே வந்திருப்பது கண்டு ஆச்சர்யம்... அவனைத் தொற்றிக் கொண்டு ரத்னா வராதது நிம்மதியைத் தந்தது.

அதே சமயம் அவளுக்கு என்னவாயிற்று என்ற காரணத்தை அறியும் ஆர்வமும் இருந்தது. இருக்கட்டும்... அவனே சொல்லும் வரைக் காத்திருக்கலாம் என்று நினைத்தனர் மாமியாரும் மருமகளும்...

அருகில் வந்து நின்ற மகனின் முகத்தில் தெரிந்த சோர்வைப் பார்த்ததும் முறுக்கி நின்ற தாய்மை அப்படியே தளர்ந்து... பின் நெகிழ்ந்து நின்றது...

"வாப்பா... ராஜா" என்று அழைத்த குரலில் பாசம் மட்டுமே இருந்தது...



## 18

தாய்ப் பாசம் அருமையானது....

தன் பிள்ளைகளின் மேல் எத்தகைய கோபம் இருந்தாலும் அவர்களை நேரில் கண்டதும் கோபம் எல்லாம் மாயமாகிப் பாசம் மட்டுமே நிற்கிறது...

சௌந்திரத்திற்கும் அதேதான்...

ஊரிலிருந்து வந்த களைப்பில் துவண்டு போய் நின்றிருந்த மகனைக் கண்டதும் அவன் மீது இருந்த ஆத்திரம்... கோபம்.... எரிச்சல் எல்லாமே காற்றில் பட்டக் கற்பூரமாய் கரைந்து போனது...

"ராஜா.... வந்து விட்டாயாப்பா... எப்போ ஊர் திரும்பினாய்" என்று கேட்டு அவனருகே சென்றாள்.

"இப்போதுதான் வந்தேன்... ஏம்மா... என் பானு எப்படி இருக்கிறாள்..." என்று விசாரித்த மகனை வியப்புடன் பார்த்தாள் சௌந்திரம்...



என் பானு என்றா சொன்னான்...

ரத்னா என்னவானாள்... அவ்வளவுதானா... இல்லை... அவள் ஏதாவது எடக்கு பண்ணிக் கழண்டு கொண்டு விட்டதால்... இப்போ பானு பக்கம் திரும்பி விட்டானா.

கண பித்தம்... கணப் பைத்தியம் என்பது போல அல்லவா நடந்து கொள்கிறான்.

இருக்கட்டும்... இன்னும் எத்தனை நாளுக்கு இப்படி...

எப்படியோ இருக்கட்டும்... இப்போதைக்குப் பானுவிடம் அனுசரணையா இருந்தா அது போதும். பிள்ளைப் பெற்று எடுத்த பச்சை உடம்பு... ரொம்பவும் கவலைப்படக் கூடாது...

இவன் வந்ததே அவளுக்குச் சந்தோஷமாக இருக்கும். உடம்பும் தேறும்.

மகனிடம் சொன்னாள்... "இத்தனை நாள் பார்க்காமல் இருந்ததே பெரிய விஷயம்... வாப்பா... வந்து பார்..." என்று சொன்னாள்.

பானுவின் கண்கள் கணவன் மீதே மொய்த்துக் கொண்டிருந்தன... ஒரு வாரமா... அம்மாடி!... ஒரு யுகம் ஆனது போல் அல்லவா இருக்கிறது.

அதுவும் வரமாட்டான் என்று நினைத்த போது திடீர் என்று வந்து நின்றதில் இன்ப அதிர்ச்சி!

அதில் மலைத்துப் போய்... பிரமித்தவளாய் கண் கொட்டாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அதுநாள் வரை அவள் பட்ட வேதனை... ஏக்கம்... வருத்தம்... துன்பம் எல்லாமே அந்த நொடியில் காணாமல் போனது தான் விந்தை!

உடம்பில் ஏதோ தெம்பு கூடினாற் போல உணர்ந்தாள்...

ராஜசேகர் மனைவியின் அருகே வந்தான்...

பானுவின் நெஞ்சம் அடித்துக் கொண்டது... இதயம் அளவுக்கு மீறித் துடித்ததோ... சந்தோஷத்தினாலா..... இருக்கலாம்...

என்னவர்... இதோ வந்து விட்டாரே... அவளால் இன்னும் நம்ப முடியவில்லை... எப்படி ரத்னாவைப் பிரிந்து வந்தார்... என்னை மறந்தே போனார் என்று நினைத்ததுக்கு மாறாய்... எனக்காக... என் குழந்தைகளுக்காக... தேடி வந்து விட்டார் என்றால்... ஓ! இந்த வீட்டின் ராசி தான்... அவரைக் கட்டி இழுத்து வந்து விட்டது!

''பானு...எப்படி இருக்கிறாய்... குழந்தையைப்...'' என்று கண்களைச் சுழற்றியவன் இரட்டைத் தொட்டில்களைப் பார்த்து விட்டுத் திகைத்துப் போனான்... தாயைக் கேள்விக் குறியாய் பார்க்க... இளநகையுடன் தலையசைத்து சொன்னாள்.

''இரட்டை பிள்ளைகள் ராஜா.... உனக்கு மகனும்... மகளும்... ஒரு குழந்தைக்கு போனசா இன்னொன்னு பெத்துக் கொடுத்திருக்கா பானு...''

தன் இரு குழந்தைகளையும் குனிந்து ரசித்தவன் பெருமையுடன் நிமிர்ந்து பார்த்தான்.

''என் குழந்தைகள்... என் மகன்... என் மகள்... ரொம்ப சந்தோஷமா இருக்கிறது பானு...'' பானுவின் கையைப் பற்றி அழுத்தினான் அவன். ரொம்பவும் சிரமப்பட்டாயா பானு... அவனது குரலில் கரகரப்பு...

''ஊகூம்... கொஞ்சம் தான்... அதுவும் குழந்தைகள் முகம் பார்த்ததுமே பறந்து விட்டது...''



''உண்மைதான் பானு... நான் வந்தபோது அசதியில் வந்த சோர்வும்... மனதில் இருந்த குழப்பமும் என் குழந்தைகளின் பூ முகங்களைப் பார்த்ததுமே மாயமாகி மறைந்துவிட்டது... எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கிறது பானு... என்னால் நம்பவும் முடியவில்லை... எனக்கு இரண்டு குழந்தைகள்... இதை எதிர்பார்க்கவும் இல்லை.''

''யாருமேதான் ராஜா... கடைசிவரை அதைப் பரம ரகசியமாகவே வைத்திருக்கிறார் அந்த டாக்டர்... பாரேன். என்னிடம் சொன்னால் கூட எங்கே வாய் தவறி பானு கிட்டே சொல்லி விடுவேன் என்ற பயம் போல... நம் குடும்ப டாக்டர் ஆச்சே... அதான் முன்னெச்சரிக்கையா நடந்து கொண்டிருக்கிறார். எப்படியோ நல்லபடியா பிரசவமும் முடிந்து... தாயும் குழந்தைகளும் நலமா வீடு வந்தாச்சு... அப்புறம் ராஜா... குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழாவை விமரிசையா கொண்டாடணும். எல்லோரையும் கூப்பிடணும்... முக்கியமா நம்ம டாக்டர் அம்மா ஜெயந்தியைக் கூப்பிட்டு ஏதாவது அன்பளிப்பைத் தரணும்...''

''பெயர் சூட்டும் விழாவா... அது எப்போது பண்ண வேண்டும்மா...'' ராஜசேகர் கேட்க...

''இன்னும் இரண்டு மாதங்கள் போகட்டும்ப்பா... பச்சை உடம்பு... ஆபரேஷன் வேறு ஆகியிருக்கிறது...'' என்றாள் தாய்.

''என்ன... ஆபரேஷனா... என்னம்மா சொல்கிறீர்கள். நார்மல் டெலிவரி இல்லையா...'' பதைத்துப் போய் வினவினான் மகன்...

''அன்றைக்கு நீ எங்கே கேட்கும் நிலையில் இருந்தே. உன்னிடம் கையெழுத்து வாங்கிக் கொண்டது எதற்காம்...

வலி வராமல் போனால் ஆபரேஷன் பண்ண வேண்டி வரலாம் என்று முன் எச்சரிக்கையாகத்தான் வாங்கிக் கொண்டார்கள்... நீ அருகில் இல்லாமல் போனதுதான் எங்களுக்குக் கஷ்டமாக இருந்தது. பானுவுக்கும் குழந்தை களுக்கும் எந்த ஆபத்தும் இல்லை என்று ஆனதும்தான் நிம்மதி வந்தது எனக்கு...''

பானுவின் அருகில் அமர்ந்தவன் அவளது கேசத்தைக் கோதியவாறு சொன்னான்...

''சாரிம்மா... நீ அத்தனை வேதனைப் பட்ட போது உன் அருகில் இருந்து ஆறுதல் சொல்லியிருக்க வேண்டும்... இனிமேல் உன்னை விட்டு அகலவே மாட்டேன்... சரி தானே... பானு... நம் வீட்டில் நடக்கப் போகும் முதல் வைபவம் நம் குழந்தைகளுக்குப் பெயர் சூட்டும் விழா... அதை வெகு ஜோராய் நடத்தி விடலாம்... என்னம்மா.''

அருகில் இருந்த வாசு சொன்னான்.

''குழந்தைகளுக்குப் பெயர்களைக் கூட 'செலக்ட்' பண் ணிட்டோம்... சார்...''

ராஜசேகர் சிரித்துக் கொண்டே சொன்னான் ''இந்த சார்... மோர் எல்லாம் எதற்கு வாசு... மூன்றாம் மனிதரைப் போல... அக்காவோட கணவனை மாமா என்றுதானே அழைப்பது... அப்படியே கூப்பிடு... ஆமாம்... அது என்ன பெயர்கள்... சொல்லேன்...!

''என் மருமகனுக்கு அருண்... மருமகளுக்கு உதயா... நன்றாக இருக்கிறதா... சார்... ம்ம்... மாமா...''

''அருண்... உதயா... அருணோதயா... குட்... நல்ல தேர்வுதான்... பொருத்தமாகவும் இருக்கிறது... இல்லையா பானு... அதாவது... நம் வருங்காலத்தின் அருணோதயம் இவர்கள்... இல்லையா...''



அவன் உற்சாகமாய் பேசுவது கண்டு பானுவின் முகம் மலர்ந்து போனது.

நீண்ட நாட்களுக்குப் பின் அவனிடம் மீண்டும் கல கலப்புத் தெரிந்தது... இப்படி உல்லாசமாய் பேசி எத்தனை நாளாயிற்று...

எல்லாம் இந்தக் குட்டிகள் பிறந்த நேரம்... பழைய ஆனந்த நாட்களைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டன. சமர்த்து செல்லங்கள்... இப்பவே அப்பாவை தன் வசப் படுத்திவிட்டதுகள்... பெருமையாக இருந்தது அவளுக்கு.

பரமேசுவரன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார்.

''நாங்க புறப்படுகிறோம் சம்பந்தியம்மா...''

''அதற்குள் என்ன அவசரம் மாமா... இருந்து விட்டுப் போகலாமே... நானும் உங்ககிட்டே நிறையப் பேச வேண் டும்... ஒரு வாரமாய் நான் வெளியூரில் இருந்ததால் இங்கே அலுவலகத்தின் நிலைமையைப் பற்றிக் கேட்க வேண்டும்... எந்த பிராப்ளமும் இல்லையே...'' என்று மாமனாரை விசாரித்தான்.

இன்னொரு ஆச்சர்யம்!... வாய் நிறைய அவன் 'மாமா' என்று அழைத்தது... பானுவின் காதில் தேன் மழை!

போகும் போது இறுகி இருந்த ராஜசேகர் திரும்பி வந்த போது தெளிந்து விட்ட மாயம் என்னவோ... இவரைப் புரிந்து கொள்ளவும் முடியவில்லையே...

தந்தையும் ராஜசேகரும் வேலை சம்பந்தமாய் ஏதோ பேசுவது பார்த்தாள்.

தன் தந்தை இன்னும் மானேஜர் என்ற வட்டத்தினுள்ளே இருப்பது தெரிந்தது... அய்யோ... அப்பா! மாப்பிள்ளை யிடம் சகஜமாய் பேசுங்களேன்... மானசீகமாய் கேட்டுக் கொண்டாள் அவள்...

வற்புறுத்தியும் இருக்காமல் சிக்கிரமே புறப்பட்டுவிட் டார். என்ஜினைத் தொடரும் வண்டிகளாய் பிள்ளைகளும் தந்தை பின்னே சென்றனர்.

அவர்கள் சென்ற பின்பு தாயிடம் கேட்டான் ராஜசேகர். "அம்மா... ஆஸ்பத்திரியிலிருந்து நேரே நம் வீட்டிற்கு வராமல் இங்கே ஏன் வந்தீர்கள்... ஊரிலிருந்து வந்ததும் நீங்கள் இங்கிருப்பதை அறிந்து கொண்டு உடனே ஓடி வந்தேன்... ஏன்... அந்த வீட்டில் என்ன குறைன்னு இங்கு வந்தீர்கள்..."

இந்தக் கேள்விக்காகவே காத்திருந்த சௌந்திரம் திரும்ப அவனிடம் கேட்டாள்...

"அதற்கு முன்னால எனக்கு ஒரு விஷயம் தெரியணும் ராஜா... இப்ப ஊரிலிருந்து நீ மட்டும் வந்தாயா.. இல்லே... ரத்னாவும் வந்திருக்கிறாளா... அது முதல்ல எனக்குத் தெரியணும்.!"

"ஏம்மா... நான் மட்டும்தான் திரும்பினேன்..."

"அப்போ... ரத்னா...!"

"அவள் எங்கிருப்பாள்... அவளோட அம்மா வீட்டில் தான். இனி அவள் இங்கே வரமாட்டாள்ம்மா..."

"என்ன சொல்றேப்பா..."

"அவளுக்கும் எனக்கும் இருந்த உறவு முறிந்து விட்டது. இனி என் வாழ்க்கையில் ரத்னாவிற்கு இடமே இல்லை. என்னைப் பொறுத்த வரையில் அது முடிந்த கதை... முற்றுப் புள்ளி வைத்தாகி விட்டது..."

"ராஜா... எனக்குத் தலையும் புரியவில்லை... வாலும் புரியவில்லைப்பா... ரத்னா... ரத்னான்னு நீ உருகியது என்ன... அவள் பின்னால் சுற்றி வந்தது என்ன... இப்போ



ன்னடான்னா.... அவளோட உறவு முறிந்து விட்டது என்று சொல்றே... கேட்கவே தலையை சுத்துது ராஜா...!"

பானுவிற்கும் கணவன் சொன்னது குழப்பத்தைத் தந்தது. வளுக்கும் உள்ளே அரித்துக் கொண்டுதான் இருந்தது. த்னா வந்திருக்கிறாளோ... பெரிய வீட்டில் தங்க வைத்து விட்டு வந்திருக்கிறாரா என்ன...

இப்போது ராஜசேகர் சொல்லுவதைப் பார்த்தால் ரத்னா இனி இந்தப் பக்கம் வரவே மாட்டாள் என்று தெரிகிறது. ஆனால்... அது எப்படி... என்ன நடந்தது... ரத்னா என்று உருகினாரே... அது நிஜமா... பொய்யா... அப்படி என்ன தான் நடந்தது... தெரிந்து கொள்ளும் ஆவல் இருந்தாலும் அதை அவரே சொல்லட்டும் என்று காத்திருந்தாள்.

ராஜசேகரும் விளக்கினான்...

அவன் சொல்லியதை எல்லாம் கேட்கக்... கேட்க... மாமி யாருக்கும் மருமகளுக்கும் ஒரே வியப்பு... அதற்கு மேலாய் திகைப்பு!

அப்படியே மலைத்துப் போய் கேட்டுக் கொண்டிருந் தனர் இருவரும்...

அவன் சொல்வதெல்லாம் நிஜம்தானா... என்ற மலைப்பு... இப்படியும் நடக்குமா என்ற திகைப்பு... அது... ஒரு சுவாரஸியமான கதை...



## 19

ராஜசேகரை விட்டுப் பிரிந்து வந்த ரத்னா தனிப் பறவையாக வாழவில்லை.

சுதந்திரம்... உல்லாசம் என்ற பெயரில் யார்யாருடனோ திரிந்தாள்.... வாழ்க்கை வாழ்வதற்கே என்ற கொள்கை யுடன் கடிவாளம் போடாத குதிரையாய் ஊர்ச் சுற்றினாள்...

விளக்கைத் தொட்டு சுட்டுக் கொண்ட விட்டில் கதையாய்... திருமண பந்தத்தில் சிக்கி... சிறைப் பறவையாக இருக்க மனமின்றி ஓடி வந்தவளுக்குத் திருமணம் என்ற வார்த்தையே கசந்து போனது.

அவளைப் பொறுத்த மட்டில் காட்டாற்று வெள்ளம் போல கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை வேண்டும்.....

யாருடைய அதிகாரத்திற்கும் தலை வணங்கும் நோக்க மில்லை...

அதனால்தான் அந்த சின்ன ஊரில்... மதிப்பும் மரியாதை யும் உள்ள ஒரு குடும்பத்தில் வாழ்க்கைப் பட்டவளுக்கு அடங்கி... ஒடுங்கி இருக்கப் பிடிக்காமல் வந்துவிட்டாள்.

ஊரின் சட்டத்திட்டங்களும்... கட்டுப்பாடுகளும்... குடும்ப மானம்... குலப்பெருமை என்று சௌந்திரம் சொன்ன புத்திமதிகளும்... புளித்துப் போன சடங்கு சம்பிர தாயங்களும் அவளுக்கு எரிச்சலூட்டி வெறுப்படையச் செய்தன. அந்த ஊரும்... ஊர் மக்களும் பிடிக்காமல் போனது. தன் முந்தானையைப் பிடித்துக் கொண்டு தன்னைச் சுற்றி வந்த கணவனின் அன்பு மழைக்கூடச் சலிப்பாக மாறியது. கரைப் புரண்டு வரும் வெள்ளத்திற்கு அணைப் போட்டு நிறுத்த முயன்று... அது சாத்தியமின்றி அணைச் சுவரை உடைத்துக் கொண்டு ஓடுவது போல... திருமண பந்தத்தி லிருந்து தன்னைக் கழட்டிக் கொண்டு ஓடிப் போனாள். பெற்றவர்களின் புத்திமதியும் காதில் ஏறவில்லை.

எனக்கு யாரும் அறிவுரை கூற வேண்டாம் என்று திமி ருடன் பேசினாள்.



சிறையில் அடைபடாத சிட்டுக் குருவியாய் வலம் வந்தாள்.

வழிக்கு வரமாட்டாள் என்பதை உணர்ந்து கொண்ட பெற்றவர்கள்... அவள் தலையில் நீர் தெளித்து விட்டு... எங்கேடோ கெட்டுத் தொலை என்று ஒதுங்கி விட்டனர்...

அப்புறம் என்ன... தனிக் காட்டு ராணியாக தன்னிச்சை யுடன் உலா வந்தாள் ரத்னா.

தூண்டிலில் சிக்காத மீனாய்... வலையில் சிக்காத மானாய்... அலைந்தாள்... திரிந்தாள்...

ஆண் நண்பர்கள் என்ற பெயரில் யார் யாருடனோ கிளப்... டிஸ்கோதெ என்று சுற்றுவதும்... நாகரீகம் என்ற பெயரில் கும்மாளம் அடிப்பதும்... அந்த ஆண் நண்பர்கள் திருமணம் என்ற பேச்சை எடுத்ததும் கழற்றிக் கொள்வதும் வாடிக்கையாயிற்று...

ஆனால் யானைக்கும் அடிசறுக்கும் என்பது போல விலாங்கு மீனாய் நழுவிக் கொண்டிருப்பவளை சாமர்த்திய மாய் தூண்டில் முள்ளில் சிக்க வைத்தான் ஒருவன். பெரியப் பணக்கார வீட்டுப் பிள்ளை... ஆடம்பரமாய் வாழ்பவன். பணத்தை நீராய் செலவழிப்பவன்...

திருமணம் என்ற பந்தம் எல்லாம் பேத்தல் என்று நினைப்பவன்... திருமணம் ஆகாமல் ஒன்றாய் வாழ்வதில் தவறில்லை என்று முற்போக்காய் எண்ணுபவன்.

அவன் கண்ணில் அதி நாகரீக மங்கையான ரத்னா பட்டாள்... இரும்பும் காந்தமுமாய் கவரப்பட்டார்கள்.

எல்லாப் பெண்களையும் வளைத்துப் போட்டவனுக்கு ரத்னா எம்மாத்திரம்...

அவனது ஆரவாரமான பேச்சில்... அலட்டலான செய்கை யில்... ஆடம்பரமான உல்லாச வாழ்க்கையில் மதிமயங்கிப் போனாள் ரத்னா...

அவனிடம் தன்னை இழந்ததைப் பெருமையாக நினைத்தது அவள் மனம்...

அதன் விளைவு விபரீதமான போது அவனிடம் ஓடினாள். நீ எனக்கு பத்தோடு பதினொன்று... என்று சொல்லிவிட்டுச் சென்றான் அந்தப் பணக்காரன்...

ஐம்பது நாள் கருவைக் கலைத்து விட வேண்டும் என்ற எண்ணமும் இயலாமல் போனது... அவளது கருப்பை அதைத் தாங்கிக் கொள்ளும் சக்தி இல்லை என்றும்... அப் படியே பணத்திற்காக இந்தக் காரியத்தை செய்தால் அவ ளுடைய உயிருக்குத்தான் ஆபத்து நேரிடும் என லேடி டாக்டர் கைவிரித்து விட்டார்.

ரத்னாவின் தாய் விஷயமறிந்ததும் தலையில் கை வைத்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். அய்யோ தெய்வமே... இந்த விஷயம் கணவருக்குத் தெரிந்தால் உண்டு இல்லை என்று செய்து விடுவாரே... இதை எப்படி மறைப்பது... மறைக்கவும் முடியுமா... வயிறு காட்டிக் கொடுத்து விடுமே...

பாவி... பாவி... இப்படிக் கழுத்தறுத்து விட்டாளே! ஏதோ... தன் பெண் சந்தோஷமா இருந்தா போதும் என்று நினைத்து கொஞ்சம் சுதந்திரமாய் விட்டது எத்தகைய தவறு என்பதை அப்போதுதான் உணர்ந்தாள்...

அங்கே கணவன் வீட்டில் இருக்கப் பிடிக்காமல்... தங்கக் கூண்டில் அடைத்தமாதிரி எனக்கு மூச்சு முட்டுகிறது என்று சொல்லிப் புகுந்த வீட்டிற்குப் போக மறுத்தவள் இங்கே ஒழுங்கா இருந்தாளா... நாலு பேர் காறித் துப்புவது போல அல்லவா நடந்து கொண்டிருக்கிறாள்...

ஒரே பெண்ணாயிற்றே என்று அதிகம் செல்லம் கொடுத்தது தான் தப்பாயிற்றோ... கொஞ்சம் கண்டிப்புடன் இருந்திருக் ... சே! கண் கெட்ட பின்பு சூரிய நமஸ்காரம்!



ரத்னாவை நச்சரித்து அவனுக்கு போன் பண்ணி பேசச் சொன்னாள்.. ஊகூம்... அந்த நம்பரே இல்லை... மாற்றி விட்டானோ...

சரி... அவன் விலாசத்திற்கு கடிதம் போடு... இல்லை... போய் பார்... என்று வற்புறுத்த....

அவளும் போய் வந்தாள்...

''என்னடீ... அவனிடம் பேசினாயா'' என்று கேட்டதற்கு உதட்டைப் பிதுக்கினாள் ரத்னா.

அவன் வீடு பூட்டியிருந்ததாம்...

என்ன செய்வது என்று புரியாமல் கையைப் பிசைந்து நின்றாள் தாய்...

''நீ ஏம்மா இப்படி டென்ஷன் ஆகிறே...'' என்று சொன்ன மகளை எரிப்பது போலப் பார்த்தாள்.

செய்வதை செய்துவிட்டு என்ன பேச்சு பார்... எல்லை மீறி இப்படி நடந்து கொண்டேமே என்று ஒரு பொண்ணு கூனிக் குறுகி இருக்க மாட்டாளோ...

உயிருக்கு மேலாய் போற்ற வேண்டிய கற்பைக் கடைசரக்காக்கி விட்டு என்ன திமிராக இருக்கிறாள்...

எல்லாம் காலத்தின் கோலம்... இப்போது பெற்றவர் களுக்குத் தலை குனிவு... சே!

உள்ளுக்குள் குமைந்து கொண்டிருந்த வேளையில் தான் அந்த விஷயம் தெரிய வந்தது.

ரத்னாவின் தந்தைக்குத் தூர சொந்தம்... அவர் மூலமாய் விஷயம் கேள்விப் பட்டனர்...

அதாவது... ராஜசேகருக்கு மறுமணம் ஆகிவிட்டது. அவனுக்குப் பிள்ளையும் பிறக்கப் போகிறது... ஆக... அனைத்து சொத்திற்கும் அந்தக் குழந்தைதான் வாரிசு...

இந்த செய்தியைக் கேட்டு இடிந்து போனாள் ரத்னாவின்
தாய்... தன் மகளோட எதிர்காலம்?...

கணவனிடம் புலம்பினாள்...

"இப்பப் புலம்பி என்ன பிரயோசனம்... அன்னிக்கே
இரண்டு தட்டுதட்டி அனுப்பி வச்சிருக்கணும்... அய்யோ...
அவளை ஒண்ணும் சொல்லாதீங்க... நமக்கு இருப்பது ஒரே
பொண்ணு... அவ விருப்பப்படி இங்கேயே இருக்கட்டும்னு
பிடிவாதம் பிடிச்சே... போய்த் தொலைங்கன்னு விட்
டுட்டேன்... நம்ம மாப்பிள்ளைக்கு என்ன குறை... இவமேலே
உசிரா இருக்கான்... இவளுக்குத் தான் கொடுத்து வைக்க
வில்லை. பாவம்... யாரோ ஒரு பொண்ணு மனைவியா
வந்திருக்கா... அவளாவது நல்லா இருக்கட்டும் விடு...."
என்று சொன்னார் ரத்னாவின் தந்தை.

"அப்போ... நம்ம பொண்ணு கதி..."

"ம்ம்... அதோ கதி... அகராதி பிடிச்ச கழுதைக்கு இப்
படித்தாண்டி ஆகும்... எல்லாம் உன்னால்தான்... பொண்ணைப்
பூட்டி வள... ஆம்பிளையை அடக்கி வளர்க்கணும்ன்னு
சும்மாவா சொன்னாங்க... பொண்ணுன்னா அடக்க ஒடுக்
கமா தலை குனிந்து இருக்கணும்... என்னவோ பிரபஞ்சத்
தில் இல்லாத பொண்ணைப் பெத்துவிட்ட மாதிரி அவளைத்
தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடினே... இப்போ...
என்ன ஆச்சு பார்த்தியா...அவளைப் பத்தி இனிமே என்
கிட்டே எதுவும் சொல்லாதே... நீயாச்சு... உன் பொண்
ணாச்சு.. சே! என்னிக்காவது ஒரு நாள் புருஷனோட போய்
வாழ்வாள்னு நினைச்சதும் பாழாய்ப் போச்சு... எல்லாம்
நம் தலைவிதி..." துண்டை உதறிப் போட்டுக் கொண்டு
சென்ற கணவனை வெறித்தவாறு நின்றிருந்தாள் அவள்...



வெறும் வாழ்வு பறிபோனதற்கே இத்தனை வசை பாடும்
கணவர் மகளின் கற்பு பறிபோனதை அறிந்தால்... அய்யோ...
பெரும் பூகம்பமே நடக்கும்...

ஊகூம் கூடாது... அவருக்குத் தெரியவே கூடாது என்று
நினைத்தாள் தாய்...

இப்படியெல்லாம் நடக்கும் என்று முன் ஆலோசனை
இல்லாமல் போனதே... மகள்தான் புத்தி கெட்டுப் போனாள்.
கணவனை விட்டு வந்து விட்டாள் என்றால் தாயான நானா
வது அவளைத் திருப்பி அனுப்பி வைத்திருக்க வேண்டும்.
செய்யலையே... இனி என்ன செய்வது என்று யோசித்ததில்
மூளைதான் சூடாகிக் கொதித்தது.

அதுமட்டுமல்ல... ரத்னா தன் காதில் விழுந்ததைக்
கேட்டு தவறாக நினைத்தது மட்டும் இல்லாமல் தாயையும்
நம்ப வைத்து விட்டாள்...

ராஜசேகருக்கு தொழிலில் நஷ்டம்... பேரிழப்பு...
என்றெல்லாம் ஏறுக்குமாறாய் நினைத்து இனி அவன்
அன்னக்காவடிதான் என்று முடிவு செய்தார்கள்... அத்
தகைய வறுமையில் ரத்னா வாடுவதா என்ற பாசத்துடிப்பில்
மகளை கணவன் வீட்டுக்கு அனுப்பாமல் நிறுத்தி வைத்துக்
கொண்டாள்.

கொடிக்கு காய் பாரமா என்ன... எனக்கு இவள்
பொண்ணு இல்லே... பிள்ளைன்னு நினைத்துக் கொண்டு
என்னோடேயே வைத்துக் கொள்கிறேன்... இத்தனை
சொத்தும் இவளுக்குத்தானே... என்றெல்லாம் நினைத்தது
கிறுக்குத்தனம்...

தாய்க்கு ஒரு மாதிரி மன உளைச்சல் என்றால்... மகளுக்கு
வேறு மாதிரி....

அடடா... ராஜசேகருக்குச் சொத்தெல்லாம் போய் விட்டது என்று நினைத்து ஏமாந்து போனேனே... இப்போது அத்தனை சொத்தையும் யாரோ ஒருத்தியல்லவா அனுப விக்க இருக்கிறாள்...

வந்த உறவினர் சொல்வதைப் பார்த்தால்... இந்த இரண்டு வருடங்களில் ராஜசேகரின் சொத்து பல்கிப் பெருகி மூன்று மடங்காகி விட்டது போலிருக்கிறதே! மடச்சி நான்... அங்கிருந்து அந்த சொத்தைக் கைக்குள் போட்டிருக்கணும்... தவறிவிட்டேனே...

ராத்திரியெல்லாம் தூக்கம் வரவில்லை... யோசனை... மறுநாள் தாயிடம் சொன்னாள்...

''தப்பு பண்ணிட்டேனேம்மா... அந்த சொத்துக்கு ராணி நான்... ஆனா அனுபவிக்க முடியாமல் யாரோ ஒருத்திக்கு அந்த அதிர்ஷ்டம் வந்து விட்டது பாரேன்... அவளோட குழந்தை வாரிசாம்... போச்சே...''

''இல்லேடி... நீ புத்திசாலியா இருந்தா சொத்து உன் கைக்கு வரலாம்... எல்லாம் உன் கையில் இருக்கு...'' என்றாள் தாய்.

கேள்வியுடன் பார்த்தாள் ரத்னா...

''என்னம்மா சொல்றே... விளக்கமாச் சொல்லேன்...''

''ஒரே கல்லில் இரண்டு மாங்காய் டீ... சாதுர்யமா நீ நடந்து கொண்டால் அது நடக்கும்... நான் சொல்றமாதிரி செய்... நமக்குத் தலைகுனிவும் வராது... சொத்தும் உனக் குத்தான்...''

''சரி... நான் என்ன செய்யணும்... அதைச் சொல்லு முதல்ல...'' அவசரப்பட்டாள் மகள்...

சாணக்கிய புத்தியை உபயோகித்து தான் போட்டு



''ரத்னா உடனே புறப்பட்டுச் சென்று கணவனோடு வாழ வேண்டும்.

ராஜசேகர் அவளைப் பார்த்ததும் மதிமயங்கி விடுவான். இல்லை... மயங்க வைக்க வேண்டும்... அதாவது அவனைக் கெஞ்சிக்... கொஞ்சியாவது தன்னிடம் மயங்கும்படி செய்ய வேண்டும்.

மாதம் கழிந்ததும் தான் உண்டாகி இருப்பதைக் கூற வேண்டும்... அந்தக் குழந்தை ராஜசேகருடையது என்று அடித்துச் சொல்லி நம்ப வைக்க வேண்டும். ஆக... முறைத்தவறி வயிற்றில் ஜனித்த உயிருக்கு முறையான உரிமை கிடைக்கும்... அந்தச் சொத்துக்கு வாரிசும் ஆகும்... ஆக... கேவலம் மறைந்து போகும்... குழந்தைக்கு அங்கிகாரம் கிடைக்கும்... சொத்து கைவிட்டுப் போகாது.''

''அதெப்படிம்மா... நம்புவார்களா... எட்டு மாதத்தில் குழந்தை பிறக்குமே...''

''குறை மாதத்தில் பிறந்து விட்டது என்று சமாளிப்போம் பிரசவம் இங்கேதானே நடக்கும்... இதோ பாருடீ... ஏதாவது செய்து... இந்த அவமானத்தைத் துடைத்தே ஆக வேண்டும். வேறு வழியில்லைடீ... டாக்டர்க்குப் பணம் கொடுத்தா நாம சொல்றபடி ஆடமாட்டாரோ... எல்லாம் நல்லபடியா நடக்கும்... நீ தயாராகு... உன் அப்பாகிட்டே நான் சொல்லிக் கிறேன்... அங்கே போய் புத்திசாலித்தனமா நடந்துக்கப் பார்... ஏதாவது எக்குத்தப்பா பண்ணி மாட்டிக்காதே... என்ன...''

மகளுக்கு உபதேசம் செய்து தயார்படுத்தினாள்.

இந்தத் திட்டம் எதுவுமே கணவருக்குத் தெரியக் கூடாது என்று உறுதியாக இருந்தாள்.

ரத்னா மனம் மாறிக் கணவருடன் வாழ நினைக்கிறாள் என்றதும் பெற்றவருக்கு பரம சந்தோஷம்... மகளின் வாழ்வு மறுபடியும் மலர்ந்ததே! அந்த மகிழ்ச்சி...

ரத்னாவைப் பார்த்ததும் புத்தி தடுமாறிப் போய் நின்றதை நினைத்துக் கொண்ட ராஜசேகர் வெட்கப்பட்டான்.

தொண்டை காய்ந்தது போல வரட்சி...

"தண்ணீர் வேண்டும்மா..." என்று கேட்டான்... அவன் சொன்னதைக் கேட்டுக் கொண்டிருந்த சௌந்திரத்திற்கு மலைப்பு!

இதெல்லாம் உண்மையா... நம்பவே முடியவில்லையே... ரத்னா மோசம் என்று தெரியும்... ஆனால் படு மோசம் என்று தெரியாமல் போனதே...

சரி... அவள் தான் மட்டும்... அவள் தாய்க்குமா இப்படி புத்தி கோணலாகணும்...

யார் குழந்தைக்கு யார் தகப்பன்... நினைக்கவே குமட்டிக் கொண்டு வந்தது...

இயந்திரமாய் சொம்பு நீரைக் கொண்டு வந்து நீட்டிய சௌந்திரத்தின் மனம் ஏதேதோ நினைத்துக் குழம்பியது.

பானுவுக்கோ... சொல்லவும் வேண்டாம்... என்னவெல்லாம் நடந்திருக்கிறது... நாம் ஏதேதோ நினைத்துத் தவித்தோமே... ராஜசேகர் சொல்வதைப் பார்த்தால்... அவருக்கு எல்லாமே தெரிந்திருக்கிறது. ஆரம்பத்தில் இருந்தே சந்தேகத்துடன் பார்த்திருக்கிறார்... இருந்தும் அதை நம்மிடம் காட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கிறார் என்றால்... அழுத்தக்காரர்
... குமைந்தது என்ன... கொஞ்



கணவரை அவள் பார்த்த பார்வையில் பிரமிப்புத் தெரிந்தது.

சௌந்திரம் மகனிடம் கேட்டாள்...

"ஆமாம்... ராஜா... ரத்னா ஏதோ திட்டத்தோடு வந்திருக்கிறாள் என்று உனக்கு எப்படித் தெரிந்தது. தவிர... அவள் சொன்னதெல்லாம் பொய் என்று எப்படிக் கண்டு பிடித்தாய்..."

"அதுவா... முதன் முதலில் அவள் ஏதோ திட்டத்தோடு வந்திருக்கிறாள் என்று நினைக்கவில்லை. முதலில் நான் கொஞ்சம் தடுமாறினது நிஜம்தான்... அப்புறம் சுதாரித்துக் கொண்டு யோசித்தேன்... அப்போதும் கூட எனக்குச் சந்தேகம் வரவில்லைதான்... ஏதோ ஓடிப் போனாள்... இப் போது வந்துவிட்டாள் என்று எண்ணினேன்... ஆனால்..." என்று தாயை சங்கோஜத்துடன் பார்த்தான்...

"ஆனால்... என்னப்பா ராஜா... சொல்லு..." என்று தாய் கேட்டதும்...

நடந்ததைக் கதையாய் சொன்னான் ராஜசேகர்... பானுவும் சௌந்திரமும் அதிசயித்துப் போனார்கள்.

ரத்னாவின் திட்டத்தை ராஜசேகர் முறியடித்த விதம்... அடேயப்பா! என் பிள்ளையா...!

சபாஷ் மகனே... என்று மனசுக்குள் பாராட்டினாள் தாய்...

பாவம்... ரத்னா... அவள் நினைத்து வந்தது நடக்காமல்... தோல்வியைத் தழுவப் போகிறோம் என்று எதிர் பார்த்திருக்க மாட்டாள்...

அதற்குள் அவள் போட்ட ஆட்டம் என்ன... செய்த ரகளை

இதைத்தான் சொல்கிறார்கள்... நாமொன்று நினைக்கத் தெய்வம் வேறொன்று செய்யும் என்று... அது உண்மை தான்...



## 20

தாய் தனக்கு உபதேசம் செய்த போது எல்லாம் எளிதாகத் தெரிந்தது ரத்னாவிற்கு...

ஆனால் நடைமுறையில் அது அத்தனை சுலபம் அல்ல என்பதை உணர்ந்தாள் அவள்...

அவள் நினைத்து வந்தது என்ன... ஆனால் நடந்தது என்ன...

தன்னைப் பார்த்ததும் உருகி வழிந்த கணவன்... திரும்ப முறுக்கிக் கொண்டதுதான் புதிர்...

அவன் மனதில் இருப்பதை அவளால் அறியவும் முடியவில்லை...

சில நேரங்களில் வெண்ணையாய் குழைவதும்... சில நேரங்களில் வெந்தனலாய் காய்வதும்...

அவனைப் புரிந்து கொள்ள முடியாமல் தவித்தாள். அவன் ரோஜாவா... இல்லை குத்தும் முள்ளா... தடுமாறினாள் அவள்.

தாயின் போதனையை நினைவில் வைத்துக் கொண்டு அவனிடம் கெஞ்சியும்... கொஞ்சியும்... அவன் மேல் விழுந்து பழகியும்... ஊகூம்... அவன் மசியவில்லையே...

ரத்னா வந்த மூன்றாம் நாள் தூக்கம் வராத ராஜசேகர்... ரத்னா தூங்கும் வரை காத்து விட்டு... அவள் தூங்கியதும் காற்றுக்காக வெளியே சென்றான்.



மறுபடியும் திரும்பி வந்தவன் கண்களில் அந்தக் கடிதம் பட்டது.

ரத்னா யாருக்கோ எழுதி வைத்திருந்த கடிதம்... மின் விசிறியின் படபடப்பில் அது தரையில் விழுந்திருந்தது. பிறந்த வீட்டிற்கு எழுதியிருப்பாள் என்று நினைத்து அதை விரிந்து கிடந்த புத்தகத்தில் மீண்டும் வைக்கப் போனவனின் கண்களில் முகவரியில் இருந்த பெயர் பட்டது.

பிரகாஷ்!...

பிரகாஷ்? யார் அவன்?

அவனுக்குத் தெரிந்த மட்டில் அவள் பக்கத்து உறவினர்கள் யாரும் அந்தப் பெயரில் இல்லையே. இந்தப் பெயர் புதிதாய் இருக்கிறதே... கேள்விகள் பிள்ளைப் பூச்சியாய் அவனைக் குடைந்தது. சரி... வந்து மூன்று நாட்களும் ஆகவில்லையே. அதற்குள் கடிதம் எழுத வேண்டிய அவசியம் என்றால்... அத்தனை முக்கியமானவனா என்ன...

சரி... அப்படியே இருந்தாலும்... தொலைபேசி செல் என்று தொலைத் தொடர்பு வசதிகள் பெருகி விட்ட நிலையில் இந்தக் கடிதம் ஏன்...

அதுவும் கனத்திருந்த உறையைப் பார்த்தால் பக்கம் பக்கமாக எழுதி இருப்பது போல் அல்லவா தெரிகிறது. அப்படி என்ன செய்தி இருக்க முடியும்...

ஒரு ஆணுடன் பெண் பழகுவதைத் தவறானக் கண்ணோட்டத்தில் பார்க்கும் கீழ்த்தரமானவன் இல்லைதான்... ஆனால்... ரத்னா இயல்பாக இல்லாமல்... எதையோ நினைத்துத் தவிப்பதையும்... எப்போதும் இல்லாத அதிசயமாய் தன் மீது விழுந்து கொஞ்சுவதும் முரணாக அவனுக்குப் பட்டது.

மேலும்... அவனுக்குப் பரிச்சயம் இல்லாத ஒரு அந்நிய னுக்கு அவசர மடல் வேறு. ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று உள்ளுணர்வு கூறியது.

அதை அறிய விழைந்தது உள்ளம்.

அவன் யார்... அவனுக்கும்... இவளுக்கும் என்ன சம் பந்தம்... ரத்னா இங்கு வருவதற்கு அவனும் ஒரு காரணமா...

அப்படியானால் அவனைச் சந்திக்க வேண்டும்...

அவள் எழுதியிருந்த விலாசத்தை பலமுறை படித்து அதை மனப்பாடம் செய்து கொண்டான்.

அந்த முகவரியைத் தேடிப் பிடிக்க அவன் அதிகம் சிரமப் படவும் இல்லை.

வெளியூரில் அவசர வேலை என்று சொல்லி விட்டு அவன் சென்றது அந்த பிரகாஷை நேரில் காணவே... அவனையும்... அவனது பெற்றோர்களையும் சந்தித்து உரையாடிய போதுதான் குட்டு வெளிப்பட்டது.

ரத்னா-பிரகாஷின் நட்பு எல்லை மீறிப் போய்... விளைவு விபரீதமாகியதும்... கலவர மடைந்த அவள் அவனைத் தேடி ஓடினதும்... அவன் மறுத்து விலகிப் போனதும் தெரிய வந்தது. ரத்னாவின் நீள் கடிதத்தைப் படித்த அவனது பெற் றோர்கள் உஷாரானார்கள்...

பிரகாஷ் ரத்னாவை விட ஐந்து வயது இளையவன்... ஏதோ வாலிபக் கோளாறில் தப்பு செய்து விட்டான்.

அதற்காக... தமக்கை வயதொத்தவளை... அதுவும் திருமணம் ஆகி வாழாவெட்டியாய் இருப்பவளை மணக்க முடியுமா என்ன...

மேலும் கண்ட கண்ட ஊர் மேயும் கழுதைகளை யெல்லாம் மருமகளாய் ஏற்றுக் கொள்ள முடியுமா என்ன... அதற்



கெல்லாம் ஒரு தகுதி வேண்டுமே... தவிர... தன் மகனுக்கு நல்ல இடத்தில் பெண் பேசி... நிச்சயமும் செய்தாகி விட்டது என்றார்கள்.

இப்போது புரிந்தது அவனுக்கு... எதையோ நினைத்து வந்தவளுக்கு... தனது பாராமுகம் அதிர்ச்சியைத் தந்ததால் காதலனுக்கு அந்த அவசரக் கடிதம்...

கணவனா... காதலனா... என்ற சஞ்சலம் இருக்கலாம் யார் கண்டது.

இருக்கட்டும்... முள்ளை முள்ளால் தான் எடுக்க வேண் டும். அவளைப் போலவே நாடகம் ஆடி அவளைக் கவிழ்க்க வேண்டும்...

அவளைக் கையும் களவுமாய் பிடித்து விட்டு அவளை அவள் வீட்டிற்கே திருப்பி அனுப்பி விட வேண்டும்.

தனக்கு எதுவுமே தெரியாதது போல இருக்க வேண்டும்... அப்போதுதான் சாதிக்க முடியும்...

அந்த எண்ணத்தில் தன் கோபத்தை அடக்கிக் கொண்டு... ஆத்திரத்தை மறைத்துக் கொண்டு... பழைய ராஜசேகராய் நடித்தான்...

அது எத்தனைக் கஷ்டம் என்பது அப்போதுதான் தெரிந்தது....

அந்த நாட்கள்... அவனது வாழ்க்கையில் கொடுமை யான நாட்கள்...

உள்ளத்தில் வெறுப்பையும் உதட்டில் இனிப்பையும் வைத்துக் கொண்டு வேஷம் போட வேண்டிய நிலைமை!

ரத்னாவை நம்ப வைக்க வேண்டுமே...

தனக்குத் தெரிந்த அந்த அசிங்கமான ரகசியம் மற்றவர் களுக்குத் தெரியக் கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருந்தான்.

முக்கியமாய் வீட்டுப் பெண்களுக்கு... பெண்கள் வாயில் ரகசியம் தங்குவது அரிதாயிற்றே!

எனவேதான்... தனக்குத் தெரிந்த உண்மையை உள்ளுக்குள் புதைத்துக் கொண்டான்.

இது குடும்ப மானத்தைப் பாதிக்கும் விஷயமாயிற்றே... லேசாய் கசிந்து வெளியே தெரிந்தால் போதும்... ஊரே கைக் கொட்டியல்லவா சிரிக்கும்...

இது கத்தி மேல் நடப்பது போல... எச்சரிக்கையுடன் செயல்படவேண்டும்...

காதும் காதும் வைத்தது போல ரகசியமாய்... முட்புதரில் பட்ட துணியை எடுப்பது போல... நிதானமாய்...

கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாளுவது போல்... அதி ஜாக்கிரதையாய் நடந்து கொள்ள வேண்டும்.

ஏன்... அதற்கு மேலேயும் தான்...

ஒருவர் அறிந்தால் அது ரகசியம்... இருவர் அறிந்தாலோ அம்பலம்... வெளியே தெரிந்து சந்தி சிரிக்கும்படி ஆகாமல் தடுக்க வேண்டும்....

இல்லாவிட்டால்... காலம் காலமாய் காத்து வந்த மானத்தைக் காற்றில் பறக்க விடும்படி ஆகிவிடும்...

மேலும்... காற்று வாக்கில் ரத்னாவிற்கு... இந்த உண்மை ராஜசேகருக்கு தெரிந்து விட்டது என்று ஊகம் உண்டானால் அவ்வளவுதான்... முடிந்தது கதை...

அப்படியே திரித்துப் பேசி விடுவாள் என்பது நிச்சயம்... வயிற்றில் வளர்வது ராஜசேகரின் குழந்தை என்பதை எந்தக் கோவிலிலும் வைத்து சத்தியம் செய்யவும் தயாராக



அப்புறம்... அவளது பேச்சுத்தான் எடுபடும்... ஊர் பெரிய மனிதர்களிடம் போய் நடந்த கேவலத்தைச் சொல்ல முடியுமா... சொன்னபிறகு தலை நிமிர்ந்து நடக்க முடியுமா...

அவள் அழுது ஆர்ப்பாட்டம் செய்து... குடும்ப மானத்தை வாங்கி விட்டால்... அந்த அசிங்கத்தை தாங்கும் சக்தி இல்லைதான்... தன் தாய் உயிரையும் விட்டு விடுவாள்... எனவே... தனக்குள் முடிவு செய்து கொண்டான்... இந்தக் கேவலமான ரகசியம் என்னுடனே இருந்து விட்டும்... ரத்னா வெளியேறும் வரையாவது...

நினைக்கவே வெறுப்பாக இருந்தது.

போயும் போயும் இப்படிப்பட்டவளையா என் உள்ளக் கோவிலில் வைத்துப் பூஜித்தேன்... இவளையா என் காதல் தேவதையாய் நினைத்து ஏங்கினேன்...

சே! என் அன்பிற்கு அருகதை யில்லாதவள் அவள்...

இதுநாள் வரை பாசிப் படர்ந்தாற் போல இருந்த மாயத் தோற்றம் மறைந்து... அவளது உண்மைத் தோற்றம் தெரிந்தது....

அவளது சுயநலம்... கர்வம்... பிடிவாதம்... தான் தோன்றித்தனம்... பெரியவர்களைத் தூக்கி எறிந்து பேசும் திமிர்த்தனம்... மென்மையானவர்களைத் தன் வார்த்தைகளால் வதைப்பது... எல்லாவற்றிற்கும் மேலாய் பெண்மைக்குரிய ஒழுக்கத்தை மறந்து இழிவான நிலைக்கும் இறங்கி விட்டது... ஆக எல்லா துர்குணங்களும் அவளை... அவளது அழகைக் கோரமாக்கும் கரும் புள்ளிகளாய் பட்டன.

ஒருவேளை... பெண்ணினத்திற்கு இலக்கணமாய் இருக்கும் பானுவின் பரிச்சயம் கிடைக்காமல் இருந்திருந்தால்... ரத்னாவை பழைய மாதிரியே பூஜித்திருப்பானோ

பானுவின் பொறுமையையும்... சகிப்புத்தன்மையை யும்... மென்மையான சுபாவத்தையும்.... பெரியவர்களிடம் மரியாதையைக் காட்டி... வேலைக்காரர்களிடம் இன்முக மாய் பேசி... அனைவரின் மனங்களையும் கொள்ளை கொண்டதையும் பார்த்த பிறகு... ரத்னாவின் இழிகுணங் கள் பூதக் கண்ணாடியில் பார்ப்பது போலப் பெரிதாய்... பூதாகாரமாய் தெரிந்தன.

இத்தனை நாள் அவனைச் சுற்றியிருந்த மாயவலை யொன்று 'பட்'டென்று அறுந்து விழுந்தது.

இதை அறியாமல் ரத்னா உள்ளம் பூத்துப் போனாள்... மறுபடியும் கணவன் தன் அடிமையாகி விட்டான்... இனிக் கவலை இல்லை... ஜாலி!

இந்த விஷயத்தை குஷியுடன் தன் தாய்க்கு போன் செய்து சொன்னாள்...

''புத்திசாலித்தனமா நடந்து கொள்... ஏதாவது கிறுக்குத் தனம் பண்ணி இங்கு ஓடிவந்து விடவேண்டாம்... என்ன.. புரிகிறதா... எல்லாம் நீ நடந்து கொள்றவிதத்தில் இருக் கிறது. அது உன் வீடு... நீ சொன்னா எல்லோரும் கேட் கணும்... அது நினைவில் வைத்துக் கொண்டு நட.... நான் சொல்றதை சொல்லி விட்டேன்.. அப்புறம்... மகளே உன் சமர்த்து...!''

தாய் சொன்ன அறிவுரை!

எல்லாம் சரிதான்... இந்த இரவு நேரம் தான் கொஞ்சம் சிரமமாக இருந்தது... எதுவும் நினைவில்லாமல் புத்தி மயங்கி போனது விந்தை... மறுநாள் காலையில் ராஜசேகர் சொல்லுவதை நம்ப முடியாமல் அவள் பேந்த பேந்த விழிப்பதைப் பார்க்க அவனுக்குச் சிரிப்பு வந்தது.



பாவம்... என்ன நடக்கிறது என்பது தெரியாமலே... அவன் விரித்த வலையில் அவளையும் அறியாமல் சிக்கி விட்டாள்... சிலந்தி பின்னிய வலையில் போய் ஒட்டிக் கொள்ளும் பூச்சியைப் போல!

''நமக்காகவே ஸ்பெஷலாய் தயாரித்த மசாலாப் பால்! சமையற்காரரிடம் சொல்லி பாதம்... பிஸ்தா... கசகசா... குங்குமப்பூ எல்லாம் சேர்த்து தயாரிக்கச் சொன்னேன்... நன்றாக இருக்கிறதா.... டியர்... நமக்கு இப்போதுதான் உண்மையிலே தேனிலவு... இல்லையா...'' என்று கண் சிமிட்டி.... தன் சாகச வார்த்தைகளினால் அவளைக் கள் குடித்த குரங்காய் தடுமாற வைத்து... அந்தப் பாலை அருந்த வைப்பான்.

அதில் தூக்க மாத்திரைக் கலந்திருப்பது தெரியாமல் அவளும் குடித்து விடுவாள்.

அப்புறம் என்ன... கண்கள் சொக்கும்... கொட்டாவி வரும்....

''தூக்கமா... அதுதான் முடியாது... இத்தனை நாள் பிரிந்திருந்தோம்... நீண்ட நாளுக்குப் பிறகு இப்படி சேர்ந்திருக்கின்றோம்... அதெப்படி தூக்கம் வரும்... இப் போது பார்... அது ஓடியேப் போகப் போகிறது...'' என்று அவளை இழுக்க... அவள் அப்படியே விழுந்து உறங்கி விடுவாள்.

இது தினமும் நடக்கும் கூத்து.

காலையில் அவள் கண்விழித்துப் பார்க்கையில் ஆடை நெகிழ்ந்து கிடக்கும்... கேசம் கலைந்திருக்கும்....

ஆனால் அவளுக்கு ஒன்றும் நினைவிருக்காது. ராஜசேகர் இரவெல்லாம் உல்லாசமாய் கழிந்தது போலப் பேச... அப்படியா என்பது போலப் பார்ப்பாள்.

"என்னடா... நினைவில்லையா... அப்படி ஒரு தூக்கம். உனக்கு... அடித்துப் போட்டது மாதிரி... என்னவோ போ ரத்னா... ஏதோ புதுமணப் பெண் மாதிரி நீ தூங்கி வழிகிறாய்... என்ன உனக்கு... இதோ பார். பூனையைப் போல என்னை நீ பிராண்டி விட்டிருப்பதை" என்று தானே ஏற்படுத்திக் கொண்ட நகக் கீறல்களைக் காட்டுவான்...

அவளும் குழம்பிப் போனாள்... அவன் சொல்வது போல எனக்கு என்ன பிரச்சனை... ஏன் அப்படித் தூங்கி வழிகிறேன்... ஒரு வேளை கர்ப்பமானால் தூக்கம் வருமோ... ஆம்... அப்படித்தான் இருக்கும்... இதுதான் சமயம்... சொல்லி விடலாம்... என்று நினைத்தாள்...

அவன் ஊகித்தது போலவே... அவள் தன் தாய்மை அடைந்ததை சொன்னாள்...

ஆக தான் நினைத்தது சரிதான்... அவள் வந்த காரணம் இதுவாகத்தான் இருக்கும் என்ற ஊகம் ஊர்ஜிதமானது. அதை எப்படி உடைக்க வேண்டும் என்பதையும் திட்டம் இட்டிருந்தான்.

இப்போதைக்கு இந்தக் குழந்தை வேண்டாம்... கருவினைக் கலைத்துவிடு என்று சொன்னதும்... ரத்னாவின் முகத்தில் சவக்களை வர..... அவள் உடம்பு நடுங்குவது கண்டு உள்ளுக்குள் நகைத்தான்.

எங்கே டாக்டரிடம் அழைத்துச் சென்று விடுவானோ... உண்மை வெளிப்பட்டு விடுமோ என்ற பதட்டம் அவளிடம் வந்தது...

அதற்குப் பயந்து அவள் தாய் வீட்டுக்கு சென்று விடுவாள்...



ஆனால்... அதற்கு மாறாய் தன் ஏமாற்றத்தையும் ஆத்திரத்தையும் பானுவின் மீது காட்டுவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

பானு மாடியிலிருந்து விழுந்ததை ஒரு தற்செயலான நிகழ்வு என்று தான் எண்ணினான். தலைச் சுற்றியோ... இல்லை... கால் தடுமாறியோ விழுந்திருக்க வேண்டும் என்பது அவனது கணிப்பு...

அந்த நேரத்தில் பானுவை மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லும் வேலையை விட... முதலில் ரத்னாவை அங்கிருந்து அப்புறப்படுத்துவதுதான் அதி முக்கியமான பணியெனப் பட்டது...

அதுவரையில் தான் அறிந்த உண்மையைக் காட்டிக் கொள்ளவில்லை... அதை தேவ ரகசியமாகக் கட்டிக் காத்தான்.

ரத்னாவை அவளது தாய் வீட்டில் ஒப்படைக்கும் வரை அவள் வாய் திறக்காமல் இருந்தால் போதும். அவளுக்குச் சந்தேகம் எழாத வகையில் தேனொழுகப் பேசி... அவளது மதியை மழுங்கும்படி செய்தான். அவளும் அதை நம்பித் தேன் குடித்த நரியாய் மயங்கிக் கிடந்தாள்...

தன் குடும்ப சந்தோஷத்தைக் குலைத்து கூர் போட்ட அவளை... அவளது பிறந்த வீட்டில் சேர்த்து விட்டு... கைக் கழுவிய பின்புதான்... மற்ற எல்லாம்... ஆமாம்... பானகத் துரும்பாய் அவள் இருக்கும் வரை வீட்டிலும் நிம்மதியில்லை... வேலையிலும் சிரத்தை இருக்காது. எல்லாம் நன்மைக்குத்தான்... இதுநாள் வரை குழம்பிக் கிடந்த மனம் தெளிவடைந்து விட்டது...

பானுவின் அருகாமையில்... இனி வாழ்க்கை இனிக்கும்...

அந்த நம்பிக்கையோடு அவன் புறப்பட்டான். புறப்படும் முன்னர் தன் தாயிடம் ஒரு வார்த்தை சொல்லிக் கொண்டு கிளம்பும் உத்தேசத்தில் மருத்துவ மனைக்கு வந்த போது சொர்ணம் நடந்த உண்மையைச் சொல்லிவிட.... உள்ளம் தீப்பிழம்பாய் தகித்தது.

முகமும் சிவந்து போனது... சினத்தினால்... நேரே வீட்டிற்குச் சென்று அந்த ராட்சசி ரத்னாவின் கழுத்தை நெரிக்க வேண்டும் என்று கரங்கள் துடித்தன...

பாவி... பாவி... நிறைமாதக் கர்ப்பிணியைத் தள்ளி விட்டு என்னமாய் தளுக்காக நின்றாள் அவள். பொங்கிய சினத்தை அடக்கிக் கொண்டு... இன்முகம் காட்டி.... ரத்னாவிடம் நடிப்பது பிரம்ம பிரயத்தனமாகத்தான் இருந்தது...

இருந்தும் அப்படி நடக்கத்தான் வேண்டும்...

ஊருக்குப் போகிறோம் என்றதும் ரத்னா குதித்துக் கொண்டு கிளம்பியதில் வியப்பில்லை.

தாய் சொன்னமாதிரி நடந்து கொண்டு... தன் வயிற்றில் வரும் கருவிற்குத் தந்தை என ராஜசேகர் பக்கம் விரலை நீட்டியாகிவிட்டது.

ஆனால் அவனோ இந்தக் கருவைக் கலைத்து விடலாம் என்கிறானே... ஒரு வேளை தன் பெற்றவர்கள் சொன்னால் கேட்பான் என்ற எண்ணத்தினாலோ...

இல்லை... ராஜசேகரிடம் தன் பப்பு வேகாது... அவன் அத்தனை சீக்கிரத்தில் நம்ப மாட்டான்... அவனை வெகு எளிதாய் முட்டாளாக்கி விட முடியாது... எதற்கும் பிரகாஷைப் பார்த்துப் பேசுவது நல்லது என்ற நினைப்போ... தெரியாது...

சந்தோஷத்துடன் புறப்பட்டு விட்டாள்.



இன்னும் அவள் அறியாதது... ராஜசேகர் பிரகாஷ் வீட்டாரை சந்தித்து விட்டு வந்திருக்கிறான் என்பதுதான்... தன் அந்தரங்கம் அம்பலமாகி விட்டதை அறியாமல் அத்தனை ஆர்ப்பாட்டம்! அதுவும் தன் காதலனுக்கு வேறு இடத்தில் நிச்சயமாகிவிட்டது என்று தெரிந்து கொண்டால்... பாவம்... அவளது இதயம் 'ஸ்டிரைக்' பண்ணி விடும்...

''ராஜா... ஒரு விஷயத்தில் எனக்கு மனம் வருத்தம் தான்ப்பா... என்னதான் இருந்தாலும் அவள் பிள்ளைத் தாய்ச்சிப் பொண்ணு... ஏதோ... நாடகம் அது இதுன்னு தூக்கமாத்திரையைக் கொடுத்திருக்கேயாப்பா... அவளை விடு... அவள் வயித்தில் இருக்கும் அந்த சிசு என்ன தப்பு பண்ணியது. நீ கொடுத்த மாத்திரையால் அந்தக் குழந்தைக்கு ஏதும் கெடுதி வராதே...''

சௌந்திரம் இடைப்புகுந்து கேட்க...

அவன் சிரித்தான்...

''ஏம்மா... நானும் அதை யோசிக்க மாட்டேனா... உங்களுக்கு இருக்கும் இந்த நல்ல மனம் உங்கப் பிள்ளைக்கும் இருக்காமல் போகுமா... மன உளைச்சல் உள்ளவர்களுக்கு தரும் மாத்திரைம்மா... சில கர்ப்பிணிப் பெண்களுக்கு மன உளைச்சல் காரணமாக... குழப்பத்தினால்... இரவு உறக்கம் வராமல் தவித்தால்... அதற்காகக் கொடுக்கப்படும் மாத்திரை... டாக்டரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் செய்தேன்... குழந்தைக்கு எந்த ஆபத்தும் வராது... போதுமா...''

''அம்மாடி! இப்போத்தான் எனக்கு நிம்மதியாச்சு... அப்புறம்... ரத்னாவோட அவங்க வீட்டுக்குப் போய் நின்னதும் அவர்கள் என்ன சொன்னாங்கப்பா... அவனோட அம்மாவை விடு... அவ அப்பா... பாவம் நல்ல மனுசர்...

விஷயம் தெரிந்து ஆடிப் போனாரா. அந்த புண்ணிய வானுக்கு இப்படி ஒரு தரம் கெட்ட பொண்ணு... பரிதாபம் தான்...'' என்று வருத்தப்பட்டாள் சௌந்திரம்.

மகன் தொடர்ந்தான்.

மாமனார் வீட்டிற்கு சீராடச் செல்லும் மாப்பிள்ளையாய் ரத்னாவுடன் சென்றவன் அவர்களைப் பார்த்ததும் தன் நடிப்பை உதறினான்... அவரிடம் உண்மையைப் புட்டு வைத்ததும் மாமனார் பேயறைப் பட்டாற் போல அதிர்ச்சியில் உறைந்து போனார்... தனக்குத் தெரியாமல் இத்தனையும் நடந்திருக்கிறது... தன் மனைவியும் மகளுமாய் சேர்ந்து இப்படிச் செய்திருக்கிறார்கள்... சே! வெட்கங் கெட்ட ஜென்மங்கள்... ஈனப் பிறவிகள்!

நரகலை மிதித்தாற் போல அருவருத்துப் போனார் அந்த மனிதர்.

மனைவியைச் சுட்டெரிப்பது போலப் பார்த்தார்... அந்தப் பார்வையில் ஒடுங்கிப் போனாள் மனைவி.

நெஞ்சில் சம்மட்டியால் அறைந்தது போல வலி... ''என்னை மன்னிக்க வேண்டும்... உங்கள் மகளைக் கைகழுவி விட்டாயிற்று என்பதை உங்களுக்குச் சொல்லி விட்டுப் போகலாம் என்று வந்தேன்... அவளுக்கும் எனக்கும் இனி எந்த உறவும் கிடையாது... இனிமேல் யாரும் உறவு கொண்டாடி வராமல் இருப்பது நல்லது. இந்தச் சம்பந்தம் முறிந்தாகி விட்டது என்பதை நினைவில் வைத்துக் கொண்டு என் வாழ்க்கையில் தலையிடாமல் ஒதுங்கிக் கொள்ளப் பாருங்கள்...'' என்று உறுதியாகச் சொன்னான்.

''மாப்பிள்ளை... எனக்கு எதுவும் தெரியாது... தெரிந்திருந்தால் இப்படி நடக்க விட்டிருக்க மாட்டேன்... எனக்காக இவர்களை மன்னித்து விடுங்கள் மாப்பிள்ளை...'' என்றார் அந்தப் பெரியவர்.



''சாரி... சார்... இனியும் நான் உங்கள் மாப்பிள்ளை இல்லை... அந்த சொந்தமெல்லாம் எப்போதோ செத்து விட்டது... சட்டப்படி விவாகரத்துக்கான நோட்டீஸை அனுப்பி வைக்கிறேன்... கோர்ட்டில் சந்திப்போம்...'' என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

அந்த வீட்டை விட்டு வெளி வந்தபோது ஏதோ தோள் மீது அதுவரைக்கும் அழுத்தியிருந்த பெரும் சுமை திடீர் என்று விலகினாற் போல உணர்ந்தான். மனமும் பஞ்சுபோல லேசானது...

பானுவின் நினைவு வர... எப்படி இருக்கிறானோ... என்ற பரிதவிப்பு ஏற்பட்டது.

உடனே பார்க்க வேண்டும் என்ற துடிப்புடன் கிளம்பி வந்தான்...

இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த அன்னைக்கு திகைப்பு...

என்னவெல்லாம் நடந்து விட்டது... ரத்னாவை நினைக்கையில் இப்படியும் ஒருத்தியா என்று கூசுகிறது...

ஒரு பெண்ணிற்கு அளவுக்கு மீறிச் சுதந்திரம் கொடுத்தால் என்ன ஆகும் என்பதற்கு ரத்னா ஒரு உதாரணம்....

வீட்டையே ஒரு ஆட்டு ஆட்டுவித்தல்லவா போனா[ள்]... நல்ல வேளை... ராஜசேகர் புத்திசாலியாக இருந்த[தால்] அவள் பிடியில் சிக்காமல் தப்பி விட்டான்...

யாருடைய பிள்ளைக்கு யார் தந்தையாவது... வெ[ட்கக்] கேடு...

பாவம்... ராஜாவைக் குற்றம் சொன்னோமே... [...] கலங்கி விட்டது என்று பிழையாய் நினைத்தோமே.

உண்மையில் மனசைப் போட்டு உழப்பிக் கொ[ண்டு] எங்களுக்குத்தான் புத்திக் கெட்டுப் போயிருந்தது...

உள்ளுக்குள் வருந்தினாள் சௌந்திரம்.

"போகட்டும்... பெத்த தாய்... என்னிடமாவது கோடிக் காட்டி இருக்கலாமே ராஜா... ஏதேதோ நினைத்து தவியாய் தவித்துப் போனேன் நான்... இத்தனையும் மனதில் போட்டு மறைத்துக் கொண்டு... எப்படிப்பா உன்னால் முடிந்தது... உன் அப்பா அடிக்கடி சொல்வது நினைவுக்கு வருகிறது... உன் பிள்ளை ரொம்ப அழுத்தக்காரன்... சரியான கல்லுளி மங்கன். உள்ளத்தில் இருப்பதை அத்தனை சுலபத்தில் வெளிக் காட்ட மாட்டான் என்று... அது நிஜம் தான் ராஜா."

வெளிப்படையாய் அது பரிகாசம் போல் பட்டாலும்... அந்தத் தாய் முகத்தில் பெருமிதம் தெரிந்தது.

"என்னம்மா... பெண்களிடத்தில் ரகசியம் தங்காது என்பது தருமர் கொடுத்த சாபம் என்று நீங்கள் சொல் வீர்களே... நீங்கள் மட்டும் விதி விலக்காக்கும்... அதுதான் சொல்லவில்லை..."

"அது போகட்டும்... இனி ரத்னாவால் மறுபடியும் குழப்பம் ஏதும் வராதே... எதிர்காலத்தில் நான் தான் முதல் மனைவி... சட்டப்படி எனக்குத்தான் சொத்துரிமை என்று வந்து குதிக்க மாட்டாள் தானே..."

"பயப்படவே வேண்டாம்... இனி இந்தப் பக்கம் அவள் தலைவைத்தும் படுக்க மாட்டாள்... நேரே நம் குடும்ப வக்கீலைப் பார்த்து... விவாகரத்து நோட்டீஸ் அனுப்ப ஏற்பாடு செய்து விட்டுத்தான் வந்தேன்... எதையும் தாமதப் படுத்தினால் ஆபத்து இல்லையா... அதற்கே இரண்டு மூன்று நாள் என்று இழுத்து விட்டதும்மா..."

பானு அத்தனை நேரமும் கண்களை விலக்காமல் கணவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அட! அத்தனையும் நடிப்பாமே!



ஆகா! என்ன அருமையான நடிப்பு!

அந்த வழிசல்... அந்த குலவல்... நடிகர் திலகம்! 'களுக்' என்று சிரிப்பு வந்தது.

தாயும் மகனும் அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தனர். "எதற்கு இந்தச் சிரிப்பு... ராஜசேகர் கேட்க...

அவனைப் பார்க்காமல் அத்தையைப் பார்த்துச் சொன் னாள்.

"அத்தை... உங்க பிள்ளை ரத்னா... ரத்னா... என்று உருகி வழிந்ததையும்... அவளது பார்வையில் வெண்ணையாய் குழைந்து நின்றதையும் நினைத்தேன்... அம்மாடி! சூப்பர் நடிப்புத்தான்... சினிமா பக்கம் போயிருந்தால் இவர்தான் நம்பர் ஒன் ஹீரோவாகியிருப்பார்... சந்தேகமே இல்லை..."

அவளுடன் சேர்ந்து இருவரும் சிரித்தனர்.

பானுவின் கரத்தை எடுத்து வருடினான் அவன். நாசூக்காய் அங்கிருந்து சென்றாள் சௌந்திரம்.

"எத்தனை நாளாயிற்று பானு... உன் முகத்தில் இந்தச் சிரிப்பைப் பார்த்து... நானும் உன் மனதை நோக வைத்து விட்டேன்... அது எனக்கும் வேதனைதான்... என்ன செய்வது பானு... நான் போட்டு விட்ட முடிச்சை நானே தானே அவிழ்க்க வேண்டும்... அதனால் வந்த சிரமம் தான். இப்போது என் மனம் ரொம்பத் தெளிவா இருக்கும்மா... இனி நம்மோட சந்தோஷத்திற்கு எந்த வித இடையூறும் வராது என்பது நிச்சயம்... பிரசவ நேரத்தில் நான் இல்லாமல் போனது எனக்கும் சங்கடமாகத்தான் இருந்தது பானும்மா... நீ வேதனையில் தவிக்கிறபோது உன் அருகில் இருந்து ஆறுதல் சொல்லாமல் தொலைவில் இருக்கும்படி ஆனதே என்று தவித்தது எனக்கு மட்டும்தான் தெரியும்... ஆனால்

கொக்குக்கு ஒரே மதி என்று காரியத்தில் கண்ணாக இருந்தேன்... அப்படி நான் செய்யவில்லை என்றால் கதையே வேறாக இருந்திருக்கும் பானு... நீயும் நானும் இப்படி நிம்மதியாகப் பேசிக் கொண்டிருக்க முடியாது. எதை நினைத்து வந்தாளோ... அதைச் சாதிக்க ரசாபாசமாய் நடந்து கொண்டிருப்பாள் அந்த ரத்னா...''

''இப்போ என்னால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் குழந்தை பிறக்கும் நேரத்தில் நீங்கள் அருகில் இல்லையே என்று ஏங்கினது நிஜம்தான்... உங்களிடம் இருந்து எந்தத் தகவலும் இல்லையா... அந்த வேதனை வேறு என்னைப் பிழிந்து எடுத்தது. நீங்கள் ரத்னாவோடு குஷியாய் தங்கிவிட்டீர்கள் என்ற எண்ணம் என்னை வாட்டி வதைத்தது. இப்போ நினைக்கும் போது எனக்குச் சிரிப்புத் தான் வருகிறதுங்க... இல்லாத ஒன்றை வீணாய் கற்பனை செய்து கொண்டு தவித்தோமே என்று...''

''இப்போ உனக்கு என் அன்பு புரிந்ததே... அது போதும் ஒன்று சொல்லட்டுமா... பானுக்குட்டி... நீ ரத்தம் வழிய மருத்துவ மனைக்குச் சென்றாய் பார்... அந்தக் கணத்தில்தான் உணர்ந்து கொண்டேன்... உன்னை எந்த அளவுக்கு நேசித் தேன் என்று... என்ன செய்ய... உன்னுடன் வர முடியாமல்... என் கழுத்தில் கட்டிய கல்லாய் சுமையாய்... ரத்னா இருந்தாள்... எல்லோரையும் ஒதுங்கச் சொல்லிவிட்டு... உன்னை என் கைகளில் ஏந்திக் கொண்டு போக வேண்டும் என்ற ஆவேசத்தைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்ள வேண் டியதாயிற்று. ரத்னாவிற்குத் துளியும் சந்தேகம் வரக் கூடாது என்று கொஞ்சம் இறுகியே இருக்க வேண்டியதாயிற்று... ஒரு வழியாய் அவளை இழுத்துக் கொண்டு போய் அவள் வீட்டில் தள்ளி விட்டு வந்தாயிற்று... சொல்லப் போனால் ரத்னாவுடன் சென்றது என் உடல் மட்டும்தான்... உயிர்... இங்கே... உன்னுடனே தங்கிவிட்டது பானும்மா...''



காதலால் கசிந்துருகி... கணவன் சொல்லச் சொல்ல உடம்பெல்லாம் புளாங்கிதம் தான்...

''இப்போ நீங்கள் சொல்லும் போது மனதுக்கு இதமாக இருக்கிறது... ஆனால் ரத்னாவுடன் நீங்கள் குலவியதை யும்... ஜோடிப் பறவையாய் நீங்கள் சுற்றி வந்ததையும் கண்டு வெந்து... நொந்து போனேன்.. இனி நீங்கள் எனக்கு இல்லை என்ற முடிவில் நான் பட்ட அவதி... அம்மாடி! இப்போ நினைத்தாலும் உடம்பு 'ஜில்' வென்று சூடாகிற துங்க... நரக வேதனை...'' சொல்லும் போது கண்ணீர் மல்கியது. மனைவியின் கரத்தை உயர்த்தி தன் கன்னத்தில் அழுத்திக் கொண்டு சொன்னான் அவன்.

''சாரிடா... சாரி செல்லம்மா... அதற்கு என்ன தண்டனை கொடுத்தாலும்... அதை ஏற்கத் தயார்...''

அவனது குரல் கரகரத்தது.

''தண்டனை தானே... நிச்சயம் உண்டு... பிடியுங்கள் உங்கள் பிள்ளைகளை... இந்த குட்டிக் கால்களால் உதை வாங்கி... பிஞ்சு கரங்களால் அடி வாங்கறதுதான் உங்களுக்குத் தண்டனை...''

பானு புன்னகையுடன் கூற... அதற்கு...

''ஆகா... என்ன இனிய தண்டனை!... அதை அனுபவிக்க அடியேன் சித்தம் தேவி...'' என்று அவன் தலை வணங்கிச் சொன்னதும்...

''சரிதான்... ரத்னாவுக்காக ஆரம்பித்த நடிப்பு இன்னும் முடியவில்லையாக்கும்... இதென்ன... நாடக பாணியில் வசனம்...'' என்று கேலி செய்தாள் பானு...

''அய்யோ கடவுளே... இந்த ஆனந்தமான வேளையில்... அவள் பெயர் ஏன்... ரத்னா போய் தொலைந்தாலும்

அவனோட கருநிழல் இன்னும் இங்கேயே சுத்துகிற மாதிரியல்லவா இருக்கிறது... இதோ பார்... பானு... இனிமேல் உன் வாயிலிருந்து ரத்னாவைப் பற்றிப் பேச்சே வரவேக் கூடாது... என்ன...''

பாதி மிரட்டலும் பாதி வேடிக்கையுமாய் அவன் சொல்ல... அவள் குறும்பாய் சொன்னாள்...

''ஊகூம்... மாட்டேன்... ரத்னா என்ற பெயரைக் கூட சொல்லமாட்டேனாக்கும்... ரத்னாவே இல்லைன்னு ஆன பிறகு... ரத்னாவைப் பத்தி நாம் ஏன் பேசணும்... இல்லையா... ரத்னாவை நான் மறந்தாச்சு...''

''மை காட்! திரும்பத் திரும்ப ரத்னா... இனியும் சொன்னால் என்ன செய்கிறேன் பார்...''

''என்ன செய்வீர்களாம்...''

''ம்ம்... இந்த அழகு வாயை அடக்கற வித்தையைக் காட்டுவேன்... பார்க்கிறாயா...''

''அது உங்களால் முடியாது... எனக்கு 'பாடிகார்டா' அத்தை இருக்கிறார்களே...''

''உன் அத்தை நாசூக்காய் வெளியே போனதை நீ பார்க்கவில்லையாக்கும்...''

''அதெல்லாம் இல்லை... எனக்கு இரண்டு சிப்பாய் குட்டிகள் காவல் இருக்கும் தைரியத்தில் போயிருக்கிறார்கள்...''

''அப்படியா... எங்கே... பார்க்கிறேன்...'' என்று அவன் குனியும் நேரத்தில்...

கனைப்பு சத்தம்.... சௌந்திரம் தான்.... நான் வந்து விட்டேன் என்று முன்னறிவிப்பாக... தாயின் வரவை



உணர்ந்தவனாய்... மனைவியை நோக்கி குனிந்த ராஜசேகர் அவளருகில் படுத்திருந்த மகனின் மெத்தென்ற நெற்றியில் முத்தமிட்டு விட்டுத் தாயைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்பு சிரிக்க...

பொங்கி வந்த சிரிப்பை அடக்கியவாறு அதைக் கவனித்தாள் பானு.

தொட்டிலில் இருந்த பேரனை எடுத்து பானுவின் மறுபக்கத்தில் படுக்க வைத்த சௌந்திரம்...

''பானு... பேசினது போதும்மா... ஓய்வு எடுத்துக் கொள். பச்சை உடம்பு... குழந்தைகளுக்கு நாக்கு வரண்டிருக்கும். அவங்களுக்கு பால் கொடுத்துட்டு... பேசாமல் படுத்துக்கோ... என்ன... ராஜா ஆபரேஷன் ஆன உடம்பு... பானு களைச்சு போயிருக்கா... அவளுக்கு ஓய்வு வேணும்ப்பா...'' என்று தாய் சொன்னதும்...

''பாடிகார்டு என்று சொன்னது சரிதான்... என் மனைவியிடம் பேச எனக்குத் தடையாக்கும்...''

அடிக்குரலில் ராஜசேகர் முணுமுணுக்க...

''என்ன ராஜா சொன்னே...'' சௌந்திரம் மகனைக் கேட்டாள்.

''ஒன்றுமில்லைம்மா... பானுவிற்கு ஓய்வு அவசியம் தான்னு சொன்னேன்... நான் அப்புறம் வந்து பார்க்கிறேன்...''

வாய் பேசினாலும் கண்கள் ஒரு தவிப்புடன் மனைவியை பார்த்தன...

தந்தையின் தவிப்பை புரிந்து கொண்டதுகளோ என்னவோ... அருண் தூக்கத்தில் சிரித்தான். உதயா சிணுங்கினாள்.

கரங்களால் தன் செல்வங்களை அணைத்தவாறு கணவனைப் பார்த்த பானுவின் கண்களில் நேசத்தின் மினுமினுப்பு...

இதழ்களில் குறுநகை...

பொறுமையாக இருங்கள்... இனி வருஷமெல்லாம் வசந்தம் தானே என்ற அர்த்தத்தில்...

ராஜசேகரும் அதை உணர்ந்து கொண்டது போலப் புன்னகைத்தான்.